வரு.74 இல. 17 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2022 ஏப்ரல் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
April 24 Sunday, 2022
24 பக்கங்கள் 50/-





02 சோபை இழந்த நுவரெலியா வசந்தகால நிகழ்வுகள்


05 பின்னோக்கிய பெறுமானங்களில் களங்களை நகர்த்துகிறதா அரசு?


09 ரம்புக்கனையில் நடந்தது என்ன?


பொதுநலவாய விளையாட்டு போட்டி
15 விளையாட்டுக்களில் இருந்து வீரர்கள் தயார் 24

பொருளாதார நெருக்கடி நிலைக்கு விரைவில் தீர்வு



# IMF ஒத்துழைப்பு பேச்சு வெற்றி தரும் நம்பிக்கை

## முதற்கட்ட கலந்துரையாடலில் பூரண திருப்தி - நிதியமைச்சர் அலிசப்ரி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலாம் கட்ட பேச்சுவார்த்தை மிகவும் வெற்றிகரமாக நடந்துள்ளதாக நிதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜ்வா உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளமுடிந்துள்ளதாகவும் 04


நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பார்
## பிரதமர் மஹிந்த மீது மக்கள் அதீத நம்பிக்கை
ஒன்றிணைந்து தீர்வு காண்பதே ஆரோக்கியம் 04

தன் மீதான பொய், வதந்திகளுக்கு பிரதமர் ஆப்பு

# எந்தவொரு நோயினாலும் நான் பாதிக்கப்படவில்லை

## இடைக்கால அரசு அமைந்தால் அதிலும் நானே பிரதமர்



தான் சிறந்த தேக ஆராக்கியத்துடன் இருப்பதாகவும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை முற்றாக நிராகரிப்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒரு நோயாளியைக் கூட பார்ப்பதற்காகவேனும் தான் ஆஸ்பத்திரியின் பக்கம் செல்லவில்லையென்றும் பிரதமர் தெரிவித்தார். தான் பேசும் தருணத்தில் கூட உடற்பயிற்சியை முடித்துக்கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 04

நாடு நெருக்கடிக்குள் என்பது உண்மை, அதற்காக
## கெப்டனுடன் கோபம் எனில் கப்பலையே மூழ்கடிப்பதா? 04


## எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களுக்காகவே பாராளுமன்றில் உரை 04

# இந்தியா வழங்கும் மருந்துகள் புதன்கிழமையன்று நாட்டுக்கு

## அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு



இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 101 வகையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் எதிர்வரும் புதன்கிழமை இலங்கைக்கு வரவுள்ளதாக சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவால் வழங்கப்பட்ட 340 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் ஒரு வாரத்துக்குள் வருமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 186 அத்தியாவசிய மருந்து வகைகளை 04

# இந்திய இறக்குமதி அரிசி ச.தொ.சவில் ரூ. 145 க்கு

## நேற்று முதல் விற்பனை ஆரம்பம்

இந்திய கடனுதவி மூலம் இறக்குமதி செய்யப்படும் 40,000 மெற்றிக்தொன் அரிசியை நாடு முழுவதும் ச.தொ.ச விற்பனை நிலையங்களூடாக விற்பனை செய்ய வர்த்தக அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளைப்பச்சை அரிசி 145 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாட்டரிசி 145 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 175 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. நுகர்வோர் ஒருவர் ஐந்து கிலோ அரிசியை மட்டுமே வாங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியால்
# புதிய உத்தரவுகள் பிறப்பிப்பு




வங்கிகளின் கடன் மற்றும் வைப்புக்களுக்கான வட்டி விகிதங்கள் தொடர்பான அறிவிப்பை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

இதன்படி மார்ச் 11, 2022 திகதியிட்ட 2022 ஆம் ஆண்டின் பணவியல் சட்டத்தின் எண்.01 இன் ஆணை 2.1ஐ வங்கி இரத்து செய்துள்ளது.

பணவியல் கொள்கை நடவடிக்கைகளை கடுமையாக்க இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய முடிவுக்கிணங்க இந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளது. 04







எங்கள் கருத்து...

# தேசிய நெருக்கடிக்கான போராட்டம் களியாட்டமல்ல

எமது நாடு வரலாறு சந்தித்திராத மிக மோசமான நெருக்கடியை சந்தித்திருக்கிறது. கடுமையான பொருளாதார வீழ்ச்சியால் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடும் வேகமான விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை இவ்வாறே தொடர விடப்படுமானால் மீண்டெழ முடியாத ஒரு நிலைக்கு நாடு சென்று விட முடியும்.

எமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கையையும் அது பெரிதும் பாதித்துவிடமுடியும். எனவே நாம் தற்போது கடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு பொழுதும் மிக முக்கியமானது. இதை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி எவ்வாறு நாட்டை மீட்டெடுப்பது என்பதில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்புள்ளது என்பதை அழுத்தமாக சொல்ல விரும்புகிறோம்.

இன்று நாடெங்கும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் பொருட்கள் கிடைக்காததால் இப்போராட்டங்கள் நடைபெறும் அதே சமயம் அவை அரசுக்கு எதிரானவையாகவும் மாறி வருகின்றன. ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கான வசதிகள், வாய்ப்புகள் குறைவடையும் போது மக்களின் ஆத்திரம் ஆளும் அரசாங்கத்தின் மீது திரும்புவது இயல்பு. இத்தருணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முனைப்புடனும், துரிதமாகவும் புத்திபூர்வமாகவும் செயல்பட வேண்டியது அவசியம். பாராளுமன்றம் 04

# O/L, A/L பரீட்சை திகதிகள் அறிவிப்பு

## மே. மற்றும் ஒக்டோபர் மாதங்களில்



2022ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், உயர்தர பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 04

சமூகத்தை ஏமாற்ற இன்று இரட்டை வேடம்;
# 20க்கு வாக்களிக்குமாறு எமக்கு கூறியவரே ரிஷாத்

## இல்லையென சத்தியம் செய்வாரா? முஷாரப்



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களிக்குமாறு எமக்கு கூறியவரே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தான். இல்லையென அவர் சத்தியம் செய்வாரா? என இராஜாங்க அமைச்சர் முஷாரப் தெரிவித்துள்ளார். 04

மோதரையில் பயங்கரம்;
# திருமண வீட்டில் திருடர்கள் கைவரிசை



## 10 இலட்சம் பணம், 80 பவுண் கொள்ளை

கொழும்பு, மோதரை, வில்பிரட் லேன் பகுதியிலுள்ள தொழிலதிபர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான 80 பவுண் நகை மற்றும் 10 இலட்சம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளதாக மோதரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இத் தொழிலதிபரின் மூன்று பிள்ளைகளில் இரு பிள்ளைகள் திருமணம் முடித்துள்ளனர். முதல் பிள்ளைக்கு 04

# S.L.M.C யிலிருந்து ஹாஃபிஸ் நஸீர் நீக்கம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து இராஜாங்க அமைச்சர் ஹாஃபிஸ் நஸீர் அஹமட் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடம் கூடி இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹாஃபிஸ் நஸீர் அஹமட், பைசல் காசிம், எச்.எம்.எம்.ஹரிஸ் மற்றும் எம்.எஸ். எம். தௌபீக் ஆகியோர் 20 ஆவது திருத்தச் 04






# சோபை இழந்த நுவரெலியா வசந்தகால நிகழ்வுகள்

## பயணிகள் வருகை குறைந்ததால் வருமானம் இழந்த வர்த்தகர்கள்


மலர்க்காட்சியில் வாடிய மலர்கள்

நூரளையூரான்

நுவரெலியாவில் வருடம் தோறும் ஏப்ரல் மாதத்தில் ஏப்ரல் வசந்தக் கால நிகழ்வுகள் நடைபெறுவது ஒரு பாரம்பரிய நிகழ்வு எனினும் இவ்வருடம் நடைபெற்ற ஏப்ரல் வசந்தக் கால நிகழ்வுகள் சோபிக்கவில்லை.

ஏப்ரல் வசந்தக்கால நிகழ்வுகள் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமானபோது இனம் தெரியாத ஒரு குழுவினரால் குழப்பிப்போனது. ஏப்ரல் வசந்தகால நிகழ்வின் ஆரம்ப வைபவம் இடையில் நின்று போனதாலும் மற்றும் எரிபொருள் தட்டுபாட்டாலும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அனைத்து நகரங்களிலும் நடைபெறத் தொடங்கியிருந்ததாலும் இங்கு



வருவதற்கான உற்சாகத்தை பயணிகள் இழந்திருக்கலாம். போராட்டங்கள் நடைபெறுவதாலும் மற்றும் உணபொருட் களின் விலை உயர்வு நுவரெலியாவில் தங்குவதற்கான அறைகள் மற்றும் வாடகை விடுதிகளின் வாடகை அதிகரிப்பு என்பனவும் சுற்றுலா பயணிகள் வருகை வீழ்ச்சிக்கு காரணம் எனலாம்.

நுவரெலியா மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகளும் சோபிக்கவில்லை. நுவரெலியாவில் டீசல், பெற்றோல் தட்டுப்பாட்டால் மக்கள் டீசல், பெற்றோல் பெற்றுகொள்வதற்காக காலை முதல் மாலை வரை வரிசையில் காத்திருந்தும் பெற்றோல், டீசல் பெற்றுகொள்ள அவர்களால் முடியவில்லை. இதுவும் சுற்றுலா பயணிகளின் வரவு குறைந்தமைக்கு ஏதுவாகலாம்.

**நாட்டில் காணப்படும் பதற்றநிலை, எரிபொருள் தட்டுப்பாடு, ஹோட்டல் உணவு பொருட்கள் விலை உயர்வு என்பன பயணிகள் வருகையை குறைத்திருக்கலாம்**

இது இவ்வாறிக்க, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, சமையல் எரிவாயு தட்டுபாடு, பால் மா தட்டுபாடு காரணமாக உணவு பொருட்களின் விலையும் அதிகரித்து காணப்பட்டன. மேலும் பஸ் கட்டணம் ஆட்டோ கட்டணம் உட்பட வாடகை வாகன கட்டணம் மற்றும் தங்குமிட கட்டண அதிகரிப்பால் பெருந் தொகையான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவைத் தவிர்த்தனர்.

நுவரெலியாவில் கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தொற்று காரணமாக ஏப்ரல் வசந்த கால நிகழ்வுகள் நடைபெறாததால் இவ் வருடம் பெருந்தொகையான பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தருவார்கள் என சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்டோர் எதிர்பார்த்திருந்தனர். இதை மனதில் இருத்தி சுற்றுலா ஹோட்டல்களிலும் உணவகங்களிலும் உணவு பொருட்களை அதிகமாக கொள்வனவு செய்து தயாராக வைத்திருந்தார்கள். ஆனால் அந்தப் பொருட்கள் பயன்படுத்தப்படாததால் இக்கட்டான நிலையை வர்த்தகர்கள் எதிர் கொள்ள வேண்டியதாயிற்று.


மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரத்ன


பிரதி முதல்வர் யதர்சனா புத்திரசிகாமணி

இதேவேளை ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு அமைக்கப்பட்ட வசந்தக்கால தற்காலிக கடைகளிலும் எதிர்பார்த்த அளவு விற்பனை நடைபெறவில்லை. நுவரெலியாவில் கடந்த 15, 16 ஆம் திகதிகளில் மாத்திரம் ஒரு குறிப்பிட்ட அளவு சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பைக் காண முடிந்தது.

வெளி மாவட்ங்களில் வருகை தந்தவர்கள் இங்குள்ள இரண்டு எரிப்பொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசையில் நின்று வாகனங்களுக்கு பெற்றோலையும், டீசலையும் வயிறு நிறைய நிரப்பி கொண்டதால் நுவரெலியாவில் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்திருந்தது.

அதேவேளை நுவரெலியா மாநகரசபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏப்ரல் வசந்தக்கால நிகழ்வுகளும் முறையாக நடைபெறவில்லை. வசந்தக்காலத்தை முன்னிட்டு நுவரெலியா பொது மைதானத்திலும் நுவரெலியா கிரகறி வாவிக் கரையிலும் அமைக்கப்பட்டிருந்த கார்ணிவேல் களியாட்ட நிகழ்களிலும் எதிர்பார்த்த மக்கள் தொகையைக் காண முடியவில்லை. செல்லவில்லை. நுவரெலியா குதிரைப்பந்தய திடலில் நடைபெற்ற குதிரைப்பந்தய போட்டியை பார்ப்பதற்குக்கூட மிகவும் குறைவாகவே வருகை தந்திருந்தனர்.



இம்முறை ஏப்ரல் வசந்தக்கால நிகழ்ச்சி நிரல் புத்தகம் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரமே அச்சிடப்பட்டிருந்தது. தமிழ் மொழியில் இல்லை. இது குறித்து நுவரெலியா மாநகரசபையின் ஏப்ரல் மாதத்திற்கான மாதாந்த கூட்டம் கடந்த 3 ஆம் திகதி நுவரெலியா மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதி முதல்வர் யதர்சனா புத்திரசிகாமணி மற்றும் மாநகரசபை உறுப்பினர் இராமையா கேதீஸ் ஆகிய இருவரும், ஏப்ரல் வசந்தக்கால நிகழ்ச்சி நிரலில் தமிழ் மொழி அச்சிடப்படாதது தங்களுக்கு கவலையாக இருப்பதாகவும் 23 உறுப்பினர்களைக் கொண்ட நுவரெலியா மாநகரசபையில் 9 தமிழ் உறுப்பினர்கள் இருப்பதாகவும் மாநகரசபையால் ஏற்பாடு செய்யப்பட்ட வசந்தக்கால நிகச்சி நிரல் புத்தகத்தில் தமிழ் மொழி அச்சிடப்படாதது தமிழ் மக்களை புறக்கணிக்கும் செயலாகும் என்றும் எடுத்துச் சொல்லியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன, இம்முறை ஏப்ரல் வசந்தக்கால நிகழ்ச்சி நிரல் புத்தகம் மாநகரசபையால் அச்சிடப்படவில்லை என்றும் அனுசரணையாளர்கள் மூலம் அச்சிடப்பட்டது என்றும் குறிப்பிட்டதோடு இனிமேல் இவ்வாரான தவறு நடைபெறாமல் பார்த்துக்கொள்வோம் என்று உறுதியளித்தார்.

நுவரெலியா மாநகரசபைக்கும் நகர அபிவிருத்தி சபைக்கும் பணம் செலுத்தி அமைக்கப்பட்ட தற்காலிக வசந்தக்கால கடைகளில் செலுத்திய பணத்தைக்கூட தேட முடியவில்லையாம்! அந்தளவிற்கு வியாபாரம் நடைபெறவில்லையென கடை வைத்திருந்தவர்கள் தெரிவித்தனர்.

ஏப்ரல் வசந்தக்கால நிகழ்வு தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா அமைப்பாளர் தினேஷ் கிருசாந்தவுடன் பேசினோம். இந்த நாட்டை ஆட்சி செய்த ஆங்கிலேயர் விடுமுறையை கழிப்பதற்காக நுவரெலியாவில் ஏப்ரல் மாதத்தில் வசந்தக்கால. கொண்டாட்டத்தை ஆரம்பித்தனர். (நுவரெலியாவிலுள்ள சுற்றுலாத்துறை யினரும் பொது மக்களும் வியாபாரிகளும் வருமானம் தேடும் மாதமாகும். ஆனால் இந்த மாதத்தில் அந்த வருமானம் தேடமுடியவில்லை.

ஏப்ரல் வசந்தக்கால நிகழ்வுகள் ஒரு தனி மனிதன் வருமானத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வசந்தக்கால நிகழ்வுகளாக நடத்தப்பட்டுள்ளது. நுவரெலியா மாநகரமுதல்வர் தன்னிச்சையாக வசந்தக்கால நிகழ்வுகள் தொடர்பாக ஒருசில முடிவுகளை எடுத்திருந்தார். இதனால் மாநகரசபை உறுப்பினர்களும் மாநகர முதல்வருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை என உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.' என்றார் இவர்.

இந்த வருட வசந்தக்கால கொண்டாட்டங்கள் களைகட்டவில்லை என்றுதான் கூற வேண்டும். வசந்தக்கால நிகழ்ச்சி நிரிலில் அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளில் குதிரைப்பந்தய போட்டி, கிரிக்கெட் போட்டி மற்றும் மலர்கண்காட்சி மாத்திரமே நடைபெற்றன. இதில் குதிரைப்பந்தய போட்டியைபார்பதற்கு மிகவும் குறைந்தளவிளான மக்களே வருகை தந்திருந்தார்கள். அதேபோல நுவரெலியா விக்டோரியா பூங்காவில் கடந்த 17,18 ஆம் திகதிகளில் மலர் கண்காட்சி போட்டி நடைபெற்றது. இந்த போட்டியிலும் பெரிய அளவில் போட்டியாளர்கள் கலந்துக்கொள்ளவில்லை.

அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த மலர்களும் வாடிய நிலையில் காணப்பட்டன. ஆரம்ப வைபவத்திலும் பரிசளிப்பு வைபவத்திலும் 23 மாநரசபை உறுப்பினர்களில் மூன்று அல்லது நான்கு உறுப்பினர்கள் மாத்திரமே கலந்துக்கொண்டனர். இதனை பார்க்கும் பொழுது மாநகர முதல்வரின் நடவடிக்கைகளுக்கு உறுபினர்களின் ஒத்துழைப்பு இல்லை என்பதை அறிய முடிந்தது. எது எப்படியானாலும் நுவரெலியா சுற்றுலாத்துறையினருக்கும் நுவரெலியா வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுக்கும் எதிர்பார்த்தளவு வருமானம் கிடைக்கவில்லை. எனவே எதிர்வரும் வசந்தக்கால நிகழ்வுகள் அனைவரினதும் ஆலோசனைகளை பெற்று வெற்றிகரமாக நடத்தப்பட்ட வேண்டியது அவசியம். ஒரு நகரத்துக்குக் கிடைக்கும் பெருமளவு வருமானத்தை இழந்துவிட முடியுமா?


நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

முதலீட்டு முன்மொழிவுக்கான அழைப்பு (RFP)

**நுவரெலியா பொழுதுபோக்கு பூங்கா செயற்திட்டம்**



கிரேகரி குளத்திற்கு அருகில் சர்வதேச தரத்திலான பொழுதுபோக்கு பூங்கா ஒன்றுக்கான முதலீட்டுக்கு வாய்ப்பு

அளவு : 10A-3R-28P (4.4213 Ha)
அடிப்படை வருடாந்த குத்தகை வாடகை (இ.ரூபா): 17,500,000/-
பிணைப் பத்திரம் (இ. ரூபா) : 10,000,000/-
குத்தகைக் காலம் (வருடம்) : 30

**வருடாந்த குத்தகை வாடகை அடிப்படையில் நுவரெலியாவில் சர்வதேச தரத்திலான பொழுதுபோக்கு பூங்கா செயற்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு விலைமனுதாரர்களிடம் (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) இருந்து முன்மொழிவுகள் (RFP) கோரப்படுகின்றன.**

- இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) குறித்த விபரங்கள் உள்ளடங்கிய முதலீட்டு முன்மொழிவு கோரல் ஆவணத்தை மீளளிக்கப்படாத ரூபா 100,000/- தொகையை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய – கட்டம் 1, 6 ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதனங்கள் முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவிடம் இருந்து 2022 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 2022 மே மாதம் 25 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 மே மாதம் 20 ஆம் திகதி பி.ப. 02.00க்கு செத்சிறிபாய, கட்டம் 1, 9ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.
- அபிவிருத்தி முன்மொழிவுகள் ஏற்பது 2022 ஜூன் மாதம் 06 ஆம் திகதி பி.ப. 02.00க்கு முடிவுறும்.
- கிடைக்கப்பெறும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் அந்தத் தருணத்தில் திறக்கப்படுவது பத்தரமுல்லை "சுஹுருபாய" 17 ஆவது மாடியில் அமைந்துள்ள, நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு பணிப்பாளர் நாயகத்தின் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் இடம்பெறுவதோடு, அதற்காக விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:**

பணிப்பாளர் (ஆதனங்கள் மேம்பாடு), ஆதனங்கள் மேம்பாடு மற்றும் முகாமைத்துவ பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி,
செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் : 011-2875921, 011-3611950 அல்லது 011- 2875916 - 20 நீடிப்பு - 2960 - 2967, தொலைநகல் 011-2875900
மின்னஞ்சல் : realestatedivisionuda@gmail.com
இணையதளம் : www.uda.gov.lk

தலைவர், அமைச்சரவை மூலம் நியமிக்கப்பட்ட நிலையான மதிப்பாய்வுக் குழு,
நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,
17ஆவது மாடி, "சுஹுருபாய" பத்தரமுல்லை



சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன், தென்னிந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காக, UNHCR இந்தியாவின் தலைமைத் தூதுவர் திரு. ஆஸ்கார் முண்டியாவைச் சந்தித்தார்.


சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பி1 இன் கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தின் 48 ஆவது வருடாந்த பூர்த்தி கொண்டாட்ட நிகழ்வு அண்மையில் வெள்ளவத்தை குளோபல் டவரில் நடைபெற்றது. நிகழ்வில் கழகத் தலைவர் லயன் ஜத்தின்டர் பியல்லா, லயன்சாய் ஜெயராம், லயன் துரைராசா ஆகியோர் உரையாற்றுவதையும் கழக அங்கத்தவர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் மாவட்ட ஆளுநர் ராஜ்குமார் விளக்கேற்றுவதனையும் படங்களில் காணலாம்.




# எதிரணியினர் அரசியல் ஆதாயம் தேடுவதற்கான நேரம் இதுவல்ல!

## நிதியமைச்சர் அலி சப்ரி பேட்டி



**தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் அலி சப்ரி, எமக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார்.**

**கே: கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக எரிபொருள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை மீள வழங்குவதற்கு அடுத்த ஆறு மாதங்களுக்குள் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு உதவி தேவைப்படும் என்று நீங்கள் சர்வதேச ஊடகமொன்றுக்குக் கூறியிருந்தீர்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. வெளியிலும், நாட்டுக்குள்ளும் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. இந்த சவால்கள் குறித்து தற்பொழுது கவனம் செலுத்தாவிட்டால் நமது பொருளாதாரம், எதிர்காலம் மற்றும் நிறுவனங்கள் யாவும் அழிவைச் சந்திக்க வேண்டி ஏற்படும். எனவே, சுரங்கப்பாதையின் முடிவில் சில நம்பிக்கையைப் பெற அடுத்த ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு நாம் உண்மையான வலியை அனுபவிக்க வேண்டும். எனவே, நாங்கள் பல நடவடிக்கைகள் பற்றிச் சிந்திக்கின்றோம். இந்த விடயங்களை எல்லாம் வெளியிட முடியாது. நாங்கள் கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றோம். இவற்றின் அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் ஒரு நல்ல புரிதலை ஏற்படுத்திக் கொண்டால், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இருதரப்பு நிதி வசதிகள் ஆகியவை போட்டிக்கு வரும்.

**கே: அரசியல் ஸ்திரமின்மை நாட்டிலும் அதன் பொருளாதாரத்திலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக சிலர் கூறுகின்றனர். நீங்கள் இது பற்றி கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

**பதில்:** சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை சந்தித்த மிகக் கடினமான நிதி நெருக்கடி இதுவாகும். இதில் மாற்றுக்கருத்து இல்லை. எவ்வாறாயினும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் கொவிட் தொற்றிலிருந்து மீண்டு வரவிருந்த போது பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி, சுற்றுலாத்துறை ஊடான வருமானம் என்பன குறைவடைந்து பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. பின்னர் முதிர்ச்சியடைந்த கடன்கள் இருந்தன.

எனவே, அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் டொலர் தட்டுப்பாடு போன்றவற்றால் உண்மையில் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். இதனை வைத்துக் கொண்டு அரசியல் செய்யத் தேவையில்லை. இந்த விஷயங்களைப் பற்றிக் கிளர்ச்சி செய்ய வேண்டாம் என்று யாரும் கூறவில்லை, ஆனால் அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் ஸ்திரமின்மையால் முதலீடுகள் வருவதிலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க வேண்டியதே அவசியமாகும்.

**கே: இலங்கை ஜூலை மாதம் செலுத்த வேண்டிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைக்க வேண்டும் என நீங்கள் அண்மையில் பாராளுமன்றத்தில் கூறியிருந்தீர்கள். அரசியல் மற்றும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசாங்கத்துக்கு இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய நிலைமை காணப்படுகிறதா அல்லது சர்வதேச நாணய நிதியின் உதவி பெறப்பட வேண்டுமா?**

**பதில்:** அந்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இப்போது செலுத்துவது முற்றிலும் சாத்தியமில்லை.

எனவே, நாம் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டும், அதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை. மறுசீரமைப்பைச் செய்யாது, நிதி மற்றும் சட்ட விடயங்களில் கடன் ஆலோசகர்கள் மூலம் அதைச் செய்ய வேண்டும். நாங்கள் கடனை மறுகட்டமைக்கும் போது மட்டுமே IMF உடன் பேச்சு நடத்தி அது ஆதரவளிக்கும். வலாற்றில் முதன்முறையாக, நமது கடன் தாங்க முடியாதது என்ற முடிவுக்கு சர்வதேச நாணய நிதியம் வந்துள்ளது. அதாவது கடனை செலுத்த முடியாது.

எனவே, முதலில் நாங்கள் அதை மறுகட்டமைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அதன் பிறகு, அவர்கள் எங்களுக்கு நிதியுதவி அளிப்பர்.

**கே: நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மோசமான பொருளாதாரக் கொள்கைகளே காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். உங்கள் பார்வைகள் எவ்வாறு உள்ளன?**

**பதில்:** கொள்கை ரீதியான முடிவுகளால் அல்லது அது என்னவாக இருந்தாலும் நிலைமை சிக்கலாகியுள்ளது. கொவிட்19 தொற்றுநோய் இதற்கு மிகப் பெரிய பாதிப்பாக அமைந்தது. இதனை விடவும், ரஷ்யப் போரினால் ஏற்பட்ட பாரிய எண்ணெய் உயர்வு மற்றும் சுற்றுலாத்துறை பாதிப்பின் விளைவுகள் நாம் அனுபவித்து வரும் மிகவும் கடினமான சூழ்நிலைக்குப் பங்களித்தன. எனவே, எதிர்க்கட்சிகள் இப்போதைக்கு நிலைமையை மாற்றிக் கொள்ள முயல்கின்றன.

**கே: ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட முயற்சியை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில்:** அடிப்படையில், இந்த நேரத்தில் தேசநலனைப் பார்க்காமல், தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக மீண்டும் வாய்ப்பைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இது அரசியல் செய்வதற்கான நேரம் அல்ல என்று நினைக்கிறேன்.

முழு இலங்கை சமூகத்திற்கும் இது மிகவும் கடினமான காலம். இருப்பினும், எதிர்க்கட்சிகள் அதைச் செய்ய விரும்பினால், அவர்கள் பாராளுமன்றத்தில் தங்களிடம் உள்ள எண்ணிக்கையைக் காட்டட்டும். பாராளுமன்றத்தில் அத்தகைய முயற்சியை முறியடிப்பதற்கான எண்ணிக்கை எங்களிடம் உள்ளது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

**கே: ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி கடந்த இரண்டு வாரங்களாக நாடு தழுவிய ரீதியில் மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். நீங்கள் இது பற்றி கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

**பதில்:** இது நம் நாட்டிற்கு மட்டுமான சூழ்நிலை அல்ல. தற்போது பல நாடுகள் கொவிட்19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் என்ன நடந்தது என்பதை நீங்கள் பார்க்கலாம்.

பல நாடுகள் கொவிட்19 இற்கு பிந்திய நிலைமை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட உக்ரேனியப் போரினால் பாதிக்கப்பட்டுள்ளன. எண்ணெய் விலை, சுற்றுலா மற்றும் அனைத்து விநியோகச் சங்கிலியையும் பாதித்துள்ளது.

எத்தகைய தீர்வை விரும்பினாலும் அது இலங்கை அரசியலமைப்புக்கு அமைவாகவே இருக்க வேண்டும்.

> “அவர்கள் பாராளுமன்றத்தில் தங்களிடம் உள்ள எண்ணிக்கையைக் காட்டட்டும். அவர்களது முயற்சியை முறியடிப்பதற்கான எண்ணிக்கை எங்களிடம் உள்ளது”

> “எத்தகைய தீர்வென்றாலும், அது இலங்கை அரசியலமைப்புக்கு அமைவாகவே இருக்க வேண்டும்”

> பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள்; அடுத்த ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு நாம் உண்மையான வலியை அனுபவிக்க வேண்டும்




# பொருளாதார சிக்கலை அரசியல் பிரச்சினை வரை கொண்டு சென்றது துரதிர்ஷ்டம் நிறைந்தது

இலங்கை மோசமான பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால் பொருளாதாரப் பிரச்சினை உள்ள நாடுகளில் சாதாரணமாக காணப்படும் விடயங்கள் தொடர்பாக தகவல்களை கேட்கவும் காணவும் முடியவில்லை. எரிபொருளுக்காக வரிசையில் நிற்கும் போது மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை ஏழு என ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சிங்கள_தமிழ் புதுவருடத்தில் கிராமங்களுக்குச் சென்று திரும்பி வரும் வழியில், அதிவேகப் பாதையில் களனிகமவுக்கு அருகாமையில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளதோடு அங்கு ஒன்றுடன் ஒன்று மோதிய வாகனங்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள நாடுகளில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ள விதம் பற்றி ஞாபகப்படுத்த வேண்டும். ரஷ்யா, கிரீஸ் மற்றும் கம்போடியா போன்ற நாடுகளில் காணப்பட்ட நிலைமையை மறந்து விடவில்லை. அரிசிப் பங்கீட்டு அட்டை, பாண் போன்றவற்றுக்கு அந்நாட்டு மக்கள் கெஞ்சும் விதத்தை சர்வதேச ஊடகங்கள் காட்சிப்படுத்தியிருந்தன.

உணவுத் தட்டுப்பாடு, சுகாதாரப் பிரச்சினை, வங்கிகளுக்கான தடை காரணமாக மக்கள் கோபமுற்று வீதியில் இறங்கிய சம்பவங்கள் அதிகமாக செய்திகளாக வெளிவந்தன. இலங்கை மக்கள் வேண்டுவது எரிபொருள், மின்சாரம் மற்றும் சமையல் எரிவாயு போன்ற அடிப்படைத் தேவைகள் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து, தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும் வாடிக்கையாளர்கள் உணவு விற்பனை நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் நிற்கவில்லை. அரிசிக்கான வரிசையில் மரணங்கள் நிகழவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். நாட்டு மக்கள் நடுத்தர வருமான மட்டத்திற்கு வந்துள்ளதோடு அரசியல்வாதிகள் இன்னும் ஏழை நாடு என்ற மட்டத்திலேயே உள்ளார்கள். இந்த அடிப்படையான மனநிலையிலிருந்து விடுபடும் வரை நாட்டின் பொருளாதாரத்துக்கு நிலையான தன்மை இல்லை.

வலுசக்தி துறையில் வழங்கல் குறைந்துள்ளமை மோசமான பாதிப்பாகும். எரிபொருள், எரிவாயு, மின்சாரம் போன்றவற்றை கேள்விக்கு ஏற்றவாறு வழங்குவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதோடு, எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் இன்னும் கியூ வரிசை காணப்படுகின்றது. வீட்டுப் பாவனைக்கான எரிவாயு விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. அதுவும் தீர்க்கப்படாத ஒரு சிக்கலாகும். வரட்சி, எரிபொருள் தட்டுப்பாடு மின் உற்பத்திக்கு தடையாகவுள்ளது . 24 மணித்தியால மின்சார விநியோகம் இல்லை. இவை நடுத்தர வருமானமுடைய நாட்டு மக்கள் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளின் அடையாளங்கள் என்று குறிப்பிட வேண்டியுள்ளது.

இதைத் தவிர மேலும் பல அத்தியாவசியமான பொருட்கள் வர்த்தக நிலையங்களில் இல்லை. பால்மா தட்டுப்பாடு மோசமான பிரச்சினையாகும். மைசூர் பருப்பு, பாசிப் பயறு,பெரியவெங்காயம், சீனி உள்ளிட்ட பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. விலை அதிகரித்திருந்தாலும் விற்பனை குறையவில்லை என்பதோடு, அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு அன்றாட வர்த்தகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்திய நிலைமை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றார்கள். விலை அதிகரிப்பு சாதாரண மக்களை பாதிப்புக்கு உள்ளாக்கவில்லை என அதன் மூலம் ஒருபோதும் தெரிவிக்கப்படவில்லை.

திறந்த பொருளாதாரத்தை அறிமுகம் செய்து போட்டி சந்தை அமைப்பில் காணப்பட்ட நியதிகளை கருத்தில் கொள்ளாது முடிவுகளை எடுத்ததன் விளைவு தெரிகின்றது. நான்கரை தசாப்த காலம் வரிசைகள் காணப்படவில்லை. தட்டுப்பாடு நிலவவில்லை. உள்ளூர் உற்பத்தி போதுமானளவு இல்லாத போது இறக்குமதி செய்யப்பட்டது. நிதிப் பிரச்சினையில் அந்நிய செலாவணி தட்டுப்பாடு ஏற்பட்ட வேளையில் கேள்வியை கட்டுப்படுத்தி, பொருளாதாரத்தை சமநிலைப்படுத்த முயற்சி செய்த அரசாங்கம் பாரிய பிரச்சினையை ஏற்படுத்திக் கொண்டது. அது பெரும் தவறாகும்.

நடுத்தர வருமான சமூகம் சிக்கலான தேவைகளுடனானது. நடுத்தர வருமானம் கொண்ட நாட்டில் பாவனையாளர்களை திருப்திப்படுத்துவது வேறாக கருத வேண்டிய விடயமாகும். அன்றாட இருப்பை தடை செய்யும் முடிவு பொருத்தமற்றதாவதோடு மீண்டும் பழைய வறிய சமூகத்திற்குள் தள்ளுவது பொருத்தமற்றது என புரிந்து கொள்ள வேண்டும். 'ஒட்டுப் போடும்' தீர்வை நாடுகின்ற அதிகாரிகள் அரசாங்கத்துக்கு ஏற்படுத்திய அழுத்தம் இறுதியில் ஏற்படுத்திய விளைவு நல்ல பாடமாகும். அவசர நிலைமையை முகாமைத்துவம் செய்து வர்த்தக சந்தை பொருளாதாரத்தை மேலும் செயல்படுத்த முயற்சி செய்வதன் மூலம் பொருளாதார பிரச்சினையை கட்டுப்படுத்த வாய்ப்பு இருக்கும் போது, அதனை அரசியல் பிரச்சினை வரை கொண்டு சென்றது துரதிர்ஷ்டமான விடயமாகும். அரசியல்வாதிகளும் மற்றும் அதிகாரிகளும் சமூகத்தைப் பற்றிய புரிந்துணர்வுடன் முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். வலுசக்தி முக்கிய தேவையாகும். அபிவிருத்தி அடைந்த சமூகத்திற்கு இருக்க வேண்டிய தேவைகளை அறிய தாமதம் தேவையில்லை. சந்தை சுதந்திரம் இல்லாத சமூகமாக இல்லாத பழைய யுகத்திற்கு நுழைவதற்கு இந்நாட்டு பாவனையாளர்கள் தயார் இல்லை என்பதை நாட்டை புதிதாக்க நினைக்கின்ற அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...





குருநாகல் நகர் ஐடெக் இஸ்லாமிய வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நோன்பு திறக்கும் இப்தார் விசேட நிகழ்வு குருநாகல் அல் ஜாமிஉல் அஸ்ஹர் பசார் பள்ளிவாசலில் இஸ்லாமிய வர்த்தக சங்கத்தின் தலைவர் எம். வை. எம். கியாஸ் தலைமையில் இடம்பெற்றது. நிழ்வில் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எம். சலீப், உதவி செயலாளர் எம். ஸலீர், பொருளாளர் ஏ.எம். இர்பான், உதவிப் பொருளாளர் ஏ.ஏ.எம். அஸாம் உள்ளிட்ட சங்கத்தின் பிரதான செயற்குழு உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் என முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதன்போது 1500 பேருக்கும் அதிக எண்ணிக்கையிலான நோன்பாளிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

### நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பார்

# பிரதமர் மஹிந்த மீது மக்கள் அதீத நம்பிக்கை

### ஒன்றிணைந்து தீர்வு காண்பதே ஆரோக்கியம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 30 வருடம் இந்த நாட்டில் யுத்தம் புரையோடி போயிருந்த்து. அந்த தருணத்தில் அனைவரும் இலங்கை வாழ் மக்களாக இருந்தாலும் ஒருவரை ஒருவர், ஒரு இனத்தை பார்த்து இன்னொரு இனம் ஏதோ ஒரு விதத்தில் உளவியல் ரீதியாக ஒரு அச்ச உணர்வை கொண்டிருந்ததென்பது உண்மை. தங்கள் சொந்த இடங்களுக்கு கூட செல்ல முடியாத சூழல் இருந்தது. அந்த கஷ்டமான சூழ்நிலையிலிருந்து இலங்கையை மீட்டது மட்டுமல்லாது நாட்டில் இனங்களுக்கிடையில் பகைமை உணர்வுகளை நீக்கி,பயத்தை போக்கி இலங்கையர்களாக ஒரு தாய் மக்களாக வாழ்வதற்கான மனதில் ஒரு சக்தியை ஏற்படுத்திய முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ஆவாரென சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது மக்கள் பொருளாதார நெருக்கடியில் சுமை தாங்க முடியாமல் இருப்பதை எல்லோரும் கண்கூடாக பார்ப்பது மட்டுமல்ல அனுபவித்தும் வருகின்றார்கள்.இதை ஜனாதிபதியும் பிரதமரும் உணர்ந்திருக்கின்றார்கள்.

அந்த வகையில் மீண்டும் மக்கள் நிச்சயமாக தம் வாழ்வில் வளமான வாழ்வை பெறுவார்களென்பதில் மக்கள் எள்ளளவும் சந்தேகம் கொள்ளதேவையில்லை. இக் கஷ்டங்களை எவ்வாறு முறியடித்து சுமுகமான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் பிரதமர் அவருக்கு ஏனைய அரசிய கட்சியினர் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும் இலங்கையர்களாகிய நாங்கள் ஒத்துழைத்து இறை ஆசியுடன் நாட்டின் பொருளாதார பிரச்சினையில் இருந்து மக்களை காப்பாற்றி சுமுகமான வாழ்விற்கு வழி வகுத்து கொடுக்ககூடிய வல்லமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குண்டு. அத்துடன் இந்த வளமான வாழ்வுக்கு ஜனாதிபதியின் பங்களிப்பும் நிச்சயமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லையென சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களுக்காகவே பாராளுமன்றில் உரை



எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் உரையாற்றுவது ஊடகங்களுக்காகவே என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் (22) தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரை நிகழ்ச்சி நிரலுக்கமைவாக உரையாற்றுமாறு கூறுங்கள்.

இவர் ஊடகங்களுக்காகவே உரையாற்றுகிறார். ஊடக கலந்துரையாடலை நடத்தி அதில் உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள் என்றும் குறிப்பிட்டார்.




## இஃதிகாபின் முக்கியத்துவம்

ரமழான் மாதத்தில் அமைந்திருக்கும் லைலதுல் கத்ரை அடைந்து கொள்வதற்காக நபி (ஸல்) அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளில் இஃதிகாப் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இது தொடர்பில் ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரையும் ஒவ்வொரு ரமழானின் இறுதிப் பத்து நாட்களிலும் இஃதிகாப் இருந்து வந்தார்கள். பின்னர் அவர்களது மனைவியர் இஃதிகாப் இருந்தனர்' (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) என்றுள்ளார்கள்.

அதன்படி லைலதுல் கத்ருக்காக நபி (ஸல்) அவர்கள் எவ்வளவு தூரம் முயற்சி செய்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. அவர்களது முயற்சியும் வழிகாட்டலும் முழு முஸ்லிம் சமூகத்திற்குமே முன்மாதிரியாக உள்ளன.

அந்த வகையில் இஃதிகாப் குறித்து இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் அளித்துள்ள விளக்கத்தில், பகலிலும், இரவிலும் குறித்த ஒரு நேர காலப்பகுதியில் அல்லாஹ்வை நெருங்குதல் என்ற எண்ணத்தோடு பள்ளிசாவலில் தரித்திருத்தலை குறிக்கும்' என்றுள்ளார். அத்தோடு வேறுபல இஸ்லாமிய அறிஞர்களும் இஃதிகாப் குறித்து விளக்கங்கள் அளித்துள்ளனர்.

இஃதிகாப் என்பது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதல், அல்லாஹ்வை நோக்கி நெருங்குதல், முழுமையாக அவனுக்கென்றே ஒதுங்குதல், உலக விடயங்களை விட்டு விலகி அல்லாஹ்வின் பாசறையில் வாழ்தல், அவனை வழிப்படுவதில் முழு நேரத்தையும் செலவிடுதல் போன்ற உயரிய எதிர்பார்ப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இது நபி வழிமுறைகளில் ஒன்றாக இருக்கின்ற அதேநேரம் ஒரு ஸுன்னாவாகவும் உள்ளது. இது இஸ்லாத்துக்கு முற்பட்ட சமூகங்களிடமும் காணப்பட்ட ஒரு வணக்க வழிபாடாகும். இதனை அல் குர்ஆன் ஸுரா பகராவில் குறிப்பிட்டிருக்கின்றது. குறிப்பாக இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) போன்றோர் இதனைக் கடைபிடித்து வந்துள்ளனர். இவ்வணக்க வழிபாட்டில் ஈடுபடவும் அதனை நிறைவேற்றவும் நபி (ஸல்) அவர்கள் தெளிவான வரையறைகளைக் காட்டித்தந்துள்ளார்கள். ஆகவே லைலதுல் கத்ரை அடைந்து கொள்ளவென நபி (ஸல்) அவர்கள் முக்கியத்துவம் அளித்து கையாண்ட இஃதிகாப் வழிபாட்டின் மூலமும் நாமும் பயனடைந்து கொள்ள முயற்சிப்போம்.

மர்லின் மரிக்கார் ...

## எங்கள் கருத்து...

# தேசிய நெருக்கடிக்கான போராட்டம்...

கூடிய இரண்டு தடவைகளிலும் அந்த அமர்வுகள் பொது மக்களுக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக அமையவில்லை. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதைத் தவிர மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற மாதிரியாக அவை இல்லை. தாம் எவ்வாறு எவ்வளவு விரைவில் சிக்கல்களிலிருந்து மீண்டு வருவோம் என்பதும் சகஜநிலைக்கு நாடு என்று திரும்பும் என்பதுமே மக்கள் எதிர்பார்ப்பாக இருக்கையில், பாராளுமன்றத்தில் நாட்கள் இழுத்தடிக்கப் படும்போது போராட்டங்கள் வன்முறையாக வடிவெடுக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகரிக்க முடியும்.

ரம்புக்கனை போராட்டத்தைப் போல சம்பவங்கள் மேலும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவது அரசின் கைகளில் மாத்திரமின்றி எதிர்க்கட்சிகளிடமும் இப்பொறுப்பு உள்ளது. கட்சிகள் தீயில் எண்ணெய் வார்க்கக்கூடாது. இத்தகைய சம்பவங்கள் மேலும் நிகழ்வதை ஊக்கப்படுத்துவதாகவும் இருக்கக்கூடாது. இப் பொருளாதார சரிவுக்கு இலங்கையை ஆண்ட அனைத்து கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு ஒரு பரந்த பார்வையை கட்சிகள் கொண்டால் மாத்திரமே எதிர்காலத்தில் உண்மையான நல்லாட்சியை உருவாக்கக் கூடியதாக இருக்கும். இவ்வளவு காலமும் பயணித்த பாதை எவ்வாறெல்லா தவறானதாக அமைந்திருந்தது என்பதை நுணுக்கமாகப் பார்த்துக் கொண்டிருக்காமல் இப் பூஜ்ஜியத்திலிருந்து, புதிய அரசியல் சிந்தனையுடனும், இனவாத, மதவாத சிந்தனைகளுக்கு அப்பாலும் ஒரு ஆழமானதும். ஸ்திரமானதுமான பொருளாதாரத்தை நாட்டில் எவ்வாறு கட்டி எழுப்புவது என்பது தொடர்பான விவாதங்கள் பரவலாக நடைபெற வேண்டியது அவசியம். ஏனெனில் தற்போதைய விவாதங்கள் இன்றைய நெருக்கடி சூழலை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்துப் பார்ப்பதை மையமாகக் கொண்டிருக்கின்றனவே தவிர, எதிர்கால இலங்கையை முன்நிறுத்துவதாக இல்லை. நாட்டின் உடனடிப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பதையும் கூடவே புதிய பொருளாதாரக் கட்டமைப்புகளை எவ்வாறு அமைப்பதென்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலம் இது.

பாராளுமன்றம் பிரச்சினையில் அடுத்ததாக என்ன செய்யப் போகிறதென்பது ஒரு புறமிருக்க நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் வீதிப் போராட்டங்களும் வன்முறை வடிவெடுக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஏற்கனவே துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். விஷமிகள் புகுந்து விளையாடினால் ஏனைய சமாதான எதிர்ப்புப் போராட்டங்களும் வன்முறை வடிவெடுக்கலாம். பலர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் உணர்வு ரீதியாகப் பங்கெடுக்காமல் ஒரு பொழுது போக்கல்லது களியாட்ட மனநிலையில் கலந்து கொள்வதையும் காண முடிகிறது. காலி முகத்திடல் தொடர் போராட்டத்தில் இம் மனநிலையை காணலாம்.

ஆனால் நிச்சயமாக இது களியாட்டத்துக்கான அரசியல் களம் அல்ல. அரசியல் கட்சிகளும் மக்களும் சிந்திக்கவேண்டியது, இந்த நெருக்கடியிலிருந்து ஒன்றுபட்ட ரீதியாக நாம் மீண்டெழுவது எப்படி என்பதாகவே இருக்க வேண்டும். தேசிய பேரிடரின்போது வித்தியாசங்களை மறந்து ஒன்றிணைவதும் பின்னர் பழைய நிலைக்குத் திரும்பி அரசியல் செய்வதும் ஜனநாயக நாடுகளில் காணப்படும் ஒரு பொதுப்பண்பு. அதை இப்போது நாம் கைவிட்டு சுயலாபம் தேடுவதில் ஈடுபடலாகாது. ஒவ்வொருவரும் பிரச்சினையின் உண்மையான ஆழத்தை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்கேற்றபடி ஒவ்வொருவரும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். இரண்டாம் உலகப் போரின்போது இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளுங்கள் என்று ஹிட்லர் முசோலினியிடம் சொன்னதாகச் சொல்வார்கள். தவிர்க்க முடியாத தேசிய நெருக்கடியொன்றின்போது நெருக்கடி நிலைக்கு ஏற்ப தமது தேவைகளை குறைத்துக் கொள்வது அல்லது மாற்று வழிகளுக்குச் செல்வது வெட்கக் கேடான விஷயமல்ல. மிகவும் இயல்பானது. தேசிய கொடிக்கு எழுந்து நின்று மரியாதை செய்வதற்கு ஒப்பான ஒரு காரியமே, நெருக்கடி நிலையோடு பயணித்து அதில் இருந்து வெளி வரும் வரை தம்மை சூழ்நிலைகளுக்கு ஏற்றமாதிரி அதனுடன் பொருந்திப் போவதுமாகும்.

### நாடு நெருக்கடிக்குள் என்பது உண்மை, அதற்காக

# கெப்டனுடன் கோபம் எனில் கப்பலையே மூழ்கடிப்பதா?

### ஒன்றிணைந்து தீர்வு காண்பதே ஆரோக்கியம்

'புயலில் சிக்கியுள்ள கப்பலை மீட்க முனையாமல் கேப்டன் மீதான கோபத்தால் கப்பலை மூழ்கடிக்க நினைக்காதீர்கள். ஜனாதிபதியுடன் பிரச்சினைகள் இருக்கலாம் ஆனால் அவற்றை காட்ட வேண்டிய நேரம் இதுவல்ல. நாம் ஒன்றிணைந்து நாட்டை மீட்கவேண்டும்'என நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

காணொலியூடாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே நிதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

'நாங்கள் பயணிக்கும் கப்பல் திடீரென நடுக்கடலில் வைத்து புயலில் சிக்கியுள்ளது. நீங்கள் அந்த கப்பலின் கேப்டனுடன் கோபம் என்றால் உடனே அந்த கப்பலை மூழ்கடிப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். அவ்வாறு செய்தால் நாமும் நீரில் மூழ்கி இறந்துவிடுவோம். கப்பலில் பயணிக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து மெதுவாக அந்த கப்பலை பாதுகாப்பாக கரைக்கு கொண்டுவர வேண்டும். அதன் பிறகே கேப்டனுடனான பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்"

'இது போலவே தற்போது நமது நாட்டிலும் பிரச்சினை உருவெடுத்துள்ளது. ஜனாதிபதியுடன் பிரச்சினைகள் இருக்கலாம் ஆனால் அவற்றை காட்ட வேண்டிய நேரம் இதுவல்ல, இது பழிவாங்கும் நேரமல்ல.

இப்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நமது நாட்டை மீட்டெடுக்க போராடுவோமென்று நிதி அமைச்சர் அலி சப்ரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## எந்தவொரு நோயினாலும் ...

பிரதமர் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும் ஆஸ்பத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இணையத்தளங்களில் நேற்று முன்தினம் முதல் தகவல்கள் பரிமாறப்பட்டு வந்தன.

சமூக வலைத்தளங்களில் பரவிவரும் பிரசாரம் தொடர்பில் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தனது டுவிட்டர் தளத்திலும் பிரதமர் பதிவொன்றை செய்துள்ளார். அதில் "I am fit, can run with these youngsters even today" என்று பதிவிட்டுள்ளார்.

பிரதமர் பதவியில் முழு அளவில் ஈடுபடுவதற்கான உடல் ஆரோக்கியம் இல்லாமையினால் அந்தப் பதவியில் இருந்த விலகவுள்ளதாக பல தகவல்கள் வெளியாகி இருந்தன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இடைக்கால அரசாங்கம் தொடர்பில் பரவலாக பேச்சுக்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

இது தொடர்பாக பிரதமரிடம் கேட்கப்பட்டது.

இடைக்கால அரசாங்கம், பிரதமர் பதவி மற்றும் காலிமுகத்திடல் போராட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கும் போது, இடைக்கால அரசாங்கம் அமைந்தாலும் தானே பிரதமரென அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்,

இவ்வாறான சூழ்நிலைகள் வரும். இவற்றிலிருந்து வெளியில் வர பொறுமையுடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான நிலைமை கடந்த காலங்களிலும் இருந்துள்ளன என்பதை மறந்துவிடக் கூடாதென்றும் சுட்டிக்காட்டினார்.

உங்களை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறுஅமைச்சர்கள் சிலர் கூறுகிறார்கள்?

நான் நினைக்கவில்லை பெரும்பான்மையானவர்கள் இதனை கூறுகிறார்களென்று. ஒரு சிலர் கூறலாம். ஆனால் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு இதுவரை என்னிடம் யாரும் கோரவில்லையென பிரதமர் குறிப்பிட்டார்.

காலிமுகத்திடலில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பது தொடர்பில் பிரதமரிடம் கேட்கப்பட்ட போது,

அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஆயத்தமாகவே இருக்கிறோம். அவர்கள் விரும்பினால் அவர்களுக்காக அலரி மாளிகை திறந்தே இருக்கிறது. அவர்கள் வருவார்களேயானால் அவர்கள் கூறும் அமைச்சர்களை அழைத்துவர முடியுமென்றும் தெரிவித்தார்.

## IMF ஒத்துழைப்பு பேச்சு...

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர்கள் மத்தியில் சிறந்த புரிதல் காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரிலிருந்து சூம் தொழில்நுட்பம் மூலம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி ஊடக மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பல மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ள அவர் சர்வதேச நாணய நிதியத்தின் நான்காவது சரத்துக்கு இணங்க குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின்படி இலங்கைக்கு கடன் வழங்கக் கூடிய வாய்ப்புகள் கிடையாதென ஏற்கனவே தீர்மானித்திருந்தபோதும் அது தொடர்பில் தீர்க்கமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு பின்னர் கடன் வழங்குவதற்கான வாய்ப்பு மற்றும் புதிதாக பெற்றுக்கொள்ளக்கூடிய கடனை மீளச் செலுத்துவதற்காக முறைமை தொடர்பில் சாத்தியமான இணக்கப்பாட்டுக்கு வரமுடிந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய சூழ்நிலையில் கடன் பெற்றுக் கொள்பவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் ஏப்ரல் மாதத்தில் 500 மில்லியன் டொலரும் ஜூன் மாதத்தில் மேலும் 500 மில்லியன் டொலரும் மற்றும் ஜுலை மாதத்தில் ஒரு பில்லியன் டொலர்களையும் வழங்க வேண்டியுள்ளதாகவும் தற்போது நிலவும் சூழ்நிலையில் மேற்படி கடன் தவணைகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதும் தற்போதைய சூழ்நிலையில் கடன்களை செலுத்த வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் உதவியை பெற்றுக் கொள்வதற்கு பிணையாளர்கள் தேவைப்படுவதாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் உண்மைக்குப் புறம்பானதென்றும் அதனை தாம் நிராகரிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போதைய நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள் முனைப்பாக செயல்பட்டு வருவதுடன் இலங்கையில் காலை வாரி விடுவது மற்றும் அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் நாட்டை மேலும் மோசமான நிலைக்கே கொண்டு செல்லும் என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஒருவர் மீது மட்டும் விரல் நீட்டுவது முறையற்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## புதிய உத்தரவுகள் பிறப்பிப்பு...

மேலும், வங்கிகளில் வைப்புக்களை ஈர்ப்பதற்காக வங்கிகளால் பின்பற்றப்பட்ட இறுக்கமான பணவியல் கொள்கை நடவடிக்கைகளுக்கிணங்க வங்கிகள் வைப்பு விகிதங்கள் போதுமான அளவில் சரிசெய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

## S.L.M.C யிலிருந்து...

சட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இதனையடுத்து இந்த நால்வரிடமும் விளக்கம் கோரப்பட்டிருந்ததுடன் இந்த தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## O/L, A/L பரீட்சை...

மே மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகும். இது ஜுன் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகி, நவம்பர் மாதம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## இந்தியா வழங்கும் மருந்துகள்...

இறக்குமதி செய்வதற்கு 19.02 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அதற்கேற்ப மருந்து பற்றாக்குறையை சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவின் மத்திய களஞ்சியசாலையில் இரண்டு உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் 148 அத்தியாவசிய மருந்துகள் உட்பட பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமண வீட்டில் திருடர்கள்...

சில மாதங்களுக்கு முன்னரும் இரண்டாவது பிள்ளைக்கு கடந்த வியாழனன்றும் திருமணம் நடைபெற்றது. கடந்த வியாழக்கிழமை திருமண நிகழ்வுக்கு அனைவரும் சென்றிருந்த வேளை வீட்டினுள் புகுந்த கொள்ளையர் வீட்டின் பின்புற ஜன்னலை உடைத்து உள்ளே சென்று 80 பவுண் நகை மற்றும் 10 இலட்சம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளளனர்.

இந்த நகை மற்றும் பணத்தை திருமணம் முடித்துள்ள மகள்களுக்கு வழங்கவென வங்கியிலிருந்து மீட்டு வீட்டில் வைத்திருந்த போதே கொள்ளையிடப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற போது வீட்டிலுள்ள அனைவரும் திருமணத்துக்குச் சென்றிருந்ததுடன் வீட்டு வளர்ப்பு நாயும் சுகவீனமுற்ற நிலையிலேயே மீட்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் மோதரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 20க்கு வாக்களிக்குமாறு...

இராஜாங்க அமைச்சர் முஷாரப் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தத்துக்கான வாக்களிப்பு நிகழ்ந்த இறுதித் தருவாயில் தொலைபேசி மூலமாக அரசாங்கத்தின் உச்ச அரசியல்வாதியுடன் பேசி எங்கள் மூவரையும் வாக்களிக்குமாறு பணித்த ரிஷாத் அந்த உச்ச அதிகாரத்திடம் நானும் வாக்களிக்கட்டுமா? என்றும் கேட்டிருக்கிறார். அதற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டாமென்று பதில் கிடைத்திருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் உட்பட ஏனைய 03 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் என்னை வாக்களிக்க வேண்டாமென்று சொல்லிவிட்டார்களென தெரித்த ரிஷாத், நீங்கள் வாக்களியுங்கள் என்று கூறியிருக்கிறார்.

இந்த விடயத்தை பொய் என்று சத்தியம் செய்ய முடியுமா? என்று இராஜாங்க அமைச்சர் முஷாரப் அந்த பேட்டியில் சவால் விடுத்துள்ளார்.

அரசியலில் ரிஷாத்தை நோக்கி வரும் பிரச்சினைகளை நானே முன்நின்று சமாளிப்பேனென்று வந்தவன் நான். ஆனால் அவரின் செயற்பாடுகள் என்னை பாதிக்கிற போது நான் என்னை காப்பாற்ற வேண்டிய சூழலும் உருவானது. அதனால் தான் என்னுடைய அரசியல் பயணமும் மாறியது. ஆகவே, மர்ஜான் பளீல் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான எங்களிடம் அவர் சொன்ன விடயங்கள் பொய் என்று சத்தியம் செய்வாரா? ரிஷாத் பதியுத்தீன் என இராஜாங்க அமைச்சர் முஷாரப் சவால் விடுத்துள்ளார். இதேவேளை தான் 20 க்கு வாக்களிக்கவில்லையெனவும், ரிஷாத் பதியுத்தீன் இரட்டை வேடம் போட்டு சமூகத்தை ஏமாற்றுவதாகவும் இராஜாங்க அமைச்சர் முஷாரப் மேலும் தெரிவித்தார்.

# பின்னோக்கிய பெறுமானங்களில் களங்களை நகர்த்துகிறதா அரசு?



பொருட்தட்டுப்பாடு, விலையேற்றம் இதுபோன்ற நெருக்கடிகளால் மக்கள் மூச்சுத்திணறும் நிலைகள் நாட்டின் அமைதியைப் படையெடுத்திருக்கிறது. இந்தப் படையெடுப்புக்கள் பசி, பஞ்சத்தை போக்கவே புறப்பட்டிருக்கிறது. புறமுதுகு காட்டி ஓடும் நிலையில் இந்த அமர்க்களம் இல்லை. இதுதான் இன்றுவரைக்கும் உள்ள ஆறுதல். ஆனால், இதுதவிர ஏதும் இதற்குள் புகுந்திருந்தால், கட்டாயம் அவை புறந்தள்ளப்பட வேண்டும். பழிதீர்ப்பது, ஆட்சியைப் பிடிப்பது, அதிகார அலகு கோருவது இன்னும் தனித்தனி அஜந்தாக்கள் தலையெடுப்பது எல்லாம் இந்தப் பொதுப்படையெடுப்பை பலமிழக்கச் செய்யும். தென்னிலங்கை சக்திகளின் தேவை, பொதுவாக பொருளாதார பிரச்சினைக்கான தீர்வுதான். மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவலம் 225 எம்.பிக்களையும் இராஜினாமாச் செய்யுமாறு கோஷமிடும் சூழலுக்குச் சென்றிருக்கிறது. இதுபற்றித்தான் அரசியல்வாதிகளின் கவனம் இருக்க வேண்டும். குறிப்பாக, சிறுபான்மை தலைமைகளின் கவனம் கத்திக் கூர்மையில் நடக்க வேண்டிய நிலைதான் இது. சமஷ்டி தரவில்லை, சந்தர்ப்பம் தரவில்லை என்பதற்காக அரசாங்கத்தை அனுப்ப எடுக்கப்படும் எத்தனங்கள் ஏதோவொன்றை எச்சரிக்கலாம்.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக இதை யாராவது அர்த்தப்படுத்துவார்களானால் அவர்களே தனித்தனி அஜந்தாக்காரர்கள். இன்றுள்ள லட்சணத்தில், இன்னுமொரு தேர்தலுக்கான அஜந்தாக்களாகவும் இவை இருக்க இயலாதே! அவ்வாறானால், கற்பனைக் காரணங்களைக் கையிலெடுத்துள்ளனரா இவர்கள்?. எனவேதான், இந்நிலை ஏற்பட்டதற்கான காரணங்களை களைய வேண்டிய பொறுப்புள்ளோர் பொறுப்புடன் நடக்க நேரிட்டுள்ளது. ஆனாலும், இவ்வாறு நடந்ததாகத் தெரியவில்லை. அரசியலாகட்டும் அல்லது பொதுத்துறையாகட்டும் ஏன்? மக்களும் இவற்றில் பொறுப்புடன்தான் நடக்கவேண்டும். சந்தர்ப்பம் வாய்த்துவிட்டதற்காக நீண்டகால ஆசைகளை அடைந்துகொள்ளும் தேவைகளை இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவது திறமையாகாது.

இவ்வாறு சிலர் பயன்படுத்துவதுதான் இந்த நெருக்கடிகளைத் தீவிரப்படுத்துகிறது. எரிபொருள், எரிவாயு, பால்மா மற்றும் எதையாவது தேவைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்வது, பதுக்கி வைப்பது போன்ற வியாபாரத் தந்திரங்கள் கைவிடப்படுவதற்கான கூட்டுமுயற்சிகள், பொதுப் பொறுப்புக்களை முன்னின்று நடத்துவது யார்? அரசாங்கத்தரப்பு தவிர்ந்த வேறு எவரிடமும் இந்தப் பொதுப் பொறுப்புக்கள் இன்னும் ஏற்படவில்லையே! ஆக எளிய காய்நகர்த்தலாக பாராளுமன்றத்தில், சாதாரண பெரும்பான்மையை (113) காட்டி ஆட்சியைப் பொறுப்பெடுக்கும் புரிந்துணர்விலும் இவர்கள் இல்லை. இதைத்தான், ஜனாதிபதி அடிக்கடி சொல்கிறார். "அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே அரசாங்கம் இருக்கிறது. 113 ஐ நிரூபித்தால் அரசாங்கத்தை உடன் கையளிப்பேன்" என்பதும் இதற்காகத்தான்.

இவ்வாறான நெருக்கடிச் சூழல்களில் மக்களை விட்டு ஓடுவது, ஒரு தலைவனுக்கு அழகுமில்லை. இந்த பின்னோக்குப் பெறுமானங்களில், ஜனாதிபதி களத்தை நகர்த்துவதாகவே தோன்றுகிறது. அசேதனப்பசளை உள்ளிட்ட தோற்றுப்போன திட்டங்களால் இழந்துபோன மவுசைப் பெற முடியாவிடினும், நஷ்டத்தை ஈட்டிக் கொள்ளும் நாட்டம் இந்த அரசுக்கு இருக்கிறது. இதற்காகத்தான் இவ்வளவு இறங்கியும் வந்திருக்கிறது. எனவே, இதைத்தான் எதிரணிகள் சிந்திக்க வேண்டும். வீதி ஆர்ப்பாட்டங்கள், வரவேண்டிய வெளிநாட்டு டொலர்களை தாமதப்படுத்துகிறது. குறைந்தளவில், ஆடம்பர இறக்குமதியை மட்டுப்படுத்தியிருப்பதும் இந்த அத்தியாவசியப் பொருட்களுக்கான டொலரைச் சேமிக்கத்தான். இல்லாவிடின், வேறு வழியில் இதைச் செய்யும் வியூகங்கள் இருந்தால் அவற்றை வெளிப்படுத்துவதுதான் எதிரணிக்குள்ள பொறுப்பு. மாறாக, "மரத்தால் விழுந்தவனை மாடு குத்திய" நிலைமை ஏற்பட இடமளிப்பது பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகாது.

**சுஹைப் எம்.காசிம் ...✍**

சர்வதேச நாணய நிதியத்தின் எச்சரிக்கை, உதவி வழங்கும் நாடுகளின் ஆலோசனைகள் எல்லாம், இலங்கையில் அரசியல் புரிந்துணர்வு அல்லது பலமடைவு ஏற்பட வேண்டும் என்பதையே எம்மவர்கள் உணர வேண்டும். களவாடப்பட்டதாகக் கூறப்படும் தேசிய சொத்துக்கள், வீண்விரயத்தால் ஏற்பட்ட நஷ்டம் என்பவற்றுக்கான விளக்கங்களை பொதுமக்களுக்கு வழங்குவதும், ஆட்சியிலுள்ளோரின் பொறுப்புக்களிலிருந்து விலகப் போவதுமில்லை.




யாழ்ப்பாணம் செல்வா பலஸ் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற 'அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ்வும் மணப்பெண் அலங்காரமும்' என்ற கண்காட்சியின் போது அழகுக் கலையில் பல ஆண்டுகளாக செயற்பட்டு பல அழகுக் கலைஞர்களை உருவாக்கி சாதனைகள் படைத்தவர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். இத்துறையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பிரகாசித்துவரும் யாழ். கலாலயா பயிற்சியகத்தின் இயக்குநர் மா. சுதர்சன், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (அ. கனகசூரியர்)

## SLIM இன் 44ஆவது தலைவராக நுவன் கமகே



இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) அதன் 52ஆவது ஆண்டில், தனது 44ஆவது தலைவராக நுவன் கமகேவை நியமித்துள்ளது. அத்துடன் 2022/23 ஆம் ஆண்டிற்கான புதிய முகாமைத்துவ சபை மற்றும் நிர்வாகக் குழுவையும் அது தெரிவு செய்துள்ளது. நுவன்கமகே, Arinma Holdings நிறுவனத்தின் கோர்ப்பரேட் வாடிக்கையாளர் விவகாரங்கள் மற்றும் தொடர்பாடல் பிரிவின் தலைவராகவும், SLIM இன்கடந்தகால கௌரவ உபதலைவராகவும் இருந்துள்ளார். உட்கட்டமைப்பு அபிவிருத்தி, அழகுசாதனப் பொருட்கள், அழகு, பெஷன் மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். அத்துடன், மூலோபாய சந்தைப்படுத்தல், வர்த்தகநாம முகாமைத்துவம், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், சர்வதேச சந்தைப்படுத்தல், நிறுவனதொடர்பு, நிலைபேறானதன்மை போன்ற விடயங்களில் அவர் விரிவான நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளார்.

தனது நியமனம் குறித்து நுவன் கமகே கருத்து வெளியிடுகையில், "இலங்கை அதன் வரலாற்றில் மிகமோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது ;நாம் அனைவரும் அதனை அனுபவித்து வருகின்றோம். இந்நிலையிலிருந்து நாட்டை மீட்க, சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுடனும் நாம் அதிக ஒத்துழைப்புடனான அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டுமென, நான் உறுதியாக நம்புகிறேன்.



# திசை மாறிச் செல்லும் எதிர்ப்புப் போராட்டம்!

**விலைவாசி அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எரிபொருள் விநியோகத்தை வழங்கக் கோரியும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன. இவை மக்கள் போராட்டங்களாக ஆரம்பிக்கப்பட்ட போதும் அவை தற்பொழுது வன்முறையை நோக்கி நகர்ந்து வருவதை ஆங்காங்கே இடம்பெறுகின்ற சம்பவங்கள் உணர்த்துகின்றன.**

மிரிஹான பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறி பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் ரம்புக்கண பகுதியில் வீதியை மறித்துப் போராடியவர்களைக் கலைப்பதற்குப் பொலிஸார் மேற்கொண்டு நடவடிக்கையில் ஒருவர் உயிரிழந்ததுடன் 30 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்து தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறிப்பாக இந்த இரு போராட்டங்களையும் எடுத்துப் பார்த்தால் அமைதிப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஏதோவொரு சக்தியினால் வன்முறைப் போராட்டமாக மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் சந்தேகங்கள் வலுத்துள்ளன.

அண்மைய எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து ரம்புக்கண பகுதியில் மக்கள் வீதியை மறித்தும், ரயிலை மறித்தும் நீண்ட நேரப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். சுமார் 15 மணித்தியாலங்களாக வீதியும், ரயில் பாதையும் மறிக்கப்பட்டு போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதற்கும் அப்பால் எரிபொருள் விநியோகிப்பதற்காகச் சென்ற பவுசர் நடுவீதியில் மறித்து வைக்கப்பட்டிருந்தது. அது மாத்திரமன்றி ஆர்ப்பாட்டக் காரர்களில் சிலர் எரிபொருள் பவுசரையும் சேதப்படுத்தியிருந்தனர். இதற்குத் தீயூட்ட முயற்சித்தமையால் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.



## போராட்டமென்பதன் பேரில் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள், மறுபுறத்தில் இளைஞர்களின் குதூகலக் காட்சிகள்!

மக்களைக் கலைப்பதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்திருந்ததுடன், பொலிஸார் உட்பட 30 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

30,000 லீற்றர் எரிபொருளுடன் காணப்பட்ட பவுசருக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயூட்ட முயற்சித்தமையால் அவர்களைக் கலைப்பதற்காக குறைந்த பலத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலை பொலிஸாருக்கு ஏற்பட்டது எனப் பொலிஸ்மா அதிபர் அறிவித்திருந்தார்.

இருந்தபோதும் உயிர் பலி ஏற்பட்டிருப்பதால் இவ்விடயம் மக்கள் மத்தியில் மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் கடும் கவலையை வெளிப்படுத்தியிருப்பதுடன், சுயாதீனமான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. ரம்புக்கண பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்டோர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதுடன், விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.



## கேளிக்கைக் களமாக மாறிப் போனது காலி முகத்திடல்!

மறுபக்கத்தில், தற்போதைய அரசாங்கத்துக்கும், ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. இங்கு முன்னெடுக்கப்படும் போராட்ட முறை மற்றும் அதில் கலந்து கொள்பவர்களின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

போராட்டம் என்பதற்கு அப்பால் களியாட்டமாக மாறியுள்ளதை அங்கு இடம்பெறுகின்ற சில காட்சிகள் தெளிவுபடுத்துகின்றன. போராட்டம் நடத்தப்படும் பகுதியில் பல கூடாரங்கள் அமைக்கப்பட்டு உணவு சமைக்கப்பட்டு பரிமாறுவது, குளிர்பானம் வழங்குவது என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அது மாத்திரமன்றி போராட்டத்தில் கலந்து கொள்ள வருபவர்கள் வாகனங்களில் ஒலிகளை எழுப்பியவாறும், ஊதுகுழல்களைப் பயன்படுத்தி சத்தங்களை எழுப்பியவாறும் கொழும்பு வீதிகளில் பயணிக்கின்றனர். பொதுவாக வொசாக் அலங்காரப் பந்தல்களைப் பார்ப்பதற்கு இளம் வயதினர் மோட்டார் சைக்கிள்களில் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் போல தற்பொழுது காலிமுகத்திடலின் ஆர்ப்பட்டப் பகுதிக்கும் இளைஞர்கள் செல்கின்றனர்.

அது மாத்திரமன்றி மோட்டார் சைக்கிள்களில் சாகசம் செய்வதையும் காணக் கூடியதாக உள்ளது. இதற்கும் அப்பால் இசை வாத்தியங்களை இசைத்து பாடல்களைப் பாடுவது, நடனமாடுவது என பொழுது போக்குச் செயற்பாடுகளே அதிகம் அங்கு முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது மக்களின் உண்மையான கோரிக்கை இந்தப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்படாமல் இல்லை. (16ஆம் பக்கம் பார்க்க)

**பி.ஹர்ஷன்...**

---

# இலங்கைக்கு IMF உதவியை பெற்றுக் கொடுப்பதில் இந்தியாவின் தீவிர கரிசனை

**இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியில் திண்டாடுகின்ற இவ்வேளையில், இந்தியா இதுவரை வழங்கியுள்ள உதவிகள் அதிகமாகும். இந்தியாவின் இந்த உதவிகள் தொடர்பாக இலங்கையின் பிரபலங்கள் பலரும் இந்தியாவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர். இலங்கையின் முன்னாள் கிரிக்கட் ஜாம்பவான் சனத் ஜயசூரியவும் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ளவர்களில் ஒருவராவார்.**

அவர் மாத்திரமன்றி இலங்கையின் கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள் உட்பட பல்துறை சார்ந்தோரும் இலங்கையின் இடர்காலத்தில் இந்தியா வழங்கிய அவசர உதவிகள் குறித்து பெரிதும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இலங்கையின் உண்மையான சகோதரன் இந்தியா ஒன்றேயாகும் என்பதே அவர்களது பொதுவான கருத்து ஆகும்.

டீசல் பற்றாக்குறை காரணமாக இலங்கையில் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. மின்சாரத்தை உற்பத்தி செய்வதும் கடினமாக இருந்தது. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்ட இந்தியா விரைவாகவே எரிபொருள் கப்பலை இலங்கைக்கு அனுப்பியிருந்தது. இந்திய உதவியானது இலகு முறையிலான கடன் அடிப்படையிலானது. அதாவது குறைந்த வட்டி வீதத்தையும், நீண்ட காலத்துக்கு செலுத்தக் கூடியதுமான கடன் அடிப்படையிலான உதவிகளாகும்.

டீசல், பெற்றோல், நிதிக்கடன் மற்றும் ஒரு தொகை அரிசியையும் இலங்கைக்கென இந்தியா வழங்கியிருந்தது. அதிக வட்டி வீதத்தை விதித்து இலங்கையை கடன்பொறியில் சிக்க வைக்கும் தந்திரத்தை இந்தியா ஒருபோதுமே கையாண்டதில்லை. தனது அண்டைநாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற போது அந்நாட்டை துன்பத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டுமென்பதே இந்தியாவின் எண்ணமாகும். அதாவது பண்டைக் காலமாக இலங்கையுடன் நிலவி வருகின்ற நெருங்கிய நட்புறவை இந்தியா ஒருபோதுமே மறந்தபடி செயற்பட்டதில்லை என்பதே உண்மை.

இவ்வாறான நிலையில், இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்குமென்ற உறுதிமொழியை புதுடில்லி தரப்பு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இலங்கை நிதியமைச்சரான அலி சப்ரி இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நிதியமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலுக்காக அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த வேளையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அச்சந்திப்பின் போது இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை இலக்காக வைத்து இந்தியாவின் அர்ப்பணிப்பை அவர் இச்சந்திப்பின் போது உறுதி செய்துள்ளார்.

இலங்கை மீதான இந்தியாவின் அக்கறை இவ்வாறிருக்கையில், இலங்கைக்கு உதவி வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியா வலியுறுத்தி கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் சில தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தன.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதனால் நிதி உதவிகளை துரிதமாக வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளதாத அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



## பொருளாதார நெருக்கடியிலிருந்து அயல்தேசத்தை கைதூக்கி விடுவதில் பாரதம் கடைப்பிடிக்கும் உறுதியான கொள்கை

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவுடன் கடந்த செவ்வாய்க்கிழமை வொஷிங்டனில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இவ்வாறு இலங்கைக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை இலங்கை எதிர்கொண்டுள்ள கடினமான பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியா வழங்கி வரும் உதவிகள் குறித்தும் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவிற்கு இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கமளித்துள்ளார். இந்தியா கேட்டுக் கொண்டதற்கமைய, சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் இலங்கையுடன் தீவிரமாக ஒன்றித்து செயற்படும் என்று அதன் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியா உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக உதவிகள் வழங்கி வருகின்ற இந்தியா, சர்வதேச நாணய நிதியத்திடமும் உதவி வழங்குவதற்கான கோரிக்கையை விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இலங்கை மீது இந்தியா கொண்டுள்ள அக்கறையையே இந்நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அதேசமயம், கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ள இலங்கைக்கு தகுந்த நேரத்தில் இந்தியா வழங்கி வருகின்ற மனிதாபிமான உதவிகளுக்கு சர்வதேச நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ள இலங்கையில் அண்மையில் டீசல் நெருக்கடி ஏற்பட்டது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு இந்தியா 40,000 தொன் டீசலை உடனடியாக வழங்கியிரந்தது. இந்தியாவின் அந்த உதவியானது பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு பெரும் ஆறுதலாக அமைந்திருந்தது.

இது ஒருபுறமிருக்க, பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 1 பில்லியன் டொலர் கடனை இந்தியா வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் அண்மையில் கையெழுத்திட்டிருந்தன. அதன்படி கடன் வரம்பு நிர்ணயிக்கப்பட்டு தொடர்ந்து பெட்ரோல், டீசல் வழங்கவும் இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தியா எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை 500 மில்லியன் டொலர் தொகை கடன் வரம்பில் இலங்கைக்கு வழங்கி வருகிறது. இதன்படி ஏப்ரல் 15 ஆம் திகதி, 18 ஆம் திகதிகளில் தலா 40,000 தொன் டீசலை இந்தியா அனுப்பியிருந்தது. அதே அளவிலான பெட்ரோல் ஏப்ரல் 22 ஆம் திகதி அனுப்பப்பட்டது. இவ்வாறு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா வழங்கி வரும் உதவிகள் குறித்து இலங்கையின் அரசியல் தலைவர்கள், பிரபலங்கள், மக்கள் நன்றி தெரிவித்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே இலங்கைக்கு தக்க நேரத்தில் இந்தியா செய்து வரும் மனிதாபிமான உதவிக்கு சர்வதேச நாணய நிதியமும் பாராட்டு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழ்_ சிங்களப் புத்தாண்டையொட்டி இந்தியா 11 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை கப்பல் மூலம் அனுப்பியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் கூறுகையில், 'இந்தியா கடந்த வாரத்தில் மட்டும் 16,000 மெட்ரிக் தொன் அரிசியை இலங்கைக்கு அனுப்பியது. தற்போது 11 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி வந்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)



## சகோதர நாட்டின் இடர் தீர்ப்பதில் தீவிர அக்கறை செலுத்தும் இந்தியாவுக்கு IMF பாராட்டு

**சாரங்கன்...**

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்தும், அரசியல் ரீதியான ஸ்திரமற்ற தன்மையிலிருந்தும் மீள்வதற்கு பல்வேறு கோணங்களில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வைக் காணும் நோக்கில் நிதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினர் அமெரிக்கா சென்று சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். மறுபக்கத்தியில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**



# 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் அரசியல் கட்சிகள் பெரிதும் ஆர்வம்






## நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்கள் விடயங்களில் அரசியலமைப்புத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தயார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இளையோரைக் கொண்ட புதிய அமைச்சரவையை நியமித்த அன்றைய தினமே நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்கள் விடயங்களில் அரசியலமைப்புத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் உறுப்பினர்கள் அடங்கிய சந்திப்பின் போது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அக்கலந்துரையாடலின் போதே பிரதமரின் அறிவிப்பும் வெளியாகியிருந்தது.

அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருவதற்கு ஒருங்கே அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற ஒட்டுமொத்த அரசியல்வாதிகளையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், ஜனநாயக ரீதியில் அதற்கான ஏற்பாடுகள் இல்லையென்பதை ஆர்ப்பாட்டக்காரர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அரசியலமைப்பு விதிமுறைகளைப் புரிந்து கொண்டவர்களின் கருத்தாக இருக்கின்றது.

எவ்வாறானதொரு மாற்றத்தைக் கொண்டு வருவதாக இருந்தாலும் மக்களால் தெரிவு செய்து அனுப்பப்பட்ட 225 பிரதிநிதிகளின் ஊடாகவே அதனை மேற்கொள்ள முடியும். இந்த விடயம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்ட அரசியல் சார்ந்த அதிகாரிகளால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்பொழுது நிலவும் நெருக்கடி நிலைக்கு பாராளுமன்றத்தின் ஊடாக குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளைக் காண்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களின் அழைப்பின் பேரில் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றி குழுவின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் நீண்ட காலத் தீர்வாக புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கும், குறுகியகாலத் தீர்வாக 21வது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். 19வது அரசியலமைப்புத் திருத்தத்தில் காணப்படும் சில ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை கணக்காய்வாளர் நாயகத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தைத் திருத்தல், கணக்காய்வாளர் நாயகம் அரசியல் கட்சிகளைக் கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்ளல், அரசாங்கத்தின் ஒப்பந்தங்களுக்கு கேள்விப்பத்திரங்கள் இன்றி பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதைத் தடுத்தல் மற்றும் அரசாங்க ஒப்பந்தங்களில் ஒழுங்குமுறையொன்றை உறுதிப்படுத்துவதற்கான திருத்தம், அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் அல்லது அரசாங்க ஊழியர்களினால் சட்டவிரோதமாகச் சம்பாதித்த வெளிநாட்டு வங்கி அல்லது நிதி நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்டிருப்பதாக வெளியாகும் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு ஏதுவான வகையில் சட்டங்களைத் திருத்தல், இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்துக்கு மற்றும் ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்படுவதைத் தடுக்கும் திருத்தம் போன்ற பல்வேறு முன்மொழிவுகளைக் கொண்டு வருவதற்கு இக்கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இவை தொடர்பான மேலதிக யோசனைகளை முன்வைக்குமாறு சபாநாயகர் கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதனை ஏற்றுக் கொண்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் வகையில் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்த யோசனையை தனிநபர் சட்டமூலமாகக் கையளித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார தனிநபர் சட்டமூலத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவிடம் கையளித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் குறித்த விசேட கூட்டம் மீண்டும் நடைபெற்றதுடன், ஏனைய கட்சிகளிடம் யோசனைகள் இருந்தால் அவற்றையும் சமர்ப்பித்து அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் முடிவுகளை எடுப்பதற்கு இணைந்து செயற்படுமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 19 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் பலப்படுத்தினார்.

இந்த நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தாடல்கள் வலுவடைந்துள்ளன. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களும் இதனை வலியுறுத்தி வருகின்றனர். இந்தப் பின்னணியில் பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதற்கான மற்றுமொரு வாய்ப்பு அரசியல்வாதிகளுக்குக் கிடைத்துள்ளது.

> **“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தாடல்கள் வலுவடைந்துள்ளன. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களும் இதனை வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நிறைந்த அரசியல் கலாசாரமொன்றுக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்பொழுது கிடைத்துள்ளது.”**

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நிறைந்த அரசியல் கலாசாரமொன்றுக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தற்பொழுது கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையை இல்லாமல் செய்வார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இது இவ்விதமிருக்க, தனது இரண்டரை வருட ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் காணப்பட்ட குறைபாடுகள் குறித்து ஜனாதிபதி அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். புதிய அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டிருந்தமை மற்றும் இரசாயன உர இறக்குமதிக் கட்டுப்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமையை தெரிவித்திருந்தார்.

அது மாத்திரமன்றி பாராளுமன்றத்தில் 113 பெரும்பான்மையை நிரூபிக்கும் தரப்பினரிடம் அரசாங்கத்தைக் கையளிக்கத் தயார் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## பாராளுமன்றத்தை பலப்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்களின் காத்திரமான கருத்துகள்

இருந்தபோதும், எதிர்க்கட்சியில் உள்ள எந்தவொரு தரப்பினரும் 113 பெரும்பான்மையைக் காண்பித்து ஆட்சியைப் பொறுப்பேற்பதற்குத் தயாராக இல்லை. மாறாக அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டே இருக்கின்றனர். இவ்வாறான நிலையில், கடந்த வியாழக்கிழமை ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தைக் கொண்டு செல்லும் பிரேரணைக்கு ஏகமனதாகத் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். ஜனாதிபதியின் மீதும், பிரதமர் மீதும் அவர்களின் நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> **“எதிர்க்கட்சியில் உள்ள எந்தவொரு தரப்பினரும் 113 பெரும்பான்மையைக் காண்பித்து ஆட்சியை பொறுப்பேற்பதற்கு தயாராக இல்லை. மாறாக அரசாங்கத்தை விமர்சிப்பதிலேயே முழுமையான அக்கறை!**

மறுபக்கத்தில் விமல் வீரவன்ச உள்ளிட்ட சுயாதீனக் குழுவினர் என்று கூறிக் கொள்பவர்கள் இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்ற கருத்தையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். அதற்கு முன்னர் பிரதமர் பதவி விலக வேண்டும் என்பதும் அவர்களுடைய கோரிக்கையாக உள்ளது. அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய கட்சிகள் தமது ஆதரவைத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. இவற்றின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

எதுவாக இருந்தாலும் அரசாங்கத்தின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலம் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொருட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளமையும் வரவேற்கத்தக்கதாகவுள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரான முஷரப் மற்றும் முஸ்லிம் காங்கிரசின் உறுப்பினர் ஹாபீஸ் நசீர் ஆகியோர் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று அரசைப் பலப்படுத்தியுள்ளார்கள்.

இவர்களுடன் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வியாழேந்திரன், பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் இராகவன் ஆகியோர் இராஜாங்க அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் அவற்றுக்கான தனித்தனி நிகழ்ச்சித் திட்டத்திலேயே களத்தில் இறங்கியுள்ளதைக் காண முடிகின்றது.

அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இவ்வேளையில், தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதில் எதிரணிகள் களத்தில் இறங்கியுள்ளமை தெளிவாகவே தெரிகின்றது.

அரசுடன் பேரம் பேசுவதற்கான தருணம் இதுவென சிறுபான்மையின கட்சிகள் கருதுகின்றன. ஆனால் மக்களின் இன்றைய துன்பங்களை அக்கட்சிகள் கவனத்தில் கொள்ளவில்லையென்பது நன்றாகவே தெரிகின்றது.



**எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் மத்தியில், அரசியல் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியான நிகழ்ச்சித் திட்டங்கள்**

# கம்பளை அட்டபாகை தோட்டத்தில் திட்டமிட்டு பறிக்கப்படும் நீர்வளம்

கண்டி மாவட்ட பெருந்தோட்டப் பகுதிகளில் தோட்ட தொழிலாளர்களுக்கான குடிநீர் விநியோக கட்டமைப்புகள் முறையானதாக இல்லை.

ஆங்கிலேயர் காலத்தில் சிறப்பான நீர் விநியோக கட்டமைப்புகள் பேணப்பட்டன.

பத்து அறைகளைக் கொண்ட ஒரு தொடர் குடியிருப்புக்கு மூன்று குடிநீர்க் குழாய்கள் (பீலிகள்) வீதம் பொருத்தப்பட்டிருந்தன. போதியளவு நீர் வீட்டு வாசலடிக்கே வந்தது.

கடும் கோடையிலும் நீர் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. பீலிக்கரை எப்போதும் களைகட்டி இருக்கும். இதற்கு சான்றுதான் எமது முன்னோர் பாடிய மலையக நாட்டார் பாடல்

'பாட்டுக்கு பனிய இலயம் பந்தடிக்க மேட்டு இலயம் பேச்சிக்கு பீலிக்கரை வாச்சிதடா எந்தனுக்கு' எனும் நாட்டார் பாடல் வரிகள் எந்த அளவில் பீலிக்கரை களைகட்டியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.


படங்கள் : தெல்தோட்டை தினகரன் நிருபர்

**தாகத்துடன் தவிக்கும் தோட்ட சமூகம்**







இன்றய நிலைமையோ வேறு. நீருக்காக இன்று சண்டை போடும் இடமாக பீலிக்கரை மாறியுள்ளது. சுமார் 20வருடங்களுக்கு முன்பு அமெரிக்க ஆய்வு ஒன்றில் கீழ்வருமாறு கூறப்பட்டிருந்தது.

'இன்னும் 50 வருடங்களில் மனிதன் உணவிற்காக அன்றி நீருக்காக சண்டை போட்டு மடிவான்' என்று.

இன்று தினம் மலையக பெருந்தோட்ட மக்கள் நீருக்காக தமது சகாக்களுடனும் வெளி நபர்களுடனும் சண்டை போட்டு வருகின்றனர்.

கண்டி மாவட்டத்தில் காணப்படும் பெருந்தோட்டங்களில் அதிகமானவை அரசு நிர்வகிக்கும் தோட்டங்களாகும். இவற்றில்அநேகமானவை முழுஅளவிலோ அல்லது பகுதியளவிலோ மூடுவிழா கண்டவையாகும்.

இத்தோட்டக் காணிகள் ஒன்றில் தனிநபர்களுக்கு விற்கப்பட்டோ அல்லது குத்தகைக்கு கொடுக்கப்பட்டோ உள்ளன. தொழிலாளர்களது காணிகள் சூறையாடப்படுகின்றன. உள்ளன.

இவ்வாறு சூறையாடப்பட்ட காணிகள், சுற்றுலா ஹோட்டல்கள், விடுதிகள், மாட்டுப் பண்ணைகள், மரக்கறி தோட்டங்கள், சுத்திகரிக்கப்பட்ட நிரை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலைகள் என இன்னோரன்ன வேலைத்திட்டங்ளுக்கு ஒதுக்கப்படுகின்றன. வாழையடி வாழையாக தோட்ட சமூகத்துக்கு நீர் வழங்கப்பட்டு வந்த நீரேந்தும் பிரதேசங்களில் இருந்தே நீரை இந்நிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றன.

கண்டி ஹந்தான, கலஹா குறுப், லூல்கந்துர, தெல்தோட்டை, கிறேட் வெளி, புப்புரஸ்ஸ, லெவலன் போன்ற தோட்டங்களில் இந்நிலையைக் காணமுடிகிறது.

இவற்றைவிட நீண்டநாட்களாக இடம் பெற்றுவரும் ஒரு திட்டமிட்ட செயல்தான் வெளியார் குடியேற்றம்.

தோட்டக் காணிகளில் வெளி ஆட்களை குடியேற்றுகிறார்கள். இவ்வாறான நிலைமையில் 100, 200 குடும்பங்கள் புதிதாக குடியேற்றம் செய்யும் போது நீர் பகிரப்படுகின்றது . குடியேற்றங்களுக்கு அரசு சிறந்த குடிநீர் விநியோக கட்டமைப்புகளை அமைத்து கொடுக்கின்றது.

ஆனால் தோட்ட மக்களுக்கு அதே பழைய நிலைமை தான். குடியேற்றங்களுக்காகவே அரசுக்கு சொந்தமான தோட்ட காணிகள் திட்டமிட்டு காடாக்கப்பட்டு தரிசு நிலமாக்கப்படுகின்றன.

இந்த காணிகளை அருகில் உள்ள கிராமங்களை சேர்ந்த எமது சகோதர இனத்தவர்கள். பலாத்காரமாக கைப்பற்றி பிறகு இதில் குடியேறுகின்றனர்.

இவர்கள் தமக்கு தேவையான நீரை பெற்றுகொள்ளும் சந்தர்ப்பங்களில். தொழிலாளர்களுக்கு 200 வருடங்களுக்கு மேலாக நீரை வழங்கிய வளங்கள் அற்று போகின்றன.

இவர்களுடன் போட்டி போடவோ சண்டைபோடவோ விரும்பாத எம்மவர்கள் மாற்று வழியை தேடுகின்றனர். இப்படி நீர் வளம் இருந்து இல்லாமல் போன ஒரு தோட்டத்தின் அவல கதைதான் இது.

1995 வரையில் கம்பளை அட்டபாக தோட்டத்தைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு குழாய் மூலமாக நீர் விநியோகிக்கப்பட்ட விநியோகம் கிடைத்து வந்தது.

இது ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட நீர் கட்டமைப்புகள். அட்டபாக தோட்டத்தில் நோனா மலையில் இருந்து நீர் வியோகிக்கப்பட்டது.

ஆர். நவராஜா ...
தெல்தோட்டை தினகரன் நிருபர்

இப்பகுதியை அண்டிய காணிகளை கைப்பற்றி பிறகு வெளியாருக்கு அரசு அந்த காணிகளை பகிர்ந்து கொடுத்தது. இவ்விடத்தில் குடியேற்றங்கள் வர இவர்கள் தாம் விரும்பியவாறு நோனாமலையில் இருந்து நீரை பெற தொழிலாளர்களுக்கு நீர் இல்லாது போனது. இதனால் இவர்கள் தூர இடங்களில் உள்ள ஊற்றுகள், கிணறுகளை நீருக்கான நாடினர்.

தமது குடியிருப்புகளில் இருந்து பல கிலோமீட்டர் தூரத்தில் பள்ளதாக்குகளில் இருந்து கரடு முரடான பாதுகாப்பு அற்ற இடங்களில் இருந்து நீரை சுமந்து வருகின்றனர்.

குடிப்பதற்கு மட்டும் அல்ல ஏனைய தேவைகளுக்கும் இவ்வாறே இவ்விடத்தில் இருந்து நீரை சுமந்து வருகின்றனர்.

பாடசாலைக்கு பலநாட்கள் மாணவர்கள் நீர் இன்மையால் போவதில்லை தொழிலுக்கும் செல்ல முடியாது போய்விடும்.

இந்த படிக்கட்டுகளில் நீரை சுமந்து வரும்போது வழுக்கி விழுந்து கைகால் முறித்துக் கொண்டவர்களும் உள்ளனர்.

சிறிதாக கட்டப்பட்ட ஒரு ஊற்றில் வரும் சிறிய அளவிலான நீரை சேகரிக்க வரிசைகட்டி நிற்க வேண்டும்

பெண்களோ சிறியவர்களோ தனியாக இவ்விடத்திற்கு செல்லமாட்டார்கள். இந்த இடம் பேய்களின் வாழிடம் போல் பயங்கரமாக காட்சியளிக்கின்றது.

காட்டுப்பன்றிகள், குரங்கு, குளவி, அட்டை என பல்வேறு ஆபத்துகள் நிறைந்த இடம் இதை சொல்லும் போது கற்பணை போல் தெரியும். சென்று பார்த்தால் உடல் புல்லரிக்கும். காற்று மழையிலும் இங்கு தான் நீருக்கு செல்ல வேண்டும்.

ஒருமுறை நீர் சுமந்து வந்த ஒருவர் மேல் மரக்கிளை உடைந்து வீழ்ந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

மலசலகூட பாவனைக்கும் இங்கிருந்தே நீரை சுமந்து செல்ல வேண்டும். ஒரு நாளில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியை நீரை சேகரிக்கவே செலவிட வேண்டியிருக்கிறது.

தோட்டத்தில் தொழில் வாய்ப்பு குறைவு அநேகமானவர்கள் கம்பளை கண்டி போன்ற இடங்களுக்கு தொழிலுக்காக தினம் சென்று வரவேண்டியுள்ளது. இவர்கள் கட்டாயமாக குளித்துவிட்டு செல்லவேண்டியுள்ளது.

வீடு திரும்பும் போது இரவு 8.மணி ஆகிவிடும். ஆண்கள் இங்குவந்து குளித்துவிட்டு போவார்கள்.

இரவில் குப்பி விளக்கு வைத்து குளிப்பது பெண்களுக்கு சாத்தியம் அல்ல. நீர்வளமிக்க இந்த மலைநாட்டில் எம்மவர் நிலை இப்படித்தான் இருக்கிறது!

# பகடைகள் உருளும் மலையக அரசியல்: மக்களுக்கு கிடைத்த பலன்தான் என்ன?

தேசிய கட்சிகளைப் போலவே கொள்கைப்பிடிப்பு ஏதுமின்றி சந்தர்ப்பவாத அரசியல் சதுரங்கம் ஆடுவதில் மலையக கட்சிகள் ஒன்றும் சோடை போனவையல்ல. இன்று மலையகத்தில் இ.தொ.கா, தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய இரு கட்சிகள் மட்டுமே பலம் பொருந்தியவைகளாக இருக்கின்றன. இதில் இ.தொ.கா, த.மு. கூட்டணியை விட அரசியலில் கொஞ்சம் கூடுதல் கால அனுபவம் பெற்றுள்ளது. சில ஆண்டுகள் அது அரசியலில் தனிக்காட்டு ராஜாவாக அரசோச்சியது. ஆனால் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உதயமும், அதன் குறுகியகால வளர்ச்சியும் இன்று சமபல அரசியல் தன்மையைப் பிரகடனப்படுத்தி நிற்கின்றது. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பார்கள். ஆனால் அரசியலைப் பொறுத்தவரை இது எவ்வளவு ஆபத்தானது என்பதை சொல்லத் தேவையில்லை.

இதனால் இவ்விரு மலையக கட்சிகளும் போட்டி அரசியலில் முட்டி மோதிக் கொள்கின்றன. இதில் அதிகம் ஆர்வம் காட்டுவது இ.தொ.கா தான். அமரர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவு ஜீவன் தொண்டமானை முழுநேர அரசியலுக்குக் கொண்டு வந்தது. இது ஒன்றும் விபத்து போல நடந்தது அல்ல. ஆறுமுகன் தொண்டமானின் எதிர்பார்ப்பு இதுதான். தந்தையைப் போலவே தானும் பொதுஜன பெரமுனவோடு இணைந்து பயணிப்பதை பேணி வந்தார். இந்நிலையில தான் பொருளாதார நெருக்கடி நிலைமை முழு நாட்டையும் மூழ்கடித்தது. சகல அம்சங்கங்களிலும் நெருக்குவாரங்களுக்கு உள்ளான அரசு கூட்டணி கட்சிகள் கூட்டைப் பிய்க்க ஆரம்பித்தன. அதுவரை அரசாங்கத்தை விட்டு தாம் ஒரு போதும் வெளியேறப் போவதில்லை என்று வீறாப்புப் பேசி வந்தார் ஜீவன்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் திடுதிப்பென அரசாங்கதினை விட்டு வெளியேறுவாதாக அறிவித்தார். இது மலையக அரசியல் வட்டாரங்களில் சல சலப்பை ஏற்படுத்தவே செய்தது. கெபினட் அமைச்சுப் பொறுப்பு கிடைக்காத ஆத்திரத்திலேய அவர் இம்முடிவை எடுத்ததாக விமர்சனங்கள் வர அவர் அதனை மறுத்தார். இதன் பின்னர் கெபினட் அமைச்சுப் பொறுப்பு தருவதாகவும் மீண்டும் அரசாங்கத்தோடு இணையுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஆனால் ஜீவன் அதனை நிராகரித்து விட்டதாகவும் செய்திகள் வந்தன.

இச்சந்தர்ப்பத்தில் தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையிலான கூட்டணி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையும் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியது. அரசாங்கத்தில் இருந்து விலகி இருப்பதால் இ.தொ.கா இம்முயற்சிக்கு ஆதரவளிக்கும் என்றே நம்பப்பட்டது.

ஆனால் இ.தொ.கா திடீர் பல்டி அடித்திருக்கிறது. அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான நம்பிகையில்லாப் பிரேரணைகள் சம்பந்தமான விடயத்தில் இ.தொ.கா நடுநிலைமை வகிக்கப் போவதாக கூறியிருக்கிறது. மலையக மக்களின் நலம் கருதியே பதவியையும் பங்காளா' பொறுப்பையும் துச்சமென தூக்கியெறிந்து விட்டதாக தம்பட்டம் அடித்துவந்த ஜீவன் திடீரென தடம் மாறியது ஏன்? இங்குதான் பெரும்பான்மை இன கட்சிகளின் ஆதிக்கம் வெளிப்படுகின்றது.

1931ஆம் ஆண்டில் இந்த நாட்டில் வாழ்ந்த சகல சமூகங்களுக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. அன்று நீலம் பச்சையென்று பெட்டிகளின் நிறத்தைப்பார்த்தே மக்கள் வாக்களித்தனர். ஏனெனில் வேறு முறைமைகளுக்கு மக்கள் பழக்கப்பட்டிருக்கவில்லை 1833இல் கோல்புரூக் குழுவின் சிபாரிசு, 1931இல் டொனமூர் சீர்திருத்தம், 1910, 1920, 1924களில் ஏற்பட்ட மாற்றங்கள் எதுவுமே கோல்புரூக் கொண்டு வந்த அடிப்படை சரத்துக்களில் எந்தவொரு பின் மாற்றைத்தையும் கொண்டு வரவில்லை. இதனால் சிறுபான்மை இனம் சார்ந்த நிலைப்பாடுகளில் பாரிய மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் சுதந்திரத்துக்குப் பின் ஆட்சியமைத்த ஐ.தே.க. அரசாங்கம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. 1931ஆம் ஆண்டு தோ்தலில் 100000 தோட்டத் தொழிலாளர்கள் வாக்களித்து இருந்தனர். 1952 ஆம் ஆண்டு இடம் பெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலில் மலையகத்திலிருந்து வாக்களிக்கும் தகுதி பெற்றோர் தொகை வெறும் 8000 மட்டுமே ஆகும். 1947இல் இத்தொகை 200000 மாக காணப்பட்டது. எஸ். டப்ளியூ. ஆர் டி. பண்டாரநாயக்க முதல் வேலையாக மலையக மக்களுக்கான பிரத்தியேக தேர்தல் பதிவுச் சட்டத்தை ரத்து செய்தார். இதனால் நியமன அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பும் பறிபோனது.

1960இல் நான்காவது பொதுத்தேர்தல் நடந்தது. புதிதாக உருவாக்கப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி 50000 பேர் மலையக வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். 1961 ஆம் ஆண்டு வெவ்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டதன் பேரில் 132572 பேர் பிஜாவுரிமைப் பெற்றிருந்தார்கள். இத்தேர்தலில் அமரர் தொண்டமான் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்தார். இதன் மூலம் நியமன அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டார்.

இந்த ஆடசியிலே 1964இல் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. தேர்தல் வரும் போதெல்லாம் மலையக தலைமைகள் பரஸ்பரம் குற்றஞ் சுமத்துவதை வழக்கமாக கொண்டிருந்தன. இதனால் தாமும் தோற்று தமது எதிரணி வேட்பாளர்களையும் தோற்கடிக்கும் கைங்கரியத்தை செய்து வந்தன.

இவர்களின் ஒற்றுமை இல்லாத போக்கானது பெரும்பான்மை கட்சிகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவே செய்தது. உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் 1977 பொதுத் தேர்தல் நடந்தபோது நுவரெலியா மஸ்கெலியா மாவட்டத்தில் போட்டியிட்டார் அமரர் தொண்டமான். அச்சமயத்தில் அங்கிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 74000 ஆகும். இதில் மலையக மக்கள், இலங்கைத் தமிழ்,முஸ்லிம் மக்கள் வாக்குகளும் அடங்கும் ஆனால் அமரர் தொண்டமானுக்கு வழங்கப்பட்ட வாக்குகள் 35743 மட்டுமே. எஞ்சிய வாக்குகள் எல்லாமே பெரும்பான்மையின வேட்பாளருக்கே வழங்கப்பட்டிருந்தன.

இதுதான் இன்றுவரை இடம் பெற்று வரும்

பன். பாலா ...

மலையக அரசியல். ஏனெனில் எத்தகைய அழுத்தங்கள் எழுந்த போதும் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே பெரும்பான்மை இன கட்சிகள் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை அணுகவே பெரும்பான்மை இன கட்சிகள் தயாராக இருக்கின்றன. எனினும் இது திறந்த மனதுடனான ஏற்பாடாக இருக்க வாய்ப்பில்லை. மலையக கட்சிகளைப் பொருத்த வரை ஏதாவதொரு பாரம்பரியக் கட்சியையே ஆதரிக்க வேண்டியுள்ளது. இதுவே எழுதப்படாத சாசனம் ஆகிவிட்டது.

இதன் பின்புலத்தில் இன்று ஜீவன் தொண்டமானின் முடிவு அதிசயமானது அல்ல. அதிர்ச்சி தரக்கூடியதும் அல்ல. முன்பு சொல்லாமல் செய்ததை இன்று சொல்லிவிட்டுச் செய்கிறார்கள். அவ்வளவுதான். இ.தொ.காவின் முடிவு கொள்கை சார்ந்தததா என்றால் அதுதான் இல்லை. அப்படி என்றால் அது அரசாங்கத்தில் இருந்து வெளியேறி இருக்காது. அரசியல் ரீதியிலான இராஜதந்திரமாவும் தற்போதைய பரப்பரப்பு நிலையில் அதன் முடிவை எடுத்துக்கொள்ள முடியாது.

எது எப்படியோ, அரசாங்கத்தில் இருந்து வெளியேறிமை ஒரு நாடகம் என்னும் எதிரணிகளின் விமர்சனம் மட்டும் உண்மையாகி இருக்கின்றது. கொள்கை அடிப்படையிலான கூட்டு என்றால் இன்றைய இக்கட்டான கட்டத்தில் அரசாங்கத்துக்கு துணையாக இருந்திருக்க வேண்டுமே! நடுநிலைமை போக்கெல்லாம் எதற்காக? அரசியலில் வெளிப்படைத்தன்மை அவசியம். இதனை எதிர்பார்க்கும் உரிமை வாக்களித்த மக்களுக்கு இருக்கிறது. மூடு மந்திர அரசியல் செயற்பாடுகளால் இது வரை மலையக மக்கள் இழந்தவைதான் அதிகம்.

பேரம் பேசும் அடிப்படையிலேயே தேசிய கட்சிகளோடு கூட்டு என்பது மலையக கட்சிகளின் கொள்கையானால் ஒரேயொரு கேள்வி. பேரம் பேசல் யாரின் நலனுக்காக? மனசாட்சிக்கு விரோதமின்றி மலையக கட்சிகள் உண்மையை உரைக்குமா?

இதேவேளை 21 பேர் கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்றிருக்கிறது. கட்சிதாவுவார் என கணிப்புகள் கனிந்திருந்த நிலையில் அதை மெய்ப்பித்துள்ளார் அரவிந்தகுமார். கெபினட் அமைச்சு பொறுப்பை ஜீவன் ஏற்பார் என்று எதிர்வு கூறல்கள் இடம் பெற்றிருந்த வேளையில் இது எழுதப்படும் வரை எதுவுமே ஆகவில்லை. ஜீவனை அரவிந்தகுமார் முந்திக் கொண்டாரோ என்னவோ!



# ரம்புக்கனையில் நடந்தது என்ன?





எரிவாயு (கேஸ்), பால்மா, எரிபொருள் போன்ற பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான வரிசைகள் பல கிலோ மீற்றர் தூரத்திற்கு நீண்டு செல்லும் போது அவற்றின் விலைகளும் மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவுக்கு உயர்ந்து சென்று மக்களின் கோபத்தை இரட்டிப் பாக்கியிருக்கின்றது. விசேடமாக எரிபொருள் விலையும் நினைத்துப் பார்க்க முடியாதளவில் நாளுக்கு நாள் அதிகரிப்பதற்கு ஐ.ஓ. சி மற்றும் சிபெட்கோ நிறுவனங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாய் அமைந்தது. இதற்கு காரணம் பெருமளவு தொகை எரிபொருளுக்காகச் செலுத்த வேண்டியிருப்பதே என்ற காரணத்தை பொது மக்கள் பொருட்படுத்தவில்லை. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் இரண்டு மூன்று நாட்களுக்குள் ஒரேயடியாக அதிகப்படியாக எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோரான பொதுமக்கள் மிகவும் அழுத் தங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். அந்த அழுத்தம் வெடித்துச் சிதறியது ரம்புக்கனையில் அது ஒருவரின் உயிரையும் பறித்து, உடமைகளுக்கு சேதத்தையும் ஏற்படுத்தியது மட்டுமின்றி நாட்டுக்கு கறையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்று ரம்புக்கனை பிரதேச மக்களும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மிகவும் துன்பப்பட்டார்கள். ரம்புக்கனை நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருந்த வாகன வரிசைகள் சில நாட்களாக தொடர்ந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

ரம்புக்கனை எரிபொருள் வரிசை அவ்வாறிருக்கும் போது கடந்த 18ம் திகதி இரவு எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டது. 18ம் திகதி மாலை ரம்புக்கனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கான வரிசையில் நின்றிருந்த வாகன உரிமையாளர்களுக்கு, அன்றைய தினம் மாலை எரிபொருள் ஏற்றிய பவுசர் கொலன்னாவையிலிருந்து வருவதாகத் தகவல் கிடைத்தது. இதனால் வாகன உரிமையாளர்கள், சாரதிகள் தத்தமது வாகனங்களிலேயே அமர்ந்து காத்திருந்தது எப்படியாவது இரவுக்குள் எரிபொருள் பவுசர் வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் தான். மாலை 6.30 மணியளவில் குறித்த எரிபொருள் பவுசர் நித்தம்புவவிலிருந்து புறப்பட்டது என்ற செய்தி அவர்களுக்கு கிடைத்தது. இரவு 8.30 மணியளவில் குறித்த பவுசர் வரகாபொலவுக்கு வந்துவிடும் என்பதால் வாகனச் சொந்தக்காரர்களும், சாரதிகளும் பவுசரை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

எனினும் அன்றைய தினம் இரவு எரிபொருட்களின் விலை பெருமளவில் அதிகரிக்கப்பட்டது. நித்தம்புவவிலிருந்து வெளியேறியதாகச் சொல்லப்பட்ட பவுசரும் இன்னமும் வந்து சேரவில்லை. பவுசர் வரகாபொலவில் நிறுத்தப்பட்டு, இரவு 12 மணிக்கு மீண்டும் பயணத்தை ஆரம்பித்ததாகவும், அதற்கான காரணம் அதிகரித்த விலைக்கே எரிபொருளை விற்பதே என்ற செய்தி ரம்புக்கனை எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர்களிடையே பரவுவதற்கு வெகு நேரம் எடுக்கவில்லை. எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் நின்றிருந்தவர்கள் இந்த செய்தியால் கொதித்தெழுந்தார்கள். அப்போது நேரம் அதிகாலை 1 மணி.

ரம்புக்கனை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் ஆரம்பித்த இந்த எதிர்ப்பு நடவடிக்கையானது நகர் முழுவதும் பரவிச் செல்வதற்கும் நீண்ட நேரம் எடுக்கவில்லை. அந்நேரம் பெருமளவானோர் எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.

ரம்புக்கனை நகருக்கு நுழையும் பிரதான வீதிகள் மற்றும் உள் வீதிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உடரட்ட புகையிர வீதியும், சில்பர் கட்டைகளைப் போட்டு தடுக்கப்பட்டது. அந்நேரம் 19ம் திகதி விடிந்திருந்ததோடு, அப்போது சுமார் 2000 பேரளவில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

ரம்புக்கனை பொலிஸாரால் நிலைமையினைக் கட்டுப்படுத்த முடியாததால் கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களிலிருந்து மேலதிக பொலிஸ் குழுக்கள், கலகம் அடக்கும் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை என்பன ரம்புக்கனைக்கு வரவழைக்கப்பட்டன.

சிலிப்பர் கட்டைகளைக் கொண்டு உடரட்ட புகையிரப் பாதை ஆர்ப்பாட்டக்காரர்களினால் தடுக்கப்பட்டிருந்ததனால் கொழும்பு புறக்கோட்டையிலிருந்து கண்டி, பதுளை, நாணுஓயா நோக்கிப் பயணிக்கும் புகையிரதங்கள் மற்றும் பதுளை, கண்டியிலிருந்து கொழும்பு புறக்கோட்டை நோக்கிப் பயணிக்கும் புகையிரதங்களும் ரம்புக்கனை புகையிரத் நிலையத்திற்கு சற்றுத் தொலையில் நிறுத்தப்பட்டிருந்தன. அந்நேரம் ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு 12 மணி நேரம் கடந்து விட்டிருந்தது. பொலிஸ் கலகம் அடக்கும் பிரிவின் உத்தியோகத்தர்கள் எந்த நிலைமைக்கும் முகங்கொடுப்பதற்கு ஆயத்தமான கண்ணீர் புகை, இறப்பர் தோட்டாக்கள், தடிகள் மற்றும் துப்பாக்கிகளுடன் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். டி 56 துப்பாக்கிகளுடனான ஏராளமான பொலிஸாரும் ரம்புக்கனை நகரின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி 12 , 13 மணி நேரம் கடந்த போது நகரின் வாகன வரிசையானது பல கிலோ மீற்றர் தொலைவுக்கு நீண்டு சென்றிருந்ததோடு, பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், ரம்புக்கனை நகருக்கு வருகை தரும் பயணிகள் உள்ளிட்ட அதிக எண்ணிக்கையான பொது மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளானார்கள்.

கடும் வெயிலுக்கு மத்தியில் ரம்புக்கனை நகருக்கு கொண்டுவரப்பட்ட 33 ஆயிரம் லீட்டர் எரிபொருளுடனான பவுசர் ஆர்ப்பாட்டக்காரர்களால் தடுத்து வைக்கப்பட்டு அதனை உடரட்ட புகையிரத வீதிக்கு குறுக்காக நிறுத்தி வைப்பதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்களால் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த எரிபொருள் பவுசரின் டயர்களது காற்று திறந்து விடப்பட்டு அந்த வாகனத்திற்கு தீ வைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாருக்கு தெரிய வந்தது அப்போதுதான்.

பொலிஸ் கலகம் அடக்கும் பிரிவின் உத்தியோகத்தர்களால் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி கண்ணிர் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது அவர்களை அவ்விடத்திலிருந்து கலைந்த செல்வதற்கே என்றாலும், நிலைமை மிக மோசமடைந்தது அதன் பின்னரே. ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்திற்கு மத்தியில் புகையிரத வீதியில் ஒன்று கூடி பொலிஸாரை நோக்கி கற்களை வீச ஆரம்பித்தனர். இதன்போது முச்சக்கர வண்டி ஒன்றுக்கும் தீ மூட்டப்பட்டுள்ளது. அவ்வாறு முச்சக்கர வண்டிக்கு தீ வைத்தது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே எனக் கூறி பொலிஸாரை நோக்கி கற்களை வீசியவாறு மக்கள் குற்றம் சுமத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல் படிப்படியாக மிகவும் மோசமான நிலையை அடைந்ததில் சுமார் 20 பொலிஸார் காயங்களுக்கு உள்ளானார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் 18 பேரும் இரத்தக் காயங்களுடன் இருந்ததோடு, இரு தரப்பினரும் அம்புலன்ஸ் வண்டிகளின் மூலம் சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதன் பின்னரே எரிபொருள் பவுசருக்கு தீ வைப்பதைத் தடுப்பதற்காக பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு உயிரிழந்தார்.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் உயிரிழந்ததாக அறிய வந்ததையடுத்து நிலைமை மிகவும் மோசமடைவதைத் தடுப்பதற்காக உடனடியாகவே ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குள் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

பொலிஸ் கலகம் அடக்கும் பிரவினர் ரம்புக்கனை "எரிபொருள் கலவரத்தை" கட்டுப்படுத்தும் போது இரவாகியிருந்தது. அந்நேரம் ரம்புக்கனை நகரம் வெறிச்சோடிப் போயிருந்ததோடு, கலவரம் இடம்பெற்ற இடம், புகையிரத நிலையம், எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற இடங்கள் யுத்தம் இடம்பெற்ற இடமாக ஆகியிருந்தது.

20 பொலிஸார் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளிட்ட 34 பேர் அந்நேரம் காயங்களுடன் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதோடு, அவர்களுள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் அடங்கியிருந்தார்.

ரம்புக்கனை எரிபொருள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தெரிய வந்ததன் பின்னர் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் பெரிதும் அதிகரித்தன. 19ம் திகதி மாத்திரம் நாடு முழுவதிலும் 55 ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிந்த நபர் ரம்புக்கனை நாரன்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய தொன் சமிந்த லக்ஷான் என இனங்காணப்பட்டார். சமிந்த பின்னவலை யானைகள் சரணாலயத்தில் உள்ள யானைகளுக்கு அவரது பட்டா ரக லொறியினை பயன்படுத்தி உணவு விநியோகத்து வந்தவர் எனத் தெரிய வந்துள்ளது. அவருக்கு இரண்டு பிள்ளைகள். ஐக்கிய தேசிய கட்சியின் தீவிர ஆதரவாளரான அவருக்கு எதிராக இரண்டு குற்றவியல் வழக்குகள் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.



இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இடையில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த எரிபொருள் நிரப்பும் இயந்திரத்துக்கு யாரோ சிலர் தீ மூட்டியிருந்தனர். ரம்புக்கனை "எரிபொருள் கலவரம்" தொடர்பிலும், பொலிஸார் அதனைத் தடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பிலும் பொலிஸ்மா அதிபர் சீ. டி. விக்ரமரத்ன மக்களுக்கு இவ்வாறு விளக்கமளித்திருந்தார்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பிரகாரம் இச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பொறுப்பு சீ.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸும் கருத்து தெரிவித்தார்.

"இந்த துரதிஷ்டவசமான சம்வத்தின் போது பொலிஸாரினால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினரை கண்ணீர் புகை மற்றும் தடியடிப் பிரயோகங்களை மேற்கொண்டு கலைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்கள் 33 ஆயிரம் லீட்டரைக் கொண்ட எரிபொருள் பவுசருக்கு தீ மூட்டியிருந்தால் அது அப்பிரதேசத்திற்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியிருக்கும் என்றும், அதனைத் தடுப்பதற்கு முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சுற்றி வளைத்து தாக்குதல் மேற்கொண்ட போது தமது உயிர்களையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

அதன் பின்னரே இச்சம்பவம் தொடர்பில் ரம்புக்கனை பொலிஸார் கேகாலை நீதிவான் வாசனா நவரத்னவிற்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

சமிந்த லக்ஷான் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த இடத்தையும் நீதவான் பார்வையிட்டார்.

"இரு தரப்பினராலும் கற்களைக் கொண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனக்கு அருகில் இருந்த சுத்தாவை அங்கிருந்து ஓடிவிடுமாறு கூறினேன். அவர் அவ்வாறு ஓடிச் செல்லும் போதே துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானார்" என இச்சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் சாட்சியமளிக்கும் போது கூறினார்.



பொது மக்கள் சார்பாக ஆஜராவதற்கு பெருமளவிலான சட்டத்தரணிகள் ஊரடங்குச் சட்டத்தையும் பொருட்படுத்தாமல் ரம்புக்கனைக்கு வந்திருந்தமை முக்கிய அம்சமாகும்.

உடமைகளுக்குச் சேதங்களை ஏற்படுத்தியமை தொடர்பில் ரம்புக்கனை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கேகாலை நீதவான் வாசனா நவரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அந்த இளைஞருக்காக ஏராளமான சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தார்கள். கேகாலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த லக்ஷானின் சடலத்தையும் பார்வையிட்ட கேகாலை நீதவான் வாசனா நவரத்ன, கேகாலை வைத்தியசாலையின் சட்ட வைத்திய விசேட நிபுணர் சமந்த விஜேரத்னவிடம் சடலத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் அதன் அறிக்கையினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 20 பொலிஸார் கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதோடு, 18 பொது மக்கள் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் முச்சக்கர வண்டிக்கு தீ வைக்கப்பட்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விஜயம் செய்த சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார். அப்போது அவ்விடத்தில் இருந்த சட்டத்தரணிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் வாய்த் தர்க்கமும் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்வாங்கிய நிலையயில் பொலிஸார் ஏன் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள் என சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பினர்.

கடந்த 20ம் திகதி சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் விசேட ஊடகச் சந்திப் பொன்றில் கலந்துகொண்டார்.

"ரம்புக்கனை ஆர்ப்பாட்த்திற்கு மத்தியில் எரிபொருள் பவுசருக்கு தீ வைக்கப்பட்டிருந்தால் அது மிகப் பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கும். அவ்வாறான நிலையினைத் தடுப்பதற்கே பொலிஸார் செயற்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடு சரியா, பிழையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும். அதற்காக சமூக ஊடகங்கள் மற்றும் ஒலி, ஒளி காட்சிகள் பயன்படுத்தப்படும். இச்சம்பவத்தில் உயிரிழந்தவருக்கு இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது" எனக் கூறினார்.

இச்சம்பவத்தில் பொலிஸார் அதிகாரத்தைச் சட்ட ரீதியாகப் பயன்படுத்தியுள்ளார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக சுயாதீன விசாரணைக் குழு ஒன்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளது. பிரஜா பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ். டி. கொடிகார, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம். எஸ். பீ. சூரியப்பெருமன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஈ. எஸ். ஜயசிங்க ஆகியோர் அந்த விசாரணைக் குழுவின் அங்கத்தவர்களாகும். இச்சம்வத்துடன் தொடர்புடைய எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட ரம்புக்கனை பல நோக்கு சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் ஒருவர் இவ்வாறு கூறினார்.

"கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் பவுசர் ஒன்று எரிபொருளுடன் வந்ததாகவும் அதனை மறைத்து வைத்து அதிக விலைக்கு விற்கும் நோக்கில் மறுநாள் கொண்டு வரப்பட்டது என்ற கதையை நாம் முற்றாக மறுக்கின்றோம். எமது பவுசருக்கு கடந்த ஒரு மாதமாக வேலை இருக்கவில்லை. திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன் பின்னர் ஏப்ரல் 18ம் திகதிதான் கொலன்னாவைக்கு அனுப்பப்பட்டது. இன்னமும் அந்த வாகனம் அங்கு பாதுகாப்பு பிரிவின் பொறுப்பில் இருக்கின்றது. இச்சம்பவம் இடம்பெற்ற தினத்தில் இங்கு வந்தது வேறு இரு பவுசர்களாகும். அவை எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடும் வாகனங்களாகும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இது மறைத்து வைக்கப்பட்டிருந்த பவுசர்கள் எனக் கூறி எரிபொருளை இறக்குவதற்கு இடமளிக்கவில்லை. பழைய விலைக்கு எரிபொருளை வழங்குமாறே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவ்வாறு பழைய விலைக்கு வழங்கினால் சுமார் 25, 30 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படும்"

ரம்புக்கனை ஆர்ப்பாட்டக்காரர்கள் 33 ஆயிரம் லீட்டருடனான பவுசருக்கு தீ மூட்டியிருந்தால் பாரிய அழிவுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்ததாக பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் கடந்த 20ம் திகதி கூறியிருந்தார்.

பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் பொலிஸ் உத்தரவுகளின் பிரகாரமே இச்சந்தர்ப்பத்தில் பொலிஸார் செயற்பட்டார்கள் என்றும் அமைச்சர் இதன் போது சுட்டிக் காட்டியிருந்தார்.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 56ம் பிரிவுக்கு அமையவும், குற்றவியல் சட்டங்களுக்கு அமைவாகவும் பொலிஸாருக்கு இது தொடர்பில் தேவையான அதிகாரம் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக பொலிஸ்மா அதிபர் சீ. டி. விக்ரமரத்வை கடந்த 22ம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறும் அந்த ஆணைக்குழு அறிவித்திருந்தது.

பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலியான குருவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த லக்ஷானின் மகள் இவ்வாறு கூறினார்.

"அப்பா அன்றைய தினம் பெட்ரோல் எடுப்பதற்காக பெட்ரேல் செட்டுக்குச் செல்வதாகக் கூறியே வீட்டிலிருந்து சென்றார். மாலையில் பைசிக்களை எடுக்க முற்பட்ட போதுதான் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அதனை மாமா ஒருவர் நேரில் பாரத்திருக்கிறார். எமக்கு நியாயம் வேண்டும். எனக்கு இதற்காக பணம் எதுவும் வேண்டாம். எனது தந்தைக்கான நியாயம் கிடைக்க வேண்டும்" கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ரம்புக்கனை பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ரம்புக்கனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தீபால் சமரசேகர...
தமிழில் : எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

# 'விண்'

இறந்துபோன ஒரு பறவை வானில் தொடர்ந்து விழுவதுபோல் சுற்றிக்கொண்டிருந்தது சர்வதேச விண்வெளி நிலையம் .

மேகக்கூட்டங்களை மேய்ப்பவன் எவன் ?

இந்த மேகக்கூட்டங்களின் சாயலை வைத்து எந்தக் கண்டத்தின் மேல் நாம் பறந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்ல முடியும். அந்த விளையாட்டில் கைதேர்ந்தவன் அவன். இருப்பினும் இன்று ஒரு சிறு கணிப்பைக் கூட செய்ய அவன் மூளை திராணி அற்றதாய் இருக்கின்றது.

கண்டங்கள், தேசங்கள், மலைகள், கடல்கள், மேகக்கூட்டங்கள், வெவ்வேறு நிறமுடைய மணல்கள்,அலைகள், எல்லாம் ஒன்றிணைந்து எங்கு பார்த்தாலும் அவள் முகத்தைக் காண்பிக்கின்றன. சூழ்ந்து கிடக்கும் இருள் கூட அவள் கூந்தலை நினைவுறுத்துகின்றது. அவள் தான் அவன் உலகம். இன்று அது நிஜமாய், நிச்சயமாய், விஸ்வரூபமாய் விரிந்து நிற்கிறது.

#2

"ஹேய் , கோல் கனக்ட் ஆயிட்டுது" அவனை ஒருவன் அழைத்தான்.

சுரங்கப் பாதைக்குள் மிதந்து வரும் ஒரு மெழுகுவர்த்தியின் சுடர்போல் இவன் இருசோடி விழிகள் மிதந்து செல்கின்றன. ஈர்ப்பற்ற இப்பாதை இளைப்பாறும் தேவையற்றது. வட்டவடிவமான இந்தச் சுவர்களிடை ஒரு சூப்பர்மேன்போல் அவன் பறந்தாலும், அவனால் அவளைக் காப்பாற்ற முடியாத இயலாமையை எண்ணி அவன் இதயம் கொந்தளிக்கிறது. எழுந்து விழும் ஒவ்வெரு அலைகளுடனும் , இதயம் குருதியைக் கொப்பளிக்கிறது. ஒவ்வெரு மூச்சுடனும் நெஞ்சைக் கிழித்துக்கொண்டு பேரலையாய் வெளிவரத் துடிக்கிறது. சோகம் தொண்டையை முட்டுகிறது. கடைசியில் கண்ணீர்த் துளிகளாய் மட்டும் கசிகிறது.

#3

விண்வெளி நிலையத்தின் அறை ஒன்று, அங்கு ஒரு இயந்திரப் பெண். மின்னிடும் உலோகத்தில் கதிரொளி தெறிக்க அவள் நிலவாய் ஒளிர்ந்தாள். காற்றில் ஒரு வெண்ணிறப் புறா இறகைப் போல் கிடையாக சாய்ந்து மிதக்கிறாள். திசைகள் தொலைத்த இந்த விண்வெளியில் கிடையும் செங்குத்தும் வெறும் வார்த்தைகளே. சூரியனின் விம்பம் அவள் வெள்ளி மார்பின் மீது நகர்வது, மலைகளிடை எழுவதுபோல் உண்டு. காலணியாகவும் கையுறையாகவும் மட்டும் ஸ்பரிசம் தரித்திருந்தாள். அவள் வயிற்றுப் பகுதி வளையக்கூடிய கண்ணாடியால் ஆனது. அதற்குள் கணினியின் நீல சமிக்கை ஒளி மின்மினிபோல் மின்னியது. அவள் உடலைப் பார்க்கும் பொழுது எவ்வாறு அவள் மனிஷி இல்லையென்று தெள்ளத் தெளிவாய்த் தெரிகிறதோ, அதுபோல் அவள் கண்களைப் பார்க்கும் பொழுது அவள் உயிருள்ள உண்மை என்று மறுக்கமுடியாத அளவு மலைத்து நிற்கிறது. சொல்லப்போனால் அது உண்மையும் கூட. அந்தக்கண்கள்



பூமியில் உள்ள அவனின் காதலியின் கண்களைத் தத்ரூபமாய் மீள்பிறப்பிக்கின்றன. கண்களை மட்டுமல்ல, அவள் உடல் அசைவுகள் ஒவ்வொன்றையும், பூமியில் நிகழும் நேரத்திலேயே, இங்கு விண்வெளியிலும் நடித்துக்காட்டுகின்றது. அந்தக் கண்களைத் தாங்கிநிற்கும் இயந்திர மண்டையோட்டின் மீது ஒரு தோள் முகமூடியை எடுத்துப் போர்த்திக்கொள்கிறாள். வெறும் கண்கள் மட்டுமன்றி அவன் காதலியின் முழுமுகமும் அவன் கண்முன். பூமிக்கும் இவனுக்கும் இடையிலிருக்கும் நானூறு கிலோமீட்டர்களை அவள் ஒரே வினாடியில் பாய்ந்து வந்துவிட்டாள்.

#4

மௌனக் குளத்துள் ஒரு கல்லாக அவன் முதல் வார்த்தையை எறிகிறான்.

இவன் "நான் உன்கூட அங்க இருந்திருக்கணும்"

வலிமையிழந்த அவள் குரல் ஒவ்வொரு சொற்களையும் நடக்கப் பழகும் ஒரு குழந்தைபோல் பொருத்தின .

அவள் "இப்ப மட்டும் என்ன குறைச்சல். சொல்லப் போனா உன்னோட இந்த ரோபோ உன்னவிட அழகா இருக்கு"

பூமியில் மருத்துவமனை அறையில், இவனைப்போன்ற உருவம் உள்ள இயந்திர மனிதன் இவனின் உடல் அசைவுகளை, வசனங்களை, கண் கருமணியின் நுண்ணிய அசைவுகளை, அனைத்தையும் மீள் இயற்றி அவள் கண்முன் அரங்கேற்றினான்.

கைகளைக் கூப்பி நீரினைத் தேக்க முயற்சிப்பதுபோல், அவன் அவள் கையைப் பிடித்து நிமிடங்கள் கசியாமல் நிறுத்த முயற்சிதான்.

இயந்திரப்பெண் கண்கள் கசியும் கண்ணீரைக்கூட மிகவும் தத்ரூபமாய் மீள்பிறப்பித்தது. இதயத் துடிப்புக் கூட விண்வெளி நிலையத்தின் நீங்காத ரீங்காரத்துள் துளைத்தது. அப்பொழுது ஒரு அசரீரியாய் ஒலித்தது.

இயந்திரக் குரல் "This call is being recorded" (இந்த அழைப்பு பதிவு செய்யப்படுகிறது).

அவள் "என்ன என் கடைசி நிமிடங்களை ரெக்கோர்ட் பண்ணி அந்த ரோபோவை வைச்சு திருப்பித் திருப்பி நடிக்கவைக்கப்போறியா ? எதுக்கு ? நான் தான் உன்ன விட்டுப் போக மாட்டனே. பேயா உன் கூடவே சுத்துவன்."

இவன் "ஹ்ம்ம்... பேய் வீடு கேள்விப்பட்டிருக்கன். பேய் ஸ்பேஸ் ஸ்டேஷன் இப்பதான் கேள்விப்படுறன்."

அவள் "ஏன்? பூமிக்குத் திருப்பி வார பிளானே இல்லையோ ஐயாக்கு."

இவன் "அப்பிடியே கதவைத் திறந்துட்டு குதிச்சிடனும் போல இருக்கு"

அவள் "நடிக்காதடா, எனக்குக் கன்சர் எண்டு தெரிஞ்ச அடுத்த நாளே உன்கூட வேலைசெய்யுற அந்தப் புள்ளைய கரெக்ட் பண்ணத் தொடங்கியிருப்பாய்."

காற்றில் மிதந்து சரிந்து அந்த இயந்திரப் பெண்ணைக் கட்டியணைத்துக்கொண்டான். பூமியில் மருத்துவமனையில் இவனின் இயந்திரப் பொம்மையும் அவள் அருகில் படுத்து அவளை இறுக்க அணைத்துக்கொண்டது. பொய்யான சிரிப்பை உடைத்துக் கொண்டு கண்ணீர் பெருகியது. அந்தக் கண்ணீர்த்துளிகள் விண்வெளியில் முத்துக்களாய் மிதந்தன.

அவள் "எனக்கு ஒரு டவுட். இப்ப நீ விண்வெளியுல குதிச்சா கீழ விழுவியா ? மேல போவியா?"

இவன் "இங்க கீழ மேல வடக்கு கிழக்கு ஒன்றும் இல்ல, தண்ணியில் லாம உயிர் பிரியும் வரை அப்பிடியே விண்வெளிக்குள்ள போய்கிட்டே இருக்கவேண்டியது தான்."

அவள் "திசைகள் இல்லா தேசத்தில் உன்னை எங்கெனத் தேடுவேன்."

அவள் நெற்றிப்பொட்டில் இவன் முத்தமிட்டான்.

அவள் "நீ விண்வெளிக்குள்ள பாய்ஞ்சு கொஞ்ச நேரத்துல உன் ஸ்பேஸ் சூட்டில இருக்க பியூஎல் (எரி பொருள்) முடிஞ்சிடும். அதுக்கப்புறம் நீ விண்வெளியில தத்தளிச்சுட்டு நடுவுல நிக்க மாட்டியா."

இவன் "ஏய் லூசு நியூட்டனின் முதலாம் விதி புறவிசை தாக்காதவிடத்து ஓய்வில் இருக்கும் பொருள் தொடர்ந்து ஓய்வில் இருக்கும், இயங்கிக்கொண்டிருக்கும் பொருள் மாறா கதியுடன் நேர்கோட்டில் தொடர்ந்து பயணிக்கும். பியூஎல் விசையை உருவாக்கத்தான் தேவை. விசை திசையையும் கதியையும் மாற்ற மட்டும்தான்□"

அப்பொழுதுதான் கவனித்தான், அவன் நெஞ்சோடு அழுத்தியிருந்த அவள் நெஞ்சு எழுந்து விழுவதை நிறுத்திவிட்டது.

#5

காலம் தாண்டிக்
காதல் ஒன்று
தூரம் தாண்டித்
தூருதின்று
மௌனம் அலைகள் வீசுது
மௌனம் அலைகள் வீசுது
நாணம் கொண்டு வானம்
வண்ணம் அள்ளிப் பூசுது
நாணம் கொண்டு வானம்
வண்ணம் அள்ளிப் பூசுது
மௌனம் அலைகள் வீசுது
அவ் அலைகள் மீது இந்த
விண்கப்பல் போகுது
தள்ளாடி எங்கோ
தென்றல் காவிச் செல்லும்
பூவைப் போல தேகம்
பூஜ்ஜிய ஈர்ப்பில்
மிதந்தது தானும்
இந்த உணர்ச்சியை அன்றே
நான் உணர்ந்தனே உன்னில்
இந்த உணர்ச்சியை அன்றே
நான் உணர்ந்தனே உன்னில்
விண்ணும் மண்ணும் காதல் கொண்டு
மோதி நிற்கும் ஒரு நிமிடத்தில்
நானும் உன்னைக் கண்டேன்

ரதிதேவி, மானிப்பாய் ...

# அம்பேத்கருடன் நரேந்திர மோடியை ஒப்பிட்டு இளையராஜா எழுதியது என்ன?

பாபாசாகேப் அம்பேத்கரையும், பிரதமர் நரேந்திர மோதியையும் ஒப்பிட்டு 'அம்பேத்கர் அன்ட் மோடி' என்ற தலைப்பில் புளூகிராஃப்ட் பதிப்பகம் வெளியிட்டுள்ள நூலுக்கு இசையமைப்பாளர் இளையராஜா எழுதிய முன்னுரை பரபரப்பாக விவாதிக்கப்படுகிறது.

அந்த முன்னுரையில் இளையராஜா இப்படி எழுதியிருக்கிறார்:

"டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் தனது அறிவுத்திறன் மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான போரினால் சமூகத்தால் நினைவுகூரப்படும் ஒரு மாபெரும் மனிதர். அவருடைய பணியின் மகத்துவம், நமது அரசியலமைப்பின் மூலம் அவர் நம் அனைவருக்கும் உறுதி செய்திருக்கும் உரிமைகள் பற்றி நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

எல்லா சவால்களையும் கடந்து வெற்றி பெற விரும்பும் பலருக்கு அவர் ஓர் உத்வேகம். சில வரலாற்று ஆளுமைகள் தங்கள் வாழ்நாளில் பெருமை பெறுகின்றனர். ஆனால் விரைவில் மறக்கப்படுகிறார்கள். வேறு சிலர், தாங்கள் வாழும் காலத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை, பிற்காலத்தில் அவர்களுக்கு பொருத்தப்பாடு ஏற்படும்.

ஆனால், 'டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்' ஒரு அரிய தலைவர், அவர் தனது காலத்திலேயே சரித்திரம் படைத்தார், அவர் மறைந்து பல தசாப்தங்களுக்குப் பிறகும் அவரது வாழ்க்கை பரவலாக வாசிக்கப்பட்டு பின்பற்றப்படுகிறார். சில ஆண்டுகளுக்கு முன், 'டாக்டர் அம்பேத்கர் இந்தியாவின் நீர் மற்றும் ஆற்று வழிப்பாதை கொள்கையின் சிற்பி' என்று குறிப்பிட்டார் பிரதமர் நரேந்திர மோடி.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணமும், டாக்டர் அம்பேத்கரின் லட்சியங்களும் ஒன்றை ஒன்று சந்திக்கும் புள்ளியை ஆராய இந்த நூல் முயற்சிக்கிறது.

தொழில்மயமாக்கலைப் பொறுத்தவரை, பிரதமரின் 'மேக் இன் இந்தியா' கொள்கை பல சாதனைகளை செய்துள்ளது. குறிப்பாக மொபைல் தயாரிப்பில். சாலைகள், இரயில்கள், அதிவேக நெடுஞ்சாலைகள், மெட்ரோக்கள் போன்ற உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்காக இந்தியாவும் நன்கு அறியப்படுகிறது.

சமூக நீதி என்று வரும்போது, பல சட்டங்கள், அரசமைப்புச் சட்ட பாதுகாப்புகள் மூலமாகவும், நீண்ட காலமாக நிலுவையில் இருந்த ஓபிசி ஆணையத்தை அமைத்தது ஆகியவற்றின் மூலமாகவும் சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட மக்களுக்கு சட்டப் பாதுகாப்புகளை வலுப்படுத்தியுள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.

கழிவறைகள் கட்டுதல், வீடுகள் கட்டுதல் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடங்குதல் போன்றவற்றின் மூலம் ஏழைகளின் வாழ்க்கையை மாற்றுவதற்கான பெரிய அளவிலான முயற்சியை அவர் முன்னெடுத்துள்ளார். இதில் பயன்பெறும் பலர் ஏழைகளிலும் மிக ஏழைகள். சமூக ரீதியாக பின் தங்கிய சமூகங்களை சேர்ந்தவர்கள்.

வீட்டுவசதி, சுகாதாரம், மின்சாரம், நிதித்துறை பங்கேற்பு ஆகியவற்றின் வெற்றிகள் கோடிக்கணக்கான ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

சமீபத்தில் பெண்களின் திருமண வயதை உயர்த்தும் முடிவை பிரதமர் மோதியின் அரசு எடுத்ததாக செய்திகளில் படித்தேன். பெண்கள், குறிப்பாக கிராமப்புறப் பெண்கள் மேற்படிப்பைத் தொடருவதற்கான சுதந்திரம் அளிக்கும் நடவடிக்கை இது.

பெண்களின் முன்னேற்றத்துக்கான பிரதமரின் பணிகள் என்று கூறும்போது, இலவச கேஸ் இணைப்புகள் வழங்கும் திட்டமும், பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவது குறித்த பிரதமரின் செய்தியும் நினைவுக்கு வருகின்றன.

பெண்களுக்கு ஆதரவான முத்தலாக் தடைச்சட்டம், பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ இயக்கத்தின் மூலமாக மக்கள் தொகையில் பெண்களின் விகிதம் உயர்ந்தது ஆகியவற்றின் மூலமாக நிகழ்ந்த சமூக மாற்றங்களை நினைத்து அம்பேத்கர் பெருமைப்பட்டிருப்பார்.

அம்பேத்கர், நரேந்திர மோடி ஆகிய இரண்டு ஆளுமைகளுக்கும் இடையிலான ஆச்சரியமூட்டும் ஒற்றுமைகளையும் இந்த நூல் வெளிக்கொணர்ந்துள்ளது. இந்த இரண்டு ஆச்சரியமூட்டும் ஆளுமைகளும் சமூகரீதியில் அதிகார மற்ற மக்கள் எதிர்கொள்ளும் சோதனைகளை வெற்றிகொண்டனர். இருவருமே வறுமையையும், ஒடுக்கும் சமூக அமைப்பையும் அருகில் இருந்து பார்த்து அவற்றை உடைத்தெறிந்தவர்கள். இருவருமே இந்தியாவுக்காக பெரிய கனவுகளைக் கண்டவர்கள். ஆனால் இருவருமே வெறுமனே சிந்திக்கிற வேலையை மட்டும் செய்தவர்கள் அல்லர். இருவருமே செயல்படுவதில் நம்பிக்கை கொண்ட எதார்த்தவாதிகள்," என்று அந்த முன்னுரையில் இளையராஜா தெரிவித்துள்ளார். டாக்டர் அம்பேத்கரையும், பிரதமர் நரேந்திர மோடியையும் ஒப்பிட்டு இந்த முன்னுரையில் இளையராஜா வெளியிட்டுள்ள கருத்துகள் தமிழ் சமூக ஊடகங்களில் சலசலப்பைத் தோற்றுவித்துள்ளன. தமிழின் மூத்த இசையமைப்பாளரும் இசைஞானி என்று கொண்டாடப்படுகிறவருமான இளையராஜா நரேந்திர மோடியை அம்பேத்கரோடு ஒப்பிட்டு எழுதியுள்ள இந்த முன்னுரை பரபரப்பாக விவாதிக்கப்படுகிறது.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 20

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | ■ | 05 | 06 |
| 07 | | | | ■ | 08 | | |
| 09 | | | | ■ | | ■ | |
| | ■ | 10 | | | ■ | 11 | ■ |
| ■ | ■ | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | 16 | ■ | ■ | 17 | | ■ | |
| 18 | | 19 | ■ | 20 | | 21 | ■ |
| 22 | | | | ■ | 23 | | |

திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................
.............................. ..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 19
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :20

**இடமிருந்து வலம்**

(01) நறுமணம்.
(05) வழக்கு தொடுப்பவர்.
(07) கல்வி அறிவு இல்லாதவன்.
(08) குறைந்த விலையில் விற்பனை.
(09) பரம்பரை.
(10) நாள்.
(12) ஒரு காட்டு மிருகம். (திரும்பியுள்ளது)
(13) அழகு.
(15) அரைப்பங்கு.
(17) ஓலைச்சுவடி.
(18) இதுவும் ஒரு விலங்கு.
(20) உயிர்களுக்கு இரங்கும் பண்பு. (குழம்பியுள்ளது)
(22) மழையினால் ஏற்படும் நீர்ப்பெருக்கு. (குழம்பியுள்ளது)
(23) பகைவன் குழம்பிவிட்டான்.

**மேலிருந்து கீழ்**

(01) குணவியல்பு.
(02) விவசாயம்.
(03) மதி. (குழம்பியுள்ளது)
(04) சுயகௌரவம். (குழம்பியுள்ளது)
(05) திரைப்பட பாடலாசிரியர்களுள் ஒருவர்.
(06) ஆவணத்தில் எழுதிவைக்கும் குறிப்பு. (குழம்பியுள்ளது)
(08) கோடரி போன்ற சிறு ஆயுதம்.
(11) காது.
(13) விரைவு.
(14) தலைமுடிக்குள் காணப்படும் சிறிய உயிரினம். (தலைகீழ்)
(15) பகுதி அல்லது பங்கு.
(16) பெருமளவில் ஒன்றுகூடிய நிலை.
(17) குழந்தைக்கு சுகமான தூக்கத்திற்கு உதவுவது.
(19) சத்தம் எழுப்பும் பட்டாசு. (தலைகீழ்)
(21) பயிர்களுக்கு ஊட்டச்சத்து தரும் இயற்கைத் தயாரிப்பு. (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 19

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பிரகாசம் 05. மாசி 07. உதிரி
08. ரதி 09. வேட்கை 11. சாளரம்
12. சதா 13. தேள் 14. நாசம்
16. சொத்து 18. வயது 20. விண்மீன்
23. அம்மை 24. திலகம்

**மேலிருந்து கீழ்**

01. பிரவேசம் 02. காரிகை 03. சதி
04. உள்ளம் 05. மாத்திரம் 06. சிரம்
10. தாட்சண்யம் 15. நாவன்மை 16. சொல்
17. துணை 19. துவி 21. மீதி
22. களி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 18

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எஸ். துஷாந்த்,**
இல. 349/1/19,
பிரதான வீதி,
பசறை.

**இரண்டாம் பரிசு**
**திருமதி துஸாரா முகம்மட் சாரான்,**
இல. 238/A, தக்கியா மாவத்தை,
கல்லொலுவ,
மினுவாங்கொடை.

**மூன்றாம் பரிசு**
**ஏ.எல்.ஏ. சலாம்,**
215, கராகொட,
எட்டியந்தோட்டை.

### பாராட்டு பெறுவோர்

**1. திருமதி மங்களம் மனோரஞ்சன்,**
இல. 69, வட்டைவிதானை வீதி,
கல்முனை 02.

**2. கே. ரஞ்சிதம்,**
வன்னியா வீதி, களுதாவளை,
களுவாஞ்சிக்குடி.

**3. ஏ.எல். கலீல்,**
132, அரபிக்கல்லூரி வீதி,
அக்கரைப்பற்று 18.

**4. இல்யாஸ் தாஸிம்,**
இல. 23 A, இப்றாஹிம் வீதி,
தொட்டவத்தை, பாணந்துறை.

**5. ஏ.எல்.எம். அஸீஸ்,**
17/A, சிறிமல் மாவத்தை,
தெஹிவளை.

**6. ரஜினி புண்ணியமூர்த்தி,**
36, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

**7. கே. ஹெலன்குமார்,**
ட்ரூப் எஸ்டேட்,
தலவாக்கலை.

**8. C. பவித்ரா யாழினி,**
241/15,
ரொக்ஹில்,
பதுளை.

★ ★ ★




மீண்டும் அப்பாவின் குரல்தான் போன் வழியே வந்தது.

அந்த டயரையும் ஜெக்கையும் டிரைவரிடம் கொடுத்து உன்னோட ஷொப்புக்கு அனுப்பவா மதுமிதா?"

அப்பா இப்படிக் கேட்டதும், ஆடிப் போய் விட்டாள் மதுமிதா!

அப்பா அதை டிரைவரிடம் கொடுத்து அனுப்பினால்,

தான் ஷொப்பில் இல்லாத விஷயம் அப்பாவுக்கு தெரிந்து விடும்!

ஐயோ!

அது தெரிந்துவிட்டால் பெரிய விபரீதமாகி விடுமே! இந்த எண்ணம் வந்ததும், பதறிப் போனாள் மதுமிதா.

"வேண்டாம்.... அப்பா வேண்டாம்... நான் வீட்டிக்கு வந்தே அதை எடுத்துக் கொள்கிறேன்!"

தான் திட்டினார்!"

"ஆமாம்.... சுயநினைவில்லாமல் வேலை செய்தால் அப்படித்தான் திட்டுவார்கள்!"

பிரசன்னா இப்படிச் சொன்னதும்,

மதுமிதா சிந்தனையுள் மூழ்கினாள்.

இப்போது அவளுடைய சிந்தனையெல்லாம்,

தனியாக பேசுவதற்காக பிரசன்னா தன்னை ஏன் அழைத்து வந்தான் என்பதைப் பற்றியே சிந்திக்க ஆரம்பித்தது

இதைப்பற்றி,

பிரசன்னாவிடமே கேட்டுத் தெரிந்து சொள்வதுதான் நல்லது என்று அவளுக்குத் தோன்றியது.

"ம்... அதுசரி பிரசன்னா இப்போது கேள்வி என்ன வென்றால் என்னுடன்

"ஓ... கேள்விக்கு பதிலா... சொல்லுறேன்... அதாவது உங்கள் எதிர்காலத்தைப்பற்றித் தெரிந்த கொள்ள விரும்புறேன்... உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன கல்யாணத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்...

"அப்படீன்னா...?" புருவங்களை உயர்த்திய படியே,

இடையில் புகுந்தாள் மதுமிதா.

"அப்படீன்னா அம்மா அப்பா பார்த்துவைக்கும் மாப்பிள்ளைக்கு தான் கழுத்தி நீட்டுவீங்களா... இல்லைட்டி நீங்களா ஒருத்தன தேர்ந்தெடுத்து கிட்டு அப்பா அப்பாவோட ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வீங்களான்னு கேட்டேன்!"

ருந்தா இந்த பயணத்திற்கு என்னுடன் வர நீங்க சம்மதிச்சிருக்க மாட்டீங்க... அதுவுமில்லாம நாம் பழக ஆரம்பிச்ச இந்த மூன்று வார காலத்துக்குள் என்னைப் பற்றி நீங்க நன்றாகவே புரிஞ்சிகிட்டிருப்பீங்க... அதனால் நீங்களே ஒரு முடிவுக்கு வந்து உங்களைப் பற்றி என்னிடம் சொல்லுங்க... ஆனாலும் இறுதி முடிவெடுக்கும் பொறுப்பு உங்கள் கைகளில் தான் இருக்கிறது...!"

"புதுமையான பதில்களைத்தான் பிரசன்னா நீங்க சொல்லுறீங்க... ம்... சரி... சரி... உங்கள் மீது எனக்கு நிறையவே நம்பிக்கை இருக்கிறது... அதனால் என்னைப்பற்றி சொல்லுகிறேன் கேட்டுக் கொள்ளுங்கள்...!"

"அப்போ உங்க கதை திரைப்படக் கதைமாதிரி சுவாரஸ்யமாக இருக்குமா...?" அவனுடைய வார்த்தைகளில்,

கிண்டல் கிசுகிசுத்தது!

"சில சமயம் அப்படியும் இருக்கலாம்... ஆனாலும் சில திரைப்படக் கதைகள் உண்மையானவையாக இல்லையே... இது அப்படி அல்ல உண்மைக்கதை!"

"சரி... சரி சொல்லுங்கள் உங்க கதையை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்...!"

"இல்லை பிரசன்னா உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நான் இருப்பது தீக்குள்! நான் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தாலும் மனத்தவளவில் பெரிய துன்பத்தை தாங்கிக் கொண்டிருக்கிறேன்! அது நான் போன ஜென்மத்தில் செய்த பாவமாக இருக்கலாம்...! நான் ஒரு கோடீஸ்வரனின் மகளாக இருந்து கொண்டு ஏன் இப்படி வேதனையு

## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.

ஆமாம்,

இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:

**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு -10.



## 24 காதலுக்கு மட்டும்தான் கண் இல்லை நட்பக்கும்தான் நயனங்கள் இல்லை!

என்றாள், "ம்.. சரி... சரி கவனமாக வீட்டுக்கு வந்து சேர்!"

"கடவுள் துணை அப்பா!" என்று சொல்லிவிட்டு,

போனைவைத்து விட்டவர். அவள் போனை வைத்ததும்,

"என்ன மது போனில் அப்பா உங்களை திட்டினார்தானே?" பிரசன்னா தான் கேட்டான்.

"ம்... ஸ்பெயா' வீலையும் ஜெக்கையும் போட்டு விட்டு வந்து விட்டதற்குத்

தனியாக என்ன பேசப்போகிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

பிரசன்னா ஏதோ சொல்லவாயெடுக்க அதே நேரம்,

வேட்டர் வந்து,

அவர்கள் கேட்ட உணவுகளை கொண்டுவந்து வைத்து விட்டுச் சென்றான்.

"ம்... சாப்பிடுங்க மது...!"

"சரி.... நான் சாப்பிடுகிறேன் நீங்களும் சாப்பிடுங்கள்... சாப்பிட்டுக் கொண்டே எனது கேள்விக்கும் பதிலைச் சொல்லுங்களேன்...!" வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றினாள் மதுமிதா.

"ஓ... நீங்க சரியான தந்திரசாலி பிரசன்னா... பக்கத்து இலைக்கு பாயசம் கேட்பதைப் போலவே பேசுறீங்க... ஆனாலும் பரவாயில்ல நீங்க கேக்கும் கேள்விக்கு நான் பதில் சொல்றேன்... ஆனா ஒன்று உங்களை நம்பிதான் இந்த விஷயங்களைச் சொல்லுறன்... அதை அப்படியே நீங்க பாது காப்பேன்னு உத்தரவாதம் கொடுத்தாத் தான் நான் இந்த விஷயங்களை உங்க கிட்ட சொல்லுவேன்...! என்ன சொல்லு றீங்க..." பிரசன்னா?"

"என்மீது சந்தேகம் வரவாய்ப்பே இல்ல மது. அப்படி சந்தேகம் இருந்தி

டன் இருக்கிறாள் என்பதை யோசித்துக் கூட பார்க்க முடியாது இல்லையா பிரசன்னா.......என் முழுக்கதையையும் கேட்ட பிறகு நீங்களே அந்த முடிவிற்கு வருவீங்க!"

"ம்... உங்கள் கதை இப்படிப்பட்ட ஒரு சோகமான கதையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை மது... சரி உங்கள் கதையை சொல்லுங்கள் பார்ப்போம்! ஆலோசனை கொடுக்க முடியுமென்றால் ஆலோசனை சொல்லுகிறேன். உதவிசெய்ய முடியுமானால் உதவி செய்கிறேன்.

இது தொடர்பாக ஏதாவது முடி எடுக்க வேண்டுமானால் அதையும் எடுக்கி

றேன்!"

பிரசன்னாவுடைய அந்த வார்த்தைகள்,

மதுமிதாவுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது என்றுதான் சொல்லவேண்டும்!

ஆலோசனை!

உதவி!

அல்லது ஒரு முடிவு!

இதில் எதைவேண்டுமானாலும் எடுப்பதற்கு அவன் தயாராக இருப்பதாக அவன் சொன்னது,

மதுமிதாவுக்கு பெரிய தைரியமாக இருந்தது.

இப்போது,

பிரசன்னாவின் மீது அவளுக்கு பூரணமான ஒரு நம்பிக்கை வந்தது.

அதனால்,

அவனிடம் தனது கதையை சொல்ல ஆரம்பித்தாள்.

"நீங்கள் நினைப்பது போல் எனது அப்பா பரம்பரை பணக்காரர் அல்ல, அவர் பணக்காரராகி இப்போது ஐந்து வருடம் தானாகிறது. அதற்கு முன்பு என் அப்பா சாதாரண ஒரு மனிதராகத்தான் இருந்தார். அப்போது அவர் பலகை வியாபாரம் தான் செய்து வந்தார்!" இப்படி சொல்லிவிட்டு,

பிரசன்னாவின் முகத்தில் ஏதாவது மாறுதல் தெரிகிறதா என்று பார்த்தாள் மதுமிதா.

**(இளமை வளரும்)**



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 2

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து நவீன இலக்கிய இயக்கத்தின் பல்துறை முதல்வர் வரதர்

ஈழத்து தமிழ் நவீன இலக்கிய வரலாறு 1930களிலிருந்து படிப்படியாக வளர்ச்சியுற்ற போதும் ஒரு கருத்துநிலையோடு ஓர் இலக்கிய இயக்கம் பரிணமித்தது 'தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' தோன்றிய பின்னர் தான்.

எழுத்தாளர் சங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தனது நண்பர்களுக்கு முதலில் அழைப்பு விடுத்தவர் வரதர். 13.06.1942 அன்று யாழ்நகரில்; 20பேர் கூடி ஆரம்பிக்கப்பட்டதுதான் 'தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்'. இதுவேஈழத்தின் முதலாவது தமிழ் எழுத்தாளர் சங்கமாகும்.

இந்தச் சங்கத்திலிருந்து'மறுமலர்ச்சி'என்ற சஞ்சிகை 1946இல் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியராக சங்க உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வரதர். பழைய மரபுவழி காவியங்கள்,கவிதைகள்தான் இலக்கியம் என்று நம்பிக் கொண்டிருந்தவர்களுக்கு மத்தியிலே புதியசிறுகதைகளும் நவீன கவிதைகளும்கூட இலக்கியம் தான் என்று எடுத்துக்காட்டிய முதலாவதுநவீன இலக்கியச் சிற்றிதழாக மறுமலர்ச்சி மலர்ந்தது.

இந்தியாவில் மணிக்கொடிகாலம் போன்று ஈழத்தில் 'மறுமலர்ச்சிக் காலம்'விளங்கியது என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

'மறுலர்ச்சி இயக்கம்தான் பிற்பட்டகாலத்தில் முற்போக்கு இலக்கிய இயக்கம் முளைவிடுவதற்குப் பசளையாக அமைந்தது' என்று குறிப்பிடுவார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

வரதரின் இலக்கியத் தடம் விரிவானது. சிறுகதையாளர், பத்திரிகையாளர், நாவலாசிரியர்,கவிஞர், நூல்வெளியீட்டாளர், பத்திரிகையாளர் என அவரது பணிகள் பரந்துபட்டவை.

யாழ்ப்பாணம் பொன்னாலையில் தியாகர் சண்முகம் சின்னத்தங்கம் தம்பதிக்கு 01.07. 1924இல் மகனாகப் பிறந்த வரதராசன் தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் அதன்பின் அயற்கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலும் பெற்றார். அச்சக முகாமையாளராகவும் நூல்வெளியீட்டாளராகவும் தொழில் புரிந்தார்.

1940ல் ஈழகேசரி ஆண்டு மலரில் 'கல்யாணியின் காதல்'என்ற சிறுகதையினை எழுதி 16 வயதில் இலக்கியப் பிரவேசம் செய்தவர் வரதர். சாதிக்கொடுமை,பெண் விடுதலைபற்றி ஈழத்துஎழுத்தாளர்கள் விரிவாகச் சிந்திப்பதற்குபலஆண்டுகளுக்குமுன்னரே இவைபற்றித் தனது எழுத்துக்களில் ஓங்கிக் குரல் கொடுத்த புரட்சி எழுத்தாளர் இவர். இவரது'கற்பு'என்ற சிறுகதை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே வெளிவந்த பெண்ணியச் சிந்தனைகொண்ட சிறுகதையாகும்.

வரதர்,கவிதைக்கெனஒருமாதஇதழை'தேன் மொழி'என்ற பெயரில் வெளியிட்டுப் புதுமைசெய்தவர். இதுவே ஈழத்தின் முதலாவது கவிதைச் சஞ்சிகையாகும்.

வரதரை நிர்வாக ஆசியராகவும் மஹாகவியை இணைஆசியராகவும் கொண்ட ஈழத்தின் முதல் கவிதை இதழான தேன் மொழி 1955ஆம் ஆண்டு புரட்டாதிமாதம் வெளிவரத் தொடங்கியது. 'கவிதைகளை மாத்திரமே தாங்கிய ஒரு இதழைவெளிக்கொணரவேண்டும் என்பது ஒரு எண்ணம். நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு ஒருநல்ல நினைவுச் சின்னம் உருவாக்கவேண்டு மென்பது மற்ற எண்ணம். இந்த இரண்டு எண்ணங்களும் சேர்ந்து தேன் மொழியை உருவாக்கிவிட்டன.' என்று முதலாவது இதழின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேன்மொழி பதினாறு பக்கங்கள் கொண்ட சிறுசஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவந்தது. ஆறு இதழ்களே வெளிவந்தன. ஒவ்வொரு இதழின் அட்டையிலும் சோமசுந்தரப் புலவரின் ஒருபாடல் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு பின் அட்டையிலும் சிறப்பாக ஒரு கவிஞர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். ஈற்றடிகள் கொடுத்து வெண்பா பாடத் தூண்டும் முயற்சிகளும் தேன்மொழி மேற்கொண்டுள்ளது. சில மொழிபெயர்ப்புக் கவிதைகளும் தழுவல் கவிதைகளும் தேன்மொழியில் வெளிவந்துள்ளன. குறிப்பாக சீன, ஸ்பானிய, பிரான்சிய,கவிதைகள் இவற்றுள் அடக்கம்.தேன்மொழியில் அக்காலத்தில் புகழ்பெற்ற கவிஞர்கள் பலரும் கவிதைகள் எழுதினார்கள். வித்துவான் வேந்தனாரின் 'காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்கட்டிக் கொஞ்சும் அம்மா| என்ற புகழ்பெற்ற கவிதை,தேன்மொழியிலேதான் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (தேன்மொழி ஆறு இதழ்களையும் ஒன்றுசேர்த்த தொகுப்பு, நூலாகத் தற்போது வெளிவந்துள்ளது.)

ஈழத்தில் புதுக்கவிதை பற்றிப் பேசுவதற்கு முன்னரே அதற்குச் செயல்வடிவம் கொடுத்தவர் வரதர். 1943இல் ஈழகேசரியில் அவர் எழுதிய' ஓர் இரவிலே'என்ற கவிதையே ஈழத்தின் முதலாவது நவீன கவிதை எனப் போற்றப்படுகிறது.

அது பற்றி ஞானம் சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலில் வரதர் பின்வருமாறு கூறியுள்ளார்:

'அந்தக்காலத்தில் ந.பிச்சமூர்த்தியும் வேறுசிலரும் வசன கவிதை என்று சிலகவிதைகளை எழுதியதை நான் பார்த்தேன்.அதற்கு முன்பே பாரதியாரும் வசனகவிதைஎழுதியிருந்தது எனக்குப் பின்னால்தான் தெரியும். பிச்சமூர்த்தியின் இலக்கிய வடிவம் என்னை மிகவும் கவர்ந்தது. எதையாவது புதுமையாகக் கண்டால்நானும் அந்தமாதிரிசெய்துபார்க்கவேண்டுமென்றுமுயல்வதுஎனது இயல்பு.

நானும் வசனகவிதை எழுத வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.ஒரு சித்திரைமாதம் மூன்று நான்கு நாட்களாக ஒரேமழை. ஊரெல்லாம் பெருவெள்ளம் அவற்றுடன் புயலும் சேர்ந்து ஊரை ஒரு ஆட்டுஆட்டியது. அதனையே வசன கவிதையாக'ஓர் இரவிலே என்ற தலைப்பில் எழுதினேன்..'

வரதர் எழுதிய வசன கவிதை பின்வருமாறு:

இருள்! இருள்! இருள்!
இரவினிலே,நடு ஜாமத்திலே,
என் கால்கள் தொடும் பூமிதொடங்கி,
கண்பார்வைக் கெட்டாத மேகமண்டலம் வரை
இருள் இருள்!
பார்த்தேன்.
பேச்சுமூச்சற்று
பிணம்போல் கிடந்ததுபூமி
இது பூமிதானா?
மனிதசந்தடியேயற்ற,
பயங்கரமானபேய்களின் புதியஉலகமோ?
ஷஒவ் ஒவ்|என்றிரைவது
பேயா? காற்றா? பேய்க்காற்றா?
ஹா!
மனிதன் சக்தியற்றுக் கிடக்கும் இந்தவேளையில்,
அவனுடைய சின்னமே அற்றுப் போகும்படி
பூமியை ஹதம் செய்யவோ வந்தது இப்பேய்க்காற்று!
ஹா, ஹா, ஹா!
'பளிச்! பளிச்!'
அதன் ஒளியிலே இன்பம் வளைவிலே இன்பம்.
ஓ!
ஒளியிலேபயங்கரம்! வளைவிலேபயங்கரம்!
மேகத்தின் கோபம்.
அவன் கண்கள்...... கண்கள் ஏது?
உடம்பிலிருந்துபீறிட்டுக் கிளம்பும் கோபாக்கினி!
விளக்கில் விழுகின்றவிட்டிலைப்போல,மின்னலின் அழகிலேகண்
கெட்டுப் போகாதே!
பத்திரம்! | கண்ணை மூடிக்கொள்.
'பளிச்! பளிச்! பளிச்!
பட்,பட்...படாஹ்..........பட்,படப.....
ஓ!......ஹோ !........
முழக்கம்!
இடி!
பேய்க்காற்றின் ஹுங்காரத்தோடு,வேதாள முழக்கம்! முழக்கம்!
காதுவெடித்துவிடும்!
உன் ஹிருதயத் துடிப்புநின்றுவிடும்!
காதைப்பொத்திக்கொள்,வானம் வெடித்துவிடுகிறது!
'டபார்!'

வரதர் பலதரப்பட்ட சஞ்சிகைகளை காலத்துக்குக் காலம் வெளியிட்டுள்ளார்.

ஆனந்தன் (1952),வெள்ளி (1957), புதினம் (1961),அறிவுக்களஞ்சியம் (மாணவர்களுக்கான இதழ் 1992) போன்ற பல்வேறு சஞ்சிகைகளை வெளியிட்டு ஈழத்து இதழியல் வரலாற்றில் தனது சுவடுகளைஆழமாகப் பதித்தவர்.

'வரதரின் பலகுறிப்பு'என்ற பெயரில் இவர் முதன் முதலில் தமிழ் டிரெக்டரியை வெளியிட்டவர்.

ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முக்கிய பிரசுரகர்த்தருள் வரதரும் ஒருவராவார். வரதர் வெளியீடு, என்னும் அவரது பிரசுராலயம் மூலமாக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கியவழி என்ற நூல் முதலாகபல முக்கியமான நூல்களை வெளியிட்டுள்ளார்.

வரதரின் படைப்புகளாக நாவலர்,வாழ்க நீசங்கிலிமன்னர் கயமை மயக்கம் (சிறுகதைத்தொகுதி),மலரும் நினைவுகள் (சுயவரலாறு),பாரதக்கதை,சிறுகதைப்பட்டறிவுக் குறிப்புகள் என்பன வெளிவந்துள்ளன.

இலங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாகித்திய ரத்தினா விருதினை (2002இல்)முதன்முதலில் பெற்ற தமிழர் இவர்.

வரதர் 21.12.2006 அன்று தனது 82ஆவது வயதில் அமரரானார்.

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பயாகல, நாகஹதுவ, ஹொரகஸ்கலே பாதை, பத்தும் உயண என்ற முகவரியில் வசிக்கும் இளந்தாவர்ண மஹேஷ் இரத்நாயக்க ஆகிய நான் 2017.01.11 ஆம் திகதியன்று பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ஆர்.டபிள்யு லமாஹேவாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1674 என்ற இலக்கத்தையுமுடைய அற்றோணித்தத்துவத்தின் மூலமாக மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வசிக்கும் இளந்தாவர்ண தினேஷ் இரத்நாயக்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு வெற்றும் வெறிதாக்கப்பட்டுள்ளதுடன் இங்கு குறிப்பிட்டுள்ள திகதியின் பின்னர் எனது பெயரால் மேற்கொள்ளப்படும் மேலே குறிப்பிட்டுள்ள அற்றோணித்தத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

திகதி: 2022.04.19 இளந்தாவர்ண மஹேஷ் இரத்நாயக்க

திகதி 21.04.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4739
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,398,720.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 4 7 9 8 5 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,430,243.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0048
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,997,040.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 07 13 37 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,791,168.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 769
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,555,160.00
வெற்றி இலக்கினம் U வெற்றி இலக்கங்கள் 22 36 44 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,853,249.20

கோடி 24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1087
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,538,860.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 248,055,310.00
C 09 08 24 34 57
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும்

**இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்து ஒரு அரசியல் நெருக்கடியாகவும் சமூக நெருக்கடியாகவும் மாறிவருவதை மிகுந்த கவலையுடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. எரிபொருள் உணவு மற்றும் மருந்துவகைகள் என்பவற்றின் விலைகள் பாரியளவில் அதிகரித்துச் சென்றுள்ளதுடன் சந்தையில் விலை அதிகரிப்புக்கு மத்தியிலும் அவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.**

நாட்டில் நாளாந்தம் மின்வெட்டு தொடர்ந்தும் அமுலில் உள்ளது. அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு போதிய அந்நியச் செலாவணி நாட்டில் இல்லாத நிலையில் இப்பிரச்சினைகள் அடுத்த சில வாரங்களில் மேலும் தீவிரமடையும் அபாய நிலையை உள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்புகள் கூறுகின்றன.

நீண்டகால இழுபறிகளுக்குப் பின்னர் இலங்கை ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து நியூயோர்க் நகரத்தில் IMF உடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது.

2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி தலையைக் காண்பித்த உடனேயே வருமுன் காப்போனாக IMF இனை நாடியிருந்தால் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம் அல்லது அதன் தீவிரத் தன்மையைக் குறைத்திருக்கலாம் என துறை சார்ந்த வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்போது வந்தபின் காப்போனாக IMF இன் நிதி உதவிகளை இலங்கை நாடி நிற்கிறது. தற்போது 190 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட IMF நிறுவனம் இரண்டாம் உலகப்போரின் முடிவினைத் தொடர்ந்து 1944 ஜூலை மாதம் அமெரிக்காவின் நியூஹம்ஷயர் மாநிலத்தில் உள்ள பிரெட்டன் வூட்ஸ் என்ற நகரத்தில் இடம்பெற்ற மாநாட்டில் ஏற்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து உருவாக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சிகைளுக்கு தீர்வுகாணும் பொருட்டு குறுங்கால நிதி உதவி வழங்கவே இது உருவாக்கப்பட்டது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளை மீளக்கட்டியமைக்கத் தேவையான நிதியுதவிகளை வழங்க உலக வங்கிக் குழுமமும் (World Bank Group) இதே மாநாட்டில் உருவாக்கப்பட்டது. எனவே தான் இவ்விரு நிறுவனங்களையும் பிரெட்டன்வூட்ஸ் இரட்டைச் சகோதரிகள் (Brettonwoods twinsisters) என அழைக்கின்றனர்.

இலங்கை IMF இல் 1950 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது. இலங்கை IMF இலிருந்து முதலாவது கடனை 1965இல் பெற்றுக்கொண்டது. அதிலிருந்து இற்றைவரையிலும் 16 தடவைகள் கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. IMF இன் கடன்கள் பல்வேறு வகைப்பட்டவை. அவற்றுள் சலுகைக் கடன்களும் சலுகை அல்லாக் கடன்களும் உள்ளடங்கும். IMF இன் கடன்கள் வசதிகள் (facility) என்றோ ஏற்பாடு (arrangement) என்றோ அழைக்கப்படும்.

நாணய நிதியத்திடம் இலங்கை பெற்ற கடன் விவரங்கள்

| | Lending Facility | Date of Arrangement | Expiration Date | Amount Agreed (USD Millions*) | Share of Funds Drawn |
|---|---|---|---|---|---|
| 1 | Standby Arrangement | 15 Jun. 1965 | 14 Jun. 1966 | 30 | 75% |
| 2 | Standby Arrangement | 15 Jun. 1966 | 14 Jun. 1967 | 25 | 100% |
| 3 | Standby Arrangement | 6 Mar. 1968 | 5 May 1969 | 20 | 100% |
| 4 | Standby Arrangement | 12 Aug. 1969 | 11 Aug. 1970 | 20 | 100% |
| 5 | Standby Arrangement | 18 Mar. 1971 | 17 Mar. 1972 | 25 | 100% |
| 6 | Standby Arrangement | 30 Apr. 1974 | 29 Apr. 1975 | 30 | 29% |
| 7 | Standby Arrangement | 2 Dec. 1977 | 1 Dec. 1978 | 112 | 100% |
| 8 | Extended Fund Facility | 1 Jan. 1979 | 31 Dec. 1981 | 336 | 100% |
| 9 | Standby Arrangement | 14 Sep. 1983 | 31 Jul. 1984 | 105 | 50% |
| 10 | Structural Adjustment Facility Commitment | 9 Mar. 1988 | 8 Mar. 1991 | 214 | 100% |
| 11 | Extended Credit Facility | 13 Sep. 1991 | 31 Jul. 1995 | 455 | 83% |
| 12 | Standby Arrangement | 20 Apr. 2001 | 19 Sep. 2002 | 254 | 100% |
| 13 | Extended Fund Facility | 18 Apr. 2003 | 17 Apr. 2006 | 198 | 14% |
| 14 | Extended Credit Facility | 18 Apr. 2003 | 17 Apr. 2006 | 368 | 14% |
| 15 | Standby Arrangement | 24 Jul. 2009 | 23 Jul. 2012 | 2.566 | 100% |
| 16 | Extended Fund Facility | 3 Jun. 2016 | 2 Jun. 2019 | 1.507 | 50% |

Source: IMF

கடந்த காலங்களில் இலங்கை தயார் நிலை ஏற்பாடு (Standby Arrangement) அல்லது விரிவுபடுத்தப்பட்ட நிதி ஏற்பாடு (Extended Fund/Credit Facility) வடிவிலேயே கடன்களைப் பெற்றுள்ளது. அவற்றிலும் ஏழு தடவைகள் அந்தக் கடன்களை முழுமையாகப் பயன்படுத்தாமல் இடைநடுவில் கைவிட்டுள்ளது.

உதாரணமாக, இறுதியாக 2016இல் இணங்கப்பட்ட கடன் தொகையில் 50 சதவீதத்தை மட்டுமே இலங்கை பயன்படுத்தியுள்ளது. IMF இன் செயற்திட்டத்தை இடைநடுவில் கைவிட்டுவிட்டதன் விளைவாக இக்கடன் நிறுத்தப்பட்டதாகவே பொருள்கொள்ள வேண்டும். ஆகவே இலங்கை 16 தடவைகள் IMF இடம் சென்று கடன் பெற்றிருந்த போதிலும் பெரும்பாலும் செய்வதாக ஏற்றுக் கொண்ட பொருளாதாரச் சீராக்கங்களைச் செய்யாது இடைநடுவில் கைவிட்டுள்ளது.

பொருளாதார நிலைமைகள் வழமைக்குத் திரும்பும் போது நாடுகள் பொருளாதாரச் சீராக்கங்களை இடைநடுவில் கைவிட்டு விடுவது வழமையாக அவதானிக்கப்பட்டுவரும் ஒரு நடத்தை தான்.

இம்முறை இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையின் போதே IMFஐ நாடியுள்ளது. அதுவும் மிக அவசரமான நிலைமையின் கீழ் துரித கடன் கருவியின் (Rapid Finance Instrument) வசதியினைப் பெற்றுத்தருமாறு இலங்கை கோரிக்கை விடுத்திருக்கிறது.

இயற்கை அனர்த்தங்கள் நோய்த்தாக்கங்கள் துரித விலையதிகரிப்புகள் போன்ற நிலைமைகளின் போது அங்கத்துவ நாடுகளுக்கு உதவும் பொருட்டு இக்கடன் வசதி உருவாக்கப்பட்டது. IMF இல் இலங்கையின் அனுமதிப்பங்கின் (Quota) அடிப்படையிலேயே இவ்வசதி அனுமதிக்கப்பட்டால் இலங்கை நிதியைப் பெறலாம். ஆனால் இந்த வசதியின் கீழ் உள்ள நிபந்தனைகளின் படி இலங்கை இதனைப்பெற முடியாதெனக் கூறப்படுகிறது. ஆனால் இந்தியா இலங்கைக்கு இவ்வசதியைப்பெற தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

தற்போது IMF இல் இலங்கையின் அனுமதிப்பங்கு 786 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமேயாகும். இதில் 50 சதவீதத்தை அதாவது 395 மில்லியன் டொலர்களை மாத்திரமே சாதாரண நிலைமையில் துரித கடன் கருவி மூலம் பெறமுடியும். இலங்கையின் தேவைக்கு இது எவ்விதத்திலும் போதுமானதல்ல. ஆனால் தயார்நிலை வசதியின் மூலம் அனுமதிப்பங்கின் 435 சதவீதத்தை அதாவது 3.4 பில்லின் டொலர்களை 36 மாத கால இடைவெளியில் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் வாஷிங்டனில் உள்ள IMF அதிகாரிகளின் கருத்தின்படி பேச்சுவார்த்தைகள் மிக ஆரம்பக்கட்டத்தில் இருப்பதாகவும் எந்த ஒரு கடனையும் வழங்க முன்னர் ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களை மீளச்செலுத்துவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்கி அரச கடன் நிலைபேறற்ற தன்மையிலிருந்து விடுபடுவதற்குப் போதுமான நம்பகரமான உறுதிமொழி வழங்கப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இன்றைய நிலையில் IMF இடம் சென்ற மாத்திரத்தில் இலங்கையின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என பிழையாக கருதிவிடக் கூடாது.

எனவே தான் இலங்கை அயல்நாடான இந்தியாவிடமும் சீனாவிடமும் மேலதிக நிதி உதவிகளைக் கோரியுள்ளது. அத்துடன் ஜப்பான், ஓமான், கட்டார் மற்றும் கல்ப் கோபரேஷன் கவுன்ஸில் அரபு நாடுகளிடமும் நிதியுதவிகளைப் பெற எதிர்பார்க்கிறது. ஆனால் இவை அத்தனையுமே இன்னமும் பேச்சுவார்த்தை நிலையிலேயே உள்ளன.

**'வாஷிங்டனில் உள்ள IMF அதிகாரிகளின் கருத்தின்படி பேச்சுவார்த்தைகள் மிக ஆரம்பக்கட்டத்தில் இருப்பதாகவும் எந்த ஒரு கடனையும் வழங்க முன்னர் ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களை மீளச்செலுத்துவ– தற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்கி அரச கடன் நிலைபேறற்ற தன்மையிலிருந்து விடுபடுவதற்குப் போதுமான நம்பகரமான உறுதிமொழி வழங்கப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது'**

# போராட்டத்தை ஆதரிக்க தமிழர்களுக்கு யாரும் சொல்லித்தரத் தேவையில்லை

## முன்னாள் எம்.பி சிவசக்தி ஆனந்தன்

**போராட்டம் ஒன்றை எப்படி எந்தச் சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை என்கிறார் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் அளித்த நேர்காணலில் அரசுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டத்தில் தமிழ் மக்கள் நேரடியாக ஆதரவு கொடுக்க வேண்டுமென யாருமே எதிர்ப்பார்க்கக்கூடாது என்கிறார். நேர்காணலின் முழுவிபரம்...**



**கே: தற்கால அரசியல் நிலைமை தொடர்பாக உங்களின் நிலைப்பாடு?**

பதில்: கோட்டாபய ராஜபக்ச 2020 ஆம் அண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது சிங்கள மக்களிடம் இருந்த எதிர்பார்ப்பு அடுத்த ஒரு ஆண்டுகளிலேயே குறைவடைய ஆரம்பித்துள்ளது. அதேபோன்று கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் பசில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகவும் நிதியமைச்சராகவும் பதவியேற்றபோது, அரசாங்கத்தின் செல்வாக்கு உயருவது போன்றதொரு தோற்றப்பாடு தெரிந்தது.

ஆனால் அடுத்த சில மாதங்களிலேயே அரசாங்கத்தின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி அரசாங்கத்துக்குள் முரண்பாடுகளும் மேலோங்கியது. 69 இலட்சம் சிங்கள மக்களுடைய வாக்குகளில் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார்.

மக்கள் வீதிக்கு வரும் நிலைமை உருவாகுமென அரசியல் தெரிந்த பலரும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே எதிர்பார்த்திருந்தனர். ஆகவே ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் மாத்திரமல்ல, பொருளாதார நெருக்கடிக்கான மூலத்தை இனிமேலாவது சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகள் பலரிடமும் ஊழல்மோசடிக் குற்றச்சாட்டுகள் உண்டு. ஆகவே இனரீதியாக வகுக்கப்பட்டு வரும் பொருளாதாரத் திட்டங்கள் பொருளாதார நெருக்கடிக்கு உரிய காரணம் என்பதை உணர வேண்டும்.

**கே: அரசாங்கத்திற்கெதிரான சிங்கள மக்களின் போராட்டம் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு?**

பதில்: பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டம் நியாயமானது. அந்தப் போராட்டத்தைத் தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள். ஏனெனில் முப்பது ஆண்டுகால போரினாலும் அதன் பின்னரான 12 வருடங்களிலும் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் துயரங்கள் மிகப் பெரியவை.

ஆகவே போராட்டம் ஒன்றை எப்படி எந்தச் சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அரசுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டத்தில் தமிழ் மக்கள் நேரடியாக ஆதரவு கொடுக்க வேண்டுமென யாருமே எதிர்ப்பார்க்கக்கூடாது.

ஏனெனில் டீசல், காஸ், பெற்றோல் விலைகள் குறைவடைந்து அவை வழமைபோன்று இலகுவாகக் கிடைத்துவிட்டால், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைவடைந்து நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டால், தற்போது வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள். சிங்களவர்களுடைய பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும்.

ஆகவே ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமெனக் கோசமிட்டுப் போராடும் சிங்கள மக்கள் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை முதலில் நன்கு அறிந்திருக்க வேண்டும். தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் எழுபது ஆண்டுகளுக்கும் மேலானது.

**கே: தமிழ் தரப்புகளின் மௌனம், அரசாங்கத்திற்கு ஆதரவானதா?**

பதில்: தமிழர்கள் மௌனமாக இருக்கவில்லை. பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் கோசமிடும் சிங்கள மக்கள், பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணத்தை அறிய விரும்புகின்றார்களா? அதிகாரத் துஷ்பிரயோகம். ஊழல்மோசடி மாத்திரமே விலைவாசி உயர்வுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் காரணமல்ல.

இனரீதியாக வகுக்கப்பட்ட அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம். இதனை வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் துணிவோடு வெளிப்படுத்த வேண்டும்?

முப்பது ஆண்டுகால போருக்குச் செலவிட்ட தொகை பற்றி எந்தவொரு அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் விளக்கம் கோரவில்லை. 2009 இற்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்கள் நவீனமயப்படுத்தும் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டமை, சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் விகாரை அமைக்கப்பட்டமை, புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றமை போன்ற இன ரீதியான திட்டங்களுக்குரிய நிதி எங்கிருந்து பெறப்பட்டன? இது பற்றி ஜே.வி.பிகூட நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பவேயில்லை.

ஆகவே போராட்டத்தில் தமிழ் மக்கள் மௌனமாக இருப்பதாக யாருமே கூற முடியாது. தமிழ் மக்களுக்கு வலிகள் ஏராளம்.

**கே: விமர்சனத்திற்குள்ளான சுமந்திரனின் தீப்பந்தப் போராட்டம் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு?**

பதில்: சுமந்திரன் எப்போதுமே தென்பகுதி அரசியலோடு ஒத்துப்போகக்கூடிய நிலைப்பாட்டை எடுத்து வரும் ஒருவர். ஆனாலும் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முடியாது. அவர் தனது கட்சி சார்ந்து தீப்பந்தப் போராட்டத்தை நடத்திச் சிங்கள மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்தப் போராட்டத்தின்போது வடக்குக் கிழக்கு மக்களின் அரசியல். பொருளாதார நியாயப்பாடுகளை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

குறிப்பாகச் சிங்கள மக்கள் தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வுகள் தமிழ் மக்களுக்குப் போர்க்காலத்தில் பரிச்சயமானவை என்று கூறியிருக்க வேண்டும். 1999களில் ஒரு லீற்றர் பெற்றோல் 1,500 ரூபாவுக்கும் கூடுதலான விலைக்கும் வடக்குக் கிழக்கில் விற்பனை செய்யப்பட்டது.

2014 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் எரிபொருட்களின் விலை கொழும்பு விலையைவிடக் கூடுதலாகவே விற்பனை செய்யப்பட்டது. ஆகவே இந்த நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறியிருக்க வேண்டும்.

**கே: மக்களிடம் ஆட்சியை ஒப்படைக்க கோரும் சிங்கள மக்களின் கோரிக்கை நியாயமானதா?**

(15ஆம் பக்கம் பார்க்க)

சுமித்தி தங்கராசா...



கொழும்பு செட்டியார் தெரு முத்து விநாயகர் கோயிலில் கண்ணகி கலை கூடம் ஏற்பாட்டில் அண்மையில் இடம் பெற்ற 'வாழ்க்கையின் இரு பக்கங்கள்' என்னும் திரைப்பட பூஜையில் மூத்த கலைஞர் கலாபூஷணம் கலைச்செல்வன், தயாரிப்பாளர் பொன் பத்மநாதன், கலைஞர் ஜெயக்குமார், கலைஞர் விஜேய், நடிகை மார்கிரட், சாமிலா நசார், பத்திரிகை ஆசிரியர் ராதா மேதா கிராமிய கலை ஒன்றிய தலைவர் விஜயகுமார் மற்றும் கலைஞர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# மஞ்சரி களஞ்சியம்

## வாழ்வாதாரமா சேதாரமா 220


தமிழ்க் கவி பேசுகின்றார்

# கட்டுப்பாட்டு விலையைத் தாண்டிச் சென்ற பொருட்கள்

யுத்தம் நடந்த காலத்தில் மக்களின் கிளர்ச்சிகளை அடக்கும் விதமாக செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது. சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலம் என் நினைக்கிறேன். செய்திகள் ஒட்டுமொத்த மக்களுக்கு போய்க் கொண்டிருக்கும். அதையே வடக்கு மக்களும் கேட்பார்கள். மின்சாரம் இல்லாதபோதும் சைக்கிள் டைனமோவை சுற்றி வானொலியில் கேட்பர். தொலைக்காட்சி கிடையாது. பத்திரிகை எப்போதாவது வரும். ஆனால் இந்த வானொலிச் செய்திகள் உடனே வரும்.

வன்னி மக்களின் கண்ணெதிரே நிகழ்ச்சிகள் நடக்கும். அதை தலைகுப்புற மாற்றி வானொலி செய்திகளை ஒலிபரப்பும். இந்தசெய்தி நிறுவனம் சற்றேறக் குறைய ஹிட்லரின் காலத்து கோயபல்ஸின் செய்திகளை ஒத்திருக்கும். எனவே ஊருக்குள் புளுகுச் செய்திகளைப் பரப்புவோர்களை லங்காபுவத் என அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. இந்தச் செய்திகளால் யாருக்கும் எதுவிதப் பலனும் இருப்பதில்லை.

ஆனால் உள்ளூரில் அடிபட்டு வரும் பத்திரிகையை அடிபட்டு வாங்கத் துடிப்பார்கள். பலமக்களுக்கான வரலாற்றுச் செய்திகள் வந்தாலும். எந்தப் பத்திரிகையிலும் தமக்குத் தேவையான' கட்டிங்'எடுத்து வைப்பதோ அல்லது பத்திரிகையை சேர்த்து வைப்பதோ முடியாத காரியமாயிற்று. காரணம். பேப்பர் தட்டுப்பாடு. எழுதும் தாள்கள் பத்திரிகை அடிக்கும் தாள்கள் எதுவும் வருவதில்லை'புல்ஸ்காப்' தாள் என்னும் கோடுபோட்ட தாளில்தான் பத்திரிகை அச்சிடப்பட்டது. அச்சிடும் மைக்கும் தடை. எனவே தென்னம் பொச்சுகளை எரித்து கரியாக்கி அதை தேங்காய் நெய்யில் குழைத்து மை தயாரித்து அச்சிட்டார்கள்.

பத்திரிகை படித்துவிட்டுஉ போட்டால் தானாகவேஉ எண்ணைய் ஊறி சிலநாட்களிலேயே மங்கி மறைந்துபோகும். புத்தகங்கள் சஞ்சிகைகள் எல்லாமே வந்தன.

கோட்டுத்தாளில். பத்திரிகைகளுக்கு காத்திரமான ஆக்கங்களை நாம் பேனா கொண்டு தாளில்தான் எழுதுவோம். அதை பிரதிபண்ணுவதெல்லாம் கிடையாது. எனவே பத்திரிகைகளாகவும் சேர்த்து வைக்கமுடியாது. ஆனால் எமது ஞாபகசக்தியை கூர்மையாக வைத்திருந்துதான் பலவிடயங்களை இப்போது மீட்டு வருகிறோம். ஏனெனில் யுத்தத்துக்கு அப்பால் என்றில்லாமல் போருக்குள் வாழ்ந்தோம் எனும் மமதை, செருக்கு,துன்பங்களை எதிர்த்து வாழ்ந்த மதர்ப்பு எங்களுக்குள் செழித்துநிற்கிறது.

இப்போது ஏன் இதை சொல்கிறேன் என்றால் இரண்டு லீட்டர் மண்ணெய் வாங்குவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் போனேன். அங்கே ஆட்கள் இல்லாமலே கொள்கலன்கள் வரிசையில் நின்றன.

அவற்றின் சொந்தக்காரர்கள் மரநிழலில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் எந்தசோர்வும் இல்லை. அவர்கள் எங்கேயும் கொடிபிடித்துக் கொண்டுகோஷம் போடுவதைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கவில்லை. நீ வயல் உழுதிட்டியா? உன்ர கத்தரிபூக்கத் தொடங்கீட்டுதா? என்ன மாதிரி சின்னவன் படிக்கிறானா? என்பது போன்ற கேள்விகளே இருந்தன. இன்னும் அவர்களுக்கான சிற்றுண்டி தேநீர் என்பன வீடுகளிலிருந்து வந்தன. அருகில் வீடுள்ளவர்கள் போய்வந்தார்கள்.

'என்னப்பா கஷ்டமா இருக்கா'என்றேன் . 'சும்மா போங்கம்மா கையில காசு இருந்தும் சாப்பாட்டுக்கு சாமானில்லாம எவ்வளவு அலைஞ்சம் இதென்ன கஷ்டம். மரக்கறி இல்லாமல் நான்கு மாதம்,தேங்காய் இல்லாமல் புளி இல்லாமல்,வெறும் அரிசியை உப்புப் போட்டு அவிச்சு தின்னயில்லயா? இதென்ன கஷ்டம் பூஃ.'என்றார் ஒருவர்.

அரிசி ஆலையின் கழிவு உமியை தூற்றி குருணி சேகரித்து கஞ்சிவைத்து குடித்தவர்கள் வீட்டில் இப்போது அறுவடை செய்தநெல் இருந்தது. ஏதோ சில மறக்கறிப்பயிர்கள் அவர்களது கொல்லையில் விளைகிறது. தேங்காய் தாராளமாக கிடைக்கிறது. வாழ்க்கைக்குஆதாரமான முக்கியமான பழக்கவழக்கம் சேமிப்பு சிக்கனம் இரண்டுமே அவர்களை நிமிர வைத்துள்ளது.

உலகம் முழுவதையும் ஆக்கிரமித்துள்ள பொருளாதாரச் சிக்கலை அரசாங்கத்தை மாற்றுவதால் சரிப்பண்ணி விடலாம் என் நினைத்துக் கொண்டு அலையும் மக்கள் கூட்டம் தமது நிலைக்கான காரணம் தோன்றிக் கொண்டிருக்கும் போது இந்த அரசாங்கத்தை ஊக்குவித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை மறந்தா போனோம். எங்கள் போரியல் வரலாற்றில் ஒருபுகழ் பெற்றபழமொழிஉண்டு.

இதைசொல்வதால் எனக்கு கல்லெறிவிழக்கூடும். எனினும் சொல்கிறேன்.'தோற்றால் தளபதி வென்றால் தலைவர்' இதே நிலையைத்தான் நாம் எங்கும் எதிலும் காண்கிறோம்.வெற்றியடைந்துள்ள அபிவிருத்திதிட்டங்கள் அனைத்துக்கும் அரசின் தலைமைதான் காரணம் என்று பாராட்டிய மக்களுக்கு இந்த திட்டங்களால் ஏற்பட்ட தோல்விகளுக்கு பாவப்பட்ட மந்திரிகள் பதவி துறந்துள்ளார்கள். என்பது புரியவில்லை.

சாதாரண மக்களிடம் இப்படி அரசியல் பேசினால். 'எங்களுக்கேன் பெரிய இடத்துக் கதையள் அன்றாடம் உழைச்சமா திண்டமா எண்டுபோகாம எங்களுக்கேன் அரசியல்'என நீட்டிமுழக்கி பேசுவார்கள்.

ஆனால் பாருங்கள் அரிசியிலும் அரசியல் இருக்கிறது என்று சொன்னால் சிரித்துவிட்டுப் போகும் அறிவாளிகள். இப்போது அந்த அரிசியில் வந்த அரசியலையும் மக்களின் வாழ்வையே அசைத்துப் போட்டுவிட்ட அதன் தாக்கத்தையும் கண்டு கொதித்து நிற்பதை காணமுடிகிறது. போராட்டங்களால் பொசுங்கிப் போயிருக்கும் உழைப்பையோ...மேலும் இறுக்கமடையப்போகும் பொருளாதாரத்தையோ எதுவும் செய்யமுடியாமல் நாடு திணறிக் கொண்டிருக்கப் போவதை எதுவும் செய்ய முடியாது.

கிராமத்துப் பழிமொழி ஒன்றுண்டு. 'சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்' இதை வேறுவிதமாகவும் அர்த்தம் செய்யலாம். நேரடியாகவேநாம் அர்த்தம் கொள்வோம்.புத்தாண்டை முன்னிட்டு சகல கடைகளிலும் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சகல ச.தொ.ச நிறுவனங்களிலும் அரிசி, பருப்பு, சீனி,மா, போன்றவை கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கும். என்ற செய்தியை இரவு வானொலியின் சகல அலைவரிசையின் செய்திகளிலும் கேட்டோம். காலையில் எழுந்ததும் முதல் வேலையாக ச.தொசவுக்குப் போனால் சதொச நிறுவனத்தின் முன் மக்கள் கூட்டமில்லாமல் வெறிச் சோடியிருந்தது. உள்ளே அரிசி. பருப்பு, சீனி,மா. எதுவுமே இல்லை. கட்டுப்பாட்டு விலைபோடும் முன்னே எப்போதும் பொருட்கள் தட்டுப்பாடு சகல இடங்களிலும் நடக்கும்.

' இந்த லங்காபுவத் செய்தியக் கேட்டிட்டுவிடியக்காத்தால வெளிக்கிட்டு வந்தா.... சதொசவிலயே சாமான்கள் இல்லை சதொச முற்றத்தில் நின்றொருவர் கூச்சல் போட இன்னும் சிலர் அவருடன் கூட்டுச் சேர்ந்தனர். . சதொச ஊழியர்களுக்கு இது 'எருமைமாட்டில மழை பெய்தமாதிரி' இருந்தது..

இது இயற்கையா? செயற்கையா? சாதாரணமாக சகலகடைகளிலும் கூட்டுறவுப் பண்டகசாலை உட்பட அரிசிஉண்டு.

விலைதான் சராசரி இருநூறு ரூபா. மாவும் அப்படியே. சீனி இருநூற்று முப்பது என்றேன் நான்.இருநூற்று அறுபதுரூபா என்றார் மல்லாவிவாசி.இரு அரசாங்கத்தால் இந்தப் பொருட்களை கட்டுப்பாட்டு விலைக்கு கொண்டுவர முடியவில்லை என்பதே மோசமான நிலையாகும். பொருள் இல்லை என்பதுவேறு இருக்கும் பொருளை அதிகவிலைக்கு விற்று கொள்ளை லாபமீட்டுவோரை அரசாங்கம் எதுவும் செய்யமுயலவில்லை. அதை விட்டுவிட்டு சதொசவிற்கு முன்னால் வந்து மக்கள் குவியவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா?

---

# நூலறிமுகம்

**நூலின் பெயர்:**
முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி
**நூலின் ஆசிரியர்:**
கலாநிதி தாஹா ஜாபிர் அல் அல்வானி
**தமிழ் மொழிபெயர்ப்பு:**
அக்ரம் அப்துஸ் ஸமத்
**வெளியீடு:** புஷின் டெக்ஸ்,
இல: 23/3, மார்க்கெட் வீதி,
தர்கா நகர் 12090

இஸ்லாமிய உலகின் முன்னணி புத்திஜீவிகளில் கலாநிதி தாஹா ஜாபிர் அல் அல்வானியும் ஒருவராவார். அவர் எழுத்துலகில் பிரவேசித்த ஆரம்ப காலப்பகுதியான 1990 களில் எழுதி வெளிட்ட முக்கிய நூல்களில் 'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' நூலும் ஒன்றாகும். இதனை விடவும் வேறு பல தலைப்புக்களிலும் அவர் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

என்றாலும் முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள் நூல் வெளியிடப்பட்ட குருகிய காலப்பகுதிக்குள் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றுக் கொண்டது. அதன் விளைவாக ஒரு வருட காலப்பகுதிக்குள் பல பதிப்புக்களை கண்ட இந்நூல் 18 மொழிகளுக்கு மொழிபெயர்ப்பைப் பெற்றுள்ளதோடு அம்மொழிகளிலும் பல பதிப்புக்களை கண்டிருக்கின்றது இந்நூல்.

இவ்வாறான சூழலில் தமிழ் பேசும் நல்லுலகிற்கும் இந்நூலைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் புஷின் டெக்ஸ் வெளியீட்டக உரிமையாளர் அல் ஹாஜ் ஏ.ஜே.எம். ஸனீர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்கேற்ப 2007 இல் தமிழ் மொழியில் முதன் முதலில் வெளியான இந்நூல் 2017 இலும் மீள் பதிப்பாகவும் வெளியானது.

ஆனாலும் பெரும் வரவேற்பைப் பெற்று விளங்கும் இந்நூலில் சில இணைப்புக்களைச் செய்து சற்று மாற்றியமைக்குமாறு மூல நூலசிரியருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள சிந்தனைகளை இன்றைய நிலையில் மீள் வாசிப்புக்கு உட்படுத்திய மூல நூலாசிரியர் கலாநிதி ஜாபிர் அல் அல்வானி அதில் தாம் விட்டுள்ள தவறுகளைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு மன்னிப்பும் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் கலாநிதி அல்வானி குறிப்பிடும் போது, 'இந்நூலின் மீள் வாசிப்பை ஆரம்பித்த போது அதில் பல தவறுகளை நான் இழைத்துள்ளதை அவதானித்தேன். அல்லாஹ் என்னை மன்னிப்பானாக!

அதேநேரம் என்னுடன் பணியாற்றிய சில ஆய்வாளர்களும் எனது மாணவர்களில் சிலரும் இந்நூலில் சிற்சில தவறுகளையும் சுட்டிக்காட்டினர். இந்தப் பின்புலத்தில் அவற்றை எல்லாம் நானே திருத்தியமைக்க முனைந்தேன். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். உண்மையில் எனது நூலைப் பற்றி என்னிடம் பிறர் சொல்லாத அல்லது மிகவும் சங்கடப்பட்டு தயக்கதுடன் சொன்ன பல விடயங்களை இப்போது என்னால் தைரியமாகப் பேச முடிகிறது' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பின்னணியில் தான் 'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' என்ற நூலின் திருத்திய பதிப்பாக 'முரண்பாட்டு ஒழுக்கத்தில் இருந்து முரண்பாட்டு தவிர்ப்பை நோக்கி' என்ற தலைப்பில் இந்நூலை நூலாசிரியர் எழுதி வெளியிட்டிருக்கின்றார். தமது முன்னைய நூலில் இடம்பெற்றுள்ள தவறுகளையும் பிழைகளையும் சுட்டிக்காட்டி அவர் இந்நூலைத் திருத்தியமைத்திருக்கின்றார். இதன் ஊடாக மக்கள் மத்தியில் தவறானதும் பிழையானதுமான விடயங்கள் பதிவாவதைத் தவிர்க்கும் வகையிலேயே அவர் இந்நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார். ஒரு உண்மையான புத்திஜீவியின் பண்பை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் இவரது முதல் நூலை




தமிழில் வெளியிட்ட புஷின் வெளியீட்டக உரிமையாளர், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் இவரது முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' நூலின் ஊடாக பிழையானதும் தவறானதும் பதிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையிலும் மூல நூலாசிரியர் திருத்தி வெளியிட்டுள்ள நூலையும் தற்போது தமிழ் மொழியில் வெளியிட்டு இருக்கின்றார்.

இந்நூலை தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்துள்ள அக்ரம் அப்துஸ் ஸமத், 'கலாநிதி அல்வானி இந்நூலை எழுதினாரா? அல்லது உரையாற்றினாரா? என்ற சந்தேகம் வரும் அளவுக்கு மிகவும் சரளமான சமூக மொழியை அவர் இந்நூலில் கையாண்டுள்ளார். இது அவரது மன உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒரு மொழி எனலாம். நீண்ட நாட்களாக அவரது சிந்தனையில் கருக்கொண்டு வளர்ந்து வந்த எண்ணங்கள், கருத்துக்களை தொகுத்து பரிமாறிக் கொண்டுள்ளமையை இந்நூலில் அவதானிக்க முடிகிறது' என்றுள்ளார்.

எவரும் புரிந்து விளங்கிடக்கூடிய வகையில் இலகுமொழி நடையில் அமைந்திருக்கும் இந்நூல், 400 க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்டதாக உள்ளது. ஆறு பகுதிகளைக் கொண்டுள்ள இந்நூலில் ஒவ்வொரு விடயத்திற்கும் உப தலைப்புகளின் கீழ் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன. எவரும் கற்று பயன்பெறக்கூடிய வகையில் அமைந்துள்ள இந்நூலை முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மர்லின் மரிக்கார் ...

---



# அனைவரையும் விரும்பும் அனைவராலும் விரும்பப்படும் ஆசான்
# பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
(23.12.1944 – 04.04.2022)

கல்வியியல் துறையில் பேராசிரியராகவும் கொழும்பு பல்கலைக்கழக பீடாதிபதியாகவும் பதவிவகித்து ஓய்வுபெற்ற சோமசுந்தரம் சந்திரசேகரம் கல்வியியல் சார்ந்த சிந்தனைகளையும்,உலகளாவிய கல்விமுறைகளின் அண்மைக் காலசெயல் நெறிகள் பற்றிய அறிவையும் வகுப்பறை மாணவர்களுடன் மட்டும் பகிர்ந்துகொள்ளாமல்,சகஆசிரியர்கள், கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள்;பெற்றோர்கள் கல்வியில் ஈடுபாடுகொண்ட பொதுமக்களையும் வாசகர்களையும் இச்சிந்தனைகள் சென்றடைய வேண்டும் எனும் உயர்ந்த நோக்குடன் அச்சுமற்றும் இலத்திரனியல் ஊடகங்களூடாகத் தனது கட்டுரைகள், அறிக்கைகள், உரைகள் மூலம் பரவலாக சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் கல்வியின் பயன்கள் சென்றடைய உழைத்தமை அவருடைய பணிகளின் சிகரமாக அமைபவை.

கல்வியியலை கற்பித்தல் கல்வியியல் அறிவை பரப்புதல் போன்றவைகளுக்குமப்பால் கல்விமேம்பாடு தொடர்பாக நிறுவப்பட்ட பல்வேறு அரசாங்கஆணைக் குழுக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றி இலங்கையின் கல்விவளர்ச்சி தொடர்பான அறிவையும் அனுபவங்களையும் பெற்றுக்கொண்டவர்.

மலையகத்தின் ஊவாமாகாணத் தலைநகர் பதுளையில் 23.12.1944ல் பிறந்தவர் இவர். பதுளை ஊவா கல்லூரியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று உயர்கல்வியை பேராதனை பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டவர்.

பல்கலைக்கழக பட்டதாரியான புதிதில் பேராதனை பல்கலைக்கழக கல்வியியல் போதனாசிரியராகப் பதவி ஏற்றுக்கொண்டார். மத்திய வங்கியின் மொழிபெயர்ப்பாளர்,கல்லூரி ஆசிரியர்,விரிவுரையாளர் என பணியாற்றி ஜப்பானிய அரசின் புலமைப்பரிசில் பெற்று ஒசாக்கா அயல் மொழிப் பல்கலைக்கழகம், ஹிரோஷிமா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்று கொழும்பு பல்கலைக்கழக இணைப்பேராசிரியராகவும் பீடாதிபதியாகவும் உயர் பதவிவகித்தவர். கல்வியியல் சிந்தனைகளில் நிகரற்ற வளர்ச்சி பெற்ற சமூகஊழியனாகத் தன்னை புடம் போட்டுக்கொண்ட முழுவள மனிதனான பேராசியரியர் சோ.சந்திரசேகரனின் திடீர் மறைவு கல்வித்துறைக்கு மட்டுமல்லாது முழுமனித சமூகத்துக்குமான ஒருபேரிழப்பே ஆகும்.

தெளிவத்தை ஜோசப்...

அவர் விட்டுச்சென்றுள்ள வெற்றிடம் இட்டுநிரப்புவதற்கரியது.காற்றைப் போல,ஒரு கவிதையைப் போல,எழுத்தைப் போல, இலக்கியம் போல,மானுடமெங்கனும் அவர் இல்லாத இடம்,நுழையாத இடம் இல்லைஎன்று கூறுமளவுக்கு மனிதர்கள் மத்தியில் மனிதர்களுடன் வாழ்ந்தவர் அவர்.

எழுத்திலும் கல்வியியல் சிந்தனைகளும் அவருடைய உயிர் மூச்சாக இயங்கியவை.

மலையக சமூகம் சார்ந்த கல்வியியலாளர்களில் மிகவும் தனித்துவமானவர். முக்கியத்துவம் கொண்டவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம்.

மலையகத் தமிழரின் கல்விநிலைமை பற்றி ஏராளமான கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளபேராசிரியர் இவ்விடயம் பற்றி வானொலி,தொலைக்காட்சி ஆகியவற்றிலும் நிறையவே உரைகளாற்றியுள்ளார்.

மலையகமக்கள் பற்றியதும் கல்வியியல் பற்றியதுமான முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலுமாக வெளியிட்டுள்ள பேராசிரியரின் முதல் நூல் 'இலங்கை இந்தியர் வரலாறு' 1989. ஒரு 30 ஆண்டுகாலத்தின் பின் 2020ல் அவர் வெளியிட்ட (கடைசியாக வெளிவந்த) நூல்: 'இலங்கை மலையகத் தமிழர்கள் நூல் விபரப்பட்டியல்' என்பது.

பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் மலையகக் கல்வித்துறையின் விடிவெள்ளியாக ஒளிவிடும் கலாநிதி இரா. ரமேஷுடன் இணைந்து வெளியிட்ட நூல் இது.

மலையகம் தொடர்பான சமூக,பொருளாதார அரசியல் கண்ணோட்டங்களில் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்கள் அடங்கிய நூல் இது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் காற்றுநுழையா இடங்களில் எல்லாம் தான் நுழைந்து மேற்கொண்ட தேடல்கள் மூலம் தன்னை ஒரு முழு வளர்ச்சிபெற்ற மனிதநேயம் கொண்ட மலையகம் பெருமை கொள்ளும் இப் பெரியாரின் சுயவரலாற்றை இவரே எழுதிக்கொண்டிருந்த சூழலில் ஒரு கள்வனைப் போல் இருட்டுக்குள் வந்த மரணம் அவரை இழுத்துக் கொண்டு போய்விட்டது.

பெரும் காற்றடித்து ஓய்ந்த இடம் போல் அமைதியாய்க் கிடக்கும் அவரைப் பார்க்கையில் நெஞ்சை அடைக்கிறது. அன்னாரின் அன்பு மனைவி சாந்தா,மகன் தயாளன்,மகள்களான கவிதா,யசோதா மற்றும் உறவினர்களுக்கானஆறுதலையும் ஆற்றுப்படுத்தலையும் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வரலாற்றோட்டத்தின் குறியீடுகளாக தனிமனிதர்களும் அமைவார்கள் என்பதற்கோர் அடையாளமாக வாழ்ந்துகாட்டியவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம்.




# மனிதமே நீ மறவாதே!

அகீலா ஐவுபர்
ஏத்தாளை புத்தளம்

பசித்த வையிற்றில் உதைக்க வேண்டாம்
உதவிக்கரத்தில் உதாசீனம் வேண்டாம்
ஏழை உயிரில் ஏளனம் வேண்டாம்
மகிமை காக்கும் மனிதமே

மனம் சாகும் நிந்தனை வேண்டாம்
பட்டப் பதவி பாகுபாடு வேண்டாம்
ஏற்றத்தாழ்வை பகிர்ந்திட வேண்டாம்
உத்தமம் காக்கும் மனிதமே

கற்பை காவும் கயவர் வேண்டாம்
மமதை தீண்டும் போதை வேண்டாம்
புரிந்துணர்வின்றிய பிரிவும் வேண்டாம்
மானம் காக்கும் மனிதமே

அதிகார மோகம் வேண்டாம்
செயலில் சட்டம் மீற வேண்டாம்
குருதி குதித்தோட யுத்தம் வேண்டாம்
கடமை காக்கும் மனிதமே

பணப்பித்து வாழ்வில் வேண்டாம்
போதம் மறந்த ஆணவம் வேண்டாம்
மனதை கொள்ளும் தீமை வேண்டாம்
அன்பு காக்கும் மனிதமே

மனிதமே நீ அறிய வேண்டும்
நெஞ்சை நிமிர்த்தி மார்பு தட்டிய விரலும்
மண்ணுக்குள் ஓர்நாள் மடியும்
மண்ணுக்குள் நீ மறைய முன்
மனிதம் காத்து வாழவேண்டும்



# காதலிற்காகவே

ரதிதேவி, மானிப்பாய்

காதலில் விழும் போது
கவிதை தோன்றுமே
உயிர் தேடலில் விழும்போது
தேகம் தாண்டுமே

தீயினைத் தலைகீழாய்
நிறுத்தமுடியுமா
இதயத் தீயினை
உன் வழியில்
செலுத்த முடியுமா

கைகட்டி நில்
அது கண்கட்டிக் கூட்டிப்போகுமே
கதவைத்தட்டி வந்து
அழைத்துச் செல்லும்
காத்திரு
காதலிற்காகவே

# மின்சார தேவதையே...!

இரா.ஜெயக்குமார்

ஏமாற்றிப் போகின்ற
எங்களின் தேவதையே!
எச்சாமம் வருவாயோ?
எவ்வேளை மறைவாயோ?

வாள்வெட்டு நின்றதென
வாட்டம் தவிர்க்கையிலே
மின்வெட்டாய் தொடரும்
மீதிக் கொடுமைகளே!

பரீட்சைக்கு படிக்கையிலே
பாவி நீ மறைகின்றாய்!
துடிக்க விட்டுத் தூரத்தே
சென்றே நிறைகின்றாய்!

சத்திர சிகிச்சை வேளை
சத்தமின்றிப் போகின்றாய்
வீதிகளை இருளாக்கி
விபத்தை விதைக்கின்றாய்!

சம்சாரத் தே(ள்)வதை போல்
சாகடிக்கும் மின்சாரம்உன்
சாராம்சப் பின்னணியை
சற்றேனும் கூறாயோ?



# பெருநாள் வந்ததம்மா!

அஸ்மா பாரிஸ்
மள்வானை

இன்பப் பெருநாள் வந்ததம்மா
ஈகைத்திருநாள் வந்ததம்மா
அன்புப் பெருநாள் வந்ததம்மா
அழகுத் திருநாள் வந்ததம்மா

சீரும் சிறப்பும் பொங்கிடவே
சிந்தையெங்கும் தங்கிடவே
ஊரும் உலகும் செழித்திடவே
உறங்கும் உள்ளம் விழித்திடவே

வறியோர் நெஞ்சம் மகிழ்ந்திடவே
வாழ்த்துரை கூறிப் புகழ்ந்திடவே
அறிந்தே அள்ளி ஈந்திடவே
இன்பப் பெருநாள் வந்ததம்மா!

# ஆசைக்கு அணைபோடு!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

ஆசைக்கும் அளவிட வேண்டும்
அணை கடந்தால் தொல்லை கூடும்
காசை கரைத்திட வைக்கும்
கடன்படும் நிலைதனை சேர்க்கும்

காண்பதை வாங்கிடச் சொல்லும்
கனிவினை மறந்திடச் செய்யும்
வீண் வழி சென்றிடத்தூண்டும்
வீராப்பாய் கடிந்திட வைக்கும்

நல்லதை புரியாததாக்கும்
நாசகாரியும் செய்திடவைக்கும்
எல்லை இல்லாத தாகும்
எல்லாம் நல்லதே என்றே தோன்றும்

ஆசைக்கு அணைதனை போடு
அனைத்தும் புரிந்த உணர்வுடன் வாழு
மாசை மனம்விட்டு களைந்து
மங்கலமாய் உன் நிலையினை ஆக்கு!



# இருளாகிப் போன இரவுகள்

அ. ஜெகன்
சுவிஸ்

தென்றல் தொட்டு
இளம் சோலை
ஆடிக் கவி பாட
ஆசை கொண்டு
இரு கண்கள்
அதைப் பார்க்கும்

பகலை விட்டுப்
பிரிந்து
இரவை எட்டித்
தொடத் துடிக்கும்
மாலை நேரம்
காயப்பட்ட
மனங்களையும்
புத்துணர்வு கொடுத்து
உற்சாகமாக்கும்

மாலை நேரத்து
மல்லிகையின் மணம்
மயக்கம் கொள்ள
வைக்கும்

மின்னில்லாக் கம்பியைக்
காவிக் கொண்டு
நிற்கும் கம்பங்களும்
எண்ணை இல்லா
விளக்குகளும்
வெறுமையைக்
காட்டி நிற்கும்

முழு மதியின்
வெளிச்சத்தை நம்பிய
முற்றத்து இரவும்
சிறு மாரி போல
வரும் மழைக்கால
இருளால்
காணாமல் போகும்

மனித ஏமாற்றல்களும்
மனித ஏமாற்றங்களுமான
நாட்களின் முடிவு
தெரியாத நகர்வுகள்
எதிர் பார்ப்பை
புறக்கணித்து
நீண்டு கொண்டே
செல்லும்

தூக்கம் இல்லா
இரவுக்காய்
பாய் தேடும்
கண்கள்
ஓர் மூலையில்
ஒதுங்கிக் கொள்ளும்
இருளாகிப் போன
இரவில் இது
மட்டுமே முடிகிறது

எங்களின்
உயிர்த்தெழும்
நம்பிக்கைகளும்
காணாமல் போகிறது
எல்லாம் வல்ல
இயேசு பிரானே
எங்களையும்
உயிர்த்தெழச்
செய்வீராக

# பறந்து செல்ல வா

அறூபா அஹ்லா, கல்முனை

சிதைந்த சிறகால்
சிகரம் தொட்டிட முடியாதா?

இரு சிறகில்
ஒரு சிறகு உடைந்தால்
மறு சிறகு இருக்குத் தானே
எழுந்து பறந்திட.....

நம்பிக்கையை உன்னில் வை
முயற்சியை நீயே போடு

ஒரு சிறகு கொண்டும்
பறந்திட முடியுமே...

பறந்து செல்ல வா பெண்ணே
மறைந்து இருந்தது போதுமே
உன் கூட்டை விட்டு
திறந்து வா பெண்ணே
திறமைகளை காட்டிட
உன் சிறகுகளை விரித்திடு

# விடிவு தரும் வளர்ச்சி

குப்பிளான் குமரன்



வாழ்நாள் முழுவதையும்
தியாகம் செய்தனர் தமது
நெருங்கிய உறவுகளுக்காக
வனிதையர்கள் அன்று

முழுமையாக முடக்கப்பட்டனர்
பெண்கள் நம் தேசத்தில் வீடுகளுக்குள்
பிறருக்கு சேவை செய்யும்
தாதிகள் போல

பெண்கள் பிறப்பதே பேரிடியானது
பெற்றோருக்கு அன்று
உலகத்தை உருவாக்கும்
சிற்பிகளை வடிவமைப்பவள் பெண்ணே
அப்படியிருக்க சமுதாய கட்டமைப்பு

பெண்களையே பெண்களுக்கு
எதிராகதூண்டியது எவ்வாறு
இந்த நிலைமை
ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு
காரணம் என்னவோ

சிந்தனைகளில் விழிப்படைந்த
பெற்றோர் சிலர் உருவாக்கினர்
தம் பெண்களை சமூகத்திற்காக
மங்கையர் வளர்ச்சி வேகம்
அதிகரித்தபோது வனிதையர்கள்
உரமூட்டினர் உயர்ந்த பதவிகளை


இன்றைய சமூகத்தின் மங்கையர்
முன்னிற்கின்றனர் முழுமையாக
எல்லாத் துறைகளிலும்
மங்கையரின் வழிநடத்தலில்

செய்யப்படும் செயற்பாடுகளுக்கு
தமது உழைப்பை விற்கின்றனர்
இன்று பல ஆண்கள்
வனிதையரின் விரைவான வளர்ச்சி
விடிவு தரும் உலகிற்கு ஏனெனில்
ஆண்கள் உலகிற்கு வழங்கியவற்றை
பெண்களே பாதுகாத்து
அறுவடை செய்கின்றனர்

# என் இதயம்

என். பாரத், மானிப்பாய்

உடைந்த
என் இதயத்தை
துடிக்க வைத்த
தேவதையே
என் இதயம்
துடிக்க மறக்கமுன்
என் இதயத்தை
தத்தெடுத்து கொள்
உடைந்த
என் இதயத்தில்
உயிர் இல்லாமல்
போகின்றது



# இறைவன் சிரிக்கிறான்

பாண்டியூர் பொன். நவநீதன்

ஊட்டி
வளர்க்கிறான்
ஒருவன் கத்தி
தீட்டி
அறுக்கிறான்
மற்றவன் இதை
பார்த்துச் சிரிக்கிறான்
இறைவன்!

# என்னவளே!

ஆர். டிலான்
மாதம்பை தோட்டம்



கடவுளே இன்னும்
ஒரேயொரு ஜென்மம் கொடு
அந்த ஜென்மத்திலும்
என்னவள் தந்து சென்ற
வலிகளை நினைத்து
வாழ்வதற்கு

தூய்மையான காதலையும்
அழகான வலிகளையும்
கொடுமையான பிரிவையும்
மீண்டும் சுமக்க ஆசைப்படுகிறது
அறிவிழந்த இந்த இதயம்...

காயங்கள் எவ்வளவோ
கடந்து வந்தவன் நான்
இன்று உன்னை மட்டும்
கடந்து செல்ல முடியாமல்
பின் தங்கி விடுகிறேன்
ஏனென்று கூறாயோ!!

# விடியல்...

இர்ஷாத்
வாழைச்சேனை

ஒளியில் தெரிந்த
அவள் விம்பத்தைக்
கிழிக்கிறேன்

துகள்கள்
காற்றில் பறந்து
எண்திசையும்
இருள்

# ZEISS KINEVO 900 Neuro Microscope கொண்டுள்ள இலங்கையின் முதலாவது தனியார் மருத்துவமனையாக Durdans



கொழும்பு 03 இல் அமைந்துள்ள Durdans மருத்துவமனை, அதன் சத்திர சிகிச்சை செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், உலகத்தரம் வாய்ந்த ZEISS KINEVO 900 Neuro Microscope யினை நிறுவியுள்ளது. அந்த வகையில் இவ்வகையான நுணுக்குக்காட்டியை பொருத்தியுள்ள இலங்கையின் முதலாவது தனியார் மருத்துவமனையாக Durdans திகழ்கின்றது. சமீபத்திய தொழில்நுட்பங்களுடன் உள்ளூர் சுகாதாரத் துறையை மேம்படுத்த வேண்டும் எனும் முயற்சிகளுக்கு அமைய, இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, இதற்கான பணிகளை அண்மையில் நிறைவு செய்திருந்தது.

1945ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட Durdans மருத்துவமனையானது, மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும் எனும் எளிய தத்துவத்தை நோக்காகக் கொண்டு, மருத்துவத் துறையில் சிறப்பானவற்றையும், புத்தாக்க கண்டுபிடிப்புகளையும் இப்பிராந்தியத்தில் அறிமுகப்படுத்தி அதில் அதன் நற்பெயரைக் கட்டியெழுப்பியுள்ளது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, Durdans மருத்துவமனையானது, DIMO உடன் இணைந்து, அதிநவீன நுணுக்குக்காட்டியான ZEISS KINEVO 900 இனை நிறுவுவதற்கான முயற்சியை எடுத்துள்ளது. இது அறுவை சிகிச்சை நிபுணரால் இயக்கப்படும் ஒரு புதிய ரோபோவியல் காட்சிப்படுத்தல் தொகுதியாகும். இது அறுவைசிகிச்சை நுணுக்குக்காட்டியின் செயற்பாட்டை, விசேட ரோபோ செயற்பாட்டு கட்டுப்பாட்டு அமைப்புகளுடன், 4K தரத்தில் அமைந்த, முப்பரிமாண (3D) காட்சிப்படுத்தலாக வெளிப்படுத்துகிறது.

# எம்ஜே பென்குயின் சேவையாளர்களுக்கு அத்தியாவசிய உலருணவு பொருட்கள் நன்கொடை



2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆடை உற்பத்தியாளர் எம்ஜே பென்குயின் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 11ம் திகதி தனது சேவையாளர்கள் அவர்களது விடுமுறைக்காக வீடுகளுக்கு செல்வதற்கு முன் 4500 உலர் உணவு பொதிகளை அவர்களது முழு சேவையாளர்களுக்கும் வழங்கியுள்ளது.

அவர்களின் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களை மறக்கமுடியாத நிகழ்வாக மாற்றுவதற்காகவும், இந்த கடினமான காலத்தில் அவர்களின் சுமையை குறைக்கும் வகையிலும் நிறுவனத்தின் 'அத்வெல' CSR நிகழ்ச்சித் திட்டத்தினுளடாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மார்ச் 08ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தினை சிறப்பிக்கும் முகமாக, நீண்டநேர மின்வெட்டின் போது பயன்படுத்துவதற்காக, அவர்களின் நிறுவனத்தில் பணிபுரியும் பெண் சேவையாளர்களுக்கு அவசர மின்விளக்குகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

எம்ஜே பென்குயின் நிறுவனத்தின் 'அத்வெல' CSR நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருநாகல் மற்றும் கண்டியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு அருகாமையில் பரந்து விரிந்துள்ள கிராமங்களில் வசிக்கும் குடிமக்களின் வாழ்வாதாரத்திற்கு கைகொடுக்கும் முகமாக பல்வேறு சேவை திட்டங்களை நடத்துகிறது. மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், பள்ளி மாணவர்களுக்கான புத்தக நன்கொடைகள், மரம் நடும் பிரச்சாரங்கள் மற்றும் பாடசாலைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் நன்கொடைகள், தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் மற்றும் சுற்றுசூழலை சுத்தம் செய்யும் திட்டங்கள் ஆகியவை இந்த CSR நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடங்கும்.

SLS Bank
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

## இலங்கை சேமிப்பு வங்கியின் வாகனங்களின் ஏலவிற்பனை

## விலைமனுவிற்கான அழைப்பு

**Bid No. 2022/04/02**

கீழே விபரிக்கப்பட்டவாறான வாகனத்தின் ஏலவிற்பனைக்காக இலங்கை சேமிப்பு வங்கியின் அகற்றல் குழுத் தலைவர் 'முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை' இத்தால் கோருகின்றார். 2022.05.17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலமைந்துள்ள தலைமை அலுவலக தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலுள்ள தலைமை அலுவலக கட்டிடத்தில் 2022.05.17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு விலைமனுக்கள் பகிரங்கமாக திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

**வாகனத்தின் விளக்கம்**

| வாகன பதிவு இலக்கம் | வாகனத்தின் இனம் மற்றும் உருமாதிரி | உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| WP GK – 4663 | நிசான் சிவிலியன் பஸ் (4160 CC) | 1996 |

2022.04.25 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணமான 500 ரூபாவிற்கான வங்கி பணவரவுத்துண்டை சமர்ப்பித்து, கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலுள்ள தலைமை அலுவலக நிருவாகத்திற்கான தலைவரிடமிருந்து விலைமனு படிவங்களையும் வாகனத்தை பார்வையிடுவதற்கான அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

2022.04.25ஆம் திகதியிலிருந்து 2022.05.17ஆம் திகதிக்குமிடையில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வாகனத்தை பார்வையிடலாம். மேலதிக தகவலை 0701 819 219 என்ற இலக்கத்தினூடாக அறவீடுகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - அகற்றல் குழு,**
**இலங்கை சேமிப்பு வங்கி,**
**இல. 265,வோட் பிளேஸ்,**
**கொழும்பு-07.**





கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியில் புதிய மாணவர்கள் தரம் 1இல் சேர்த்துக் கொள்ளும் வைபவம் கடந்த 19ம் திகதி கல்லூரியில் கல்லூரி அதிபர் பிரதி அதிபர் , திருமதி இ. விஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பிலியந்தலை கல்வி வலயத்தின் தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.எஸ். முருகானந்தன் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

## கேள்வி கோரல்

### இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ விடுதிகளில் திருத்தவேலைகளைச் செய்தல்

**கேள்வி இல. SP/2022-7**

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ விடுதிகளில் திருத்தவேலைகளைச் செய்வதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதியைப் பூர்த்தி செய்வதற்கான தகைமை வாய்ந்தவர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாணத்திற்கான பதிவு இருத்தல் வேண்டும். விலைமனுக்கள் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. இந்த வேலை ஒப்பந்தத்தை கையளிக்கப்படும் நாள் முதல் தொண்ணூறு (90) நாட்களுக்குள் நிறைவு செய்தல் வேண்டும்.
4. கேள்வியைக் கையளிப்பதற்கு கடந்த மூன்று (03) வருடத்தினுள் இயைபுடைய மாதிரியிலான சேவை வழங்கிய அனுபவம் தேவையாகும்.
5. 2022 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி முதல் 2022 மே மாதம் 17ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தைச் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
8. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022 மே மாதம் 05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம்பெறும்.
9. 2022 மே மாதம் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டுநாயக்கவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ விடுதிகளில் திருத்தவேலைகளைச் செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
10. கேள்வியைக் கையளிப்பதற்கு தகைமை பெறும் நிறுவனத்தினால் முழு ஒப்பந்தப் பெறுமதியின் 10% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகளற்ற செயற்றிறன் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயற்றிறன் மட்டத்திலான சேவை கிடைக்காவிட்டால் அதை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
11. 2022 மே மாதம் 18ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
12. CIDA அனுமதித்த மாறுபடும் விலைச் சூத்திரத்தின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கருவிகள் நிலையத்திற்கு உயர் செயல்திறனுள்ள திரவ குரோமெட்டோகிரபி (HPLC) முறைமை மற்றும் 3D அச்சுப்பொறிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கருவிகள் நிலையத்திற்கு உயர் செயல்திறனுள்ள திரவ குரோமெட்டோகிரபி (HPLC) முறைமை மற்றும் 3D அச்சுப் பொறிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் உருப்படிகளின் மொத்த எண்ணிக்கைக்கும் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| கேள்வி இலக்கம் | SJP/FAS/F002/22/NCB/01 | | |
|---|---|---|---|
| உருப்படி இல. | உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி |
| 01 | உயர் செயல்திறனுள்ள திரவ குரோமெட்டோகிரபி (HPLC) முறைமை | 01 | ரூபா 180,000.00 |
| 02 | 3D அச்சுப் பொறி | 01 | |

2. அரச நிறுவனங்களுக்கு இதனையொத்த எண்ணிக்கையான ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றில் ஆகக் குறைந்தது 5 வருட காலம் அனுபவத்தைக் கொண்ட விலைமனுதாரர்கள் விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கலாம்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை ரூபா தொகைக்கு ஒரு வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கி உத்தரவாதம் விலைக்கோரல் பிணையாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதமானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைக்கோரல் பிணை முறியானது நிபந்தனையற்ற கோரிக்கை முறி வடிவத்திலும் மற்றும் 2022-10-02ஆம் திகதி வரையிலும் செல்லுபடியாதல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞான பீடம், உதவி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடாதிபதியின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 ஏப்ரல் 25ஆம் திகதி முதல் 2022 ஜுன் 01ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபாவை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியும் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞான பீடம், உதவி நிதியாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. நகல் பிரதிகளுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு மீண்டும் வேறொரு உறையில் இட்டு அந்த மூன்று கடித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து ஒன்றில் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரயோக விஞ்ஞான பீடம், பீடாதிபதியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
8. நகல் பிரதியானது மூலப் பிரதியின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதியாகவிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2022 ஜுன் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரயோக விஞ்ஞான பீட பணிப்பாளர் சபை அறையில் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
10. முழுமையற்ற மற்றும் பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல் நிலை),**
**பிரயோக விஞ்ஞான பீடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில,**
**நுகேகொட.**

# போராட்டத்தை ஆதரிக்க தமிழர்களுக்கு யாரும் சொல்லித்தரத் தேவையில்லை...

(12ஆம் பக்கத் தொடர்)

இது நல்ல கேள்வி ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோர மக்களுக்கு முழு உரிமையும் உண்டு. ஏனெனில் இலங்கை அரசு என்ற கட்டமைப்பு மக்களினாலேயே தோற்றுவிக்கப்பட்டது. ஆகவே ஆட்சியை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென மக்கள் கோருவதன் அர்த்தம் என்னவென்றால், இலங்கையின் தற்போதைய அரச கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்பதே.

ஆகவே தமிழ், முஸ்லிம் மக்களும் ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பதற்குரிய புதிய அரச கட்டமைப்பை உருவாக்க சிங்கள மக்கள் ஒன்றுபட்டால், தமிழ் மக்கள் நிச்சயமாக முழுமையான ஆதரவு கொடுப்பார்கள்.

தமிழர்களின் அதிகாரப் பங்கீட்டுக்கான கோரிக்கை இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே தோன்றியது. அதற்காக முப்பது வருட அகிம்சைப் போராட்டமும் அடுத்த முப்பது வருட ஆயுதப் போராட்டமும் நடத்தப்பட்டது. ஆனால் புலிசார் அரசியல் போட்டிக்குள் ஈழவிடுதலைப் போராட்டமும் இல்லாதொழிக்கப்படடது.

தற்போது போராடும் சிங்கள மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு இனரீதியான அரசியல், பொருளாதாரத் திட்டங்கள்தான் மூல காரணம் என்பதை உணர்ந்து, இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பின் அதிகார முறைமைகளை மாற்ற முற்பட்டால் நிச்சயமாக இலங்கைத்தீவில் அரசியல் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும்.

**கே: தமிழ் மக்கள் எந்த ஆர்வமுமின்றி இருக்கின்றார்கள்,,, அது அரசாங்கத்திற்கு ஆதரவானதா?**

**பதில்:** அரசாங்கத்திற்கு ஆதரவு என்பதல்ல. தமிழ் மக்களைப் பொறுத்தவரை கொழும்பில் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும், ஒன்றுதான். காஸ். டீசல் கிடைத்துவிடடால் சிங்கள மக்கள் போராட்டத்தை நிறுத்திவிடுவார்கள். ஆனால் தமிழர்களின் போராட்டம் தொடர்ச்சியானது. சிங்கள மக்கள் உண்மையைத் தெரிந்து கொண்டு முழுமையான அதிகாரப் பங்கீட்டு மாற்றத்துக்கு ஒன்றுதிரள வேண்டும்.

சிங்கள அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் மாறி மாறி ஆட்சியமைத்தபோது போரைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தன. அதற்காகச் சிங்கள மக்களுக்கு இனவாத கருத்துக்களையும் தேர்தல் காலங்களில் விதைத்தார்கள். அது பிழையான பாதை என்பதைத்தான் தற்போதைய பொருளாதார நெருக்கடியும், விலைவாசி உயர்வும் சிங்கள மக்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.

**கே: அரசு மற்றும் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு?**

**பதில்:** நிலையான அரசியல் தீர்வு முன்வைக்கப்படாதவரை தமிழ் மக்கள் எந்தவொரு அரசாங்கத்தையும் அதன் அமைச்சரவையும் ஏற்க மாட்டார்கள். வெறுமனே அரசியல் நோக்கிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்களே வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கு எது சரி எது பிழையென எல்லாமே விளங்குகின்றது. தற்போதைய நெருக்கடியான சூழலில், தமது அதிகாரத்தைத் தொடந்தும் தக்கவைப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றத்தால் ஒட்டுமொத்த இலங்கைத்தீவுக்கே பயனில்லை.


## தேவை

### கறுவா/கராம்பு/மிளகு

ஏற்றுமதி தரத்திலான இலங்கையில் பயிரிடப்படும் வாசனைத் திரவியங்கள், பிரதானமாக கறுவா, கராம்பு மற்றும் மிளகு பயிர்ச் செய்கையாளர்கள்/வழங்குநர்களை ஓர் சிறப்பாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பனி தேடுகிறது.

வாராந்தம் 250kg வாசணைத் திரவியங்கள் வீதம் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

தயவு செய்து சகல சம்பந்தப்பட்ட தகவல்களையும் தாருங்கள்

**விளப்பரதாரர்**
**மே/பா தினகரன் வாரமஞ்சரி, லேக்ஹவுஸ், கொழும்பு.**



## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
## STHRD செயற்றிட்டம்

கல்வி அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு** | STHRD/SB/-E40: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட மருந்தாக்கல் ஆய்வுகூட உபகரண பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.04.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

### விலைமனு மூடும் திகதியின் மாற்றங்கள்

01. விலைமனுவின் மேலேயுள்ள அழைப்பின் மூடும்/ திறத்தல் திகதி ஆகியன பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.

❖ விலைமனுக்கோரல் காலப்பகுதி - 2022 ஏப்ரல் 03ஆம் திகதியிலிருந்து மே 18 ஆம் திகதிக்கு (பி. ப. 1.30 மணிக்கு)

❖ விலைமனுவின் மூடல்/திறத்தல் - 2022 மே 18ஆம் திகதியன்று (பி.ப. 1.30 மணிக்கு)

❖ விலைமனுக்கள் செல்லுபடியாகும் திகதி - 2022 ஓகஸ்ட் 14ஆம் திகதியன்று - 90 நாட்கள் (விலைமனுக்களை திறக்கும் திகதி அடங்கலாக)

❖ விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் திகதி - 2022 நவம்பர் 2ஆம் திகதியன்று - 180 நாட்கள் (விலைமனு திறத்தல் திகதி அடங்கலாக)

❖ விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் பிற்சேர்க்கையொன்று வழங்கப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதாரர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP CODE: 70140**
**தொலைபேசி: 045 2280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**

திகதி: 24.04.2022



## பெறுகை அறிவித்தல்

## விடுதி பாதுகாப்பாளர் சேவையை வழங்குதல்
## களனி பல்கலைக்கழகம்

களனிப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான (ராகம மருத்துவ பீடம் உட்பட) உள்ளக மற்றும் வெளி விடுதிகளில் விடுதி பாதுகாப்பாளர் சேவையை வழங்குவதற்காக பதிவு செய்துள்ள மனித வள வழங்கல் நிறுவனங்களிலிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2022.05.10ம் திகதி பிற்பகல் 2.30 வரை என்னால் ஏற்கப்படும்.

கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூபா 1000/- கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்வி மாதிரிப் பத்திரம் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய விபரங்களை 2022.05.09ம் திகதி பிற்பகல் 2.30 வரை உதவிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) இடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை) ஐ சந்தித்து குறித்த விடுதிகளை பரீட்சித்துப் பார்க்கலாம்.

குறித்தவாறு பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு இடது பக்க மேல் மூலையில் ‘களனிப் பல்கலைக்கழகத்தின் விடுதி பாதுகாவலர் சேவை கேள்வி’ என்று குறிப்பிட்டு 2022.05.10 பிற்பகல் 2.30 இற்கு முன்பு களனிப் பல்கலைக்கழகத்தின் தலுகம வளாகத்தில் பிரதம பாதுகாப்பு அதிகாரி அலுவலகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொது நிர்வாகப் பிரிவிற்கு சொந்தமான கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தியற்ற முறையில் நிரப்பப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்கள் மதிப்பீடு செய்யப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

2022.05.10 பிற்பகல் 2.30 இற்கு களனிப் பல்கலைக்கழகத்தின் தலுகம வளாகத்தில் பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**2022.04.24**


## இலங்கைக்கு IMF உதவியை...

(06ஆம் பக்கத் தொடர்)

இது இந்தியா_ இலங்கை இடையேயான உறவை அதிகரிக்கும்' எனக் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை சார்பில் இந்தியாவும் கோரிக்கைகளை முன்வைத்திருப்பதானது இலங்கை மீது இந்தியா கொண்டிருக்கும் நெருங்கிய சகோதர உறவின் வெளிப்பாடாகுமென்று இலங்கையில் உள்ள புத்திஜீவிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கையின் அண்டை நாடான இந்தியாவின் கருத்தையும் பரிசீலித்த பிறகே, இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதை சர்வதேச நாணய நிதியம் பரிசீலிக்கும் என்று தகவல்கள் முன்னர் வெளியாகியிருந்தன. இந்நிலையில் இந்தியாவின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைப்பது இலகுவாகியுள்ளது.

இலங்கையின் நிதி நிலைமையை சீராக்க, இந்திய அரசு ஏற்கெனவே மேற்கொண்ட நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியது எனவும், இலங்கையின் சார்பில் முன்வைக்கப்பட்ட சிறப்புக் கோரிக்கைகளை பரிசீலனை செய்ய நாணய நிதியம் உறுதியளித்திருப்பதாகவும் இலங்கை நிதி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 நவம்பரில், இரசாயன உரங்களின் இறக்குமதியை இலங்கை அரசாங்கம் நிறுத்தியதால், இந்தியா 100 தொன் நனோ நைற்றிஜன் திரவ உரங்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது. 50 நாட்களில் இலங்கை மக்களுக்கு இந்தியாவினால் வழங்கப்பட்ட மொத்த எரிபொருள், 200,000 மெற்றிக் தொன் ஆகும். அத்துடன் இந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால், 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக தொடர்ந்தும் ஒத்துழைப்புகளை வழங்குவதில் இந்தியா ஆர்வமாக உள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"நாங்கள் நிச்சயமாக அவர்களுக்கு உதவுவோம் என்று நம்புகிறோம். மேலும் பரிமாற்றங்கள் மற்றும் கடன்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று இந்தியாவின் மூத்த அரசாங்க வட்டாரம் தெரிவித்துள்ளதாக இந்திய செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவை ஒருபுறமிருக்க இலங்கையின் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்காக இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஆதரவினை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டாலினா ஜோர்ஜிவா பாராட்டியுள்ளார். அதேசமயம், சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் தொடர்ச்சியான ஈடுபாட்டினை கொண்டிருக்கும் என்றும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் உறுதியளித்துள்ளார்.

வோஷிங்டன் டிசியில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இளவேனில்கால கூட்டமொன்று இடம்பெற்றிருந்த நிலையில், நிர்மலா சீதாராமனை சந்தித்த போதே ஜோர்ஜிவா இவ்வாறு கூறியுள்ளார்.

கொவிட் 19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா தடுப்பூசித் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்தமைக்காகவும் ஜோர்ஜிவா இந்தியாவைப் பாராட்டியுள்ளார். கொவிட்19 பெருநோயினை கட்டுப்படுத்துவதற்காக நலிவடைந்த நாடுகளுக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்காகவும் அவர் இந்தியாவை பாராட்டியுள்ளார்.

இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்தும் உறுதியான நிலையில் இருப்பதற்கு நன்கு திட்டமிடப்பட்ட இந்தியாவின் கொள்கைகள் ஆதரவாக அமைந்திருப்பதாக ஜோர்ஜிவா சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் நெருக்கடியைத் தீர்ப்பதில் இந்தியா மேற்கொண்டுள்ள முயற்சியானது அண்டை நாட்டுக்கு முன்னுரிமையளிப்பதென்ற இந்தியாவின் தேசியக் கொள்கையையே வெளிப்படுத்துவதாக உள்ளது.


## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
## STHRD செயற்றிட்டம்
கல்வி அமைச்சு
## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு | **STHRD/SB/-E39**: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட மருந்தியல் ஆய்வுகூட உபகரண பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2022.04.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

### விலைமனு மூடும் திகதியின் மாற்றங்கள்

01. விலைமனுவின் மேலேயுள்ள அழைப்பின் மூடும்/ திறத்தல் திகதி ஆகியன பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.

➢ விலைமனுக்கோரல் காலப்பகுதி - 2022 ஏப்ரல் 03 ஆம் திகதியிலிருந்து 2022 மே 18 ஆம் திகதிக்கு (பி.ப. 1.30 மணிக்கு)

➢ விலைமனுவின் மூடல்/திறத்தல் - 2022 மே 18 ஆம் திகதியன்று (பி.ப. 1.30 மணிக்கு)

➢ விலைமனுக்கள் செல்லுபடியாகும் திகதி - 2022 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று - 90 நாட்கள் (விலைமனுக்களை திறக்கும் திகதி அடங்கலாக)

➢ விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் திகதி - 2022 நவம்பர் 2 ஆம் திகதியன்று - 180 நாட்கள் (விலைமனு திறத்தல் திகதி அடங்கலாக)

➢ விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் பிற்சேர்க்கையொன்று வழங்கப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதாரர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**

**ZIP code: 70140**
**தொலைபேசி: 0452280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**

**திகதி: 24.04.2022**



## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
## STHRD செயற்றிட்டம்
கல்வி அமைச்சு
## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு** | **STHRD/SB/-R41**: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட நுண்ணுயிரியல் ஆய்வுகூட உபகரண பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.04.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

### விலைமனு மூடும் திகதியின் மாற்றங்கள்

01. விலைமனுவின் மேலேயுள்ள அழைப்பின் மூடும்/ திறத்தல் திகதி ஆகியன பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.

➢ விலைமனுக்கோரல் காலப்பகுதி - 2022 ஏப்ரல் 03 ஆம் திகதியிலிருந்து 2022 மே 18 ஆம் திகதிக்கு (பி.ப. 1.30 மணிக்கு)

➢ விலைமனுவின் மூடல்/திறத்தல் - 2022 மே 18 ஆம் திகதியன்று (பி.ப. 1.30 மணிக்கு)

➢ விலைமனுக்கள் செல்லுபடியாகும் திகதி - 2022 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று - 90 நாட்கள் (விலைமனுக்களை திறக்கும் திகதி அடங்கலாக)

➢ விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் திகதி - 2022 நவம்பர் 2 ஆம் திகதியன்று - 180 நாட்கள் (விலைமனு திறத்தல் திகதி அடங்கலாக)

➢ விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் பிற்சேர்க்கையொன்று வழங்கப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதாரர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**

**ZIP code: 70140**
**தொலைபேசி: 0452280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**

**திகதி: 24.04.2022**


## திசை மாறிச் செல்லும்...

(06ஆம் பக்கத் தொடர்)

கொழும்பில் உள்ள உயர்தரப்பு மக்களையே இங்கு அதிகம் காணக் கூடியதாக இருப்பதுடன், நாளாந்தம் செலவு செய்யப்படும் பணத்தைப் பார்க்கும் போது போராட்டத்தின் பின்னணி குறித்தும் கேள்விகள் எழுகின்றன.

இங்கு வழங்கப்படும் உணவுகள் மற்றும் குடிபானங்களுக்கு எங்கிருந்து, யாரால் பணம் வழங்கப்படுகின்றன என்பது இன்னமும் மர்மமாகவே காணப்படுகிறது. மக்கள் போராட்டம் களியாட்டமாக மாற்றப்பட்டிருப்பது தொடர்பில் நாளுக்கு நாள் விமர்சனங்கள் அதிகரித்தே வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளால் சாதாரண மக்களினால் நடத்தப்படும் நியாயமான போராட்டங்களுக்கான மதிப்பும் இழக்கப்படுகிறது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது இவ்விதமிருக்க, காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்திருந்தார். இருந்தபோதும் ஆர்ப்பாட்டக் காரர்கள் இதற்குத் தயாராகவில்லை. அத்துடன், பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் தேவையில்லையென அவர்கள் முன்வைக்கும் கோரிக்கை நடைமுறைக்குச் சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகிறது.

அரசியலமைப்பின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட 225 பேரே அரசியல் ரீதியான முடிவுகளை எடுப்பதற்கான பிரதிநிதிகளாகக் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரையும் நீக்கி விட்டு ஜனநாயக ரீதியில் எவ்வாறான செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது. அவ்வாறு செயற்படுவது அரசியலமைப்புக்கு முரணான விடயமாக அமைந்துவிடும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது காலிமுகத்திடலில் உள்ளவர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அதேநேரம், எரிபொருள் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்கள் வீதிகளை மறித்து நடத்தும் போராட்டங்கள் பல தரப்பினரை அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றன. வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்வதால் அவசரமாக வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளிகள் உள்ளிட்ட அன்றாட கடமைகளை நிறைவேற்றச் செல்லும் பலரும் சிக்கல்களுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளாகின்றனர். எனவே இது குறித்தும் போராடும் மக்கள் சிந்திக்க வேண்டும் என்பதே பொதுவான வேண்டுகோளாக உள்ளது.

# மங்கையர் முற்றம்

## பெண்களுக்கு ஏற்படும் உடற்சோர்வு



அதிக வேலைப்பளுவால் பெண்களுக்கு ஏற்படும் உடற்சோர்வுக்கு பல காரணங்கள் இருந்தாலும் அதற்கான உறுதிப்படுத்தப்பட்ட தீர்வுகள் இன்றும் முன்வைக்கப்படவில்லை. இதற்கு ஒரு சில தியானம்,யோகா செய்வதன் மூலமே உடற்சோர்வை போக்க முடியும்.

நாற்பட்ட சோர்வு என்பது பெண்களுக்கு எப்பொழுதும் களைப்பைத் தரும். பொதுவாக ஒரு மனிதனுக்கு களைப்பு ஏற்பட்டால், சிறிது நேரம் தூங்கினால் சரியாகும். ஆனால், இந்த வகையான களைப்பு தூங்கினாலும் சரியாகாது. இதற்கு சரியான காரணம் தெரியவில்லை என்றே நவீன மருத்துவம் கூறுகிறது. ஒரு சில வைரஸ்கள் இதற்குக் காரணமாக இருக்கும் என்பது மருத்துவர்களின் நம்பிக்கை. மன அழுத்தம், குடும்பச் சூழ்நிலை, வேலையில் விருப்பமின்மை போன்ற காரணங்களாலும் இந்த வகையான அசதி ஏற்படலாம். 30 வயது முதல் 50 வயதுவரை உள்ள பெண்களுக்கு இந்த வகையான களைப்பு அதிகமாக வருகிறது.

காய்ச்சலை போன்ற அறிகுறிகளே இதில் தெரிகின்றன. தசை வலி, தலைவலி, அதீத சோர்வு போன்றவை 6 மாதங்களுக்கு மேல் நீடித்திருக்கலாம். உடற்பயிற்சி செய்தாலும் சோர்வு வரும். காலை எழுந்தவுடன் களைப்பாக காணப்படும். மறதி ஏற்படும், மனதின் ஒருமுகத்தன்மை குறையும், குழப்பம் வரும், மூட்டு வலி வரும். ஒரு சிலருக்குத் தொண்டை வலியும் வரும்.

இந்த வகை களைப்புக்கு என சிறப்புப் பரிசோதனைகள் ஒன்றும் இல்லை. நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு, தைரொய்ட், கொழுப்பு போன்ற பரிசோதனைகளே இதற்கும் செய்யப்படுகின்றன. இவர்களுக்கு தைரொய்ட், இதயம், சிறுநீரகம் சரியாக இயங்குகிறதா, மனச் சோர்வு உள்ளதா, ஏதாவது கட்டிகள் உள்ளனவா என பரிசோதித்து உறுதி செய்ய வேண்டும். வெள்ளையணுக்கள், மூளை எம்.ஆர்.ஐ. போன்ற பரிசோதனைகளும் செய்வதுண்டு. பலருக்கு மனச்சோர்வு இருக்கும். எதிலும் ஆர்வமின்மை, படுக்கையில் இருந்து எழுந்திருக்க விருப்பம் இல்லாமை, சாப்பாட்டில் விருப்பமின்மை அல்லது அதிகமாக சாப்பிடுதல் போன்ற செயல்களை செய்வார்கள்.

மிகை அசதியால் சோர்வாக இருப்பவர்கள் மெதுவாக வேலை செய்ய வேண்டும். வேலையையும், ஓய்வையும், தூக்கத்தையும் முறைப்படுத்த வேண்டும். ஒரு பெரிய வேலையை, சிறிது சிறிதாக பிரித்து செய்வதற்கு பழக வேண்டும். யோகா, தியானம் செய்ய வேண்டும். ஆழமாக மூச்சை இழுத்து வெளிவிடுவது மிகவும் நல்லது. சிலருக்கு சோகம், அவர்களுடைய குடும்ப சூழ்நிலையால் ஏற்படுகிறது. மனம் விட்டுப் பேசுவதால், இதை படிபடியாகக் குறைக்க முடியும்.

கிராம்பு, நிலவேம்பை சம அளவு எடுத்துத் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி அந்த கஷாயத்தை சாப்பிட்டு வந்தால் உடல் களைப்பு குறையும். ஒரு டம்ளர் அன்னாசி பழச் சாற்றுடன் மிளகுத்தூள் சேர்த்துத் தினமும் அருந்தி வந்தால் உடல் சோர்வு குறையும்.

## அரிசி உணவுகளை தவிர்ப்பதால் உடல் எடையை குறைக்க முடியுமா?



உடல் எடை குறைக்க வேண்டும் என முடிவு செய்ததும், முதற்காரியமாக பலரும் அரிசி உணவுகளை தவிர்ப்பார்கள். அவை எடையை அதிகரிக்கும் தன்மை கொண்டவை என்ற கருத்து பெரும்பாலானவர்களிடம் இருக்கிறது. ஆசியாவின் பல நாடுகளில் அரிசி தான் பிரதான உணவாக இருக்கிறது. பாரம்பரியமாக இங்கிருக்கும் தட்பவெட்ப சூழலுக்கு ஏற்ப நமக்கு பழக்கப்படுத்தப்பட்ட உணவு அரிசி உணவாகும். அதனால் அவற்றை முற்றிலுமாக தவிர்க்கக்கூடாது.

அரிசி உணவுகளை தவிர்ப்பதால் மட்டும் எடையை குறைக்க முடியாது. சரியான உணவு முறை, உடற்பயிற்சி, சீரான தூக்கம், நேர்மறையான மனநிலை போன்றவற்றின் மூலமே உடல் எடையை சரியாக பராமரிக்க முடியும். நமது தட்ப வெப்ப நிலையில் வளரும் உணவு வகைகளே உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்றவை. அந்த வகையில் அரிசி உணவுகள் உடலுக்கு நன்மை அளிப்பவையாகும்.

அதிகமாக உடல் உழைப்பு செய்பவர்களுக்கு செல்களில் சேர்க்கப்படுகின்ற குளுக்கோஸ் கரைக்கப்படும். இதே ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்கிறவர் என்றால் அவை எல்லாமே கொழுப்பாக மாறும், ஏனென்றால் சக்தி விரையமாவதில்லை. அதிகப்படியான கார்போஹைட்ரேட் இருக்கும் உணவுகளைச் சாப்பிடுவதால் அவை உங்களது இன்சுலின் அளவினை அதிகரித்து, குளுக்கோஸை சேகரிக்கும் மற்றும் கொழுப்பின் அளவை உயரச் செய்திடும். அதனால் தான் அரிசி உணவு சாப்பிட்டால் குண்டாவோம் என்று சொல்லப்படுகிறது.

நாம் வெள்ளை அரிசியை அதிகம் பயன்படுத்துகிறோம். 1 கப் வேக வைத்த வெள்ளை அரிசியில் 242 கலோரிகள், 4.4 கிராம் புரதம், 0.4 கிராம் கொழுப்புச்சத்து, 53.4 கிராம் கார்போஹைட்ரேட் மற்றும் 0.6 கிராம் நார்ச்சத்து உள்ளது. விட்டமின் பி, போன்ற சத்துக்கள் இதில் நிறைந்துள்ளன. கார்போஹைட்ரேட்டினால் நீங்கள் சாப்பிட்டவுடன் இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரித்திடும்.

மிக முக்கியமாக நீங்கள் செய்ய வேண்டியது எடுத்துக் கொள்ளக்கூடிய அரிசியின் அளவை குறைத்துக் கொண்டு, காய்கறி பழங்களின் அளவை அதிகரித்துக் கொள்ளுங்கள். வெள்ளை அரிசிக்கு பதிலாக சிவப்பரியை பயன்படுத்தலாம்.

சமைப்பது எளிதாக இருக்கும் காரணத்தால் பலரும் அரிசியை குக்கரில் வேக வத்து சாப்பிடுகிறார்கள். அதை தவிர்த்து நம் முன்னோர்களை போல வடித்து சாப்பிடும் முறையை பின்பற்றுங்கள். இதன் மூலம் உடல் எடையை அதிகரிக்க செய்யும் மாச்சத்தை குறைக்க முடியும்.

உடல் எடையை அதிகரிப்பதற்கு காரணமான சோடியம், கொழுப்பு போன்றவை அரிசியில் மிகவும் குறைவான அளவே உள்ளன. பட்டை தீட்டப்படாத அரிசியில் உள்ள நார்ச்சத்து உடலில் சேரும் கெட்டக்கொழுப்பை கரைப்பதற்கு அவசியமானது. இவ்வாறு ஏராளமான நன்மைகள் இருப்பதால் உடல் எடையை குறைக்க முயற்சிப்பவர்களுக்கு அரிசி உணவு சிறந்ததாகும்.

## சருமபராமரிப்புக்கு ஓரஞ்சு தோல்



ஓரஞ்சுப் பழத் தோலில் உள்ள விட்டமின் சி சத்து உங்கள் தினசரி சருமப் பராமரிப்பில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

விட்டமின் சி தவிர ஓரஞ்சுப் பழத்தோலில் அதிக அளவு என்டி ஒக்சிஜென்கள் நிறைந்திருப்பதால், இவற்றை ஸ்கின் பெக் மற்றும் மாஸ்க்குகளில் சேர்த்து பயன்படுத்தலாம்.

ஓரஞ்சுத் தோல் கிருமி எதிர்ப்பு மற்றும் நுண்ணுயிர் தொற்றுத் தன்மைகளை கொண்டுள்ளதால் உங்களுடைய எண்ணெய் பசை மற்றும் பருக்கள் நிறைந்த சருமத்திற்கு நல்ல பலன் தரும்.

உங்கள் சருமத்தின் இறந்த செல்களை நீக்க உதவுகிறது. ஓரஞ்சுத் தோல் பவுடரை தயிரில் கலந்து உங்கள் முகத்தில் சுழற்சி முறையில் மசாஜ் செய்யவும். சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி விடவும்.

★ ஓரஞ்சுத் தோல் மற்றும் வேம்புக் கலவை பருவை எதிர்த்துப் போராட உதவும். இந்த ஸ்கின் பெக் மூலம் எண்ணெய் பசை மிகுந்த மற்றும் பருக்கள் ஏற்படக்கூடிய சருமத்திற்கு நல்ல பலனை பெற முடியும்.

# சரும பராமரிப்புக்கு ஓரஞ்சு தோல்

★ ஒரு ஓரஞ்சுப் பழத்தை உரித்து தோலை வெயிலில் காயவைத்து, அதனுடன் 10 முதல் 20 பாதம் பருப்புகளை சேர்த்து மிருதுவாக அரைத்துக் கொள்ளவும். இதை தினமும் சிறிதளவு பாலுடன் சேர்த்து பூசி வந்தால் முகத்தில் உள்ள அழுக்குகள் நீங்கும். தேவைப்பட்டால் இந்த கலவையில் சிறிதளவு தேன் சேர்த்து முகத்தில் மசாஜ் செய்யலாம்.

★ ஓரஞ்சுத் தோல் மற்றும் தயிர் கலவை ஒரு அற்புதமான சருமப் பராமரிப்பிற்கு உதவும். இது சுருக்கங்களையும் கோடுகளையும் நீக்குவதோடு



## குடை மிளகாய்



ஆரோக்கியமான மற்றும் சமச்சீரான சத்துணவு சாப்பிட விரும்புபவர்கள் குடைமிளகாயை தவறாமல் சேர்த்துக்கொள்வது நல்லது.

குடைமிளகாயில் அதிகளவில் ஊட்டச்சத்துகள் இருக்கின்றன. மற்ற காய்கறிகளைவிட குடைமிளகாயை சமையலில் குறைவாகவோ, எப்போதாவதோ தான் சேர்க்கும் வழக்கம் இருக்கிறது.


உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் குடைமிளகாயை தாராளமாக சமையலில் சேர்த்துக்கொள்ளலாம். இது அதிக நார்ச்சத்து கொண்டது. வயிற்றுக்கும் இதமளிக்கும். மேலும் இதில் அதிக அளவில் விட்டமின் சி சத்தும் உள்ளது. இந்த ஊட்டச்சத்து உடலின் பெரும்பாலான உறுப்புகளின் செயல்பாடுகளுக்கு மிகவும் முக்கியமானது. அதுமட்டுமல்லாது, விட்டமின் ஏ சத்தும் குடைமிளகாயில் அதிகம் உள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியையும், இனப்பெருக்க அமைப்பையும் ஒழுங்குபடுத்த உதவும். குடைமிளகாயில் கொழுப்பு குறைவாக இருப்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

உடலில் உள்ள செல்கள் சேதமடையாமல் தடுப்பதில் என்டி ஒக்சிஜன்களின் பங்களிப்பு இன்றியமையாதது. குடைமிளகாயில் இருக்கும் என்டி ஒக்சிஜன்கள் செல்கள் சேதமடைவதை தடுத்து நிறுத்தும் செயல்முறையை துரிதப்படுத்த உதவுவதோடு சிலவகை புற்றுநோய்களில் இருந்தும் பாதுகாக்கும் தன்மை கொண்டது.

குடைமிளகாயில் அதிக அளவு விட்டமின் சி சத்தும் இருக்கிறது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும். பெரும்பாலான பழங்கள் மற்றும் காய்கறிகளில் இந்த ஊட்டச்சத்து நிறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஊட்டச்சத்துதான் உடல் இயக்க செயல்பாடுகளுக்கு ஊக்க சக்தியாக விளங்குகிறது.

உணவில் குடைமிளகாயை சேர்த்தால் உடல் எடையை குறைப்பதற்கும் உதவும். ஏனெனில் இதில் இருக்கும் விட்டமின் பி6, வளர்சிதை மாற்ற செயல்முறைக்கு நல்லது. குடைமிளகாயை செலட்டாகவோ, உணவிலோ தினமும் சேர்த்தால் அதிகமான ஆரோக்கிய நன்மைகளை பெறலாம்.

## செட்டிநாடு பெப்பர் சிக்கன்



தேவையான பொருட்கள்: கோழி இறைச்சி - ஒரு கிலோ, மஞ்சள் தூள் - அரை தே.கரண்டி, தயிர் - 1 1/2 தே.கரண்டி, இஞ்சிபூண்டு விழுது, எண்ணெய், உப்பு தேவையான அளவு

மிளகாய் வற்றல் - 4, மிளகு - 2 தே.கரண்டி, முழு மல்லி -3 1/2 தே.கரண்டி, சீரகம் - 3 தே. கரண்டின் (தனியாக வறுத்து அரைத்து வைத்துக் கொள்ளவும்)

செய்முறை : ஒரு பாத்திரத்தில் இறைச்சியைப் போட்டு மஞ்சள் தூள், உப்பு, தயிர், இஞ்சிபூண்டு விழுது சேர்த்து பிரட்டி ஊற வைத்துக் கொள்ளவும்.

பிறகு இன்னுமொரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி, எண்ணெய் காய்ந்ததும் ஊற வைத்திருக்கும் இறைச்சித் துண்டுகளை சேர்த்து, நன்கு கிளறி விட்டு மூடி வைத்து வேக விடவும். சிக்கன் நன்கு வெந்ததும், அதில் அரைத்த பொடியை போட்டு பிரட்டி அடி பிடிக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். வேண்டுமென்றால் சிறிது தண்ணீர் தெளித்துக் கொள்ளலாம்.

சிக்கன் நன்கு வெந்ததும், அதன் மேல் சிறிது கொத்தமல்லியைத் தூவி, கிளறி விடவும்.




## பாவாடை தாவணி அணியச் சொல்வது ஏன்?

பருவமடைந்த பெண்களுக்கு பாவாடை தாவணியை நம் முன்னோர்கள் ஏன் அணிய சொன்னார்கள் தெரியுமா?

அன்றைய காலகட்டத்தில் பெண் பிள்ளைகள் பூப்படைந்ததில் இருந்து பாவாடை தாவணி கட்டுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். பின்னர் சில வருடங்கள் கழித்து சேலை கட்டினார்கள். இதற்கு காரணம் என்னவென்று நீங்கள் எப்போதாவது யோசித்தது உண்டா?

பருவமடைந்ததில் இருந்து கர்ப்பப்பை உள்ள இடத்திலும் தொப்புளை சுற்றிலும் காற்றோட்டம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் பாவாடை தாவணி மற்றும் சேலை அணியும் பழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். அப்போது தான் அங்கு அதிக உஷ்ணம் ஏற்படாமல் இருந்து கர்ப்பப்பையை காக்கும் என்பதற்காகத்தான்.

ஆனால், இப்போதோ அந்த இடத்தை காற்றோட்டம் படாமல் ஜீன்ஸ், டீ சர்ட், சுடிதார் என போட்டுக் கொண்டு கொள்வதால் கர்ப்பப்பை உஷ்ணம் அடைந்து அந்த உஷ்ணம் வெளியேற வழியின்றி உடலே கர்ப்பப்பையை காக்க நீர்கட்டியை கர்ப்பப்பைக்குள் ஏற்படுத்தி உஷ்ணத்தை குறைக்க முயற்சி செய்கிறது. கணினி மொழியை கற்றுக் கொண்டவர்களுக்கு உடல் மொழியை கற்றுக் கொள்ள நேரம் இருப்பது இல்லை.

ஆதி காலத்தில் பெண்கள் வீட்டினை சாணம் இட்டு மொழுகுவார்கள். அது ஓர் சிறந்த உடற்பயிற்சி. வயிற்றினை அழுத்தி மண்டியிட்டு வேலைசெய்யும் பொழுது, நரம்புகளும், இடுப்பு எலும்புகளும் வலுப்படும். இன்றோ அனைவருக்கும் உட்கார்ந்து மற்றும் நின்றுகொண்டு செய்யும் வேலை செய்கிறார்கள். அதிகமான பெண்கள் ஐ.டி நிறுவனங்களில் மணிக்கணக்காக உட்கார்ந்து வேலை செய்யும் பணிகளிலேயே ஈடுபடுகின்றனர். இதனால், இரத்த ஓட்டம் தடைபடுகிறது.

ஆகையால், ஹோமோன்களும் சரிவர இயங்குவதில்லை. இரவில் கண் விழித்து, பல வேலை செய்து, பகலில் தூங்குவதனால், உடல் வெப்பம் கூடும். இதனால், அதிகம் பாதிக்கப்படுவது பெண்களின் வயிற்றுப் பகுதியே.

நீங்கள் நாகரீகம் வளர்ச்சி என்று எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் ஆரோக்கியம் என்ற விடயத்தில் பத்து அடி பின்னோக்கி செல்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# நாட்டுக்கு தேவ ஆசீர்வாதம் வேண்டிய பிரார்த்தனை



## Bless Srilanka அமைப்பின் ஸ்தாபகர் ரோய் ஐசக்









### இலங்கை தேசத்தை ஆசீர்வதிப்பதே தேவனின் சித்தம்

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் மட்டுமல்ல காரணம், தேவன் இப்பொறுப்பை கிறிஸ்த சபைகளின் கரங்களில் கொடுத்துள்ளார். இலங்கை தேசம் ஆசீர்வதிக்கப்பட போகிறது**





நமது நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த இக்கட்டிலிருந்து நாட்டை மீட்கும் பொறுப்பு இந்நாட்டின் ஒவ்வொரு பிரைஜைக்கும் உண்டு. அந்த வகையில் எமது இடைவிடாத ஜெபத்திற்கூடாக கர்த்தராகிய தேவன் எமக்கு தந்த தரிசனத்தைப் பகிர்ந்து பயனுடையதாக்குவோம்.

நாம் எமது ஸ்தாபனத்திற்கு *Bless Srilanka* என பெயர் வைத்துள்ளோம். காரணம் இலங்கை தேசத்தை ஆசீர்வதிப்பதே தேவனின் சித்தம். இதன் காரணமாக இலங்கையின் 9 மாகாணங்களில், கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், காலி, இரத்தினபுரி போன்ற பிரதேசங்களில் நானும் எனது துணைவியாரும் இன்னும் கிறிஸ்தவ ஸ்தானங்களும், கிறிஸ்தவ சபைகளும் ஒன்று சேர்ந்து ஜெப கூட்டங்களை நடாத்தினோம். கர்த்தர் நாட்டை ஆசீர்வதிக்க வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். எம் நாட்டிலுள்ள மண் வளத்தை ஆசீர்வதிக்க வேண்டும். சாபங்கள் நீங்க வேண்டும், பில்லி சூனிய மந்திரங்கள் இன்னும் இரத்த தோய்ந்த நிலங்கள் நல்ல நிலங்களாக மாற வேண்டும். அது மாத்திரமல்ல மக்கள் மத்தியிலுள்ள மதவெறிகள் கொலைகள், வன்செயல்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்தல், இனக்கலவரங்கள் இவற்றிலிருந்து விடுதலை பெற்று மக்கள் மனந்திரும்ப வேண்டும்.

இது ஒரு தனிப்பட்ட ஊழியம் அல்ல, இலங்கை முழுவதிலுமுள்ள கிறிஸ்தவ சபைகள் ஒன்றுகூடி நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் மட்டுமல்ல காரணம், தேவன் இப்பொறுப்பை கிறிஸ்த சபைகளின் கரங்களில் கொடுத்துள்ளார். இலங்கை தேசம் ஆசீர்வதிக்கப்பட போகிறது.

இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் பிரார்த்தனைகள் ஊடாக மாற்றங்கள் உட்பிரவேசிக்க போகிறது. இந்த பஞ்சம், பசி, பட்டினி, பொருளாதார பிரச்சினை வெகு நாட்களுக்கு நீடிக்காது. கிறிஸ்த சபைக்களூடாக வரும் ஆசீர்வாதம் வறண்ட நிலத்துக்கு நீர் கிடைக்கவும் செழிப்படையவும் தேவன் செய்வார். சபைகளே விழித்தெழுவோம். இலங்கை தேசத்தை பிரார்த்தனையினால் ஆசீர்வதிப்போம்.

இலங்கை தேசம் ஆசீர்வதிக்கப்பட போகிறது. மகிமை அடைய போகிறது. கர்த்தர் தீர்ப்பை வழங்குவார்.

**வணக்கத்திற்குரிய ரோய் ஐசக்**
**Bless Srilanka**




















# படித்ததும் பகர்வதும் 92



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### துயரம் களைவோம்!

இன்றைய சோதனைமிக்க காலகட்டத்தில் வறியவர்கள் மட்டுமன்றி மத்திய தரத்தவர்களும், மற்றும் பலரும் அன்றாட வாழ்க்கையை கொண்டு நடாத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு கஸ்டம், துன்பம், துயரங்களினால் அல்லல்படும் மக்களுக்கு உதவுவது, வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் மீதுள்ள பாரிய பொறுப்பாகும்.

நாளாந்த செலவுகளுக்கு ஏற்ற வகையில் வரவு போதியதாக இல்லாமை, வருமானத்துக்கான வழிகளை எதிர்பாராத விதத்தில் இழந்துள்ளமை, அன்றாட தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்ல முடியாமை, தினக்கூலிக்கான வேலைகளை பெற்றுக்கொள்ள இயலாமை போன்ற பல்வேறு காரணங்கள் இன்றைய நிலையில் எண்ணற்றோரின் வாழ்வை மிகப்பெரிய அளவில் பாதிப்படைய செய்துள்ளது.

இந்த சூழலில் மற்றவர்களின் தயவை நாடி உதவிகள் கேட்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்பவர்கள் மிகச்சிலரே. அதே வேளை, தமது துன்பங்களையும் துயரங்களையும் பிறருக்கு வெளிக்காட்ட முடியாதவர்களும், மற்றவர்கள் அதனை தெரிந்து கொள்ளக் கூடாது என விரும்புபவர்களும், எத்தகைய சூழ்நிலையிலும் பிறர் தயவை நாடக்கூடாது என்று இருப்பவர்களும் அநேகம் பேர். இத்தகையவர்களை தேடிப்பிடித்து, அறிந்து, தெரிந்து, புரிந்து அவர்களின் தேவைகளை இயன்ற அளவில் பூர்த்தி செய்வது வசதி படைத்தோர்கள் மீதுள்ள தார்மீகக் கடமையாகும்.



இறைவன் ஒரு சிலருக்குத்தான் பிறருக்கு துணை செய்யவும், நன்கொடைகள் வழங்கிடவும், உதவிகள் புரிந்திடவும் இயலுமான சக்தியை,'செல்வத்தை, வசதி வாய்ப்புகளை வழங்கியுள்ளான் என்று சிலர் கூறலாம். ஆனால் தேவையுள்ளோருக்கு துணை செய்யும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் இருக்கவே செய்கிறது. ஆனால் அதற்கான மனப்பான்மையே முக்கியமாகத் தேவைபடுகிறது.

எனவே, 'வசதி படைத்தோர்' என்ற பிரிவில் வராத ஏனையவர்களும் தமது சக்திக்கும், வசதிக்கும் ஏற்ற வகையில் சிறிய அளவிலேனும் பணத்தாலோ, பொருட்களாலோ, செயலாலோ உதவிகள் செய்து பிறரின் துன்பத்தை குறைப்பதற்கு மனமுவந்து முன்வர வேண்டும். துன்பத்தால் துயரத்தில் துவள்வோருக்கு துணை நிற்பது மிகப்பெரிய மனித தர்மமாகும்.

## நெஞ்சுக்கு நீதி

**பசிக்கு உணவின்றி பரிதவிப்போர் துயர் கண்டு**
**பரிவோடு உதவிடுவோம் பாசத்தின் பணிவோடு**
**கசிந்துருகி வழங்கிடும் தானத்தின் துணையோடு**
**பசி நீங்கி மகிழ்வாரே உள்ளத்தில் நிறைவோடு!**

## புது வரவு

### அருள்களின் மாதம் ரமழான்

முஸ்லிம்களின் நோன்பு மாதமான ரமழான் மாதத்தை எவ்வாறு முறையாக பயன்படுத்த வேண்டும்? அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகள் எவை? போன்ற பயனுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக "அருள்களின் மாதம் ரமழான்" எனும் சிறிய நூல் காலத்துக்கு பொருத்தமானதாக இந்த நோன்பு மாதத்தில் வெளியாகியுள்ளது. 'ரமழான் மாதத்தின் செயற்பாடுகளை சரியாக புரிந்து கொண்டு அவற்றின் பயன்களை வினைத்திறனாக பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதே இந்நூல் வெளியிடப்படுவதன் நோக்கம் என்றுபதிப்பாசிரியர் குழு தெரிவித்துள்ளது.




ரமழான் பற்றி அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பவற்றின் அடிப்படையில் விளக்கும் இச்சிறுநூல் நடைமுறையில் இம்மாதத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. உதாரணத்துக்கு இரண்டு வழிகாட்டல்கள் இங்கே:

- நோன்பு எம்மில் எத்தகைய பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பது பற்றி குடும்ப உறுப்பினர்களுடன் நண்பர்களுடன் கலந்துரையாடி குறிப்புப் புத்தகத்தில் அவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- ரமழானிய பயிற்சியோடு எமது நா, கண், காது, கை, கால் முதலான உறுப்புக்களை கட்டுப்பாட்டில் வைத்து புலனடக்கத்தோடு வாழ்வதற்கான நடைமுறைச் சாத்தியமான கையேடு ஒன்றை நீங்களே தயாரித்துக் கொள்ளுங்கள். அவயவங்களால் ஏற்படக்கூடிய பாவங்கள் பற்றி ஆழமாகச் சிந்தனை செய்யுங்கள்.

ஒவ்வொரு முஸ்லிமும் இந்நூலை வாசிப்பதன் மூலம் ரமழான் மாதத்தின் பயன்களை உச்ச அளவில் பெற்றுக்கொள்ள முடியுமானதாக இருக்கும்.

நூல்: **அருள்களின் மாதம் ரமழான்,** முதற் பதிப்பு: **ஏப்ரல் 2022**, பக்கங்கள்: **35 + iii**, விலை: **ரூபா.100/=**, வெளியீடு: **தாருள் ஈமான் ட்ரஸ்ட்**, தொடர்புகளுக்கு: **0115925935**

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### பணமே ! உனக்கு இத்தனை பெயர்களா?



அர்ச்சகருக்கு கொடுத்தால் தட்சணை
கோயில் உண்டியலில் செலுத்தினால் காணிக்கை
யாசிப்பவருக்குக் கொடுத்தால் பிச்சை
கல்விக் கூடங்களிலோ கட்டணம்
திருமணத்தில்
வரதட்சணை
திருமண விலக்கில்
தாபரிப்பு
விபத்துகளில் இறந்தால்
நஷ்டஈடு
ஏழைகள் கேட்டுக்
கொடுத்தால், தருமம்
நாமாக விரும்பி ஏழைகளுக்கு கொடுத்தால் தானம்
திருமண வீடுகளில் பரிசானால் மொய்
திருப்பித்தர வேண்டும் என யாருக்காவது கொடுத்தால், கடன்
திருப்பிதர வேண்டாம் என இலவசமாகக் கொடுத்தால்
அன்பளிப்பு
விரும்பிக் கொடுத்தால் நன்கொடை
நீதி மன்றத்தில் செலுத்தினால் அபராதம்
அரசுக்குச் செலுத்தினால் வரி
பொது, தர்ம ஸ்பானங்களுக்கு கொடுத்தால் நிதி
செய்த வேலைக்கு, மாதந்தோறும் கிடைப்பது சம்பளம்
செய்யும் வேலைக்கு, தினமும் கிடைப்பது கூலி
பணி ஓய்வு பெற்றால் கிடைப்பது ஓய்வூதியம்
சட்டத்திற்கு விரோதமான கையூட்டு இலஞ்சம்
கடன் வாங்கினால் அத்தொகை அசல்
வாங்கிய கடனுக்குக் கொடுப்பது வட்டி
வர்த்தகம் தொடங்க போடுவது முதல்
வர்த்தகத்தில் கிடைக்கும் வருமானம் இலாபம்
குருவிற்குக் கொடுக்கும்போது குருதட்சணை

**இவ்வாறு பல்வேறு பெயர்களில் உலா வருகிறது, கைக்கு கைமாறும் இந்த பணம்!**

## பாடிப்பறந்த பறவை 07

### உயன்வத்த றம்ஜானின் 'ப்ரிய நிலா'

1980களின் இறுதிப் பகுதியில் ஆரம்பித்து வெளிவந்த காலாண்டு கலை, இலக்கிய இதழ் தான் 'ப்ரிய நிலா'. காலஞ்சென்ற உயன்வத்த றம்ஜான் ஆசிரியராக இருந்து, அவரே அனைத்து விடயங்களையும் கவனித்து, பதிப்பித்து வெளியிட்ட சஞ்சிகை 'ப்ரிய நிலா' பல ஆண்டுகள் வெளிவந்தது தமிழ் எழுத்தாளர்களிடையே நல்ல அபிமானத்தை பெற்றது.




பெரும்பாலும் இலங்கையின் பிரபல எழுத்தாளர்கள் எல்லோருமே 'ப்ரிய நிலா'வில் பங்களிப்பு செய்துள்ளனர். திக்வல்லை கமால், மேமன் கவி, அந்தனிஜீவா, நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், கலைவாதி கலீல், ஹிதாயா எம். ரிஸ்வி, பதியதளாவ கே.எம். பாறுக், ராதா கிருஷ்ணமூர்த்தி, மேமன்கவி போன்ற பலரின் ஆக்கங்கள் ப்ரிய நிலாவின் இதழ்களை அலங்கரித்துள்ளன. பெரும்பாலும் ஒவ்வொரு இதழிலும் பிரபல எழுத்தாளர்கள், கலைஞர்கள், புரவலர்கள், அரசியல் தலைவர்கள் என பலதரப்பட்டவர்களின் புகைப்படங்கள் ப்ரிய நிலாவின் அட்டையில் இடம்பிடித்துள்ளன.

ஆண்டு மலர்கள் உட்பட முக்கிய விசேட விடயங்களுக்கான சிறப்பிதழ்கள் என்பனவும் வெளிவந்துள்ளன. உயன்வத்த றம்ஜானின் தனி முயற்சியில் வெளிவந்த 'ப்ரிய நிலா' அவரது மறைவோடு நின்றுவிட்டமை கவலைக்குரியது. எனினும் இலங்கையின் தமிழ் இதழ்களின் வரலாற்றில் 'ப்ரிய நிலா' தனக்கென தனியானதொரு இடத்தை பிடித்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

## நொறுக்குத் தீனி

இன்றைய நெருக்கடியான நிலைமையில் கொஞ்சம் ஆசுவாசிப்படுத்திக்கொள்ள **'மொழி வாணன் '** தரும் மாத்தி யோசி! அதையே சுவாசி!!

- தொண்டையில்ஏதாவது அடைத்துக் கொண்டால் தண்ணீரைக் குடிப்போம்;
  தண்ணீரே அடைத்துக்கொண்டால் எதைக் குடிப்பதாம்..!
- இனிமையான பொருளுக்கு உதாரணம் காட்ட வேண்டுமென்றால் தேனைக்காட்டுவோம்;
  தேனுக்கு உதாரணம் காட்ட வேண்டுமானல் எதைக் காட்டுவதாம்!
- அழகிய பெண்களைக் கண்டால் "தேவதையைப் போல் இருக்கிறாள்" என்று சொல்வோம்;
  தேவதையையே கண்டால் யாரைப் போல் இருக்கிறாள் என்று சொல்வதாம்!

## பொன் மொழி அது பொய்யா மொழி

### பா.விஜய் தரும் தன்னம்பிக்கை சிந்தனைகள் சில

புறப்படு உன் புத்துணர்ச்சியோடு, நடந்திடு உன் நம்பிக்கையோடு
கைப்பையை வீட்டில் மறந்துவிட்டுப் போனாலும் பரவாயில்லை
நம்பிக்கையை வீட்டிலே வைத்து விட்டுப் போகாதே
நம்பிக்கையை நம்புபவனே! நம்பிக்கை என்பது ஏழாவது அறிவு
நம்பிக்கை என்பது அதிகபட்ச துணிவு
நம்பிக்கை இருப்பவனால் தண்ணீருக்குள்ளும் சுவாசிக்க முடியும்
நம்பிக்கை அற்றவனுக்கு வெளியிலேயே மூச்சுத்திணறும்
நம்பிக்கை என்பது நமக்கு நாமே குடிக்கும் தாய்ப்பால் அதைத் துப்பி விடாதே
நம்பிக்கை என்பது நமக்கு நாமே செய்யும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம். மறுதலிக்காதே!
ஒருவனுடைய புகழின் அளவு என்பது அவன் இதயத்தில் உள்ள நம்பிக்கையின் அளவைப் பொறுத்தே ஏறும் குறையும்

ஒவ்வொரு விடியலையும் நம்பிக்கையோடு எதிர்கொள்
ஒவ்வொரு இரவிலும் நம்பிக்கையோடு உறங்கப்போ

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

# திருவள்ளுவருக்குச் சமனாக புகழப்படும் பரிமேலழகர்



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



**கே. பத்மானந்தன்** 04

**திருக்குறளுக்குப் பல உரைகள் காலத்துக்குக் காலம் தோன்றியுள்ளதால் அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கின்ற வாய்ப்பு வாசிப்பவர்களுக்கு ஏற்படுகின்றது. பல்வேறு உரைகளை ஒப்பிட்டு நோக்கும்போது பல்வேறு மாறுபட்ட கருத்துகள் வெளிப்படுகின்றன. நூலின்அமைப்பு, உரையாசிரியர்களின் நோக்கு, ஒவ்வொரு பாலிலும் அமைந்துள்ள இயல்கள், ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள குறள்களின் அமைப்பு, ஒரே குறளுக்கு வழங்கப்படும் பல்வேறுகருத்துக்கள் விளக்கங்கள், ஒரே சொல்லுக்கு வழங்கப்படும் வேறுவேறு பொருள்கள் ஆகியவற்றைத் தெளிவாக அறியமுடிகின்றது என்பது பெரியோர்களின் கருத்து.**

ஒவ்வொரு பாலிலும் அமைந்துள்ள இயல் பற்றிய ஆராய்ச்சி மிகவும்சுவையானது என்பது அறிஞர்களின் கருத்து. இயல் பிரிப்பை படிப்பதன் மூலம்தான் உரையாசிரியர்கள் திருக்குறளை நோக்கிய நோக்கங்களை அறிந்துகொள்ள முடியும் என்பது இவர்களின் கருத்து. திருக்குறளில் இயல்கள் அமைந்துள்ள விதத்தை திருவள்ளுவமாலையில் இருந்து அறியலாம்.

திருவள்ளுவ மாலையில் உள்ள,

"பாயிரம் நான்கு இல்லறம் இருபான் பன்மூன்றே
தூய துறவறம் ஒன்று ஊழாக ஆய
அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து" (திருவள்25)

என்ற வெண்பா அறத்துப்பாலில் உள்ள இயல்களைக் கணக்கிட்டுக் கூறுகிறது. அதேபோன்று

"அரசியல் ஐயைந்து; அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரண்இரண்டு; ஒன்று ஒண்கூழ்; இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை" (திருவள்26)



என்ற வெண்பா, பொருட்பாலில் உள்ள இயலக்ளைக் கணக்கிட்டுக் காட்டுகின்றது. அதேபோன்று

"ஆண்பால்ஏழ்; ஆறிரண்டு பெண்பால்; அடுத்தன்பு
பூண்பால் இருபால் ஓர்ஆறாக மாண்பாய
காமத்துப் பக்கம்ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு" (திருவள்27)

என்ற வெண்பா காமத்துப்பாலில் உள்ள இயல்களை எடுத்துகாட்டுகின்றது .

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஒன்பது உரையாசிரியர்களுக்கும் காலத்தால் பிற்பட்ட பரிமேலழகர் எழுதிய உரையே திருக்குறளுக்கு முன்னர் எழுதப்பட்ட உரைகளுள் சிறந்தது என்பது அறிஞர்களின் முடிவு. பரிமேலழகர் காலத்தால் பிந்தியவர் என்பதை

"செவ்வி முப்பாலுக்கு
ஓர்உரை யின்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக நையுறு காலை
குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு
விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தனன்
பரிமேலழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமேல் உதித்த தலைமை யோனே" என்று

உரைப்பாயிரமும் உறுதி செய்கிறது.

திருக்குறளுக்குப் பத்தாவது உரையாகத் தோன்றிய பரிமேலழகர் உரை மற்ற உரைகளைவிடச் செல்வாக்குப் பெற்றுப் பரவியது. ஏனைய உரைகளுக்குஇல்லாத பெருமை அதற்கு ஏற்பட்டது என்பது பல்வேறு பழம்பாடல்களின் மூலம் அறியக்கிடக்கின்றது.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ நூலில்
பரித்தவுரை எல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி"

"வள்ளுவன் மீளவும் வந்துஉதித்து உலகோர்க்கு
உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன ...
விழுப்பொருள் தோன்ற விரித்துஇனிது உரைத்தான் ...
பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமேல் உதித்த தலைமை யோனே"

"திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தம்
கருத்தமைதி தானே கருதி விரித்துரைத்தான்
பன்னு தமிழ்சேர் பரிமே லழகன் எனும்
மன்னு முயர்நாமன் வந்து"

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கும் நூலெல்லாம் உள்ளதெனச் செய்வித்தான்
தத்துவம்எல் லாம்உடம்பில் தந்துணர்வார் போல்உலகம்
ஒத்தபரி மேலழகன் ஓர்ந்து."

என்று பல பாடல்களால் பரிமேலழகரைப் புலவர்கள் சிறப்பித்தனர்.

இவர்களுக்கெல்லாம் ஒரு படி மேலே போய் உமாபதி சிவாச்சாரியார்

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை – ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்" என்று

போற்றுகின்றார்.

"வள்ளுவன் மீளவும் வந்துஉதித்து உலகோர்க்கு
உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன
எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்து வேதாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு
இதுவே உரைஎன்று யாவரும் வியப்பப்
பொழிப்பு அகலத்தொடு நுட்ப எச்சம்
விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தனன்" என்று

உரைப்பாயிரம் திருவள்ளுவருக்குச் சமனாக பரிமேலழகரைப் புகழ்கின்றது

**(தொடரும் )**

**காரைக்கவி கந்தையா பத்மானந்தன்**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 226 அலுவலக உபகரணங்கள் விற்பனைக்கு

ஒரு வங்கிக்கு சொந்தமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் இருப்பு, 20KVA ஜெனரேட்டர் உட்பட (மிகவும் நல்ல நிலையில் உள்ளது) காத்தான்குடி டவுனில் விற்பனைக்கு உள்ளது. ஆய்வுக்கு 0766622833 என்ற எண்ணிற்கு அழைக்கவும். 026788

பயன்படுத்திய தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொழும்பில் (மருதானை) வங்கிக்கு சொந்தமானது விற்பனைக்கு உள்ளது. மேலதிக ஆய்வுக்கு 0766622833 என்ற எண்ணிற்கு அழைக்கவும். 026787



## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

விற்பனையாளர்/ வரவேற்பாளர் (பெண்கள்) வெள்ளவத்தையில் அமைந்துள்ள பிரபல்யமான சல்வார் காட்சியறைக்கு விற்பனைத்துறையில் முன்னனுபவமுள்ள Sales Girls உடனடியாக தொடர்புகொள்ளவும். தங்குமிடம் வழங்கப்படும் திறமையின் அடிப்படையில் சம்பளம் பெறலாம். 011 5945994, 011 2367778 027038

விற்பனை முகவர்கள் தேவை! நெஸ்கோ என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வயது 18 50 அனுபவமுள்ள அல்லது பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். அடிப்படைச் சம்பளத்துடன் ரூபா 50,000/ இற்கு மேல் கவர்ச்சிகரமான சம்பளம். உடன் அழைக்கவும். 0777263954, 076 7639155. முகவரி 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 026227

வெள்ளவத்தையில் அமைந்துள்ள பிரபல்யமான குர்த்தி shopக்கு விற்பனைத்துறையில் அனுபவமுள்ள Sales Girls தொடர்புகொள்ளவும். தங்குமிடம் வழங்கப்படும். திறமைக்கேற்ப சம்பளம். 0115945994, 0773686162 027039

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

டின்கர் பெயின்டர்மார் தேவை. அனைத்து வசதிகளும் உண்டு. நுகேகொடை 0777252876 027021

மோட்டார் சைக்கிள் தொழில்நுட்ப கையுதவியாள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும். A.K. மோட்டர்ஸ், மீகொட. 077144448 9, 075055558 9. 027285

### 316 வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

Juki Machine Operators/ Trainees/ Helpers வத்தளையில் அமைந்திருக்கும் ஏற்றுமதி தரத்தில் துணி உற்பத்தி செய்யப்படும் கம்பனிக்கு துவாய் மற்றும் பெட்ஷீட் தைப்பதற்கு அனுபவமுள்ள தையல் இயந்திர இயக்குநர்கள் (Juki Machine Trainee Operators) மற்றும் ஆண் பெண் உதவியாளர்கள் (Helpers) தேவை. (Sub Contract கொடுக்கப்படமாட்டாது.) ஒரு நாள் சம்பளம் ரூ. 1,200/, (மாதாந்த சம்பளம்) தங்குமிட வசதி, குறைந்த விலைக்கு மூன்று நேர ஆகாரம். இல. 18, வெளி அமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 0766200300 027474

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

நெஸ்கோ என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு கனரக வாகன சாரதியர் தேவை. சம்பளம் ரூபா 45,000/ இற்கு மேல் இரத்மலான, களுத்துறை, நீர்கொழும்பு பிரதேச சாரதியர்களிற்கு முன்னுரிமை முகவரி. இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. அழைக்கவும். 0777263954, 0767639155 026229

வயோதிப தாயாரை பார்த்துக் கொள்வதற்கு அன்பான பெண் தேவை. தங்கியிருத்தல் வேண்டும் சம்பளம் ரூ. 30,000/ தொ. பே. இல. 071 4439791. 026785

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

சமையற்காரர் தேவை. பொல்கொடவிலுள்ள சுற்றுலா/ தனியார் பங்களா விற்கு அனுபவமுள்ள சமையற்காரர் ஒருவர் தேவை. (Full or Part Time) அனைத்து விபரங்களுடன் கூடிய விண்ணப்பங்களை தபாலில் அல்லது நேரில் ஒப்படைக்கலாம். இலக்கம் 7, கட்டுகுருந்துவத்த, வீதி, இரத்மலானை. தொ. பே. இலக்கம் 0112622402/ 3 027124

தனி ஆண் ஒருவருக்கு உணவு சமைப்பதற்கு 45 இற்கு மேற்பட்ட பெண்ணொருவர் தேவை. தேசிய அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்கவும். கிரில்லவல 0789235043 027121

தெஹிவளையிலுள்ள வீடொன்றுக்கு சிறு குழந்தையைப் பராமரிப்பதற்காக 2035 வயதுடைய பெண் ஒருவரைத் தேடுகின்றோம். இப்போது அழைக்கவும். 0776130055/ 0777787677 026640

பிலியந்தலை வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. 45 வயதிற்கு குறைந்தவர்கள் அழையுங்கள். 071 5701020. 027190

பிலியந்தலையிலுள்ள எமது வீட்டில் தங்கிப் பணியாற்றுவதற்கு 1845 வயது நம்பிக்கையுள்ள தமிழ்ப் பெண்ணொருவர் தேவை. சம்பளம் 45, 000/ குடும்ப அங்கத்தவர் போன்று கவனிக்கப்படுவார். 0740900685 027097

வீட்டு வேலைக்கு வயது 4050க்கு இடைப்பட்ட பணிப் பெண் தேவை. வயதான பெண்மணியை பராமரித்தல் வீட்டு வேலைகளில் உதவுதல் வேண்டும். ரூபா. 40000.00 சம்பளம் வழங்கப்படும் கலந்தாலோசித்துக் கொள்ளலாம். Tel: 077 1927042. 027344

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

Mr.Barger உணவகத்தில் kitchen மற்றும் Restaurant இல் பணிபுரிய வேலையாட்கள் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதி உண்டு. உடனே தொடர்பு கொள்ளவும். 077 1232227. 027359

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கம்பஹா பண்ணைக்கு (இறைச்சி வேலை அல்லாத) கையுதவியாட்கள் (சம்பளம் 35, 000/) தேவை. இலவச தங்குமிடம். 077 1077077. 027258

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

மீமெக்ஸ் தனியார் நிறுவனத்திற்கு மிக அவசரமாக தொழிலாளர்கள் தேவை. தொடர்பு 077 9980257. 026565

### 325 தொழில்துறை பொது

தொழிற்சாலை வெற்றிடங்கள் ஹங்வெல்ல நிரந்தர சேவைக்கு நாளாந்தம் ஊழியர் ரூ. 1500 பெண் ஊழியர் ரூ. 1100 (வார முற்பணம், தங்குமிடம் இலவசம் + உணவு கொடுப்பனவு) வயது 60 இற்குக் கீழ். 077 3077813, 0722 273273. 026708



பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்/ அலுவலக சுத்திகரிப்பாளர்கள் தேவை. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்/ பெண் இருவரும் தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதி இலவசம். சாதாரண விலையில் சாப்பாடு ஒழுங்கு செய்து தரப்படும். சித்தமுல்லை, அநுராதபுரம், கலகெதர, வஸ்கமுவ, வடரெக்க, வெலிவிட, பாணந்துரை, காலி, மொரட்டுவ, போகுந்தர, இரத்தினபுரி, பம்பலப்பிட்டி, ஹல்பிட, மீகொட, இரத்மலானை, நுவரெலிய, வெல்லவாய, சியம்பலாண்டுவ, பிலியந்தலை, ஹங்வெல்ல, கண்டி, கம்பொல, களுத்துறை வடக்கு, உலபனை மற்றும் இலங்கை முழுவதும் மதுகம, தலவத்துகொட V/O - கொழும்பு/ பொலன்னறுவை மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் மற்றும் OIC/ SSO/ SO / LSO வெற்றிடங்களும் உண்டு. 075 3828200 / 076 8228200 027196

077 9975547, 071 865 3 778 நட்சத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடன் சேர்த்துக் கொள்ளப்படுவர். உணவு இலவசம் (12 மணி நேரம்) இற்கு 1750/ 1450/ கொழும்பு 071 865378 0 அலுவலகம் 0763155331, 07066 55331 027281



07186 53781 பாதுகாப்பு வெற்றிடங்கள், பாணந்துறை, இரத்மலானை, பிலியந்தலை, பெப்பிலியான, பொரலஸ்கமுவ, கொஹுவல நுகேகொட, கல்கிசை, தெஹிவளை, மொறட்டுவ, கொழும்பு, ஹொரண, கோண பொல, கோவின்ன, தொம்பே, ரனால, கடுவளை, ராஜகிரிய, பேலியகொட, கட்டுநாயக்க, வத்தளை, ஒருகொடவத்த, எலகந்த, கடவத்த, தேவாலேகம, வென்வெல்ல, அம்பேபுஸ்ஸ, உலலிதுவாவ, தரணியகல, தெஹிவிட்ட, பாணந்துறை 0704545051. மொறட்டுவ 07 1 8 379981 கொழும்பு 071 8653780, ஹொரண 07 0 2513 418 தொம்பே 07 1 2125238 வத்தளை 071865 3 779 027283

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

தேக்கு பலகை பொடி விற்பனைக்கு. விலைகள் பேசித் தீர்க்கலாம். தொடர்பு 0763688709 026601

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

தெஹிவளை நகரில் பெயார்லைன் வீதியில் இணைந்த குளியலறையுடன் தனி அறை வாடகைக்கு. 12000/ தொடர்பு 0777 348764. 027193

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

8.5 பேர்ச் காணி விற்பனைக்கு. கல்கிசை காலி வீதி உடன் விற்பனை ஒரு பேர்ச் 35 இலட்சம் விலை பேசித்தீர்க்கலாம். தொ.பே. 0760211886, 0770765290 027235

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

ஹோமாகம பிரதான பஸ் நிலையத்திற்கு அரிகில் 1 அறையுடன் வீடு ரூ. 18, 000/. 077 8009927 027280

24/18/1/1 வெள்ளவத்தை மெனிங் பிளேஸ் 2 படுக்கையறைகளுடன் வீடு வாடகைக்கு தொ.பே 076 1263828 027239

### 642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

2 படுக்கையறை வீடு வாடகைக்கு அல்விஸ் டவுன் ஹெந்தளை, வத்தளை, 35, 000 மாதாந்த வாடகை தொ.பே. 076 8155695 026809

வாரமஞ்சரி திருமண சேவைகள்


## மணமகள்

பிறந்த தினம் 1978, சகோதரிக்கு துணைவரை சகோதரன் தேடுகிறார். கூட்டுறவு துறையில் தொழில் செய்பவர் சீதனம் உண்டு. பிற மதத்தவர்களும் பரவாயில்லை. சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் பதில் எழுதுங்கள். ('அர்தகால சர்பயோகி' இராசி உடையவர் (உயரம் 5' 2") B179274

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845










தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

# வாரபலன்



**24.04.2022 - 30.04.2022**

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ராசியில் சுக்கிரனோடு குரு இணைந்து சஞ்சரிக்கிறார்.மீனம் சுக்கிரனுக்கு உச்சவீடு அசுர குரு உச்சம் பெற்று, தேவ குருவின் சொந்த வீட்டில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது நிறைய மாற்றங்கள் ஏற்படும். தன ஸ்தானாதிபதியான சுக்கிரன் உச்சம் பெறுவதால் தனவரவு தாராளமாக வந்து சேரும் நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். விரய ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் விரயங்கள் ஏற்பட்டாலும் அவை சுப விரயங்களாகவே இருக்கும்.

## ரிஷபம்

மீன ராசியில் சுக்கிரனோடு குரு இணைந்து சஞ்சரிக்கிறார். அசுர குரு, தேவ குரு சேர்க்கை ஏற்படுவதால் எதிர்பாராத விதத்தில் ஏராளமான நற்பலன்கள் கிடைக்கும். மீனராசி, சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். எனவே ஆரோக்கியம் சீராகும் தங்கம், வெள்ளி சேர்க்கை உண்டு உத்தியோகத்தில் நல்ல பொறுப்புகளும் கிடைக்கும் நேரம் இது.

## மிதுனம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். மீன ராசி சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறுவது நன்மைதான். அதிலும் அவர் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி என்பதால் அசையா சொத்துக்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்பிற்கான அழைப்பு வரும். வரன்கள் வாசல் தேடி வரலாம்.

## கடகம்

மீன ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். 4 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறுவதோடு, பகைக் கிரகமான குருவுடன் இணைந்திருப்பதால் திடீர் திடீரென மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். தேவையற்ற மனப் பயம் உருவாகும். உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் உபத்திரவம் ஏற்படும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. இரண்டு முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை பாக்கிய ஸ்தானத்தில் இருப்பதால் எந்த செயலும் பெரிய போராட்டத்திற்கு பின்னரே முடிவுக்கு வரும்.

## சிம்மம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். மீன ராசி சுக்கிரனுக்கு உச்சவீடு. அசுர குரு உச்சம் பெற்று குருவின் சொந்த வீட்டில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது நல்ல திருப்பங்கள் வந்து சேரும் தடைப்பட்டு வந்த காரியங்கள் நடைபெறும். மிதமிஞ்சிய பொருளாதாரம் கிடைக்கப்போகிறது.

## கன்னி

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அசுர குரு உச்சம் பெற்று சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான பலன்கள் கிடைக்கும். குறிப்பாக உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு உண்டு. குருவின் நேரடிப் பார்வை ராசியில் பதிவதால் மனக்கசப்பு மாறும்.

## துலாம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார்.மீன ராசி சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் ராசிநாதன் உச்சம் பெற்று 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது மறைமுக எதிர்ப்புகள் விலகும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். ஆபரண சேர்க்கை உண்டு வெளிநாட்டில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். ஆரோக்கியம் சீராகும் உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

## விருச்சிகம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அசுர குருவான சுக்கிரன் உச்சம் பெற்று தேவகுருவின் சொந்த வீட்டில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திடீர் தனவரவு உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சந்தர்ப்பங்கள் அனைத்தும் சாதகமாக அமையும்.

## தனுசு

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். மீன ராசி சுக்கிரனுக்கு உச்சவீடு. அசுர குரு உச்சம் பெற்று தேவ குருவின் சொந்த வீட்டில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது எதிர்ப்புகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களை திடீரென மாற்றியமைக்க நேரிடும். திடீர் விரயம் வந்து சேரலாம். தேவ குருவோடு சுக்கிரன் இணைந்திருப்பதால் மலைபோல் வந்த துயரம் பனிபோல் விலகும். உறவுகளுடனான மனக்கசப்பு மறையும்.

## மகரம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அசுர குரு உச்சம் பெற்று விரய குருவின் சொந்த வீட்டில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது தொழில் முயற்சி வெற்றியாகும். பொருளாதாரம் உயரும். புத்திக்கூர்மையுடன் செயல்பட்டு வெற்றி படியில் ஏறுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகளும் சம்பள உயர்வும் உண்டு. பிள்ளைகளின் மேற்படிப்பு, வேலைக்கான ஏதேனும் புது முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும்.

## கும்பம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார்.அசுர குரு உச்சம் பெற்ற தேவ குருவின் சொந்த வீட்டில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது சில நல்ல மாற்றங்கள் நடைபெறலாம். அதேநேரம் பகைக் கிரகங்களின் சேர்க்கையால் பணவரவு தடைப்படும். குடும்பப் பிரச்சினை நீடிக்கும். தொழிலில் கவனம் செலுத்த இயலாது. வரன்கள் கை நழுவிச்செல்லலாம். பணிபுரியும் இடத்தில் பதற்றம் அதிகரிக்கும்.

## மீனம்

மீன ராசியில் சுக்கிரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார்.மீன ராசி சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் ராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அதிலும் உங்கள் ராசியில் உள்ள குருவோடு அவர் இணைவதால் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றுமாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லை தலைதூக்கும். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் பற்றி சிந்திக்க உகந்த நேரம் இது.

# லண்டனில் சாரல்நாடனின் நூல் வெளியீடு

சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' என்ற நாவல் வெளியீடு லண்டனில் சென்ற சனிக்கிழமை (16.4.22) விம்பத்தின் ஆதரவில் ஓவியர் கே.கிருஷ்ணராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விமர்சகர் மு.நித்தியானந்தனிடமிருந்து இந்நாவலின் சிறப்புப் பிரதியை நூலகம் வலைத்தளத்தின் நிறுவனர் இ.பத்மநாப ஐயர் பெற்றுக்கொண்டார்.

'கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப்பச்சை', மு.சிவலிங்கத்தின் 'பஞ்சம் பிழைக்க வந்த சீமை' ஆகிய சிறந்த மலையக நூல் வரிசையில் சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' நாவலும் வந்து சேர்கிறது. வீரகேசரியில் வெளிவந்த இத் தொடர் நாவலை நூலாக வெளியிடும் முயற்சியில் சாரல்நாடன் முன்னுரையினையையும் எழுதித் தயார்நிலையில் இருந்தபோது, அவர் சுகவீனமுற்று, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மறைந்தமை துரதிர்ஷ்டமானது. அவர் மறைந்து எட்டு ஆண்டுகளின் பின், அவரது நாவல் பிரதியைப் பேணி வைத்திருந்த திருமதி. புஷ்பா சாரல்நாடன் கொரோனா தொற்றினால் நாடு முடங்கிப்போன நிலையில், நிலைமைகள் சீராகி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியபின் லண்டனில் விம்பம் நடத்தும் முதல் விழாவில், சாரல்நாடனின் நாவல் வெளியிடப்பெறுவது மகிழ்ச்சியான நல்ல ஆரம்பமாகும்' என்று நாவல் வெளியீட்டினை நெறிப்படுத்திய மீனாள் நித்தியானந்தன் தெரிவித்தார்.

'தொழிற்சங்கத்தைக் கட்டிஎழுப்பும் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் உண்மைச் சம்பவத்தை வைத்து சாரல்நாடன் எழுதிய இந்நாவல் சமூக, வர்க்க, இன ரீதியில் ஒடுக்கப்பட்ட மலையக சமூகத்தின் போராட்ட வரலாற்றைப் பேசுகிறது.இலங்கையில் ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் கோரிக்கையை முதல்பட்சமாக எடுத்துக்கொள்ள வேண்டுமெனில் அது மலையக மக்களின் கோரிக்கையேயாகும்.



பாரதி சிவராஜா, மீனாள் நித்தியானந்தன்



கோகுலரூபன், மீனாள் நித்தியானந்தன்



நா.சபேசன்

இந்நாவலுக்கு மு.நித்தியானந்தன் எழுதியுள்ள முன்னுரை இந்நாவலுக்குள் நுழைவதற்கான சிறந்த ஆய்வுக் கையேடாகத் திகழ்கிறது.

நாற்பது பக்கங்கள் கொண்ட இந்த முன்னுரை இந்நூலின் கனதியைக் கூட்டியுள்ளது. ஒரு சிறந்த கலைப்படத்தைத் தயாரிப்பதற்கான சிறந்த கதையினை, சம்பவங்களை, போராட்ட நிகழ்வுகளைக் கொண்ட நாவலாக சித்திரிப்பதில் சாரல்நாடன் வெற்றி கண்டிருக்கிறார்' என்று இந்நாவல் பற்றிய விமர்சன உரையாற்றிய கோகுலரூபன் இந்த வெளியீட்டரங்கில் தெரிவித்தார்.




சாரல்நாடனின் நாவல் அறிமுகம்: மு.நித்தியானந்தன்

'வானம் சிவந்த நாட்கள்' ஒரு நாவல் என்பதனை விட நெடுங்கதை என்பதே பொருத்தமாக இருக்கும். மலையகத்தில் தொழிற்சங்கத்தின் உருவாக்கம் நடைபெற்ற காலத்தில் துரைத்தனத்தின் கொடுமையை எதிர்த்து போப் துரையின் கொலையில் முடிந்த ஒரு போராட்ட யுகத்தை சாரல்நாடன் இந்த நாவலில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

நாற்பதுகளில் மலையகத்தில் நடைபெற்ற போராட்டங்களின் போது பொலிசார் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக எவ்வாறு நடந்து கொண்டிருந்தனர் என்பதற்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் தோரதெனிய அளிக்கும் சாட்சியத்தை இந்நூல் துல்லியமாகப் பதிவு செய்திருக்கிறது. ஒரு படைப்பாளியின் மறைவிற்குப்பின் அவரது ஆக்கங்களை கவனமாகப் பேணிப் பாதுகாக்காமையால் பல படைப்புகளை நாம் இழந்திருக்கிறோம். மஹாகவியின் மறைவிற்குப்பின் அவரது துணைவியார் பத்மாசினி கணவரின் அனைத்து எழுத்துகளையும் பேணிப் பாதுகாத்தமை பாராட்டவேண்டிய செயற்பாடாகும். அதே போன்று புஷ்பா சாரல்நாடனும் தனது கணவரின் எழுத்துகளைப் பாதுகாத்து நூலாகும் முயற்சியில் ஈடுபாடுகாட்டியதற்கும், அவருக்குக் கைகொடுத்து உதவி இந்நூலைப் பதிப்பித்த விக்ரமசிங்கவின் அயராத செயற்பாட்டிற்கும் இலக்கிய உலகம் நன்றிகூறுகிறது' என்று 'பனிமலர்' ஆசிரியர் நா.சபேசன் தனது உரையில் குறிப்பிட்டார்.

'மலையகத்தின் தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றை மிகக்கச்சிதமாக, அலுப்புத் தட்டாமல், இலகுவான மொழியில் நாவலாக வடிப்பதில் சாரல்நாடன் வெற்றி கண்டிருக்கிறார். தொழிற்சங்கத் தலைமையை ஹிட்லரின் தலைமையோடு ஒப்பிட்டும், துரைமார்களின் அட்டூழியங்களை நியாயப்படுத்தி அதிகார வர்க்கம் பொய்ப்பிரசாரம் நடத்திய வேளையில், தொழிலாளர் வர்க்கம் அந்த அடக்குமுறையை எதிர்த்து மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் நியாயமானவையேயாகும்.

போப் துரை கொலை வழக்கின் தீர்ப்பு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. வீராசாமி, வேலாயுதம் ஆகிய போராளிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இரண்டு படுகொலைகளுக்குச் சமமானதாகும்.

இந்தப்போராளிகளின் போராட்ட ஆக்ரோஷத்தை ஓவியர் கே.கே.ராஜா மிக அற்புதமாக இந்நாவலின் முகப்பு ஓவியத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். வெறும் தொழிற்சங்கப் போராட்டம் என்ற எல்லைக்குள் இல்லாமல், அரசியல் மயப்படுத்தப்பட்ட போராட்டத்தையே தொழிலாளர் வர்க்கம் முன்னெடுக்க வேண்டும்' என்று பெண்ணியச் செயற்பாட்டாளர் பாரதி சிவராஜா தெரிவித்தார்.



மு.நித்தியானந்தன் சாரல்நாடனின் நாவலை இ.பத்மநாப ஐயரிடம் கையளிக்கிறார்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் "ஆராதனா மகோற்சவம்"

சாயி பக்தர்களுக்கு நம்பிக்கையும், பொறுமையும் கண்டிப்பாகத் தேவை. பக்தி திடமாகவும், மனமானது இடம் விட்டு இடம் தாவாதும் இருத்தல்வேண்டும். சத்யசாயியும் சீரடிசாயியும் ஒருவரே! என்ற கொள்கையை எப்போதும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சாயி அவதாரங்கள் சமாதிநிலையை அடைந்தாலும், அவர்கள் இன்றும் நம்மிடையே வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் அவர்களது இடைவெளியை நிரப்புவதற்கு யாரையும் அவர்கள் நியமிப்பதில்லை. இன்று இரண்டு சாயி அவதாரங்களும் ஒன்று சேர்ந்து, பல தெய்வீக அதிர்வுகளை, உலகமெங்கும் நடாத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

1975 மே மாதம் 25ம் திகதி சேவாதள மகாநாட்டில் பகவான் சத்ய சாயி பாபா பேசுகையில் ஒரு சிலர் தம்வழியே சுவாமி செயல்படுவதாகவோ, சுவாமியிடமிருந்து கட்டளைகள் கிடைப்பதாகவோ



கூறிக்கொண்டு சில வேடிக்கையான தந்திரங்களைச் செய்யும் போது, நமது சேவாதள தொண்டர்கள் அங்கு சென்று அவர்களை ஊக்குவிக்கிறார்கள். பகவானிடம் நேரடித் தொடர்பு இருக்கும் போது இத்தகைய டூப்ளிக்கேட் சுவாமிகளின் தேவை எங்குள்ளது என்றும், 1965 மார்ச் 25ம் திகதி தனது அருளுரையில், நான் இன்னொருவர் மூலம் பேசுவதில்லை, இன்னொருவர் உடலில் புகுவதில்லை, நான் பேச இன்னொருவரை ஊடகமாகப் பயன்படுத்துவதில்லை. நான் நேரில் நானாகவே வந்து உங்களுக்கு அமைதியும் ஆனந்தமும் தருவேன் என்றும் கூறினார்.

அன்பு நிறைந்த, தன்னலமற்ற சேவையை மனித சமுதாயத்துக்கு வழங்கும் ஒரே நோக்கத்துடன், பகவான் 1972இல் சத்ய சாயி மத்திய அறக்கட்டளையை நிறுவினார். நான் புட்டபர்த்தியிலேயே எப்போதும் இருப்பேன், எனது அவதார நோக்கத்தின் மையத்தலமாக இந்தப் புனிதபூமியையே கொள்வேன் என்பதாக அவர் தனது தெய்வீக அன்னையிடம் வாக்குகொடுத்திருந்தார். அதனால் தான் அவர் தனது மகா சமாதியையும் அங்கேயே தேர்ந்தெடுத்தார். இன்றும் அவரது வாக்கு. அந்த மகா சமாதியில் எதிரொலித்தபடியிருக்கிறது.

பகவானின் மகா சமாதி தினம் ஆராதனா மகோற்சவம் என்ற பெயரில், வருடாவருடம், புதுச்செட்டித்தெருவிலுள்ள சாயிநிலையத்தில், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலைய ஏற்பாட்டில் கொண்டாடப்படுகின்றது. ஏப்ரல் மாதம் 24ம் திகதி புதன்கிழமை, காலை 5 மணி தொடக்கம் மகா ரூத்ராயாகம், பகல் ஆராத்தியுடன் அன்னதானம் வழங்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இலங்கையில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் மகா ரூத்ராயாகத்தில், புட்டபர்த்தி மகா சமாதியில் வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட பாபாவின் பஞ்சலோக திருவுருவத்துக்கு, பக்தர்களினால் பரிபூரண அபிஷேகம் இடம்பெறும்.

**எஸ்.என். உதயநாயகம் ...**
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய
(கொழும்பு) நிலையம்

## கறுவா அறுவடையை பெறுதல் மற்றும் கொள்வனவு செய்தல்

### ஹபுகஸ்தென்ன/ உடபுசல்லாவ பெருந்தோட்டக் கம்பனி

ஹபுகஸ்தென்ன மற்றும் உடபுசல்லாவ பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு சொந்தமான இரத்தினபுரி, மொனராகல மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள தோட்டங்களில் தயாரிக்கப்பட்ட கறுவா மற்றும் பச்சை கறுவாவை பெறுவதற்காக கொள்வனவாளர்களைப் பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆர்வம் காட்டுவீர்களாயின் கீழ்க்காணும் விபரங்களுடனான விண்ணப்பத்தை மே 01ம் திகதிக்கு முன்னர் மின் அஞ்சல் மூலம் kosalakum@brownplantations.com அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| பெயர் | முகவரி | அடையாள அட்டை இலக்கம் | தொலைபேசி இலக்கம் | மின் அஞ்சல் | தயாரிக்கப் பட்ட கறுவா/ அறுவடையை பெறல் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**நிறைவேற்று பணிப்பாளர்**
**ஹபுகஸ்தென்ன/ உடபுசல்லாவ பெருந்தோட்டக் கம்பனி,**
**இல. 95/A, நம்பபான, இங்கிரிய.**

## தெங்கு அறுவடையை கொள்வனவு செய்தல்

### யடவத்த தோட்டம்
### உடபுசல்லாவ பெருந்தோட்டக் கம்பனி

யடவத்த தோட்டத்தின் மாதாந்தம் 75,000 தேங்காய்களுக்கு கிட்டிய அளவிலான தெங்கு அறுவடையை கொள்வனவு செய்வதற்காக கொள்வனவாளர்களை பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆர்வம் காட்டுவீர்களாயின், பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் Kosalakum@brownsplantations.com அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு மே மாதம் 01ம் திகதிக்கு முன்பு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நிறைவேற்று பணிப்பாளர்,**
**உடபுசல்லாவ பெருந்தோட்டக் கம்பனி**
**இல. 95A, நம்பபான,**
**இங்கிரிய.**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

Sri Lanka Savings Bank
இலங்கை சேமிப்பு வங்கி

## இலங்கை சேமிப்பு வங்கியின் காணிகள் மற்றும் ஆதனங்களின் ஏலவிற்பனை

## விலைமனுவிற்கான அழைப்பு

### Bid No. 2022/04/01

கீழே விபரிக்கப்பட்டவாறு காணிகள்/ ஆதனங்களின் ஏலவிற்பனைக்காக இலங்கை சேமிப்பு வங்கியின் அகற்றல் குழுத் தலைவர் 'முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை' இத்தால் கோருகின்றார். 2022.05.17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலமைந்துள்ள தலைமை அலுவலக தரைமாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது கண்டி,கொட்டுகொடல்ல வீதிய, 88 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் கிளையில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலுள்ள தலைமை அலுவலக கட்டிடத்தில் 2022.05.17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு விலைமனுக்கள் பகிரங்கமாக திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

**காணிகள் / ஆதனங்களின் விபரம்:**

| இல. | அமைவிடம் | ஆதனத்தின் பெயர் | விஸ்தீரணம் | விளக்கம் |
|---|---|---|---|---|
| 01. | 45B, கந்தேவத்த பாதை, நுகேகொட | கந்தேவத்த காணி | 7.1 பே. | வெற்றுக் காணி |
| 02. | 280/012A, ஸ்ரீ விக்ரம இராஜசிங்ஹ பாதை, குரண, நீர்கொழும்பு | குரண காணி | 38.7 பே. | வெற்றுக் காணி |
| 03. | விஸ்டரின் பாதை, நீர்கொழும்பு | ''பெலவத்த'', கம்புவ கிராமம் | 87.75 பே. | வெற்றுக் காணி |
| 04. | மடாகம வீதி, அம்பிட்டிய | ''ஹேனஹுங்கொட, லொட் இல. 1 | 60.89 பே. | வெற்றுக் காணி |
| 05. | தர்மராஜா மாவத்தை, கண்டி | ''த கண்டி இன்டஸ்ரியல் எஸ்டேட்'' இன் பிரித்தெடுப்பு - ''பட்டியகல எஸ்டேட்'' என முன்பு அழைக்கப்பட்டது. | 25.38 பே. | வெற்றுக் காணி |
| 06. | மட்டகொட்டுவ கிராமம், தோடுவாவ, மஹாவெவ | ''திலவிலவத்த'' லொட் ஏ | 37ஏ 3 ஆர் 4பே | இறால் குஞ்சு பொரிக்கும் நீர் தாங்கிகளுடனான தென்னங் காணி |

2022.04.25 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணமான 2000 ரூபாவிற்கான வங்கி பணவரவுத்துண்டை சமர்ப்பித்து, கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலுள்ள தலைமை அலுவலக நிருவாகத்திற்கான தலைவரிடமிருந்து விலைமனு படிவங்களையும் காணிகளின் ஆதனங்களை பார்வையிடுவதற்கான அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

2022.04.25 ஆம் திகதியிலிருந்து 2022.05.17 ஆம் திகதிக்குமிடையில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் காணிகளை பார்வையிடலாம். மேலதிக தகவலை 0701 819 219 என்ற இலகத்தினூடாக அறவீடுகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - அகற்றல் குழு,**
**இலங்கை சேமிப்பு வங்கி,**
**இல. 265, வோட் பிளேஸ், கொழும்பு-07.**

மருந்தாக்கல்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் - (ICB)

**கேள்வி இல: SPMC/02/2022 - 2022 ஜூன் 01ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

## மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2022 ஜூன் 01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | அளவு (KG) | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP (Compacted) | 9,000.00 | 20,000.00 |
| 2 | Ascorbic Acid BP | 6,000.00 | 4,000.00 |
| 3 | Atorvastatin Calcium IP | 500.00 | 5,000.00 |
| 4 | Benzhexol Hydrochloride BP | 100.00 | 1,000.00 |
| 5 | Carbamazepine BP | 4,000.00 | 20,000.00 |
| 6 | Clopidogrel Bisulphate USP | 2,000.00 | 8,000.00 |
| 7 | Domperidone Maleate BP | 500.00 | 2,500.00 |
| 8 | Enalapril Maleate USP | 200.00 | 3,000.00 |
| 9 | Frusemide BP | 1,500.00 | 5,000.00 |
| 10 | Gabapentin USP | 1,000.00 | 4,000.00 |
| 11 | Gliclazide BP | 6,000.00 | 30,000.00 |
| 12 | Losartan Potassium BP | 7,000.00 | 25,000.00 |
| 13 | Metformin Hydrochloride BP | 9,000.00 | 5,000.00 |
| 14 | Phenoxymethyl penicillin Potassium (Compacted) BP | 2,000.00 | 6,000.00 |
| 15 | Spironolactone USP | 250.00 | 5,000.00 |
| 16 | Theophylline Anhydrous USP/BP | 500.00 | 1,000.00 |
| 17 | Ammonio methacrylate Copolymer (Type B) USNF | 700.00 | 4,000.00 |
| 18 | Calcium Sulphate Dihydrate BP | 500.00 | 500.00 |
| 19 | Di Basic Calcium Phosphate (Dihydrate) USP | 2,000.00 | 500.00 |
| 20 | Colloidal Silicon Dioxide USP/USNF | 540.00 | 1,000.00 |
| 21 | DC Lactose (Lactose Anhydrous USNF/ USP) | 6,000.00 | 3,500.00 |
| 22 | Hydroxypropyl Cellulose-L JP | 500.00 | 2,500.00 |
| 23 | Lactose Monohydrate BP /USP (200 Mesh) | 50,000.00 | 8,000.00 |
| 24 | Magnesium Stearate BP | 500.00 | 500.00 |
| 25 | Maize Starch BP | 54,000.00 | 4,000.00 |
| 26 | Microcrystalline Cellulose USNF/ BP | 12,000.00 | 2,500.00 |
| 27 | Microcrystalline Cellulose USNF/ PH EUR/JP (PH 200 LM) | 6,000.00 | 2,500.00 |
| 28 | Povidone K-30 USP/ BP | 500.00 | 500.00 |
| 29 | Pre-gelatinized Maize Starch | 2,500.00 | 500.00 |
| 30 | Purified Talc BP | 5,000.00 | 500.00 |
| 31 | Sodium Starch Glycolate BP/USNF | 5,000.00 | 2,500.00 |
| 32 | Stearic Acid BP (Grade 50) | 200.00 | 500.00 |
| 33 | Tartaric Acid BP | 200.00 | 500.00 |
| 34 | Titanium Dioxide BP | 600.00 | 500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2022 ஏப்ரல் 20ஆம் திகதி முதல் 2022 மே 31ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.
- இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
- மீள் செலுத்தப்படாத மேல் கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்.
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 2623298)
''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)
வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் பெறுமதி/ பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**

**தொலைபேசி இல.** : **(00)94-11-2635353/(00)94-11-2637574/(00)-94-11-2623298**
**மின்னஞ்சல்** : **spmclanka@sltnet.lk**
**இணையதளம்** : **www.spmclanka.lk**
**தொலைநகல் இல.** : **(00) 94-11-2634771, 2626621**

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
### விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

### IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

### Supply and Delivery of Tissue Culture Banana Plants (Cavandish), Chili Seeds (MICH-HY-1 HIBRID) and Fruit covering Bags (Guava, Mango and Banana) for Northern, Eastern, Central & Uva Provinces.

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஜடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **Tissue Culture Banana Plants (Cavandish), Chili Seeds (MICH-HY-1 HIBRID) and Fruit Covering Bags (Guava, Mango & Banana)** ஆகியவற்றை வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களுக்கு வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. Tissue Culture Banana Plants (Cavandish), Chili Seeds (MICH-HY-1 HIBRID) and Fruit Covering Bags (Guava, Mango & Banana) ஆகியவற்றை வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களுக்கு வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | அளவு | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| Supply & Delivery of Tissue culture Banana Plants (Cavandish) for Batticaloa District. | LK-MOA-PMU-283045-GO-RFB | 175,000 எண்ணிக்கைகள் | 210,000.00 | 5,000.00 |
| வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களுக்கு மிளகாய் விதைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | LK-MOA-PMU-283021-GO-RFB | 109.5 கி.கி. | 160,000.00 | 2,500.00 |
| மத்திய மாகாணத்திற்கு கொய்யா மற்றும் மாம்பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | LK-MOA-PMU-283058-GO-RFB | 3,000,000 எண்ணிக்கைகள் | 540,000.00 | 10,000.00 |
| கிழக்கு மாகாணத்திற்கு வாழைப்பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல். | LK-MOA-PMU-283056-GO-RFB | 200,000 எண்ணிக்கைகள் | 170,000.00 | 5,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2022.04.26 ஆம் திகதியிலிருந்து 2022.05.17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. 2022.05.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022.05.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **"Supply and Delivery of Tissue Culture Banana Plants (Cavandish), Chili Seeds (MICH-HY-1 HIBRID) and Fruit Covering Bags (Guava, Mango & Banana) for Northern, Eastern, Central & Uva Provinces"** என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
**திகதி: 24.04.2022.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | 12 | | 13 | |
| 14 | | | 15 | 16 | 17 |
| | 18 | | 19 | | 20 |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ..........................................................

வகுப்பு ..........................................................

தொலைபேசி இல ..........................................................

பாடசாலை பெயர் ..........................................................

வதிவிட முகவரி ..........................................................

..........................................................

............................. ..........................................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர்கையொப்பம்

### இடமிருந்து வலம்

(01) ஆலமரத்தின் அகன்ற கிளைகளைத் தாங்குகின்ற வேர்கள் இப்பெயர் பெறும்.

(04) திரவப் பதார்த்தங்களின் சிறு சொட்டு இது.

(08) உயிரினங்களின் கலங்களுக்குள், அணுவுக்குள் மாத்திரமன்றி முட்டைக்குள் இருப்பதற்கும் இதுதான் பெயர் (தலைகீழான சொல்)

(10) கல்வியினாலும், திறமையினாலும் மற்றும் மக்களின் ஆதரவினாலும் ஒரு மனிதனுக்கு தானாகவே வந்து சேர்ந்துவிடுவது இது. மனிதன் தானாக வலிந்து சென்று இதனைத் தேடிக்கொள்ள முற்படலாகாது.

(15) அக்காலத்தில் ஒவ்வொருவரது வீட்டிலும் இந்த கருங்கல் உபகரணத்தைக் காணமுடியும். தானியங்கள், தேங்காய் போன்றவற்றை சமையலுக்காக அரைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட கருங்கல் உபகரணம். இன்று அருகிச் செல்கிறது.

(21) பெரும்பாலும் கடற்கரையோரங்களில் வளருகின்ற தாவரம். மிண்டி வேர்கள் கொண்டது.

(23) எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய இயற்கை எரிபொருள்.

### மேலிருந்து கீழ்

(01) நிலைக்கண்ணாடி முன்பாக நீங்கள் நின்றால் அக்கண்ணாடிக்குள் தெரிகின்ற உங்கள் தோற்றம் இது.

(03) தாவரங்களில் பெரும்பாலானவற்றின் இனப்பெருக்கத்துக்கான உறுப்பு இது. தரையெங்கும் இவை ஆங்காங்கே வீழ்ந்து புதிய தாவரங்களாக முளைத்தெழுகின்றன. (தலைகீழான சொல்)

(04) புவியின் வடக்கு, தெற்கு முனைவுகளை இவ்வாறு குறிப்பிடுவர்.

(05) கூரையோடு, சமையல் மட்பாண்ட பாத்திரங்கள், செங்கல் போன்றவற்றைத் தயாரிப்பதற்கான மூலப்பொருள். (தலைகீழான சொல்)

(15) நீர்வீழ்ச்சியினால் வீழ்ந்து, பாய்ந்தோடும் சிறுநதியை இவ்வாறு குறிப்பிடலாம்.

(17) உணவுக்கு சுவையூட்டியாக (உறைப்பு) சேர்க்கப்படுவது. ஆனால் மிளகாய் அல்ல. கொடிவகைத் தாவரத்திலிருந்து விளைவது இது.

(18) உள்ளத்தில் பயந்த சுபாவம் உள்ள ஒருவரை இவ்வாறு தான் குறிப்பிடுவர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 07

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. காளை 03. இஞ்சி 06. வறுமை 12. சுப
14. அகராதி 21. மல்லிகை

**மேலிருந்து கீழ்**

02. வளை 03. இமை 05. சிற்பம் 07. கன்று
10. தாதி 15. ராதா 17. அணில்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 06

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**ச. சஞ்ஜனா,**
தரம் 12 (கலை),
மட்/விஷ்ணு மகா வித்தியாலயம்,
வந்தாறுமூலை.

**இரண்டாம் பரிசு**

**தமீம் சாபில் அப்துல்லா,**
தரம் 10, அக்/அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 04.

**மூன்றாம் பரிசு**

**க. வினோபா,**
தரம் 06, கமு/கார்மேல் பற்றிமா தே.பா.,
69/C, வட்டை விதானை வீதி, கல்முனை 02.

### பாராட்டு பெறுவோர்

1. **த. காயத்ரி,**
தரம் 12, பது/சரஸ்வதி மத்திய கல்லூரி,
அமுனுதோவ, மடுல்சிம.
2. **நா. அம்சாயினி,**
தரம் 12 பி, தி/ஸ்ரீசண்முகா வித்தியாலயம்,
திருகோணமலை.
3. **எஸ். சவிலக்ஷனா,**
தரம் 10 A, பது/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,
பதுளை.
4. **ஆர். இமாம் சப்னம்,**
தரம் 08, அக்.அல் முனீறா பெண் உயர்தர பாடசாலை,
அட்டாளைச்சேனை.
5. **ச. கபிதூரிகா,**
தரம் 08, மட்/வின்சன் தேசிய பாடசாலை,
பூம்புகார், மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 08
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

***தெளிவுரை :***
*முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.*

## அச்சு இயந்திரம் கண்டுபிடித்த
# ஜோஹன்னஸ் குட்டன்பர்க்

உலகில் கோடிக்கணக்கான புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அச்சிடும் முறை கண்டுபிடிக்கப்பட்ட பின்தான், கல்வியில் மாபெரும் புரட்சி ஏற்பட்டது. காகித தயாரிப்பு முறை, 1,000 ஆண்டுகளுக்கு முன், சீனாவில் ஏற்பட்டது. எனினும் அச்சு முறை, 14ம் நூற்றாண்டின் துவக்கத்தில் உருவாகியது.

ஆதிமனிதர்கள், கல்லிலும், ஓலைச்சுவடியிலும், பின் செப்பேடுகளிலும் எழுதினர். எழுத்துக்கள் எழுத துவங்கி, பல ஆண்டுகளுக்கு பின், சிலர் அச்செழுத்துக்களை, தயாரிக்க முயன்றாலும், முழுமையான, சுலபமான அச்செழுத்துக்களை உருவாக்கிய பெருமை, ஜோஹன்னஸ் குட்டன்பர்க்கை சாரும்.

இவர், ஜெர்மனியில், மெயின்ஸ் என்ற ஊரில், 1398ல் பொற்கொல்லர் பிரிலீலேடன், எல்சுவைரிச் தம்பதியரின் மகனாய் பிறந்தார். அரசுக்கு நாணயங்கள் செய்து கொடுக்கும் பணியில், இவரது குடும்பம் ஈடுபட்டு வந்தது. இது தவிர, இவரது தந்தை துணி வியாபாரமும் செய்து, பெரும் செல்வந்தராய் இருந்தார். பள்ளிப் படிப்பை உள்ளூரிலும், உயர்படிப்பை, எப்பர்ட் பல்கலைக்கழகத்திலும் முடித்தார் குட்டன்பர்க். தன் தொழிலிலேயே மகனை ஈடுபடுத்த விரும்பினார் தந்தை. எனினும், குட்டன்பர்க்குக்கு அச்செழுத்துக்களை உருவாக்குவதிலேயே கவனம் சென்றது. கி.பி. 868ல் சீனாவில், புத்தகம் வெளியிட்டிருந்தனர். ஆனால், அதை உருவாக்க அதிகமாக சிரமப்பட்டிருந்தனர். களிமண்ணில் எழுத்துக்களை உருவாக்கி, அதில் மையை தடவி, காகிதத்தில் அச்சிட்டவுடன், மண் எழுத்துக்கள் நசுங்கிவிடும்.



குட்டன்பர்க், முதலில் ரப்பரில் எழுத்துக்களை செய்து, ஒரு மரப்பலகையில் அதை ஒட்டவைத்து, உருளை போன்ற ஒன்றை உருவாக்கி, அதில் பலகையை வைத்து, காகிதத்தில் சுழல்முறையில் அச்சிட்டார். ஆனால், அது சரியாக வரவில்லை.

இது ஒருமுறை மட்டுமே பதிக்க வந்தது. ஒரே அச்சில், பல பக்கங்கள் என்ற முறையில் அச்செழுத்துக்களை உருவாக்க முனைந்தார்.

பின், பலகைக்கு பதில் உலோகத்தை பயன்படுத்த நினைத்தார். இதற்கு அவரது குலத்தொழில் பயன்பட்டது. நாணயத்தை உருவாக்குவதற்கு உலோக அச்சு பயன்படுத்தியது, இப்போது அவருக்கு பயன்பட்டது. திடீரென குடும்பத்தில் வறுமை சூழ்ந்தது. அச்சுக் கருவியை தயாரிக்கும் அவரது முயற்சிக்கு தடை விழுந்தது.

எழுத்துக்களை உலோகத்தில் உருவாக்கி, ஒரு உருளையில் அதை பதித்து, மேலிருந்து அழுத்துவதை போல் செய்தால், அச்சு நன்றாக விழும், அதிகமான பிரதிகளும் எடுக்கலாம் என்று முடிவு செய்தார். ஆனால், அதற்கு நிறைய பணம் தேவைப்பட்டது.

அவரது தொழில் ஆர்வத்தை கண்ட, ஜோஹனீச் பரீஸ்ட் என்ற செல்வந்தர் அவருக்கு உதவி செய்தார். மிகவும் மகிழ்ச்சியடைந்த குட்டன்பர்க், அச்சு கூடத்தை உருவாக்கினார். இயங்கும் எழுத்து உருக்களை உருவாக்கினார். அந்த அச்சுக் கூடத்தின் மூலம், முதன்முதலில், 1450ல் ஜெர்மானிய கவிதை ஒன்றை அச்சடித்தார்.

பின், அந்த அச்சுக்களை நவீன முறையில் எந்தவித சிரமமும் இன்றி, ஒவ்வொரு பக்கமும் அச்சு விழும்படி, நகர்த்தும் தொழில் நுட்பத்துடன் இணைத்தார். 1455ல் உலகின் முதல் அச்சு புத்தகம் உருவானது. இலத்தீன் மொழியில், இரு பாகங்களாக 300 பக்க பைபிள் அச்சிடப்பட்டது. புத்தக புரட்சி ஏற்பட்டது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அச்சிட்ட, 180 பிரதிகளும், முறையாக விற்கப்படவில்லை. இதனால் பணம் கொடுத்து உதவிய பரீஸ்ட், குட்டன்பர்க்கிடம் கடனை திருப்பி கேட்டார். கடனை திருப்பி கொடுக்க முடியாததால், பரீஸ்ட் நீதிமன்றம் சென்றார். பைபிள் பிரதிகள் மற்றும் அச்சுக்கூடத்தை கடனுக்கு ஈடாக கைப்பற்றினார் பரீஸ்ட். கையில் பணம் இல்லாமல், சிறிது காலம் வேறு சில தொழில்களை செய்து வந்தார் குட்டன்பர்க். பின், மறுபடியும் சிறிய அச்சுக் கூடம் ஒன்றை நிறுவி சிறு சிறு பிரசுரங்களை அச்சிட்டு கொடுத்தார். இன்று, பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன.

சிறுவர் முதல் பெரியவர் வரை, படித்து அறிவை வளர்க்கிறோம். கல்வி, பத்திரிகை, விளம்பரம், போன்ற துறைகளில் அதிநவீன அச்சு இயந்திரங்கள் வந்துவிட்டன. மணிக்கு, லட்சக்கணக்கான பிரதிகளை அச்சிடும் இயந்திரங்கள் கோலோச்சுகின்றன.

ஆனால் இத்தொழிலை உருவாக்கிய குட்டன்பர்க், வறுமையால், பிப்., 3, 1468ல், தன், 70ம் வயதில் மரணம் அடைந்தார்.

கணினி, ஸ்மார்ட் போன், இணையதளம் என மாற்றங்கள் வந்தாலும், அச்சிட்ட புத்தகங்களை படிப்பதையே மக்கள் விரும்புகின்றனர். குட்டன்பர்க் அச்சிட்ட, உலகின் முதல் பைபிளில், ௨௨ பிரதிகளை, ஜெர்மானியர் இன்றும் பாதுகாத்து வருகின்றனர்.

உலகில் அறிவு புரட்சிக்கு வித்திட்ட, ஜோஹன்னஸ் குட்டன்பர்க்கை போற்றுவோம்...!

குட்டீஸ், இனி நீங்க புத்தகம் வாசிக்கும் போது குட்டன்பர்க்கையும் மறந்து விடாதீர்கள்!

**வினோ மதிவதனி,**
**லுனுகலை.**

## பூனை

*எங்கள் வீட்டு பூனை*
*எலியைப் பிடிக்கும் பூனை*
*பங்கம் இல்லா பூனை*
*பாலை விரும்பும் பூனை*

*பதுங்கிப் பாயும் பூனை*
*பாசமிகுந்த பூனை*
*கதைகள் பலதும் பேசும்*
*கண்ணை கொண்ட பூனை*

*பந்தை விரட்டி ஓடும்*
*பலவிதமாய் ஆடும்*
*விந்தை பல புரிந்து*
*வியக்க வைக்கும் பூனை*

*வாலை தூக்கி ஆட்டும்*
*வருடி உணவு கேட்கும்*



*காலை கத்தி எழுப்பும்*
*கண்ணை உருட்டி பார்க்கும்*

*செல்லப் பிராணி பூனை*
*சிறுத்தை போன்ற பூனை*
*பள்ளி செல்லும் போது*
*பின்னே வரும் பூனை*

*தனது காலால் முகத்தை*
*தடவிப் பார்க்கும் பூனை*
*எனது மடியில் உறங்கும்*
*எங்கள் வீட்டுப் பூனை!*

**கபிலகன்,**
**லுனுகலை.**

## பொன்மொழியும் அதன் விளக்கமும்

*அனைத்து நட்புக்கு பின்னாலும் ஒரு சுயநலம் இருக்கிறது. சுயநலங்கள் இல்லாத நட்பு இல்லை. இது ஒரு மிகவும் கசப்பான உண்மை.*

**பொருள்:**
*நட்பு என்பது மனித வாழ்வின் அற்புதங்களில் இருக்கும் மிகச்சிறந்த அற்புதமாகும். எங்கோ பிறந்த ஒருவர் நமக்காக கண்ணீர் விடுவதும், கஷ்டங்களில் உதவுவதும் நட்பில் மட்டுமே சாத்தியம். ஆனால் சுயநலம் என்பது மனிதர்கள் உடன்பிறந்த குணமாகும். எனவே அது எந்நாளும் அது மனிதனை விட்டு பிரியாது. நட்பிற்கும் இது பொருந்தும். இதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள்.*

*சிங்கத்திடம் இருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியது யாதெனில் எதை செய்தாலும் அதனை தன் முழுமனதுடனும், கடுமையான முயற்சியுடனும் செய்யவேண்டும்.*

**பொருள்:**
*சிங்கம் ஒரு இரையை குறிவைத்துவிட்டால் அதனை வேட்டையாடும் வரை அதன் கவனம் வேறு எங்கும் திசை மாறாது. இரையை வேட்டையாட சிங்கம் எந்த எல்லைக்கும் செல்லும். அதேபோல மனிதனும் தன் குறிக்கோளை அடையும் வரை திசைமாறாமல் கடினமான முயற்சியுடன் தன் இலட்சியத்தை அடைய வேண்டும்.*

## அல்பட்ரோஸ் பறவைகள் (Albetross)



*அல்பட்ரோஸ் பறவைகள் மிகத் திறனுடன் காற்றோட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்தி வெகு தொலைவு பறக்க வல்லவை. இவை நீரில் வாழும் கணவாய் (squid) மீன குறில் (krill) முதலியவற்றை உணவாக உட்கொள்கின்றன. அல்பட்ரோஸ் பறவைகள் கடல் பகுதியில் காணப்படும் சிறு தீவுகளில் பெருங் கூட்டமாக வாழ்கின்றன. அல்பட்ரோஸ் பறவைகள இணையாக அதன் வாழ்நாள் முழுவதும் இணை பிரியாமல் வாழ்கின்றன. இனப்பெருக்கக் காலங்களில் ஒரு முறைக்கு ஒரு முட்டைதான் இடுகின்றன. அல்பட்ரோஸ் தென்முனைப் பெருங்கடலிலும் வட பசுபிக் பெருங்கடலிலும் காணப்படும் கடற் பறவையினமாகும். இவை பெரும்பாலும் வெண்ணிறக் கழுத்தும் பெரிய அலகும் மிகப் பெரிய இறக்கை விரிப்பளவும் கொண்டவை.*

**ஆ. அனோஜன்,**
**தரம் 09, நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,**
**நோர்வூட்.**

## இவ்வார மழலை



**எஸ். கீர்த்திகேஷ் ,**

சரண்சிங் - தனுஷா ,
நுவரெலியா வீதி, வகுகபிட்டிய,
புசல்லாவ.






**பி. விதுர்ஷனி,**
தரம் 07,
ப/ இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.



**வி. திவாகர்,**
தரம் 07, ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.



**A. பவித்ரா,**
தரம் 10, ப/இதல்கஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை



**பி. தனுசாலனி,**
தரம் 11A, ப/ இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.

# மஞ்சரி விளையாட்டு

## 24 வது சித்திரை வருட கலாசார விளையாட்டு விழா 2022'

சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும், காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலானந்தா சனசமூக நிலையமும், காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் இணை அனுசரணையுடன் விபுலானந்தர் மைதானத்தில் நடாத்திய 24வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே. ஜெயசிறில் உட்பட உயரதிகாரிகள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



## அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டு கழகத்தின் பாராட்டு விழா

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பாரட்டு விழா மற்றும் நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வுகள் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதான பாத்திருப்பு மண்டபத்தில் இடம்பெற்றன. அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகத் தலைவவர் என்.எம்.நிஸார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பதவி உயர்வு பெற்ற கழக நிர்வாகிகள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கழக வீரர்கள் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் பங்குபற்றி கழகத்திற்கு பெருமை சேர்த்த வீரர்கள் ஆகியோர் விருது மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேசமட்ட விளையாட்டு விழாவில் பங்குபற்றிய அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் 06 தங்கம், 03 வெள்ளி, 01 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதன்மை நிலையைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகளில் விளையாட்டு உத்தியோகத்தர்கள், கழக நிர்வாகிகள், சிரேஷ்ட, கனிஷ்ட விளையாட்டு வீரர்கள் என அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர்.



### பெர்மிங்காம் பொதுநலவாய விளையாட்டு போட்டி

## 15 விளையாட்டுக்களில் இருந்து வீரர்கள் தயார்

எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை 15 விளையாட்டுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 7 பேர் ஏற்கனவே நேரடியாக தகுதி பெற்றுள்ளனர்.



இந்த 7 விளையாட்டுகளும் மற்ற 8 விளையாட்டுகளும் இந்த ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்காக இலங்கையால் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டில் கடந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை விட 3 கூடுதல் விளையாட்டுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்.பளு தூக்குதல் ஆண்கள் மற்றும் பெண்கள், கூடைப் பந்து, கடற்கரை கைப்பந்து ஆண்கள் மற்றும் பெண்கள், ரி 20 பெண்கள் கிரிக்கெட், ரக்பி செவன்ஸ் ஆண்கள் மற்றும் பெண்கள், டேபிள் டென்னிஸ் மற்றும் பரா தடகளம் ஆகியவை இலங்கையில் இருந்து ஏற்கனவே நேரடியாக தகுதி பெற்ற விளையாட்டுகளாகும். மேலும், இந்த ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் தடகளம், நீச்சல், பூப்பந்து, குத்துச்சண்டை, ஜூடோ, ஸ்குவாஷ் மற்றும் மல்யுத்தம் போன்றவற்றில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கும்.

ஆண்கள் மற்றும் பெண்கள் பளுதூக்குதல் அணிகளில் ஆறு ஆண்கள் மற்றும் ஐந்து பெண்கள் தகுதி பெறுகின்றனர், அதே நேரத்தில் கூடைப்பந்து அணியில் மூன்று வீரர்கள் உள்ளனர். கடற்கரை கரப்ந்து ஆடவர் அணி ஆடவர் அணிக்கும், மகளிர் அணி பெண்கள் கரப்பந்து அணிக்கும் தகுதி பெற்றன. இலங்கை இருபதுக்கு 20 மகளிர் கிரிக்கெட் அணியில் இருந்து 15 வீராங்கனைகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் ரக்பி செவன்ஸ் அணிகளிலிருந்து தலா 12 வீராங்கனைகளும், டேபிள் டென்னிஸ் மற்றும் பரா தடகள வீரர்களில் இருந்து தலா ஒரு வீரரும் தகுதி பெற்றுள்ளனர். எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் நிதி நிலைமையை கருத்திற்கொண்டு, பதக்கங்களை வெல்லும் தருவாயில் உள்ளவர்களுக்கு மாத்திரம் அனுசரணை வழங்குவதாகவும், ஏனைய விளையாட்டு வீரர்கள் தமது சொந்த விளையாட்டு சங்கம் அல்லது தனியார் அனுசரணையில் பங்குபற்றுவதற்கு வசதி செய்து தருவதாகவும் விளையாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். 2018 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 12 விளையாட்டுகளில் இருந்து 80 விளையாட்டு வீரர்கள் போட்டியிட்டனர், அங்கு இலங்கை ஒரு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலப் பதக்கங்களை வென்றது. 69 கிலோ பளு தூக்குதல் பிரிவில் இந்திக திஸாநாயக்க வெள்ளிப் பதக்கத்தையும், லக்மால் சதுரங்க (56 கிலோகிராம்), தினுஷா கோம்ஸ் (48 கிலோகிராம்), அனுஷா கொடித்துவக்கு (49 கிலோகிராம் மற்றும் குத்துச்சண்டை) வெண்கலப் பதக்கங்களையும் வென்றனர். பண்டார (குத்துச்சண்டை 52 கிலோகிராம்) வென்றனர். கோல்ட் கோஸ்ட் விளையாட்டுப் போட்டிகளில், இலங்கை தடகள வீரர்கள் தடகளம், நீச்சல், பூப்பந்து, கடற்கரை கைப்பந்து, சைக்கிள் ஓட்டுதல், ஜிம்னாஸ்டிக்ஸ், ரக்பி, துப்பாக்கி சுடுதல், ஸ்குவாஷ், டேபிள் டென்னிஸ், மல்யுத்தம் மற்றும் மல்யுத்தம் ஆகியவற்றில் போட்டியிடுகின்றனர்.

விளையாட்டுப் போட்டியில் ஆஸ்திரேலியா 80 தங்கம், 59 வெள்ளி, 59 வெண்கலம் என மொத்தம் 198 பதக்கங்களையும், இங்கிலாந்து 45 தங்கப் பதக்கங்களையும் வென்றன. அண்டை நாடான இந்தியா 26 தங்கம், 20 வெள்ளி, 20 வெண்கலம் என மொத்தம் 66 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.




## கதை பேசும் பழைய பாராளுமன்ற கட்டடம்

இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றி சுமார் நான்கு தசாப்தங்களின் பின் தான் இலங்கையை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து ஆட்சி செய்வதற்கான முறையான அரசாங்க நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்படி நிறைவேற்றுப் பேரவை, இலங்கை முதலாவதுசட்டவாக்கப் பேரவை ஆகியன 1833 ஆம் ஆண்டு ஆளுநர் சேர் றொபட் ஹோட்டன் (Governor Sir Robert Wilmot Horton) என்பவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இன்றைய வெளியுறவு அமைச்சு இருக்கின்ற காரியாலயம் தான் முதலாவது சட்டவாக்கப் பேரவை நடைபெறும் நாடாளுமன்றமாக இயங்கத் தொடங்கியது.

இன்று வெளியுறவு அமைச்சகம் இருக்கிற கட்டடத்துக்கு ஒரு முக்கிய வரலாறு உண்டு. பலருக்கும் அது ஒரு பழமையான கட்டடமாக மட்டுமே தெரியும். இன்றைய ஜனாதிபதி மாளிகை சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை இராணி மாளிகை என்றே அழைக்கப்பட்டது. அதற்கும் முன்னர் அது கோர்டன் கார்டன் (Gordon Gardens) என்று அழைக்கப்பட்டது. அதன் வரலாற்றுப் பின்புலத்தை தனியாக பிறிதொரு முறை பார்ப்போம்.

இராணி மாளிகையோடு அண்டிச்செல்லும் வீதி ராணி வீதி என்று அழைக்கப்பட்டது. இந்த இராணி மாளிகைக்கு (Queen's House) அருகாமையில் உள்ள வெளியுறவு அமைச்சுக் கட்டடம் 1970 களின் பின்னர் குடியரசுக் கட்டடம் (Republic Building) என்று அழைக்கப்பட்டது. 1920 களில் இலங்கையின் அரசாங்க சபை (அதாவது அன்றைய பாராளுமன்றம்) இங்கு தான் இயங்கியது என்றால் இன்று வியப்பான செய்தியாக இருக்கும்.


அதற்கும் முன்னர் இக் கட்டிடம் காலனித்துவ செயலாளரின் காரியாலயமாக இயங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் காலனித்துவ செயலாளர் என்கிற பதவி வெளியுறவு அமைச்சருக்கு நிகரானது. ஆனால் அதை விட அதிகாரம் கூடிய பதவியாக அது இருந்தது. இந்தக் கட்டடத்தில் பழைய ஓலைச் சுவடிகள், மற்றும் அரச ஆவணங்களைப் பாதுகாக்கும் சுவடிகள் திணைக்களமும் இயங்கியிருக்கிறது. இன்னொரு பகுதியில் முன்னூறு ஊழியர்கள் பணிபுரிந்த அரசாங்க அச்சகக் காரியாலயமும் இயங்கியிருக்கிறது. அரசாங்க வெளியீடுகள், தபால் தலைகள், இரயில் டிக்கெட்டுகள் போன்றயை இங்கே அச்சடிக்கப்பட்டுவந்தன.

இன்னும் சொல்லப்போனால் காலனித்துவ காலத்தில் கொழும்பின் அரச இயந்திரத்தின் பிரதான மையம் இந்த சுற்றுப் பிரதேசம் எனலாம். இதை மையப்படுத்திய சுமார் ஐநூறு மீற்றர் சுற்று வட்டத்தில் உள்ள கட்டடங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் முக்கிய கட்டடங்களாக திகழ்ந்தன. எச். ஏ.ஜே.ஹுலுகல்ல (H. A. J. Hulugalle) கொழும்பு மாநகர சபை பற்றிய தனது நூலில் அரசாங்கக் கட்டிடக் கலைஞர் டெம் நெவில் வைன் ஜோன்ஸ் இந்தக் கட்டடங்களின் வரலாற்றைக் கண்டறிந்த விதத்தையும் அவை எவ்வாறு காப்பாற்றப்பட்டன என்பதையும் பதிவு செய்கிறார். சேர்ச் வீதியிலும், ராணி வீதியிலும், பிரின்ஸ் வீதியிலும் இன்றும் பல பழைய அரசாங்கக் கட்டடங்கள் உள்ளன. அரசாங்கத்தின் மேற்சபை இருந்த கட்டடம் தான் குடியரசுக் கட்டிடம்.ஆனால் அக்கட்டடம் சிறிய அறைகளைக் கொண்டவை இருட்டாகவும், காற்றோட்டமற்றதாகவும் அது இருந்தது. 1929ல் அரசாங்கத்தின் பிரதான காரியாலயம் காலிமுகத்திடலில் உள்ள செயலகத்திற்கு மாற்றப்பட்டதுடன், இந்த ராணி வீதிக் கட்டடங்கள் இடிக்கப்பட்டும் பல்வேறு மாற்றங்களுக்கும் உள்ளாகின. அதுபோல இந்த புனரமைப்புகளின் பின்னர் குறைந்த முக்கியத்துவத்தினாலும் அலட்சியத்தினாலும் விரைவாக சீரழிந்தன.

1948 ஆம் ஆண்டு சுதந்திர காலம் வரை அரசாங்கத்தின் காரியாலயங்கள் இங்கே இயங்கின. 1948 இன் பின் இக்கட்டடத்தின் தோற்றம் நிறையவே மாற்றத்துக்கு உள்ளாகியது. இவை புதிய கட்டடங்கள் என்று பலர் நினைக்குமளவுக்கு அவற்றின் தோற்றம் மாறி இருந்தன. இந்தக் கட்டடத்தில் தான் பிரதமர் அலுவலகம்,அமைச்சரவை, செனட் சபை என்பவை இயங்கத் தொடங்கின. 1930 ஆம் ஆண்டில் அரசாங்க சபை காலிமுகத்திடலில் (இப்போது ஜனாதிபதி செயலகம்) கட்டப்பட்ட பாராளுமன்றக் கட்டடத்திற்கு நகர்த்தப்பட்டது. 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்றபோது, சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இயங்கிய பாராளுமன்றத்தின் இரண்டாவது சபையான செனட் சபை இக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியதால் அதன் பின்னர் இதை செனட் பில்டிங் என்றே பொதுவாக அழைத்தார்கள்.

1972 ஆம் ஆண்டில் நாட்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் செனட் கலைக்கப்பட்டபோது, இந்த கட்டடம் குடியரசு கட்டடம் என்று அழைக்கப்பட்டது. இராஜதந்திரிகளையும், அரச தலைவர்களையும் உத்தியோகபூர்வமாக வரவேற்று சந்திப்புகளை நடத்துவதற்கு 70 களில் பயன்படுத்தப்பட்டது. தற்போது அது வெளிவிவகார அமைச்சாக இயங்கி வருகிறது. அக்கட்டடத்தோடு சேர்த்தாற்போல் அமைந்திருக்கும் கட்டிடம் தான் இலங்கையின் புலனாய்வுத் திணைக்களத் தலைமையகமாகவும் பலராலும் நான்காம் மாடி என்று அழைக்கப்படுகின்ற கட்டடமாகவும் அமைந்துள்ளது.

கறுவாத் தோட்டத்தில் சேர் எர்னஸ்ட் டி சில்வா (Sir Earnest De Silva Mawatha)மாவத்தையில் பிரதமர் அலுவலகம் அமைவதற்கு முன் இதுதான் பிரதமர் அலுவலகமாக திகழ்ந்தது.



**பழைய பாராளுமன்றக் கட்டிடம்**

இந்தியப் பெருங்கடலை பார்த்தவாறு காலிமுகத்திடலின் ஒரு முனையில் பழைய பாராளுமன்றக் கட்டடம் இன்று ஜனாதிபதி செயலகமாக அமைந்திருக்கும் காட்சியளிக்கிறது. மாலையில் இந்திய சமுத்திரத்தில் இறங்கும் சூரிய அஸ்தமனத்தின் போது நேரடியாக அடிக்கும் சூரிய ஒளியில் செம்மண்ணிறத்தில் அழகாக காட்சி தரும் பழமையான கட்டடம். இது கிரேக்க கட்டடக் கலையின் சாயலைக் கொண்டதாக ஐயோனிக் (Ionic) வடிவில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. ஏதென்ஸில் உள்ள (Parthenon)பழமையான பார்த்தினனை கட்டடத் தூண்களை நினைவுபடுத்தும் மேற்கத்தேய பாணியிலான கட்டடக் கலையுடன் கூடிய அழகான கட்டிடம் அது. இதன் கலைத்துவ, கட்டுமான விடயங்கள் தனித்து பார்க்க வேண்டிய தனியான அங்கம்.

1920 களில் அன்றைய ஆளுநர் சேர் ஹென்றி மெக்கலத்தின் (Sir Henry McCallum) திட்டத்தில் இது உருவானது. அப்போதைய பொதுப்பணித் துறையின் தலைமை கட்டடக் கலைஞரான Austin Woodeson ஆல் வடிவமைக்கப்பட்டது இக்கட்டடம். அப்போது 400,000 லட்ச ரூபாவில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டாலும் சுமார் 450,000 ரூபாய் வரை செலவானது.

இதனைக் கட்டி முடிப்பதற்கு தேவையான 1530 தொன் விசேட நிறமுடைய கருங்கற்கள் கொழும்பிலிருந்து 70 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ருவன்வெல்லவில் இருந்து கொண்டு வரப்பட்டன. அப்போதெல்லாம் ஒழுங்கான பாதைகள் இல்லை. இன்று இருப்பதைப் போன்ற வாகன வசதிகளும் இல்லை. களனி கங்கைக்கு ஊடாக பேற வாவி வரை ஆற்றின் வழியாகவே இவற்றை கொண்டு வந்து சேர்த்தார்கள். கல்லொன்றின் உயரம் 51 அடியும் ஏழு தொன் பாரத்தையும் கொண்டிருந்திருக்கிறது.

கட்டடத்தின் முகப்பின் முக்கோணப் பகுதியில் 1948 வரை பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரச சின்னமே இருந்தது. அதன் பின்னர் அது அகற்றப்பட்டு இலங்கை டொமினியன் சின்னத்தால் அலங்கரிக்கப்பட்டது. மீண்டும் அது 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசின் புதிய அரச சின்னம் பதிக்கப்பட்டது.

இந்தப் பாராளுமன்றக் கட்டடம் 1930 இல் திறக்கப்பட்டபோது நாட்டில் உள்ள அனைவரும் வாக்குரிமையை பெற்றிருக்கவில்லை. ஆனால் 1931 இல் டொனமூர் திட்டம் வழங்கிய சர்வஜன வாக்குரிமையை அனைத்து மக்களுக்கும் அனுபவிக்கத் தொடங்கி மக்களால் உருவான அரசாங்கம் முதலில் இங்கிருந்து தான் சட்டவாக்கப் பணிகளை ஆரம்பித்தது. அதிலிருந்து சுமார் அரை நூற்றாண்டு காலம் நாட்டின் சட்டமன்றமாக செயல்பட்டது.

1930, சனவரி 29 இல் இலங்கைக்கான பிரித்தானிய ஆளுநர் சர் ஹெர்பர்ட் ஸ்டான்லி (Sir Herbert Stanley 1927–1931) இப்பாராளுமன்றத்தை திறந்து வைத்தார்.

1948 பெப்ரவரியில் சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து 1972 வரை சுதந்திர இலங்கையின் முதலாவது சட்டமன்றமாக இயங்கியது. இளவரசர் ஹென்றி (Prince Henry, Duke of Gloucester)1948 சுதந்திரத்தின் போது சம்பிரதாயபூர்வமாக அமர்வுகளுக்காக திறந்து வைக்கப்பட்ட பின்னர் "பிரதிநிதிகள் சபை"யாகவும் சுதந்திர இலங்கையின் முதலாவது சட்டவாக்க சபையாகவும் 1972 வரை இயங்கியது. அதன் பின்னர் அது சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சோசலிச அரசாங்கத்தின் கீழ் "தேசிய அரசுப் பேரவை"யாக 1977 வரை இயங்கியது. 1977 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியின் பின்னர் "இலங்கைப் பாராளுமன்றம்" என அழைக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு இலங்கையின் தலைநகராக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே அறிவிக்கப்பட்டு 1983 இல் அங்கு புதிய பாராளுமன்றம் திறக்கப்பட்டதன் பின்னர் 1983 செப்டம்பர் 08 இலிருந்து ஜனாதிபதி செயலகமாக மாற்றப்பட்டு இன்று வரை அப்படியே நீடிக்கிறதும்.

இது திறக்கப்பட்ட காலத்தில் 49 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது அரசாங்க சபை. டொனமூர் திட்டக் காலத்தில் 61 உறுப்பினர்களாக உயர்ந்தது. அதுவே சோல்பரி காலத்தில் 101 ஆக அதிகரிக்கப்பட்டது. 1959 இல் 157உறுப்பினர்களைக் கொண்டிருந்த சட்டவாக்க சபை, 1972 இல் 168 உறுப்பினர்களானது. 1978 இல் 225ஆக உயர்த்தப்பட்டது. பாராளுமன்றத்தின் தேவைகளும் உயர்ந்தன. பெரியதொரு பாராளுமன்றக் கட்டிடத்தின் தேவையை அரசு உணர்ந்தது.

1979 யூலை 4 இல், அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாச கொழும்பில் இருந்து 16 கிமீ கிழக்கே கோட்டே நகரில் தியவன்ன ஏரியில் அமைந்துள்ள 12 ஏக்கர் தீவில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை அமைக்க நாடாளுமன்றத்தில் இருந்து அனுமதி பெற்றார். இந்த இடத்தில் தான் முன்னர் கோட்டை அரசர் மூன்றாம் விக்கிரமபாகுவின் அமைச்சர் நிஸ்ஸக அலகேஸ்வரவிண் அரண்மனை அமைந்திருந்தது. புதிய பாராளுமன்றக் கட்டடம் ஜெஃப்ரி பாவா என்கிற பிரபல கட்டடக் கலைஞரால் வடிவமைக்கப்பட்டு, இலங்கை அரசின் நிதியுதவியில் கட்டப்பட்டது. 1982 ஏப்ரல் 29 இல் புதிய ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே பாராளுமன்றம் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவால் திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் சுகாதாரம், கல்வி, தொழில், கைத்தொழில், வர்த்தக அமைச்சுக்களைக் கொண்டிருந்த தலைமைச் செயலகக் கட்டடமாக இபழைய பாராளுமன்றம் இயங்கியது. தற்போது நிதி அமைச்சும் பல வருடங்களாக இங்கே இயங்கி வருகிறது.

கட்டடத்தின் முன்னால் இலங்கையின் தேசத் தலைவர்கள் நால்வரின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் ஆரம்பப் பிரதமர்களான டி.எஸ். சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல ஆகியோரின் சிலைகளுடன் தமிழ் அரசியல் தலைவரான சேர் பொன்னம்பலம் இராமநாதன், தொண்டமான் ஆகியோரின் சிலைகளையும் இங்கே காணலாம்.

92 ஆண்டுகளை கடந்து பாராளுமன்றக் கட்டிடம் நாட்டின் பிரதான மைய அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஏப்ரல் 24 ஞாயிற்றுக்கிழமை
கலையை
விளையாட்டாக
கற்றுத் தேர்ந்த
தர்ஷாஹினி

# போதையை கலைக்கும் புதிர் பாதை



மதுக்கடைகள் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து குறைந்தது 500 மீற்றருக்கு அப்பால் இருக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பல மதுப் பிரியர்களுக்கு வினையாக மாறிவிட்டது. வீதிக்கு அருகில் இருக்கும் மதுக்கடைகள் மூடப்பட்டன.

இந்தத் தடை கேரள மாநிலத்திற்கும் பொருந்தும். பல மதுக்கடைகளும் சாதாரண கடைகளாகவும் விடுதிகளாகவும் மாற்றப்பட்டன. இந்த சட்டம் கொண்டுவரப்பட்டதில் தப்புக்கூறவும் முடியாது. குடித்துவிட்டு வீதிக்கு வரும் வாகனங்கள், பாதசாரிகள் நிதானம் தப்பக்கூடாது என்பதே இதன் தர்க்கரீதியான விளக்கம்.

இதனை கேரளாவின் ஏர்னாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த மதுபானக் கடை ஒன்று சரியாக புரிந்துகொண்டது. சட்டத்தில் இருந்து தப்புவதாகவும், சட்டம் கொண்டுவரப்பட்டதன் தர்க்கத்தை நிறைவேற்றுவதாகவும் வீதியில் இருந்து 250 மீற்றர் தூரத்தில் இருக்கும் தனது மதுபானக் கடையின் தூரத்தை 500 மீற்றருக்கு அதிக தூரமாக மாற்ற புத்திசாலித்தனமாக ஒரு வேலையை செய்தது.

வடக்கு பராவூரில் இருக்கும் ‘ஐஷ்வர்யா பார்‘ என்ற அந்த மதுபானக் கடை வீதிக்கான தனது பாதையை புதிர் பாதையாக போட்டது. சரியாக நடுவே கரட்டை வைத்து வெளியே ஒரு முயலை வைத்து புதிர் பாதையில் கரட்டை முயல் அடைவதற்கான சரியான பாதையை கண்டுபிடியுங்கள் என்று வரும் புதிர் போலவே இருந்தது அந்தப் பாதை.

‘நாம் ஒன்றும் தவறாகச் செய்யவில்லை. மதுபானக் கடைக்கு பின்னால் இருக்கும் காணியும் உரிமையாளருக்கு சொந்தமானது. நாம் மதுபானக் கடையை அடைவதற்கான பாதையை நீடிக்கச் செய்தோம். இப்போது நெடுஞ்சாலையில் இருந்து மதுபானக் கடையை அடைய 520 மீற்றர்கள் தூரம் இருக்கிறது. நாம் அதிகாரியை அணுகி புதிய பாதைக்கான அனுமதியை கோரினோம். அவர்களும் பாதையை சோதித்துப் பார்த்துவிட்டு மதுபானக் கடையை மீண்டும் திறக்க அனுமதி அளித்தார்கள்‘ என்று அந்த மதுபானக் கடையின் முகாமையாளர் ஷிஜு பீ கூறுகிறார்.

இந்த மதுபானக் கடையில் குடித்து விட்டு வருபவர்கள் அந்தப் புதிர் பாதையை விடுவித்து மீண்டும் வீடு சென்று சேர்வதற்குள் பாதி போதை கலைந்துவிடும் என்பது தான் இங்குள்ள ஒரே பிரச்சினை.

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

# பிரபலத்தி ரகசியம்

மோனாலிஸா ஓவியம் உலகப் பிரபலம் அடைவதற்கும் தலைசிறந்த ஓவியமாக கூறப்படுவதற்கும் எத்தனையோ வியாக்கியானங்கள் இருக்கின்றன. உண்மையைச் சொல்லப்போனால் பிரபலமடைவதற்கு அறிவுபூர்வமான விளக்கங்களுக்கு அப்பால் ஏதோ ஒன்று இருக்கிறது என்பதற்கு அந்த மோனாலிஸா ஓவியமே நல்ல உதாரணம்.



பிரான்ஸின் லவ்ரோ அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்த ஓவியம் 1911 ஆம் ஆண்டு திருட்டுபோனது. அதனை கண்டுபிடிப்பதற்கு பாரிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. பத்திரிகையைத் திறந்தால் பக்கம் பக்கமாக மோனாலிஸாவின் கதை தான்.

இதனால் திருட்டுபோன மொனாலிஸா ஓவியம் வைக்கப்பட்ட இடத்தை பார்ப்பதற்கு அருங்காட்சியத்தில் கூட்டம் அள்ளியது. அது அந்த ஓவியம் இருந்தபோது பார்க்க வந்தவர்களை விடவும் அதிகம்.

கடைசியில் இரண்டு ஆண்டுகள் கழித்து ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டது. உண்மையில் இந்த சம்பவமே இந்த ஓவியம் விலை மதிப்பற்ற ஓவியமாக மாறுவதற்கு காரணம் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

# உலகின் முதல் மொழி எது?

ஜெர்மனி பேரரசர் இரண்டாம் பிரெடெரிக்கிற்கு ஒரு விசித்திரமான சந்தேகம். உலகில் தோன்றிய முதல் மொழி எது என்பது தான் அவரது ஐயம். பேரரசர் அல்லவா! சந்தேகத்தை தீர்க்க முடிவெடுத்தார். அன்று பிறந்த ஐம்பது குழந்தைகளை அடைத்து அவைகளை தனி காப்பகம் ஒன்றில் வளர்க்க ஆரம்பித்தார். உணவு அளிப்பது, குளிப்பாட்டுவது என்று அந்தக் குழந்தைகளின் பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டன. ஆனால் அந்தக் குழந்தைகளுடனோ அல்லது குழந்தைகள் முன்னாலோ பேசுவது தவிர்க்கப்பட்டது. எனவே, குழந்தைகள் இயற்கையாக என்ன மொழி பேசுகின்றன என்பதை கண்டுபிடிப்பது தான் அவரது பிரமாத திட்டம். ஆனால், அவரால் அதனை கண்டுபிடிக்க முடியாமல் போனது தான் பரிதாபம். அவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அனைத்துக் சிசுக்களும் இறந்துவிட்டன என்பது தான் அதனை விடவும் பரிதாபம்.



# விண்கல் தாக்கிய முதலாமவர்

அன்னா ஹொகஸ் என்பவர் உலகில் கோடிக்கணக்கான மக்களில் துரதிருஷ்டமானவர் என்று குறிப்பிடலாம். அதாவது விண்கல் ஒன்று பூமியில் விழுவது அரிதானது. அதுவே நிலத்தில் விழுவது மிகமிக அரிதானது. அதுவே மனிதனை தாக்குவது மிகவும் அரிதானது. அப்படியான அரிதான தாக்குதலுக்கு இலக்கானவர் தான் இந்த அன்னா ஹொகஸ்.



அதாவது, அறிந்த வரலாற்றில் விண்கல் தாக்குதலுக்கு இலக்கான முதல் மனிதனும் இவர் தான்.

1954 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி 34 வயதாக இருந்த ஹொகஸ் அலபாமாவில் இருக்கும் தனது வீட்டின் சோபாவில் உறங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது கூரையை பீய்த்துக்கொண்டு வந்த கறுப்பு நிறமான கல் ஒன்று ரேடியோ இருந்த பக்கமாக விழுந்து ஹொகஸின் இடுப்பு பகுதியை உராய்ந்து சென்றது. அவர் நடுக்கமுற்று எழுந்து நின்றார். கூரையில் பெரிய ஓட்டை, தரையில் விசித்திரமான கல் ஒன்று இருந்தது, பாரிய துளையும் ஏற்பட்டிருந்தது.

புல்லட் வேகத்தில் வந்த அந்த விண்கல்லில் இருந்து அவர் உயிர் தப்பியதே பெரிய அதிர்ஷ்டம் தான்.

# உலகில் அதிக மக்களை சிரிக்க வைத்த சார்லி சாப்ளின்

**வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பார்கள் அப்படிப்பார்த்தால் நம்மை வாய்விட்டு சிரிக்க வைப்பவர்களை மருத்துவர்களுக்கு சமம் என்று சொல்லலாம். உலகில் அதிக மக்களை சிரிக்க வைத்த நபர் யார் என்று கேட்டால் ஒரே ஒரு நபரைத்தான் வரலாறு புன்னகையுடன் உதிர்க்கும். அவர்தான் ஈடு இணையற்ற ஆங்கில நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் . இன்று திரைப்படங்களில் வசனங்களை கேட்டு சிரிக்கிறோம் ஆனால் ஊமைப்படங்கள் மட்டுமே வெளிவந்த ஒரு கால கட்டத்தில் மொழியின் துணையின்றி வசனம் எதுவும் பேசாமல் தன் அங்க அசைவுகளாலே ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்தவர்தான் சார்லி சாப்ளின்.**

1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி லண்டனில் உள்ள வால்வொர்த் நகரில் சாள்ஸ்க்கும் ஹன்னா ஹாரியட் ஹில்லுக்கும் மகனாகப் பிறந்தார். இவன் பிறந்த சில நாட்கள் கழித்து பெற்றோர்களது திருமண வாழ்க்கை முறிந்தது.

பெற்றோர் இருவரும் மேடை இசைக் கலைஞர்கள் ஆவர். மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தனர். சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் தந்தை குடித்தே தீர்த்தார். ஒரு நாள்மேடையில் பாடும்போது சாப்ளினின் அம்மாவிற்குத் தொண்டையில் பிரச்சினை ஏற்பட்டது. அவளால் பாட முடியவில்லை. அதனால் ரசிகர்கள் ஒரே கூச்சலிட்டனர். அவமானம் கண்ணீராகக் கரைய மேடையை விட்டு கீழே இறங்கினாள் ஹென்னா. அப்போது ஐந்து வயது சிறுவன் சார்லி சாப்ளின் என்ன நினைத்தானோ தெரியவில்லை. உடனே வேகமாக மேடையேறினான். அது ஒரு மகா கலைஞனின் முதல் கலைப் பயணம் என்று யாருக்கும் அப்போது தெரிந்திருக்காது!

தன் அம்மா சொல்லிக் கொடுத்த பாடலைப் பாடி, தன் பிஞ்சு கால், கைகளை அசைத்து நடனமாடத் தொடங்கினான். ரசிகர்களின் விசில் சத்தத்தாலும், கைத்தட்டலாலும் அரங்கமே அதிர்ந்தது! மேடையை நோக்கிச் சில்லறைகள் சீறிப் பறந்தன. சிறுவனான சார்லி சாப்ளின் உடனே பாடுவதை நிறுத்திவிட்டுச் சில்லறைகளைப் பொறுக்கினான். கூட்டமோ சார்லி சாப்ளினை பாடச் சொல்லி கூச்சலிட்டது!

ஆனால் சார்லி சாப்ளினோ சிறிதும் சளைக்காது 'சிறிது நேரம் பொறுத்திருங்கள்! சில்லறைகளைப் பொறுக்கிய பிறகுதான் பாடுவேன்; ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளை என்னால் செய்ய முடியாது!' என்று கூறிவிட்டுச் சில்லறைக்காசுகளைப் பொறுக்கத் தொடங்கினான் சார்லி சாப்ளின். கூட்டத்தினர் சிரித்தனர். மீண்டும் மீண்டும் எழுந்த சிரிப்பால் வானம் அதிர்ந்தது! தன் தாய் பாடமுடியாமல் தவித்ததை நடித்துக் காட்ட மீண்டும் காது கிழியும் சிரிப்பொலி எழுந்தது.


சார்லி சாப்ளின் ஆதரவற்றோருக்கான பாடசாலை ஒன்றில் வளர்ந்தான். சார்லி சாப்ளினின் பன்னிரண்டாவது வயதில், அவனது தந்தை குடிப் பழக்கத்தால் உடல் நலம் குன்றி இறந்தார். தாயும் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி ஒரு மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான காப்பகம் ஒன்றில் சேர்க்கப்பட்டார்.




சார்லி சாப்ளின் பத்து வயதாக இருந்த போது ஒரு பூனையாக நகைச்சுவையான பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பை பெற்றிருந்தார். 1903ஆம் ஆண்டில் ஒரு நாடகத்தில் நடித்தார். ஷெர்லக் ஹோம்ஸ் நாடகத்தில் செய்தித்தாள் விற்கும் சிறுவன் பில்லி வேடத்தில் நடித்தார். இதனைத் தொடர்ந்து பல்சுவை நிகழ்ச்சியிலும், ஒரு நகைச்சுவை நிறுவனத்திலும் கோமாளி வேடத்திலும் நடித்தார்.

1912 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 இல் நாடகக் குழுவொன்றுடன் சார்லி சாப்ளின் ஐக்கிய அமெரிக்காவுக்கு சுற்றுலா மேற்கொண்டார். பின்னர் அங்கேயே தங்கிவிட தீர்மானித்தார்.

அவர் நடித்த முதலாவது ஊமைப்படம் 1914 ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்படம் பெரிய வரவேற்பு எதனையும் பெறவில்லை. அதே ஆண்டில் வெளிவந்த மற்றொரு திரைப்படத்தில் தான் விரும்பியபடி நடிப்பதற்கு சார்லி சாப்ளினுக்கு அவகாசம் வழங்கப்பட்டது. இதில்தான் சார்லி சாப்ளின் எவராலும் மறக்க முடியாத தனது வினோத ஆடைகளுடன் முதன் முதலாக காட்சியளித்தார். பை போன்ற நீளக் காற்சட்டை, மாற்றி அணிந்த சப்பாத்துக்கள், குட்டையாக கத்தரிக்கப்பட்ட மீசை, அழுக்குத் தொப்பி, கைத்தடி, தள்ளாடிய நடை முதலிய சார்லி சாப்ளினின் சிறப்பு சின்னங்கள் இத் திரைப்படத்திலேயேதான் முதன் முதலாக புகுத்தப்பட்டன. இவையே அவருக்கு மறையாத புகழைப் பெற்றுக்கொடுத்த சிறப்பு சின்னங்களாக அமைந்தன. இந்த திரைப்படத்தை தொடர்ந்து அவரது புகழ் அமெரிக்காவில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் விரைவாகப் பரவியது. இவை அனைத்தும் அவராலேயே தயாரித்து இயக்கபட்டவையாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சார்லி சாப்ளினின் முழுநீள திரைப்படங்களுள் பல வெற்றி பெற்றன.





சார்லி சாப்ளினின் முதல் பேசும் படம் 1940 ஆம் ஆண்டில் வெளியானது. இது அடோல்ஃப் ஹிட்லரையும் அவரது பாசிச கொள்கையையும் எதிர்த்து குரல் கொடுத்த படம். இப்படம் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் புகுவதற்கு ஒரு வருடம் முன்பு அங்கு வெளியிடப்பட்டது.

இதில் சார்லி சாப்ளின் இரு வேடங்கள் பூண்டிருந்தார். அவை ஹிட்லர் மற்றும் நாசியர்களால் கொடுமையாக கொல்லப்படும் யூத இனத்தைச் சேர்ந்த ஒரு நாவிதன். சினிமா மீது மோகம் கொண்ட ஹிட்லர் இப்படத்தை இரு முறை பார்த்தார்.

சார்லி சாப்ளினின் படங்கள் சாதாரண மக்களால் மாத்திரமன்றி உலகின் பிரபல தலைவர்களாலும் விரும்பி ரசிக்கப்பட்டன. வின்ஸ்டன் சேர்ச்சில், லெனின், ஸ்டாலின், ஜவஹர்லால் நேரு, அடோல்ப் ஹிட்லர் போன்ற அக்கால உலகத் தலைவர்கள் சார்லி சாப்ளினின் திரைப்படங்களின் பிரத்தியேக பிரதிகளை வைத்துக்கொண்டு ஓய்வு நேரங்களில் பார்த்து மகிழ்ந்தனர். ஹிட்லர் எந்தளவு சார்லி சாப்ளினின் மீது பிரியம் வைத்திருந்தாரென்றால் தனது ஹிட்லர் மீசையை கூட சார்லி சாப்ளினை பின்பற்றியே வைத்திருந்தார்.

சாப்ளினின் அரசியல் சிந்தனைகள் இடது சார்புடையதாகக் கருதப்படுகிறது. இது இவரது திரைப்படங்களில் பிரதிபலித்தன. இப்படம் பாட்டாளிகள் மற்றும் ஏழைகளின் கவலைக்கிடமான நிலைமையை சித்தரித்தது. இவர் அமெரிக்க கொள்கைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், கம்யூனிஸ்ட் கொள்கைவாதி எனவும் சந்தேகிக்கப்பட்டார். அதனால் புலனாய்வு பிரிவிடம் இவரை கண்காணிக்குமாறு உத்தரவிடப்பட்டது. அமெரிக்காவில் சார்லி சாப்ளின் வாழும் உரிமையை நீக்க முயற்சி எடுக்கப்பட்டது. சார்லி சாப்ளினின் வெற்றிகள் அனைத்துமே அமெரிக்காவில் அமைந்தாலும், அவர் பிரிட்டிஷ் குடியுரிமையினையே நீடித்தார். 1952 ஆம் ஆண்டில் சார்லி சாப்ளின் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதனை தெரிந்துகொண்ட புலனாய்வு பிரிவினர் சாப்ளின் அமெரிக்கா திரும்பும் அனுமதிச் சீட்டை ரத்து செய்தார்கள். ஆதலால் அவர் இங்கிலாந்திலேயே தங்கும்படி நேர்ந்தது. பெரும்பாலும் சுவிஸர்லாந்தில் வாழ்ந்தார். இவர் 1972 ஆம் ஆண்டில் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவ ஒஸ்கார் விருதைப் பெறுவதற்காக அமெரிக்கா திரும்பினார்.

சார்லி சாப்ளின் ஒன்றன் பின் ஒன்றாக நான்கு மனைவிகளை மணந்தார். முதலாவது மனைவி மில்ட்ரெட் ஹாரிஸ் அவர்களுடனும் (ஒரு பிள்ளை), இரண்டாவது மனைவி லீட்டா கிரே அவர்களுடனும் (இரு பிள்ளைகள்), மூன்றாவது மனைவி போலெட் கொடாட் அவர்களுடனும் நான்காவது மனைவி ஊனா ஓ நீல் அவர்களுடனும் (எட்டு பிள்ளைகள்) வாழ்ந்தார். 1943 ஆம் ஆண்டு ஜூன் பதினாறாம் திகதி சார்லி சாப்ளின் தனது 54 ஆம் வயதில் 17 வயது நிரம்பிய நான்காவது மனைவியான ஊனா ஓ நீலை மணந்தார். இத் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியுடன் பல வருடங்கள் நீடித்தது. இவர்களுக்கு எட்டு பிள்ளைகள் பிறந்தனர்.

1975 மார்ச் நான்காம் திகதி பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணி 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தார். 1985 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இவரது உருவத்தை தபால் தலையில் வெளியிட்டு பெருமை சேர்த்தது. சார்லி சாப்ளினின் வாழ்க்கை வரலாறு 1992 ஆம் ஆண்டு 'சாப்ளின்' என்ற பெயரில் ஒஸ்கார் விருது பெற்ற சேர் ரிச்சர்ட் அட்டென்பரோ என்பவரால் இயக்கி திரைப்படமாக்கப்பட்டது. இந்தப் படத்தில் அவரது மகள் ஜெரால்டின் சாப்ளின், சார்லி சாப்ளினின் தாயாக நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சார்லி சாப்ளின் 1977 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று தனது 88 ஆவது வயதில் சுவிட்சர்லாந்தின் வேவே நகரில் இறந்தார்.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**

# புலம்பெயர் எழுத்தாளர் பூங்கோதையின் "நிறமில்லா மனிதர்கள்" நூல் வெளியீட்டு விழா
























புலம்பெயர் எழுத்தாளர் பூங்கோதை எழுதிய "நிறமில்லா மனிதர்கள்" நூல் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் நடராஜர் காண்டீபன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் திருமதி நளினி ரட்ணராஜா வரவேற்புரை ஆற்ற, ஊடகவியலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் நூல் அறிமுக ஆற்றினார். அகில இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வரக்குருக்கள் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராஜா, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள். சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை நூல் நயவுரை ஆற்றினார். இதன்போது நூலின் முதல் பிரதியை முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடமிருந்து ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் பெற்றுக் கொண்டார். நூலின் ஆசிரியை பூங்கோதை ஏற்புரையாற்றினார்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி




**மொக்கை :** முதலாளி.. எனக்கு கல்யாணமாயிருச்சு.. கொஞ்சம் சம்பளத்தை சேர்த்துக் கொடுங்க..
**முதலாளி :** கம்பெனி வளாகத்துக்கு வெளியே நடக்கற விபத்துகளுக்கு நான் நஷ்ட ஈடு தர இயலாது..!



**வேலு :** சாரம் வியாபாரி எப்படி சிரிப்பாரு?
**பாக்கி :** கு'லுங்கி' கு'லுங்கி' த்தான்.



**மீசைக்காரர் :** அந்த நடிகை, இது என்னோட மானப்பிரச்சினை விடமாட்டேன்னு சொல்றாங்களே என்னாச்சி ?
**பிட்டுக்காரர் :** படத்துல அவங்க குளிக்கிற ஸீனை சென்ஸார்ல கட் பண்ணிட்டாங்களாம்





**ஜோன்ஸ் :** இவர் பழக இனிப்பானவர்
**பீன்ஸ் :** என்ன செய்றார்?
**ஜோன்ஸ் :** ஸ்வீட் கடை வச்சிருக்கார்.



**தளபதி :** போர் தொடங்க இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கு... ஏன் இன்னும் நமது ஆயுதக் கிடங்கை திறக்கவில்லை?
**வீரன் :** நமது அரசர் அதுக்குள்ளேதான் ஒளிஞ்சுக்கிட்டிருக்காரு... எப்படித் திறப்பது?




**ராணி :** போஸ்ட் மேனைக் காதலிக்கிறீயே... என்ன சொல்றார் ?
**வேனி :** ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்கிறார்



நண்பர் : என்ன ஜோஸியரே, கிளிக் கூண்டு ரொம்பச் சின்னதாயிருக்கு ?
ஜோசியர் : உள்ளே இருக்கிறது, வெட்டுக்கிளிங்க



**வேலு :** நேத்து பல்லே விலக்கலை .. ..
ரமனன் : ஏன் .. ..
**வேலு :** என் மனைவி பக்கத்திலே இருந்ததால் வாயே திறக்க முடியலை ..



**பூஜா :** அவர் ஏன் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிறார்?
**ராஜா :** அவருக்கு அடிக்கடி லைப்ரரி போற மாதிரி கனவு வருமாம்

# அளவில்லாத ஆர்வமே பரதக்கலையில் எல்லையில்லா ஆனந்தத்தைத் தந்தது

## "தர்ஷண சேத்ரா" கலைக்கூட ஸ்தாபகர் தர்ஷாஹினி ஜெகநாதன்



நான் தர்ஷாஹினி ஜெகநாதன் எனது தந்தை கணபதிப்பிள்ளை ஜெகநாதன் எனது தாய் நளினி ஜெகநாதன்.

மிகச் சிறிய வயதில் இருந்தே எனக்கு நடனக் கலை மீது பெரும் ஆர்வம் இருந்து வந்தது. மேடை நிகழ்ச்சிகளில் ஆற்றுகை செய்ய சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும் போதும் அந்த வாய்ப்பை இறுக்கமாக பற்றிக் கொள்வேன். பாடசாலையில் ஒரு பாடமாக பரத நாட்டியத்தை கற்று வந்தேன். நடன போட்டிகள், விவாத போட்டிகள், பேச்சு போட்டிகளில் மற்றும் ஆன்மிகம் சார்ந்த போட்டிகளில் அதிகமாக பங்கெடுத்து கொள்வேன். கொழும்பு முகத்துவாரம் இந்து கல்லூரியில் எனது பாடசாலை படிப்பை 2012ம் ஆண்டு முடித்துக் கொண்டேன். எனது பாடசாலையில் அந்த ஆண்டுக்கான *best performer award* எனக்குக் கிடைத்தது.

பாடசாலை படிப்பை முடித்ததன் பின்பு நடனத்தின் மீது இருந்த ஆர்வத்தினால் இந்தியா சென்று படிக்கவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. குடும்ப பொருளாதார சூழல் காரணமாக அப்போது அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் கலை மீது கொண்ட ஆர்வத்தினால் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைகழகத்தில் நடனத்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு நுண்கலை மாணி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து கொண்டேன். பல்கலைகழக படிப்பின் போது அதில் திறமையாக செயற்பட்டதன் விளைவாக அந்த வகுப்பு மாணவர்களிடையே சிறந்து விளங்கியதோடு அதே பல்கலைக்கழகத்தில் ஒருவருடம் தற்காலிக விரிவுரையாளராக கடமையாற்றும் வாய்ப்பு பெற்றுக் கொண்டேன். அதன் பின் முதுகலைமாணி பட்டப்படிப்பினை இந்தியாவில் தொடர்வதற்காக *ICCR ( Indian Council for Cultural Relations) Scholarship* பெற்று *The Maharaja Sayajirao University of Baroda*, எனும் பல்கலைகழகத்தில் எனது முதுகலைமாணி பட்டப்படிப்பினை ஆங்கில மொழி மூலம் வெற்றிகரமாக முடித்துக் கொண்டேன்.

**எனது முதுகலைமாணி பட்டபடிப்பின் போது இதுவரை அந்த பல்கலைக்கழகத்தில் யாரும் பெற்றிடாத அதிக மதிப்பெண் பெற்று (97.4) சாதித்த தோடு 2021க்கான அப்பல்கலைக்கழக தங்க பதக்கத்தினை பெற்றுக்கொண்டேன். பல்வேறு நாடுகளிலிருந்து அங்கு கல்வி பயின்ற மாணவர்கள் மத்தியில் எனது நாட்டினை பிரதிநிதித்துவ படுத்தி 2021க்கான சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்டதில் பெருமை கொள்கிறேன்.**

எனது முதுகலைமாணி பட்டபடிப்பின் போது இதுவரை அந்த பல்கலைக்கழகத்தில் யாரும் பெற்றிடாத அதிக மதிப்பெண் பெற்று (97.4) சாதித்த தோடு 2021க்கான அப்பல்கலைக்கழக தங்க பதக்கத்தினை பெற்றுக்கொண்டேன். பல்வேறு நாடுகளிலிருந்து அங்கு கல்வி பயின்ற மாணவர்கள் மத்தியில் எனது நாட்டினை பிரதிநிதித்துவப் படுத்தி 2021க்கான சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்டதில் பெருமை கொள்கிறேன்.

அத்துடன் இந்தியாவில் இருந்த காலங்களில் இரண்டு வருட கதக் நடன டிப்ளமோ படிப்பினையும் பூர்த்தி செய்துள்ளேன். எனது முதுகலை பட்டத்தை முடித்து வீடு திரும்பிய பின்பு "தர்ஷண சேத்ரா" எனும் கலைக்கூடத்தை ஆரம்பித்து பரதநாட்டிய வகுப்புகளை நடாத்தி வருகிறேன்.

### வயது

நடனத்துறைக்குள் எனது பிரவேசம் எனது ஐந்தாவது வயதில் இடம்பெற்றது. எனது தாயின் தாய் (அம்மம்மா) நடனக்கலையில் மிகவும் விருப்பம் கொண்டவர். அவர் என்னை நடன வகுப்பிற்குக் கொண்டு சென்று வருவதோடு எனது நடனத்தை வீட்டிலும் மேடையிலும் பார்த்து இணையற்ற மகிழ்ச்சி கொள்வார். என்னை நிறைய மேடைநிகழ்ச்சிகளில் காணவேண்டும் என்பது அவரது அவாவாக இருந்தது. இவ்வாறு எனது அம்மம்மாவிற்காக அவரினூடகவே நடனத்துறைக்குள் எனது பிரவேசம் இடம் பெற்றது. ஆனால் சிறிது காலங்களிலேயே அவர் இறைபதம் அடைந்து விட்டார். அவரது ஆசீர்வாதங்களே இன்றும் என்னை வழிநடத்துகிறது என நம்புகிறேன்.

### பரதம் மற்றும் கதக் கலை கற்பித்த ஆசான்கள்

எனக்கு பரதக்கலையை அறிமுகப்படுத்தியவர் பாடசாலை ஆசிரியராகத் திகழ்ந்த திருமதி திலகா மகேஷ்வரன்.



இரண்டாவதாக கலாசேத்திராவில் தனது பரதநாட்டிய படிப்பினை முடித்துக்கொண்ட திருமதி சகிதா ஜினோரஞ்சன் ஆசிரியை, இவரே பரதக்கலையின் மீது எனக்கு பேரும் பக்தியையும் அர்ப்பணிப்பையும் ஏற்படுத்தியவர். இவரும் சில வருடங்களில் வேலை நிமித்தமாக சிங்கப்பூர் சென்று விட்டார். அதன் பின் கலாசேத்ராவில் தனது பரதநாட்டிய படிப்பினை முடித்துக்கொண்ட திருமதி றிஷாந்தினி சஞ்சீவன் ஆசிரியரிடம் சிறிது காலம் பரதம் பயின்றேன். யாழ்ப்பாணத்திற்கு வந்ததன் பிறகு கலாபூசணம் திருமதி பத்மினி

செல்வேந்திரகுமார் ஆசிரியரிடம் நடன பயிற்சியை மேற்கொண்டு வருகிறேன்.

கதக் நடனத்தை ஜெயப்பூர் பாணியை சேர்ந்த ஜெகதீஸ் கங்காணி எனும் புகழ் பெற்ற கதக் ஆற்றுகையாளரின் மாணவிகளான Dr. ப்ரீத்தி ஷா மற்றும் யுதி பாண்டியாவிடம் கற்றுக்கொண்டேன். இவர்கள் The Maharaja Sayajirao University of baroda வில் விரிவுரையாளர்களாக திகழ்கிறார்கள்.

இத்தருணத்தில் எனது பல்கலைக்கழகங்களிலும் எனது குருவாக திகழ்ந்த அனைத்து விரிவுரையாளர்களையும் நினைவு படுத்த கடமைப்பட்டுள்ளேன்.



## அரங்கேற்றம்

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக காலங்களில் பல்வேறு விதமான மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. இலங்கையில் கொழும்பு, மட்டகளப்பு, திருகோணமலை, கதிர்காமம், யாழ்ப்பாணம் என பல்வேறு பிரதேசங்களில் மேடை நிகழ்ச்சிகளில் ஆற்றுகை செய்துள்ளேன். பரதநாட்டியம் மட்டும் அல்லாது கிராமிய நடனம், கண்டிய நடனம் போன்ற நடனங்களையும் ஆற்றுகை செய்துள்ளேன். எனது அரங்கேற்றம் 2017ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் இராசதுரை அரங்கில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

## ஊக்கப்படுத்தியோர்

எனது தாய், தந்தை. எனது துறை சம்பந்தமான தேர்வில் எனது விருப்பதிற்கும் ஆர்வத்திற்கும் உரித்தான துறையை நான் தேர்ந்து எடுப்பதில் என்றும் எதிர்ப்பு காட்டியதில்லை. அதுவே அவர்கள் எனக்கு அளித்த பெரும் ஊக்கமாக கருதுகிறேன். எனது சித்தப்பா கலை தொடர்பான எனது தேடல்களுக்கு அருமையான புத்தகங்களை எனக்கு பரிசளிப்பவர் அடிக்கடி என்னை ஊக்கப்படுத்தியும் வந்தார். தவிர எனது ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் எனது சிறிய முயற்சிகளிலும் பாராட்டுக்கள் ஊடக ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.



## தர்ஷனசேத்ரா

தற்போழுது தர்ஷன சேத்ரா என்னும் கலைக்கூடத்தை யாழ்ப்பாணம் கோப்பாயில் ஆரம்பித்து நடாத்தி வருகிறேன். அதில் பயிற்சி பெரும் மாணவர்களுக்கு முறையாக பரதநாட்டியம் கற்றுக் கொடுப்பதுடன் கதக் நடனத்தையும் கற்றுக்கொடுக்க முடிவு செய்துள்ளேன். வெறும் பாடசாலை பரீட்சைக்கான கற்பித்தலோடு நின்று விடாமல் எல்லை இல்லாத கடலாக பரந்து விரிந்து இருக்கும் பரதநாட்டிய கடலில் அவர்களை மூழ்கி முத்தெடுக்க செய்யும் ஆர்வத்தை அவர்களுக்குள் புகுத்தி இலங்கையின் புதிய பரதநாட்டிய வரலாற்றுக்கு பாலமாக சிறந்த ஆற்றுகையாளர்களாக அவர்களை உருவாக்க வேண்டும் என்பதே இந்த கலைகூடத்தின் நோக்கம்.




## இலட்சியம்

கலையில் பூரணத்துவம் அடைய பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. எனக்கு கலையை கற்க கல்வியே ஊடகமாக திகழ்ந்தது. கலைத்துறையில் இன்னும் இன்னும் கற்கவும் கற்பிக்கவும் ஆவலாக உள்ளேன். நடத்தில் புதிய பாதைகளை உருவாக்க வேண்டும், ஒரு ஆற்றுகை கலைஞராக வலம் வர வேண்டும், நிறைய ஆற்றுகை கலைஞர்களை உருவாக்கவேண்டும், என்னைபோன்ற கலைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழவேண்டும் என்பது எனது பெருவிருப்பம் .

## ஆர்வம் ஏற்பட காரணம்

பரதநாட்டியத்தை ஆற்றுகை செய்யும் போது எப்பொழுதும் அளவில்லா மகிழ்ச்சிச்சிக் கொள்வேன். ஆரம்பத்தில் இந்த கலையை விளையாட்டாகத்தான் கற்றுவந்தேன். ஒரு காலகட்டத்தின் பின்பு அதன் மீது அளவில்லாத ஆர்வம் ஏற்பட்டது. அதிலிருந்து எனது கலை தான் என்னை வழிநடத்தி வருகிறது. ஒரு துறையில் நாங்கள் முழுமையான அர்ப்பணிப்புடன் ஈடுபடும் பொழுது அதற்கான வழி தானாகவே உருவாகும் என்பது எனது நம்பிக்கை.



கே. ஈஸ்வரலிங்கம்

# யார் கடவுள்..?

நீ இருப்பாயென்று
நானும் பிறக்கவில்லை
யான்
இருப்பேனென்று
நீயும் பிறக்கவில்லை
தாயிருந்தாள் பலருக்கு
அவள் கூட இல்லை
சிலருக்கு..
உலகில் பிறக்கும்
உயிருக்குள் அவன்
ஒழிந்திருப்பான்
என்பதே
உண்மை.

அவன் மதத்துக்குள்
அடங்காத
மாபெரும் வெளி
நீர், காற்று, தீ, நிலம்
ஆகாயம் அனைத்தும்
அவன் மூச்சில்தான்
ஆடுகிறது
அண்டமே
அவனெனும் போது
முண்டமாய் நாம்
மதச்சண்டையிட்டு
மடிகிறோம்.

நோய் வந்து
அழிக்கும்போது அந்த
நுன்னுயிரை
அழிக்க யாரால் முடிகிறது
அன்று
படித்தது இன்று
புதியது எனும் போது
படித்தவன்
என்பவன் யாரோ
உண்ண உணவில்லை
எனும் போது
கோடீஸ்வரன்
என்பவன் எவனோ

எல்லாம்
தெரிந்துவிட்டால்
ஞானி
நாங்கள் இங்கு வெறும்
பேணியே
தேடுவோம் வெளியே
இல்லை
எம்முக்குள்ளவே
இறைவனை..

**பசுவூர்க்கோபி**
**ஐயாக்குட்டி கோவிந்தநாதன்.**
**நெதர்லாந்து.**

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**ஆர். எல்.முத்து. வவுனியா.**

**கேள்வி:** எம்.ஜி.ஆருக்காக டி.எம்.சௌந்திராஜன் பாடிய முதல் பாடல் எது?

**பதில்:** 'மலைக்கள்ளன்' படத்தில் இடம் பெற்ற "எத்தனைக் காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே"என்ற பாடல். இது இன்றைக்கும் பொருத்தமான பாடலாகவே இருக்கிறது!



**ஆர். எம்.புஹாரி. மன்னார்.**

**கேள்வி:** கவிஞர் கண்ணதாசன் எழுதிய கடைசிப் பாடல் எது? வைரமுத்து எழுதிய முதல் பாடல் எது?



**பதில்:** கவிஞர் கண்ணதாசன் எழுதிய இறுதிப் பாடல் "கண்ணே கலைமானே",

வைரமுத்து எழுதிய முதலாவது பாடல் "இது ஒரு பொன் மாலைப் பொழுது"!

**ஆர்.முபாரக். கொலொன்னாவ.**

**கேள்வி:** இசை அமைப்பாளரும் நடிகருமான விஜய் அந்தோனி இப்போது படங்களில் நடிப்பதில்லையா...?

**பதில்:** தன்னுடைய தோற்றத்திற்கும் ,வசன உச்சரிப்பு க்கும் ஏற்ற வகையிலான க்ரைம்,த்ரில்லர் கதைகளை தெரிவு செய்து அத்தகைய படங்களில் நடித்து தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டவர் இசை அமைப்பாளரும் நடிகருமான விஜய் அந்தோனி. இவரின் நடிப்பில் தற்போது உருவாகி வரும் 'கொலை'என்ற படமும்,கொலையும் கொலை சார்ந்த மர்மமும் கொண்ட க்ரைம். திரில்லர் திரைப்படமாகும். இதில் இவர் கொலயாளிகளை கண்டு பிடிப்பதற்கான துப்பறியும் புலனாய்வு வேடத்தில் நடித்து அசத்தியிருக்கிறார். 'விடியுமுன்' படத்தை இயக்கிய பாலாஜி குமார் இயக்கத்தில் தயாராகி வரும் இந்த எக்சன் க்ரைம் திரில்லர் படத்தில் விஜய் அந்தனிக்கு ஜோடியாக நடிகை ரித்திகாசிங் நடித்திருக்கிறார். ஹொலிவுட்டில் வெளியான' நைவ்ஸ் அவுட்' படம் பாணியில் 'கொலை'தயாரகி வருகிறது என படக்குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகி பெரும் எதிர்பார்ப்பையும் ஆர்வத்தையும் உண்டாக்கி இருக்கிறது.



**ரஷ்மிகா வத்தளை.**

**கேள்வி:** 'பீஸ்ட்' படத்தைத் தொடர்ந்து தளபதி விஜய் ஏதாவது படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறாரா?

**பதில்:**தளபதி விஜய் நடிப்பில் ஏப்ரல் 13ஆம் திகதி அன்று 'பீஸ்ட' படம் வெளியானதைத் தொடர்ந்து உற்சாகத்தில் விஜயின் ரசிகர்கள் இருக்கும்போது...அவர் நடிப்பில் உருவாகும் அடுத்த படத்திற்கான தொடக்க விழாவும் படப்பிடிப்பும் சென்னையில் தொடங்கி இருக்கிறது. 'தோழா' என்ற வெற்றிப் படத்தை இயக்கிய வம்சி இயக்கத்தில் தயாராகும் இந்த படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 66'என்று பெயரிப்பட்ருடிக்கிறது. பெரும் எதிர்பார்ப்பிற்குப் பின் நடிகை ரஷ்மிகா மந்த்ரா விஜய்க்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்தப் படத்தில் முதன் முறையாக அவருடன் சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் இணைந்து நடிக்கிறார். இந்தமுறை 'தளபதி 66'படத்திற்கு இசை அமைப்பாளர் எஸ்.தமன் இசை அமைக்கிறார்.விஜய் வம்சி தமன் கூட்டணி வெற்றியை வழங்கும் என உறுதியாக நம்பலாம்.



**எம்.மாகரட் எலபடகம.**

**கேள்வி:**'பிக் பொஸ்' மூலம் பிரபலமான நம்நாட்டு லொஸ்லியா இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

**பதில்:** அவர் தற்போது 'அன்ன பூரணி'எனும் புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகி யிருக்கிறார். இந்தப்படத்தில் அவருடன் 'ஜெய் பீம்' படம் புகழ் நடிகை விஜோ போய் ஜோஸ் மற்றும் 'மெட்ராஸ்'படப் புகழ் நடிகர் ஹரிகிருஷ்ணன் ஆகியோர் முதன்மை கதா பாத்திரங்களில் நடிக்கிறார்கள். இந்தப் படத்தை'குதிரைவால்' படத்தை இயக்கிய இயக்குனர்களில் ஒருவரான லயோனல் ஜோஷுவர் இயக்குகிறார். இந்தப் படத்தின் துவக்க விழா சென்னையில் எளிமையாக நடந்தது.லொஸ்லியா நடிப்பில் வெளியான 'பிரண்ட்ஷிப்' திரைப்படம் எதிர்பார்த்த அளவிற்கு வணிகரீதியாக வெற்றி பெறாததால், தமிழ்த்திரை உலகில் முன்னணி நடிகையாக முன்னேறுவதற்கு கடுமையான போராட்டத்தை எதிர் கொண்டிருக்கிறார்.இவரது நடிப்பில் விரைவில் வெளியாக விருக்கும்'கூகுள் குட்டப்பா' வெற்றியைப் பெறும் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறார் நடிகை லொஸ்லியா.நாமும் 'அன்னபூரணி''யாக ஜொலிப்பார் என்று எதிர் பார்ப்போம்.



**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

## பீஸ்ட் படத்தை கண்டு ரசித்த நடிகர் அஜித் குடும்பத்தினர்



நடிகர் விஜய்யின் பீஸ்ட் படத்தை அஜித் குடும்பத்தினர் திரையரங்கில் கண்டு ரசித்தனர்.

நடிகர் விஜய் நடித்துள்ள பீஸ்ட் திரைப்படம் திரையரங்கில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது.

இந்த நிலையில், பீஸ்ட் திரைப்படத்தை பார்ப்பதற்காக அஜித் குடும்பத்தினர் வருகைதந்தனர். அஜித்தின் மனைவி ஷாலினி, தன் மகள் மற்றும் மகனுடன் சென்னை சத்யம் திரையரங்கில் கண்டுரசித்தார். அப்போது அவருடன் ரசிகர்கள் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

பீஸ்ட் திரைப்படத்தை காண அஜித் குடும்பத்தினர் வந்தது ரசிகர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## விஜய் ஜோடியாக நடித்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி பூஜா ஹெக்டே

நடிகை பூஜா ஹெக்டே தனது மனதில் இருக்கும் ஆசையை பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

2012ம் வெளியான 'முகமூடி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர் பூஜா ஹெக்டே. அதனைத்தொடர்ந்து தெலுங்கு படங்களில் தொடர்ந்து நடித்து வந்த அவர், 10 ஆண்டுகளுக்குப் பிறகு 'பீஸ்ட்' படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்துள்ளார்.



சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பூஜா ஹெக்டே, தமிழ் சினிமா பயணம் குறித்து பேசினார். அதில், "எனது சினிமா பயணம் தொடங்கியது தமிழில்தான். ஆனாலும் 'முகமூடி' படத்திற்கு பிறகு தமிழில் எந்த பட வாய்ப்புகளும் வரவில்லை. 'ரோலர் கோஸ்டர்' போல எனது திரை வாழ்க்கையில் மேடுபள்ளங்கள் நிறைய இருந்தன. பல போராட்டங்களுக்கு பிறகே நட்சத்திர நடிகை என்ற அந்தஸ்து எனக்கு கிடைத்தது. 10 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தமிழில் நடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அதுவும் விஜய் ஜோடியாக நடித்தது இரட்டிப்பு மகிழ்ச்சி".

இவ்வாறு பூஜா ஹெக்டே நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.



மோதிப்பார்ப்பதில் உள்ள குதூகலம் ஆடிப்பாடுவதில் வருமோ

# ஏடாகூட கேள்விக்கு

## பிரியா பவானி ஷங்கர் பதிலடி



இன்ஸ்டாகிராம் வாயிலாக ரசிகர்களுடன் கலந்துரையாடிய பிரியா பவானி சங்கர் ரசிகர்கள் கேட்ட ஏராளமான கேள்விகளுக்கு பதிலளித்தார்.

தொலைக்காட்சியில் அறிமுகமாகி வெள்ளித்திரையில் ஜொலித்து வரும் நடிகைகளில், பிரியா பவானி ஷங்கரும் ஒருவர். 'மேயாதமான்', 'கடைக்குட்டி சிங்கம்', 'மான்ஸ்டர்', 'ஓ மணப்பெண்ணே...' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார்.

இதுதவிர 'யானை', 'பத்து தல', 'திருச்சிற்றம்பலம்', 'இந்தியன்2' உள்பட 9 படங்களை கைவசம் வைத்துள்ளார். ஓய்வு நேரங்களில் அவ்வப்போது சமூக வலைதளங்களில் ரசிகர்களுடன் கலந்துரையாடுவதையும் அவர் வாடிக்கையாக கொண்டுள்ளார்.

சமீபத்தில் சமூக வலைத்தளத்தில் ஒரு கலந்துரையாடலில் ரசிகர் ஒருவர், உங்கள் உள்ளாடை அளவு என்ன? என்று ஏடாகூடமான கேள்வியை கேட்டார். இதனால் பிரியா பவானி ஷங்கர் ஆவேசம் அடைந்தார்.

"34 டி சகோதரரே... என் உடல் உறுப்புகளை வேற்று கிரகத்தில் இருந்து வாங்கிக் கொண்டு வரவில்லை. உங்கள் வாழ்க்கையிலும் பெண்கள் இருக்கிறார்கள். உற்று பார்த்தால் உண்மை தெரியும்... வாழ்த்துக்கள்", என்று அவர் பதிலடி கொடுத்துள்ளார். இந்த பதிலை ஆதரித்து திரை பிரபலங்களும் கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள்.

# தந்தை & மகனுடன் நடித்தது பெருமை

## நடிகர் அருண் விஜய்

'ஓ மை டாக்' படத்தில் முதன்முறையாக தந்தை மற்றும் மகனுடன் இணைந்து பணியாற்றியதை ஆசீர்வாதமாக நினைத்து பெருமைப்படுகிறேன் என நடிகர் அருண்விஜய் தெரிவித்திருக்கிறார்.

நடிகர் அருண் விஜய், அவருடைய தந்தை நடிகர் விஜயகுமார், மகன் அர்னவ் விஜய் ஆகிய மூன்று பேரும் 'ஓ மை டாக்' என்ற படத்தில் இணைந்து நடித்து இருக்கிறார்கள். இந்த படத்தை சூர்யா, ஜோதிகா ஆகிய இருவரும் தயாரித்துள்ளனர். இது, செல்லப்பிராணிகளையும், அவைகளின் பாசத்தையும் சித்தரிக்கும் கதை.

இதுபற்றி அருண் விஜய் கூறியதாவது:

"ஒரு நாய் குட்டிக்கும், குழந்தைக்கும் இடையேயான புரிதலை அடிப்படையாக கொண்ட படம், இது. அறிமுக இயக்குனர் சரோவ் சண்முகம் எழுதி இயக்கியிருக்கிறார். இந்த படம் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று தலைமுறை நடிகர்களை ஒன்றிணைத்து இருக்கிறது.



நான், அப்பா விஜயகுமார், என் மகன் அர்னவ் விஜய் ஆகிய மூன்று பேரும் இணைந்து நடித்துள்ளோம். தாத்தா, தந்தை, பேரன் ஆகிய நிஜமான உறவுகளை திரையிலும் காட்டியிருக்கிறோம்.

இது, எனக்கு கிடைத்த ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதம். தமிழ் திரையுலகில் இப்படி நடப்பது, இதுவே முதல் முறை. எங்களால் மறக்க முடியாத அனுபவம். ஊட்டியில் நடந்த படப்பிடிப்பின்போது என் தந்தை மற்றும் மகனுடன் செலவழித்த தருணங்கள், அழகானவை."

இவ்வாறு அருண் விஜய் கூறினார்.





# பெண் எழுத்தாளர் 29

# டெய்சி மாறன்

**இந்தியாவில் மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் என்ற ஊரில் வசித்து வருகிறார் டெய்சி. இவரது கணவர் மாறன் அஞ்சல் துறையில் வேலை செய்கிறார். இரு பிள்ளைகளின் தாயான**

இவர் இளங்கலை கணிதம் (Bsc Maths) படித்துள்ளார். கணவரின் சொந்த ஊர் சென்னை என்பதால் திருமணத்திற்கு பிறகு சென்னையில் 15 வருடங்களாக கதை , கட்டுரை, கவிதை, சிறுகதை என்று எழுதிக் கொண்டிருந்த இவர் கடந்த ஆறு வருடங்களாக நாவல்களும் எழுதிக்கொண்டிருக்கிறார். இதுவரையில் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார்.


மக்கள் விரும்பி வாசிக்கும் அனைத்து மாத இதழ்களிலும் இவருடைய நாவல்கள் வெளிவந்துள்ளன.

இதுவரை 63 நாவல்களும் 95 சிறுகதைகளும் எழுதியுள்ளதாக கூறினார். இவர் தினமலர் TVR சிறுகதைப் போட்டியில் இரண்டு பரிசுகளும், ஜெர்மன் ஞானசௌந்தரி போட்டியில் முதல் பரிசும், வானதி மாத இதழ் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசும், இலக்கியச்சோலை மற்றும் சஹானா மாத இதழ்களில் இரண்டாவது பரிசும் பெற்றுள்ளார்.

மேலும் அமேசான் மற்றும் புஸ்தகா, பாக்கெட் எப்எம் போன்ற இணைய தளங்களில் இவரது ஐம்பதிற்கும் மேற்பட்ட நாவல்கள் ஆடியோ ஸ்கிரிப்ட் ஆகவும் ebook க்காகவும் வெளிவந்துள்ளதாக குறிப்பிட்டார்.

பள்ளிப் பருவத்திலேயே கவிதைகள் எழுதத் தொடங்கிய போதும் அதை கவிதை என்று ஏற்றுக்கொள்ள முடியாமல் பின்னர் கல்லூரி காலகட்டங்களில் அந்த ஆர்வம் மேலோங்கி எழுதத் தொடங்கினார். எழுத்து மூலமாக தன்னை செதுக்கிக் கொண்டார். தனக்கு அவ்வப்போது ஊக்கமளித்து எழுதுவதற்கு நெம்புகோலாய் இருந்தது தன்னுடைய தமிழ்ப் பேராசிரியை புஷ்பராணி மேடம் என கூறி அவருக்கு தனது நன்றிகளை கூறுகிறார்.





மேலும் அவர்களுடைய ஊக்கத்தாலும் தூண்டுதலாலும் பல கவிதைகள் எழுதியதோடு கல்லூரி ஆண்டு மலரில் இவரின் கவிதைகள் வெளிவந்தன. இறுதியாண்டு படிக்கும்போது 7 கல்லூரிகள் இணைந்து நடாத்திய ஒரு கவிதை போட்டியில் 'சுதந்திரம்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதைக்கு முதல் பரிசு கிடைத்தது. அப்போதைய மாவட்ட ஆட்சியாளர் கரங்களில் இருந்து பரிசை பெற்ற போது மிகவும் மகிழ்ச்சியாகவும் கூடவே அடுத்தடுத்து எழுத வேண்டும் என்ற ஊக்கமும் இவருக்கு எழுந்தது.

## இதுவரை இவர் பெற்ற விருதுகளாக

1. காரைக்கால் அம்மையார் விருது.( பன்னாட்டு பெண்கள் அமைப்பு).
2. இலக்கியச்சோலை இமயம் விருது.
3. தமிழ் எழுத்தாளர் ஒன்றிணைப்பு விருது.
4. தென்சென்னை தமிழ்ச்சங்கம் கவி திலகம் விருது.
5. வானதி விருது 2016.
6. தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை(அரசு விருது).
7. அன்னை கல்வி அறக்கட்டளை சமூக சேவை விருது போன்ற விருதுகளாகும்.

## இவர் வெளியிட்ட நூல்கள்

1. 'கனவெல்லாம் நீயானாய்!' (நாவல் தொகுப்பு)
2. 'கண்ணகி நகரம்!' (கிரைம் நாவல்)
3. 'மின்னல் தோன்றியதே! (சிறுகதைத்தொகுப்பு) போன்ற மூன்று நூல்களாகும்.

மேலும் கவிதை பற்றி குறிப்பிடுகையில் கவிதை என்பது படிப்போரும் கேட்போரும் மகிழும் வண்ணம் நல்ல நடையுடையதாக விளங்க வேண்டியது கவிதைக்கு அவசியமானதோர் இலக்கணமாகும். கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகியவற்றால் பிற எல்லாவற்றிலும் சிறந்திருக்க வேண்டியது கவிதைக்கு மிகத் தேவையான பண்பாகும்.

மேலும் நம்முடைய படைப்பு கவிதையாகவோ, கதையாகவோ எது வேண்டுமானாலும் வாசிப்பவர்களை கவர வேண்டுமென்றால் ஒவ்வொரு வார்த்தையிலும் சுவாரஸ்யத்தை திரட்டிக் கொடுக்க வேண்டும்.

கவிதையாக இருந்தால் உணவின் சுவை நாவில் எஞ்சி இருப்பது போல் கவிதையின் சுவடு வாசித்து முடித்த பிறகும் இதயத்தோடு ஒன்றி இருக்க வேண்டும். கதையாக இருந்தால் வாசிப்பவர்கள் பக்கங்களை மடித்து அடையாளப்படுத்தாமல் முழுவதும் படித்து முடித்து விட்டுத்தான் கீழே வைக்க வேண்டும். அதுதான் படைப்பாளரின் வெற்றி!. அந்த அளவுக்கு கதைகளில் ஆர்வத்தை கொண்டு வர வேண்டும் எனக் கூறுகிறார்.

பெண்ணாக எழுத்துத்துறையில் எதிர்நோக்கிய சவால்கள் பற்றி வினவிய போது இவ்வாறு பதிலளித்தார். இரண்டு இருக்கிறது முதலாவது இணையத்தளத்தில் நீண்ட நாவல் ஒன்று எழுதும் வாய்ப்பு கிடைத்தது. நாள்தோறும் ஒரு அத்தியாயம் என்ற கணக்கில் (25 பக்கங்கள்) எழுதி அனுப்ப வேண்டும் என்று சம்மதித்து அக்ரிமென்டில் கையெழுத்து போடும் தருவாயில் இது உன்னால் முடியாது என்று வீட்டினர் தடை போட்டார்கள். என்னால் முடியும் என்று கடுமையாக உழைத்து அந்த நாவலை குறித்த திகதிக்குள் 1800 பக்கங்களில் முடித்துக் கொடுத்தேன். அதே காலகட்டத்தில், மூன்று மாத நாவல்களும், பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதி முடித்தேன். சிறுகதைப் போட்டிக்காக ஒரே நாளில் எழுதிய ஒரு சிறுகதைக்கு (ரூ10000) இரண்டாவது பரிசு கிடைத்தது எதிர்பாராத வெற்றி.

ஒரு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து எழுதிய நாவல் மிகப்பெரிய சர்ச்சையை உண்டாக்கிவிட்டது. அந்த பிரச்சனைகளை தைரியமாக எதிர்கொண்டு அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அதிலிருந்து வெளியில் வந்தேன் அதற்கே பல மாதங்களானது என தான் எதிர் நோக்கிய சவால்களை மனம் திறந்து பகிர்ந்து கொண்டார்.

மேலும் கவிதை என்பது உணர்வுகளின் உள்ளடக்கம் இரண்டு வரி கவிதையில் (ஹைக்கூ)உலகத்தையே உள்ளடக்கும் சக்தியுள்ளது. இரண்டு அடிகளை கொண்ட உலகப் பொதுமறை திருக்குறள் உலகமெங்கும் பரவி சிறந்து விளங்க வில்லையா? அப்படித்தான் நாம் எழுதும் கவிதையும்.

கவிதை என்பது மனதுக்கும் அறிவுக்கும் இடையே பாலம் அமைப்பது. மனதின் காயங்களுக்கு மருந்தாவது கவிதை. கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் வண்ணமும் வடிவமும் தருவது கவிதை. நேற்று இன்று நாளையைக் கூட நொடியில் இரண்டறக் கலந்துவிடுவது, இடம் பெயர்த்துவிடுவது கவிதை. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தொலைக்க வழியமைத்துக்கொடுப்பது கவிதை. அன்பின் மொழியாவது கவிதை. இப்படி கவிதை சார்ந்த விடயங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

பெண்கள் அனைவரும் கல்வி கற்று 'வேதம் படைக்கவும் நீதி செய்யவும் வேண்டி' வரவேண்டும் என விரும்பினார் பாரதி.

பெண்களின் நலன் கருதி பெண்களுக்காகவே தன்னுடைய கவிதைகளின் வாயிலாக குரல் கொடுத்தவர் பாரதி. கவிதை வாயிலாக எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு பாரதிதான் முதல் உதாரணம் எனக் கூறுகிறார்.

கவிதையால் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை உண்டாக்க முடியும். பகுத்தறிவு வளரச் செய்யலாம் பகுத்தறிவு வளர்ந்தால் நாட்டில் ஒற்றுமை நிலவும். நாடு ஒற்றுமையாக இருந்தால் உலகத்தில் அமைதி நிலவும் என தனது பதில்களை வழங்கினார்.





**மஜீனா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

தினகரனின் 90 ஆவது நிறைவையொட்டி

தினகரன் வாரமஞ்சரி வானவில்

# உடப்பில் ஐம்பெரும் விழா

## வாழ்நாள் சாதனையாளர்கள் வாழும் போது வாழ்த்தி கௌரவிப்பு

















படங்கள்: உடப்பு குறூப் நிருபர் கே. மகாதேவன், எஸ். தனேந்திரன்

## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## நிறம் தீட்டுங்கள்



## சரியான விடையை எழுதுங்கள்





1 + 1 = ☐

3 + 2 = ☐

1 + 1 = ☐

1 + 2 = ☐

3 + 1 = ☐

2 + 2 = ☐





## வழிகாட்டுங்கள்



# அரச கலாபூசண விருதால் மகுடம் சூட்டப்படுவதற்கு தினகரன் பத்திரிகையின் பங்களிப்பு அளப்பரியது

## கலாபூசணம் மலாய்க்கவி டிவங்ஸோவுடனான ஒரு நேர்காணல்




**கேள்வி:** நீங்கள் மலாய் மொழியை தாய்மொழியாகக் கொண்ட குடும்பத்திலிருந்து வந்தவர் தமிழ் மொழி மீதான பற்றும் பாண்டித்தியமும் எவ்வாறு ஏற்பட்டது? அதனை சற்று விளக்குவீர்களா?

**பதில்:** அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப்புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே) எனது தந்தையார் வு.லு. டிவங்ஸோ உட்பட அவரது குடும்ப உறவுகள் அனைவரும் இலங்கை பாதுகாப்புத் துறைகளில் சேவையாற்றிய மலாயர்கள். பின்னர் எனது தந்தையார் டைம்ஸ் ஒஃப் சிலோன் என்ற பத்திரிகை நிறுவனத்தில் ஓய்வு பெறும் வரை பணியாற்றினார். மலாய், சிங்களம் மற்றும் ஆங்கிலம் எனும் மொழிகள் குடும்ப வழக்கத்தில் பேசப்பட்டு வந்தாலும், எனது தந்தையார் தமிழின் மீது அபார பற்றுக் கொண்டிருந்தார். ஆன்மிகத்தில் அதீத ஈடுபாடு கொண்ட அவர் அரபுத்தமிழ் ஞானமணி மாலை, குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களால் இயற்றப்பட்ட பழங்கால தமிழ் மொழியிலான இஸ்லாமிய காவியங்களை தேடித் திரிந்து பெற்றுப் படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அதன் பயனாகவே குடும்பத்தில் மூத்த மகனான என்னை தமிழ் மொழி மூலம் கற்க வைத்தார். தமிழில் கற்று சிறந்து விளங்க வேண்டுமென்பதே அவரது நோக்கமாக இருந்தது.

**கேள்வி:** ஆரம்ப கல்வி அதனைத் தொடர்ந்து இளவயதுப் பருவ உங்களது இலக்கியப் பங்களிப்புகளை கூறுவீர்களா?

**பதில்:** கொழும்பு 10, மருதானை, மொஹிதீன் மஸ்ஜித் வீதியில் வசித்து வந்தது எனது குடும்பம். பகுதிவாழ் மக்களுக்கென புதியதோர் இடத்தில் புதிய கட்டடங்களோடு கொழும்பு – அல்ஹிதாயா மகா வித்தியாலயம் என்ற நாமத்தோடு எழுந்து நின்றது புதிய பாடசாலை. புதிய பாடசாலையில் புது மாணவனாக தமிழ் மூலமான முதலாம் வகுப்பில் சேர்த்தார் எனது தந்தையார். நானும் வளர எனதான தமிழ் மொழியும் அழகுறவே என்னோடு சேர்ந்து வளர்ந்தது ஆசிரிய பெருந்தகைகளின் உதவியினால். யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாக திருவாளர் வேலும் மயிலும், ஜனாப். இனனூன் (டீ.யு) அவர்களால் எனது தமிழ் ஆர்வத்திற்கு மேலுப் வித்திட்டனர். பாடசாலைக் காலங்களில் கலா மன்ற நிகழ்வுகள் எனது ஆக்கங்கள் பல இடம்பெற்று பாராட்டுக்களைப் பெற்ற பாடசாலை ஆண்டு விழாவின் போது பல பரிசில்களையும் சா றிதழ்களையும் பெற்றுள்ளேன். பின்னர், தினபதி, சிந்தாமணி, தினகரன் போன்ற தேசிய பத்திரிகைகளில் எனது இளவயது கால சிறிய ஆக்கங்கள் பல பிரசுரமாகி, எனது தமிழ் ஆர்வத்தை மேலும் வளர்த்தது. சத்திய எழுத்தாளர் நாகூர்கனி தினபதி மற்றும் சிந்தாமணி பத்திரிகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவர பெரும் உதவியாக இருந்தார். இளமைக்காலம் முதலே இலக்கியத் துறையில் ஆர்வம் ஏற்பட்டதால் 'பாரம்பரியம்' புகழ் கலாபூசணம் எம்.எஸ்.எம். ஜின்னா (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்), கலாபூசணம் கவிமணி நஜிமுல் ஹுசைன், சித்தீக் மாஸ்டர் ஆகியோருடன் இணைந்து 'மதிவளர் மன்றம்' என்ற அமைப்பினூடாக கலை இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தேன்.

**கேள்வி:** சமூக சேவை, அரசியல் மற்றும் ஆன்மிகத்தில் தங்களது பங்களிப்புப் பற்றி?

**பதில்:** சமூகத்தில் மாற்றமொன்றினை ஏற்படுத்தி ஆன்மிக வழியில் நேர்வழிப்படுத்திட வேண்டுமென்ற நன்னோக்கோடு இளைஞர்கள் நாம் ஒன்றிணைந்து மொஹிதீன் மஸ்ஜித் வீதி வாலிபர் நலன்புரி இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தோம். நபிகளாரின் ஜனன விழா, விண்வெளிப் பயணமாம் மிஃராஜ் விழா போன்ற விழாக்களை புகழ்பெற்ற வெளிநாட்டு உள்நாட்டு உலமா பெருமக்களைக் கொண்டு விஷேடமாக பெண்கள் மத்தியிலுள்ள மௌட்டீக கொள்கைகளை இல்லாதொழிப்பதற்காகவும் விழிப்பினை ஏற்படுத்துவதற்காகவும் பயான்களையும் சன்மார்க்கப் போதனைகளையும் நடாத்தினோம். ஒருமுறை மிஃராஜ் விழாவின்போது துண்டுப் பிரசுரத்திலும் அழைப்பிதழிலும் தலைப்பாக 'மானுடத்தின் அறிவியலின் மேன்மையால் விண்வெளியில் சாதனையாக அப்போலோவும் சுயேஸ_ம்' இணைந்திருக்கும் இவ்வேளையில் மண்ணிலிருந்து மாநபியை ஸ்தூல உடம்போடு விண்ணுக்கு ஏகிட வைத்த மறையோனின் விந்தையினை கேட்டு பயன்பெற வாரீர் என்று நான் எழுதிய வாசகம் இன்னும் என்னுள் நிழலாடுகின்றது. அரசியல் மாமேதை மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அர்களோடும் மர்ஹூ ம் மணிப்புலவர் அவர்களோடும் ஆரம்பக் கால போராளியாக இணைந்து செயற்பட்டதை எண்ணி பெருமிதம் கொள்கின்றேன். அந்நேரத்தில் மர்ஹும் மணிப்புலவர் மருதூர் மஜீத் அவர்கள் என்னோடு மிக நெருக்கமாக பழக ஆரம்பித்தார். அரசியலில் அவரோடு இணைந்திருந்தாலும் என்னுள் கனன்று கொண்டிருக்கும் இலக்கிய ஆர்வத்தினைக் கண்டறிந்த அவர், தூண்டுகோலாய் ஆனார் நான் மீண்டும் கவித்துறையில் ஈடுபட. அது மட்டுமல்லாது தினகரன் புதுப்புனல் பகுதி ஆசிரியர் ஷம்ஸ் பாஹிம் அவர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அன்று தொடங்கிய ஷம்ஸ் பாஹிமுடனான உறவு இன்று வரைக்கும் எவ்விதக் குறையும் இல்லாமல் தொடருகின்றது. எனது ஆக்கங்களை தினகரனில் பிரசுரித்த ஷம்ஸ் பாஹிமுக்கும், எனது மேடையான வகவக் கவியரங்கிற்கு தினகரன் செந்தூரம் இணைப்பிதழ் மூலமாக ஆக்கபூர்வமான ஆதரவினை தாராளமாய் அளித்து வரும் தினகரன் பிரதம ஆசிரியர் திருவாளர் செந்தில் வேலவருக்கும் விஷேடமாக எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன். ரூபவாஹினி முஸ்லிம் சேவை தயாரிப்பாளர் மபாஹிர் மௌலானாவுக்கும், இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற ஹஜ்ஜூப் பெருநாள் கவியரங்கத்தை தலைமைதாங்கிய தமிழ்தென்றல் அலி அக்பருக்கும், இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை தயாரிப்பாளர் முல்லை முஸ்ரிபா அவர்களுக்கும், தயாரிப்பாளர் பாத்திமா றினோசியா றழீனுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**கேள்வி:** அரச கலாபூசண விருதால் மகுடம் சூட்டப்பட்டுள்ள நீங்கள் இலக்கியத்துறையைத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன?

**பதில்:** நான் இரவு பகல் என பாராது பள்ளிப்பருவம் முதலே நிறைய வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன். அதிலும் மர்ஹும் எம்.எச்.எம். ஷம்ஸ் எழுதிய கவிதைகள் நூல்கள் ஆகியவற்றை தவறாது வாசிப்பதை வழக்கத்தில் கொண்டிருந்தேன். முற்போக்கு எழுத்தாளரான அவர் எமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கின்ற மௌட்டீக கொள்கைகளுக்கு எதிராக தனது பேனா முனையின் வலிமையினால் தனியொரு ஆளாக நின்று போராடினார். அவரது ஆக்கங்கள் வேற மாதிரி. அந்தளவுக்கு அழகுற எழுதுவார். அதனால் நிறைய எதிரிகளை சம்பாதித்துக் கொண்டார். சமூகத்தில் மாற்றம் காணவும், இறைமார்க்கமதை அதன் தூய வழியில் பேணி ஒழுகவும் பயம் சிறிதேனும் இன்றி பாரபட்சம் காட்டாது பகிரங்கமாக எழுதிடுவார் மர்ஹும் எம்.எச்.எம். ஷம்ஸ் . அவர் எனக்கு முன்மாதிரியாவார்.

கொழும்பில் பல வருடங்களாக இயங்கி வரும் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) அகிலமறிய என்னை அரங்கேற்றி அழகுபார்த்து பெருமைப்படுத்தியது. முன்னணிக் கவிஞர்களில் ஒருவராக முன்னிலைப்படுத்தியது. பஞ்சினும் மென்மையுடைய நெஞ்சமுடைய கலாபூசணம் கவிமணி நஜிமுல் ஹூசைன் ஆக்கத்தோடு ஊக்கத்தையும் தந்து உருவாக்கினார் என்னை என்றால் அது மிகையாகாது. என்னை செம்மைப் படுத்தியவர்களில் யாழ் அசீமும் கவிஞர் ஹசீரும் இருவரும் கட்டாயம் நினைவு கூறத்தக்கவர்கள். கவிஞர் ஹசீரின் மூலமாக கொழும்பு தமிழ் சங்கத்தில் வகவத்தில் வருடாந்த கவியரங்கு நடைபெற்ற போது கலைவாதி கலீல் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அன்று தொடங்கிய உறவு இன்றும் நீளூர்தியாய் பயணிக்கின்றது. நற்றமிழில் குற்றம் காணுமிடத்து நக்கீரராய் மாறி குரல் கொடுத்திடும் கலைவாதி கலீல் ஈழத்து சுப்புடு என செல்லமாய் அழைப்பதுண்டு. தாஜூல்உலும் கலீல் முதுசங்களின் மூலவர் என்றே அழைக்கலாம். அவர் வாழும்போதே வாழ்த்தப்பட வேண்டியவர் இலக்கிய உலகுக்கு இவரால் அறிமுகமானோர் ஏராளம். அதில் நானும் ஒருவன். இன்னும் இளைஞராய் வளம் வருகின்றார். நவமணி பத்திரிமை ஊடாக கவியுலகிற்கு என்னை அறிமுகப்படுத்தி 'மலாய்க்கவி' என நாமம் சூட்டி அழகுபார்த்தவர் ஆவர். அத்துடன் எனது கலை இலக்கியப் பயணத்திற்கு மிகவும் உறுதுணையாக நின்ற மாளிகாவத்தையைச் சேர்ந்த எனது பெறா மகன்களான முகமட் டில்ஷான் மற்றும் முகமட் றிஸ்னி எனும் இருவரும் கலாபூஷண விருதை நான் அடைந்து கொள்வதற்காக செய்த அளப்பரிய உதவிகளை என்றென்றும் மறவேன். கலாபூஷண விருதை நான் அடைந்துகொள்வதற்காக தினகரன் பத்திரிகையின் பங்களிப்பு அளப்பரியது. என்றும் மறக்க முடியாதது. எமது தொடர்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**கேள்வி:** வளர்ந்து வரும் இளைய சந்ததியினருக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

**பதில்:** அருகிவரும் வாசிப்புப் பழக்கத்திற்கு உயிரூட்டுங்கள். நல்ல நூல்களை வாங்கி படியுங்கள். தேசிய பத்திரிகைகளை தினமும் வாசியுங்கள். சிறு குழுவினராக இணைந்து தமக்குள் புத்தகங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். இயலுமானால் பெரியவர்களின் உதவிகளைப் பெற்று சிறிய நூலகமொன்றை தத்தமது பகுதிகளில் அமைத்துக் கொள்ளுங்கள். இதனால் எழுத்தாற்றல் பெருகும் நல்ல சொல்லாட்சிகளை பெற்றுக் கொள்ளலாம். பள்ளி ஆசிரியர்களிடத்திலோ அறிமுகமான ஆன்றோர்களிடத்தில் தாம் எழுதிய ஆக்கங்களை சரிபிழை பார்த்து பத்திரிகைகளுக்கு அனுப்பி வையுங்கள்.

நான் கடந்து வந்த பாதை பட்டுப்பாதை அல்ல. நிறைய துன்பங்களை அவமானங்களை வெட்டுக் குத்துகளை சந்தித்திருக்கின்றேன். கவியரங்கின்போதும் விமர்சனங்களுக்கு உள்ளானேன். அத்தனையையும் தாங்கி பொறுமையுடனிருந்து எனது குறிக்கோளான அரச கலாபூசண விருதை வென்றுள்ளேன். அல்ஹம்துலில்லாஹ். எனது இலக்கிய பயணத்தில் கைகோர்த்து நின்ற அத்தனை நல்லுள்ளங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்ள இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.





தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# கூந்தல் பட்டு போல் பளபளக்க...



**காலங்கள் மாறினாலும் பெண்கள் தங்களது கூந்தல் மீது கொண்டிருக்கும் ஈர்ப்பு என்றுமே மாறாது. ஆரம்ப காலத்தில் முன்னோர்கள் பயன்படுத்திய இயற்கைப் பொருட்களின் காரணமாக, வயதான பின்னரும் கூந்தலின் கருமை நிறம் மாறாமல், முடி உதிர்வு பிரச்சினை இல்லாமல் கூந்தல் அடர்த்தியாக இருந்தது.**

இன்று கூந்தல் பராமரிப்புக்கு எண்ணற்ற பொருட்கள் வந்தபோதிலும், இளம் பருவத்திலேயே இளநரை ஏற்படுகிறது. இதற்கு காரணம் கூந்தல் பராமரிப்பு பொருட்களில் உள்ள வேதிப்பொருட்கள். மேலும் உண்ணும் உணவு, ஹார்மோன் சுரப்பில் உள்ள ஏற்றத்தாழ்வு காரணமாகவும் இளநரை ஏற்படுகிறது.

இவ்வாறு இளநரை, கூந்தல் உதிர்தல், கூந்தல் வறட்சி, கூந்தல் நுனியில் வெடித்தல், பொடுகுத் தொல்லை போன்ற பாதிப்புகள் ஏற்படாமல், கூந்தல் பட்டுப்போல் மின்னுவதற்கான இயற்கை குறிப்புகளை பார்க்கலாம்.

வெந்தயத்தை நன்றாக ஊறவைத்து, பசைபோல அரைத்து கூந்தலில் தடவுங்கள். 15 நிமிடங்கள் கழித்து தலைக்கு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடல் குளுமை அடைவதோடு, கூந்தலும் பளபளப்பாகும்.

மாதம் ஒரு முறை வேப்பிலை மற்றும் துளசி இலை சேர்த்து அரைத்து தலையில் தடவலாம். அரை மணிநேரம் கழித்து தலைக்கு குளிப்பதன் மூலம் பொடுகுத் தொல்லை மற்றும் பேன் தொல்லையில் இருந்து விடுபடுவதோடு கூந்தலும் பளபளப்பாகும்.

கற்றாழையின் சதைப்பகுதியுடன் சிறிதளவு தயிர் கலந்து, கூந்தலின் வேர்க்கால்களில் நன்றாக படும் படி அழுத்தித் தேய்க்கவும். அரை மணி நேரம் கழித்து தலைக்கு குளிக்கவும். இதன் மூலம் பொடுகுத் தொல்லை நீங்குவதோடு முடியின் நுனியில் ஏற்படும் வெடிப்பு பிரச்சினையும் நீங்கி கூந்தல் பளபளப்பாகும்.

கூந்தல் வறண்டு இருப்பவர்கள் முட்டையின் மஞ்சள் கரு மற்றும் எலுமிச்சை சாறு இரண்டையும் கலந்து, வாரத்தில் இரண்டு முறை கூந்தலில் தேய்த்து குளித்துவரலாம். இதன் மூலம் வறண்ட கூந்தல் பட்டுப்போல பளபளக்கும்.



தலா 50 மில்லி அளவு கறிவேப்பிலை சாறு மற்றும் மருதாணி சாறு இரண்டையும் ஒன்றாகக் கலந்து, 150 மில்லி தேங்காய் எண்ணெய்யுடன் சேர்த்து சூடுபடுத்த வேண்டும். இந்த எண்ணெய்யை இளம் சூட்டில் தலைமுடியில் தேய்த்து வந்தால் இளநரை நீங்கும். முடி உதிர்தல் குறையும். கூந்தல் பளபளப்பாகும்.



அரை மூடி தேங்காயில் இருந்து தேங்காய் பால் எடுக்கவும். அதன் முதல் பாலை கூந்தலில் நன்றாக தேய்க்கவும். ஒரு மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கூந்தலை கழுவுவதன் மூலம், பளபளப்பான கூந்தலைப் பெறலாம்.

நெல்லிக்காய் எண்ணெய்யை தினமும் தலையில் தேய்ப்பதன் மூலம், முடி உதிர்வது குறைந்து கூந்தல் வலுவாகும்.

சின்ன வெங்காயச் சாறினை முடியின் வேர்க்கால்களில் நன்றாகத் தேய்த்து மசாஜ் செய்வதன் மூலம் முடி உதிர்தல், புழுவெட்டு மற்றும் தலையில் உள்ள நுண் கிருமிகள் அனைத்தும் நீங்கும்

# கல்




கானகத்தின் மையத்தில் நாட்டப்பட்டிருந்தது. கி.மு. நூற்றாண்டிலிருந்து கற்கள் முளைத்திருந்தன அல்லது ஒரு கல் இன்னொரு கல்லை வளர்ந்தது அல்லது வழிபாட்டால் கற்கள் நாட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. கற்கள்தான் வாழ்வின் ஆதாரம் என்கிற நம்பிக்கை முன்னிருந்து இருப்பதுதான். அதனால் கற்களைச் சுற்றிச்சுற்றி வருதல் நிகழ்ந்திருக்கிறது. அல்லது கல் தன்னை நிலை கொள்வதற்கு இந்தக் கூட்டத்தின் மத்தியில் இருப்புக் கொண்டது.

கற்கள் பலவித வடிவத்தில்/ வகையில் / வண்ணத்தில் / அளவில் என்றெல்லாம் நாட்டியிருந்த சுவட்டடையாளங்கள் உண்டு. வரலாற்றுக் குறிப்புகள் நாவழியிலும் காது வழியிலும் உண்டு.

மையத்தைச் சுற்றி வருதல் காலாகாலமான இயல்புதான். இதனால் கல்லுக்குப் பெருமை, தனித்துவம், ஆளுமுணர்வு. சுற்றிய கால்கள் அல்லது நாட்டிய கைகளின் ரேகை அழிதல் பற்றிய கவலைகள் எதுவும் வரலாற்றுக் குறிப்பிலில்லை. வெவ்வேறு கற்கள் வெவ்வேறு நிறங்களில் இருந்திருக்கின்றன.

இப்படித்தான் உறுதியாய் இருக்குமென்ற நம்பிக்கையில் நாட்டிய கல்லொன்று வேர் கொண்டது. வேர் முழுக்கத் தம் காலடித்தடமென ஒரு பூரிப்பும் மிகுந்தது. கல் வளர்ந்து குட்டியும் போட்டது. கல் மேலும் மேலும் வளர்ந்தது. கல்லின் நிழலில் நின்று மார்தட்டி கல் வளர்த்தோருக்கு நிழல் தேய்ந்தது. வெறும் வெயிலுக்கு வந்தன. வந்தன என்ன தூக்கிவீசப்பட்டன. இப்போது வெயில்தான் நிழல். சூடு தாங்கவொண்ணாத் தருணம். தகிப்பில் வரண்டு போயின நாவும், அகநாவும்.

கல் மீது பூத்தூவிய கரங்களால் சொல்லெறியத் தொடங்கினசொல்லென்பது கல். சொல்லின் அர்த்தத்தை நடப்பட்ட கல்; மீது எறிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கல்லுக்கு உணர்ச்சியுமில்லை உண்மையுமில்லை.

இன்னொரு நூற்றாண்டுச் சிறுபாதம் இந்தக் கல்லைச் சுற்றிச்சுற்றி வரவும் கூடாது. கல்லுக்குப் பிழை போட்டுப் போட்டு பிழைபடவும் கூடாது. கல்லுள்ள இடத்தில் நல்ல மனம் கொண்ட பெருவனம் முளைக்க வேண்டுமென திடலில் வேர்விட்ட கால்கள் கதைத்துக் கொண்டன.

கல் என்பது எமது தேர்வு; எமக்கானது; எமது, வளங்களை, வளர்ப்பது;எம்மாலானது@ எமது குடை அது; எமது குதூகலமும் அது; எமது ஒளிக்கு வழிகாட்டி; திசைகாட்டி; துடுப்பு; துடைப்பான்; எமது கைகளில் வளர்ந்த நகம். வெட்டி வீசுவதுடன் புதிது புதிதாய் வளர்ப்பதும் எமது விருப்பம். நிழல்கல், காற்றுகல், மழைகல், வானம்கல், பூமிகல் என்பது பற்றிய வியாக்கியானங்களில் வளர்ந்தது காலம்.

இந்தக் கறைபட்ட கல்லைப் பிடுங்கியெறிந்து விட்டு புனிதக் கல் வளர்க்கத் தொடங்கின கால்கள்.

# மனம் ததும்பும்
# ஹைக்கூ 6

## என் சட்டைப் பைக்குள் மின்மினிப் பூச்சிகள்

கவிதை என்பது வாழ்வியலின் கோலம். அது அனுபவச் செறிவும் உணர்வுச் சாரமும் கலந்த வெளிப்பாடு.கவிதை என்பது வெறும் சொற்களினால் மட்டும் அமைந்து விடுவதில்லை. சொற்களின் இடைவெளிகளாலும் ஆனது. சொற்களையும் கடந்து வெவ்வேறு அர்த்தங்களினாலும் ஆனது. கவிஞனின் அனுபவமானது. வாசகனின் தேடல், அனுபவம், கருத்துரிமை, ஆற்றல், சிந்தனைப் போக்கு உள்ளிட்ட ஆளுமைத்தளங்கள் ஊடாகப் புதிய கோலங்களை வரைந்து கொண்டிருக்கும். இத்தகைய அழகுமிக்கச் சித்திரங்களில் ஹைக்கூ கவிதையும் உள்ளடங்கும். ஹைக்கூ ஜப்பானிய மொழியின் லாவகம். உலகளவில் புகழ்பெற்றுத் திகழும் அழகுக்கவிதை வடிவம். வாசிப்போரை மயங்குறச் செய்யும் வசிய சக்திதான் ஹைக்கூ.

ஹைக்கூ என்பது 'சிந்தனை எனும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறியகல் போன்றது" என்கிறார் சுஜாதா. கல் நீரில் அலைச் சுழியை ஏற்படுத்தி அதிர வைப்பது போல ஹைக்கூவும் வாசிப்பாளனிடத்தில் அதிர்வுகளை மூட்டி விடவல்லது. ஹைக்கூ என்பது 'தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு" என்பார் கென்னத் யசூதா. எளிமையான சின்னச் சொற்களுக்குள் மிகவும் பெரியதான அர்த்தப்பாடுகளைக் கிளர்த்தி விடுகிற ஆற்றல் ஹைக்கூவுக்கு உண்டு. இதனால்தான் 'சின்னதாய் இருக்கும் பெரியஅற்புதம்" என்கிறார் கவிக்கோஅப்துல் ரகுமான்.

ஹைக்கூ 'பாதியாய்த் திறந்த கதவு. அதன் வழி எம்மை அழைக்கும் கைச்சைகை" என்கிறார் ஆர்.எம்.பிளித். கதவை முழுமையாகத் திறந்துபின் உள் நுழைய வேண்டியதும் பொருட்செறிவு காண வேண்டியதும் வாசகனின் வேலையாகும்.'கவிஞன் இறங்கிக் கொள்ள வாசகர் அதன் மீது பயணம் தொடர்வான்" என்கிறார் ரோமாண்ட் ரோசலிப். ஹைக்கூ பற்றிய கூற்று வாசகனும் ஹைக்கூவின் கூட்டுப் படைப்பாளி என்பதைச் சுட்டி நிற்கிறது. எனவே ஹைக்கூவை 'கவிதை உலகின் புதிய மழலை" என்று மேலாண்மை பொன்னுசாமி குறிப்பிடுவது பொருத்தமானதாகும். (நன்றி மின்மினிகளால் ஒரு தோரணம்) இனி ஹைக்கூவின் வகை அதன் தோற்றம், அதன் வரலாறு, அமைப்பு, ஹைக்கூவைப் புரிந்து கொள்ளுதல், வாசிப்புமுறை, ஹைக்கூவின் உட்பொதிந்த உணர்வுச்சாரம் குறித்தும் மனம் ததும்பும் ஹைக்கூ.

பொன்மீரா

### ஔவன் கவிதை

## மேற்புறம் தேங்கிக் கிடத்தல்

தேங்கிக் கிடக்கிறதென்
மனசின் அடிப்புறம்
குட்டையாகி
பாய்ந்தோடும் நதியெடுப்பின்
திசைகள் மங்கின
எத்திசையில் நிற்கிறேன்
விழிகளும் மயங்கின
கால்களும் வேரற்றுச் சுருண்டன

இருளால் மூடப்பட்டமேற்புறத்தில்
மூன்றுசோடிக் கண்கள் மொய்த்தன
ஒன்றையொன்று தின்னும் தொலைவு
ஒன்றையொன்று அண்டாத அலைவு
மூன்றும் சேர்ந்து மேற்புறத்தை இழுக்கையில்
வசமிழந்து போகும் உதயம் பற்றி
பழைய நூற்றாண்டிலெழுதிய குறிப்பொன்று
மனசினடியில் உயிர் துடிக்கிறது

இப்போதிருக்கும் இருள்
இப்போதிருக்கும் திசை
இப்போதிருக்கும் கண்கள்
எப்போது விலகுமென்றாவது
குறிப்பொன்று எழுதி வை

# பூப்போல வருடும் சித்திரைப் புது வருடம்

புது மனசுகளாலும் புத்தாடைகளாலும் பூத்துவிரியும் சித்திரைப் புத்தாண்டு வருடா வருடம் புலரும் போது என் மனசின் வரைபடத்தில் எங்கள் ஊர்ச் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் சவாரி ஓடத் தொடங்கிவிடும்.

சித்திரைப் புதுவருடம் தமிழ், சிங்கள மக்களுக்குரியதுதான். அவர்களின் புதுவருடச் சமய, கலாசார விழுமியம் பற்றி எதுவும் தெரியாதபோதும், அதற்கும் அப்பாலான எங்கள் ஊர்ப் புத்தாண்டு நிகழ்ச்சிநிரலுக்குள் மூழ்கிப்போகும் வழக்கம் சின்ன வயசிலிருந்து என் பொழுதுபோக்கில் மையங்கொண்டிருந்தது.

தண்ணீரூற்று, முள்ளியவளை, மாமூலை, கணுக்கேணி, வற்றாப்பளையென்று சுற்றியுள்ள ஊர் மக்கள் எல்லோரும் ஒன்றுகலக்கும் சித்திரைப் புதுவருட நிகழ்வு மாபெரும் விளையாட்டு விழாவாகவே ஆண்டுதோறும் உற்சாகமூட்டிய வண்ணம் வந்து சேரும். நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுர இளைஞர்கள், சிறுவர்கள், விளையாட்டு விரும்பிகளும் சேர்ந்து கொள்வார்கள்.

சைக்கிளோட்டம், மரதனோட்டம், வண்டிச்சவாரி, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மைதானப்போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் என ஒரு நாள் நிகழ்வாக அல்லது இரண்டு, மூன்று நாள் நிகழ்வாகச் சித்திரை விழா கலகலப்பாய் இருக்கும்.

சைக்கிளோட்டம், மரதனோட்டம் காலையிலேயே தொடங்கிவிடும்.தொடக்கம் பார்ப்பதற்கு வித்தியானந்தாக் கல்லூரியடிக்கோ, தண்ணீரூற்றுச் சந்திக்கோ, ஆலடிச் சந்திக்கோ, எங்காயினும் நானும் கூட்டத்திடையில் நுழைந்திடுவேன்.

சைக்கிளோட்டத்தில் நானறிந்த வரை முத்தற்ற மகன், துரையப்பாடசிவா, சௌகத்தலி, பிரேம் நஸீர் போன்றோரின் பெயர்கள் இப்போதும் ஞாபகத்தில் வருகின்றன. சைக்கிளோட்டம் அறுபது, எழுபது மைல் தொலைவு வரைச் சுற்றி வரும்.முத்தற்றமகன் ஒவ்வொரு முறையும் பங்குபற்றுவான். முன் வரிசையில்தான் செல்லுவான். ஆனால், ஏதாவது இடைஞ்சல் வந்து சூழும். சைக்கிள் உடையும். அல்லது டயர் வெடிக்கும் என்று ஏதாவதொன்று. அதனால் முதலிடம் பெறும் அதிஷ்டத்தைக் காட்டிலும் தோற்றுப்போகும் துரதிஷ்டம் தான் அவனைச் சுற்றி நிற்கும்.

ஓட்டம் முடிய தண்ணீரூற்றுச் சந்தியில் அவனைச் சுற்றி நின்று விசாரிக்கும் கூட்டத்திலும் நான் உள்நுழைந்து நிற்பேன். அவன் மீது எனக்கு ஒரு வித இரக்கமுண்டு. ஒரு முறை வித்தியானந்தா நுழைவாயிலில் முடிவடைந்த போட்டியில் பார்த்தேன். இன்னும் எனக்குள் படமாக ஓடுகிறது. இரண்டாவது வந்துகொண்டிருந்தவன் இறுதிக் கட்டத்தில் எழும்பி நின்று பெடலை உழக்கினான். சைக்கிள் வேகமாகி முடிவிடத்தை முதலில் தொட்டது.

இப்படித்தான் இன்னொருமுறை சிவா முதன் முதலில் பங்குபற்றிய போட்டியது. கணுக்கேணிச் சந்தியால் திரும்பும் காட்சி பார்க்க அவ்விடத்துக்கு நானும் போய் நின்றேன். அந்தச்சந்தி 'வி' வடிவமானது. வேகமாக றோட்டில் திரும்புவது கடினம். ஆறு, ஏழு பேர் ஒரு குறூப்பாக வந்தனர். வந்த வேகத்தில் திரும்பியவிதம், அதற்குள் சிவா திருப்பிய விதம் என் கண்களுக்குள் இப்போதும் ஒட்டியேயுள்ளது.

**(நன்றி: என் மனசின் வரைபடம்)**

## புதுப் பனுவல்களுக்கான அழைப்பு

மறு சொல்லின் பக்கத்தில் சமகாலத்தில் வெளிவரும் இலக்கியப் பனுவல்கள் பற்றிய திறனாய்வுக் குறிப்புகளை மறு சொல்லால் எழுதவும் முனைகிறோம். உங்கள் புதுப்பனுவல்கள்கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், வரலாறு, திறனாய்வு, கட்டுரை எதுவாக இருப்பினும் அனுப்புங்கள். புதுப்பனுவல்களின் கனதி குறித்துக் கருத்தாடலாம்.

# கிங் பிஸர் கிரிக்கெட் அணியினர்



தினகரன் தேசியப் பத்திரிகையின் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி பேருவளை தர்காநகர் தினகரன் வாசகர் வட்டம் அதன் தலைவர் பாஷி ஸுபைர் தலைமையில் பேருவளை, மாளிகாஹேன விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் போட்டியொன்றை அண்மையில் நடத்தியது. இப்போட்டியின் தொடக்க வைபவத்தில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். எம். அஸ்லம், தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத் தலைவர் ஏ.பி.எம். ஸுஹைர், பாஷி ஸுபைர் ஆகியோருடன் கிங் பிஸர் கிரிக்கெட் அணியினர் காணப்படுகின்றனர். (படங்கள்: பி.எம்.முக்தார்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.